ஸ்ரீவேதாந்த தீபிகை

தொகுதி-24 எண்-10.11.12

ஏப்ரல் முதல் ஜூன் வரை

1936

JL
R65:211,N12
N36.24,10-12
160135

SRI VEDANTA DIPIKA

Vol. 24] **APRIL 1936** **[Part**

Editors : { S. VASUDEVACHARIAR
V. V. SRINIVASA AIYANGAR

466

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

31 JUL 193

யுவ ௵ பங்குனி ௴

பத்ராதிபர்கள் :

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

39, MUTHIYALU CHETTY ST., VEPERY, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ராசார ஸபை
(லிமிடெட்)

(ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 39, முத்தியாலு செட்டி தெரு, வெப்பேரி, சென்னை).

டைரெக்டர்கள்.

வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்,
ப்ரஸிடெண்ட்.

பி. ரங்கஸாமி ஐயங்கார்,
(ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்)
ஜெனரல் ஸெக்ரிடரி.

டி. ராஜகோபாலாசாரியர்,
(ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்)
எக்ஸிக்யூடிவ் ஸெக்ரிடரி.

எஸ். ஜகன்னாதாசாரியர் ஷை

எம். ஸுதர்சன ஐயங்கார்
டிரெஷரர்.

டி. டி. ஸ்ரீநிவாஸாசாரியர்,
(அட்வொகேட்)

என். டி. சாமண்ணா,
(ஸொலிஸிடர்).

எம். ஸுதர்சன ஐயங்கார்,
(எம். டி. பிரதர்ஸ்).

ஸி. வி. வெங்கடரமண ஐயங்கார்,
(கோயமுத்தூர்).

டி. ஈ. சடகோபாசாரியர்,
அட்வொகேட் திருப்பாபுலியூர்

டி. ஆர். வி. சர்மா,
ஸ்ரீரங்கம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை ப்ரசாரம் செய்யவும் ஷை ஸித்தாந்த க்ரந்தங்களை அச்சிட்டு ப்ரசுரம் செய்வதற்காகவும் முக்கியமாக இச்சபை ஏற்பட்டுள்ளது. தத்காலம் ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய க்ரந்தங்கள் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரத்திற் கெனவே சுமார் 25 வருஷ காலமாக நடைபெற்றுவரும் **வேதாந்த தீபிகை** யென்னும் மாதத் தமிழ் பத்ரிகையை இச்சபையார் ஏற்றுக்கொண்டு விஷயங்களை எல்லோரும் எளிதில் அறியக் கருதி இனிய தமிழ் நடையில் ப்ரசுரம் செய்து வருகிறார்கள்.

வருஷச் சந்தா. ரூ. 3—0—0 தனி ப்ரதி 0—4—0

ஸபையில் அங்கனத்தினர்களாகச் சேருகிறவர்கள் ஷேர் 1 க்கு ரூ. 50 செலுத்த வேண்டும். இதை செளகரியமான தவணைகளிலும் செலுத்தலாம். அங்கத்தினர்களுக்கு ஸபையின் ப்ரசுரமான **ந்யாயஸித்தாஞ்ஜனமும்** இவ்வருஷத்திய தீபிகையும் விலை யன்னியில் கொடுக்கப்படும்.

ஸ்ரீ:

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

1. **ந்யாயஸித்தாஞ்ஜனம்**—(ஸ்ரீ வேதாந்த தேசிகன்) விலை ரூ. 5 0 (வ்யாக்யானத்துடன்) பண்டிதர்களுக்கும் வித்யார்திகளுக்கும் அரைவிலை).
2. **வேதார்த்த ஸங்க்ரஹம்**—(ஸ்ரீ பாஷ்யகாரர்) (ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் (விலை. ரூ. 3 0
3. **ஸ்ரீ பஞ்சஸ்தவம்** (ஸ்ரீஸ்துதி) ஸ்ரீ உப. வாஸுதேவாவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன்) ரூ. 0 8
4. **ஸ்ரீ வேதாந்த தேசிகரின் தத்வடீகை** (ஸ்ரீ பாஷ்யத்திற்கு விரிவானவ்யாக்யானம்) அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளியாகும்.

हिंगु

காயம்

"हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध्मान शूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥"

சுத்தமான பெருங்காயம் ஹ்ரு தயத்திற்கு பலம் தரும்; காரமு உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரி களையும் வாத தோஷத்தையும் க தோஷத்தையும் போக்கும்; மலப தம் வயிற்று நோய் இவைகளையு தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள் குணங்களைப் பெற்ற சிறந்த பெரு காயம் L. G. குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

த்ரிஹாவநகஉநம தஉாமவணா-ம்
ரவிகர மளரவரா உரம உயாநெ ।
வவாரஐககாமுராவு தாநநாவெஜ
விஜயஸவெர திரஹ்ஷு ஜெஉநவஷு ॥

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்கள் : { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு.24] யுவ ஷுல—பங்குனி மீ [ஸஞ்சிகை 10

விஷய ஸூசிகை.

1. பத்ரிகையைப் பற்றி ஒரு விஜ்ஞாபநம் 492
2. ஸம்பாதகரின் குறிப்புகள் 494
3. முதற்றுறள் உரைத் தளக்கமும், உவமையணி விளக்கமும் 499
[ஸ்ரீ. உப. திருமலை ஈச்சம்பாடி. சடகோபராமாநுஜாசார்யர்,
4. முப்பாற் றலைச் சடைப் பர்க்கள் 503
[ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார்,]
5. சாரீரக மீமாம்ஸையில் அபசூத்ராதிகரணம் 514
[ஸ்ரீ காஞ்சீ, பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்யர்]
6. திருமடல்
[ஸ்ரீ. உப. ஸி. நரஸிம்மாசாரியர்.]
7. ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் 523
[ஸ்ரீ. உப. எ. வீ. கோபாலாசார்யர்]
8. விசார விவாத பக்கங்கள் 530
[ஸ்ரீ. உப. வே. அதங்காசார்யர்]
9. ஹரிப்ரீதியும் ஸ்ரீ காளிதாஸரும 533
[ஸ்ரீ. உப. டி. ஸுந்தராசார்யர்]
10. ஸத்வித்யை 17—32
[ஸ்ரீ. உப. கபிஸ்தலம் மஹாமஹோபாத்யாய தேசிகாசார்ய ஸ்வாமி]
11. ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம் 109
[ஸ்ரீ உப. ஸ்ரீ. வாஸுதேவாசாரியர் மாம்பலம்]
12. திவ்யஸூரி சரிதம் 217
[வங்கீபுரம் கோ. ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்]

[சந்தாதாரர்கள், சந்தாத் தொகையை, "ஜெனரல் கார்யதர்சி, 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை, 39, முத்தியாலு செட்டித்தெரு, 'வேப்பேரி, 'மதிராஸ்' என்னும் விலாஸத்திற்கும், வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தங்களான மற்றை கடிதங்களையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை வாணி விலாஸ் போலீஸ் ராகவாசார்யர் தெரு, பார்க் டௌன் மதிராஸ்" அல்லது "ஸம்பாதகர், ராம ஸ்வாமி தெரு, ஈஸ்டு மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

160135

ஸ்ரீ:

பத்ரிகையைப் பற்றி ஒரு விஜ்ஞாபநம்

சென்ற ஆகஸ்டுமாதம் முதல் இந்தப் பத்ரிகையானது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ராசார ஸபையாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு நடத்தப்பட்டு, வருவது பத்ரிகையைப் படிப்பவர்களுக்கும், படிக்காதவர்களுக்குங் கூட நன்றாய்த் தெரிந்த விஷயமே. அப்படி அவர்கள் எடுத்துக்கொள்வதற்கு முக்யமான காரணம், அநேக வருஷங்களுக்கு முன்னிருந்ததுபோல் சந்தாதாரர்கள் அதிகமாயில்லாமல் பிரதி வருஷம் அச்சுப்போடுவது, காகிதம் முதலானவைகளுக்குக்கூடப் போதுமான வரும்படி இல்லாமல் பத்ரிகையை நடத்திவந்த ச்ரத்தாளுக்களுக்கு நஷ்டம் நேரிட்டுக்கொண்டு வந்ததேயாகும். அதுவுமன்றி, மேற்கண்ட ஸபையார் இவ்வித பத்ரிகையானது அநேக வருஷங்கள் நடத்தி வரப்பட்டு இப்பொழுது நிறுத்தி விடப்பட்டால், அது நம்மவர்களுக்கே பெரியதோர் குறைவாக நேரிடுமென்றும், இவ்வித பத்ரிகையை மேற்கண்ட ஸபையார் நடத்துவதும் ஸபையின் முக்ய கருத்துக்களுக்கு அநுகுணமாய் இருக்கிறதென்றும் யோசித்தே இந்தப் பத்ரிகையை நடத்தி வரும் பாரத்தை ஏற்றுக் கொண்டனர்.

மேலும் அநேக ஸுஹ்ருத்துக்கள் தெரிவித்தபடி, இந்தப் பத்ரிகையின் அமைப்பையும் அச்சு காகிதம் முதலியவைகளையும் உயர்ந்தரீதியில் ஏற்பாடு செய்து, இந்தப் பத்ரிகை சந்தாதாரர்களுக்கும் படிப்பவர்களுக்கும் திருப்திகரமாகச் செய்யவேண்டு மென்கிற அபிலாஷையால் வழக்கமான செலவுக்கு மேல் செலவையும் அதிகரிக்க நேரிட்டது. மற்றும் இப்பத்ரிகையில் ப்ரசுரப்படுத்தப்படும் விஷயங்களின் ஸம்பந்தமாயும் அநேக நவீந வ்ருத்யம்சங்கள் ஏற்படவேண்டு மென்கிற அபிலாஷை அதிகமாயிருந்தது.

ஆனாலோ ஸபையார் பத்ராதிபர்கள் கோரினவளவு புதுச்சந்தாதாரர்கள் அதிகமாய்ச் சேரவில்லை. சந்தாதாரர்களின் எண் சிறிது அதிகரித்திருந்த போதிலும், போதுமான அளவுக்குக் கிடைக்காததால், த்ருப்திகரமாய் அதிகரித்ததாக எவ்விதத்திலும் சொல்லமுடியாது. இந்தப் பத்ரிகையானது எவருடைய த்ரவ்ய லாபத்திற்கும் நடத்தப்படவில்லை யென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே.

இப்பத்ரிகை இவ்வளவு •காலமாக நடத்தப்பட்டு வந்து இப்பொழுது ப்ரசுரப்படாமல் நிறுத்தப்படுமானால், அது நம்முடைய ஸித்தாந்தத்தைச் சார்ந்த யாவர்க்குமே பெரியதோர் குறைவல்லவோ? நம்முடைய ஸித்தாந்தத்தில் ச்ரத்தையுள்ளவர்கள் தென்னிந்தியாவிலேயே லக்ஷக்கணக்கானவர்கள் இருக்க, சந்தாவும் வருஷம் ஒன்றுக்கு மிகவும் கொஞ்சமாய் மூன்று ரூபாயாயிருக்க, இந்தப் பத்ரிகைக்கு ஆயிரம் சந்தாதாரர்கள்

கூட ஏற்படாவிட்டால் அதற்குக் காரணம் நாம் என்னவென்று கூறக்கூடும்? இனிமேலும் இப்பத்ரிகையானது அநேக ரீதியில் புரோவ்ருத்திக்கு வரவேண்டுமென்கிற அபிலாஷையோடு கூடிய நாங்கள் இப்பொழுது செய்யும் விஜ்ஞாபனமானது இந்தப் பத்ரிகைக்குச் சந்தாதாரர்களாக இருப்பவர்களும் படிப்பவர்களும் இந்தப் பத்ரிகைக்கு ஒவ்வொருவரும் இரண்டு அல்லது ஒரு சந்தாதாரரையாவது சேர்ப்பார்களே யானால், இந்தப் பத்ரிகையானது இனிமேல் யாதொரு க்லேசமாவது கஷ்டமாவது இல்லாமல் சரிவர நடத்தப்பட்டு வரத்தகுந்த மார்க்கம் ஏற்படும்.

ஆதலால் அடியோங்களுடைய ப்ரார்த்தனைக் கிணங்கி இந்த ஸஞ்சிகையைப் படிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த ஸஞ்சிகையுடன் உள் வைத்து அனுப்பப்பட்டிருக்கும் சேரவிரும்பும் சந்தாதாரர்கள் கையெழுத்துச் செய்து அனுப்புவதற்காக அச்சிடப்பட்டிருக்கும் காகிதங்களில் எவராவது ஒரு புது சந்தாதாரரையாவது சேரும்படி ப்ரார்த்தித்து உத்ஸாஹப்படுத்தி, அவருடைய கையெழுத்து வாங்கி, பத்ரிகை ஆபீஸ், 39, முத்தியாலு செட்டித் தெரு, வேப்பேரி, சென்னைக்குத் தவறாமல் அனுப்பவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது. அடுத்த ஸஞ்சிகைக்கு முன்னமேயே இந்த ப்ரார்த்தனைக் கிணங்கப் போதுமான அளவாவது சந்தாதாரர்கள் சேர்ந்து விடுவார்களென்று பூர்ணமாய் நம்பியிருக்கிறோம்.

இதுவரையில் நாளது வருஷத்துக்குச் செலுத்தவேண்டிய சந்தாவை இதுவரையில் செலுத்தாத சந்தாதாரர்கள்; உடனே செலுத்தி விடவேண்டுமென்று முக்யமாய் ப்ரார்த்திக்கப்படுகிறது. அப்படி செலுத்தாத பக்ஷத்தில், V. P. தபால் மூலமாய் அனுப்பி வஸூல் செய்ய நேரிடும். இந்த அநாவச்யமான செலவை உத்தேசித்துச் சந்தாதாரர்கள் உடனே பணத்தை அனுப்பிவிடுவார்களென்று நம்புகிறோம்.

---

1. **வைதிக ஸார்வபௌமருடைய க்ருஹ்யரத்நம், [கண்ட பூஷணம் என்னும் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநத்துடனும் அதற்கேற்ற தமிழ் வ்யாக்யாநத்துடனும் கூடியது]... விலை ரூ. 1-0-0**

2. **ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செயத திருப்பாவை:- [ஸ்ரீ ரங்கராமாநுஜ ஸ்வாமியின் ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநம், ஸ்ரீபரகால ஸ்வாமி ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி இவர்களுடைய மணிப்ரவாள வ்யாக்யாநம் இவைகளுடன் கூடியது]...விலை ரூ. 2-0-0**

3. **ஸ்ரீயதுநாத கத்யம்:- [வேலாமூர் வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யரால் இயற்றப்பெற்ற சிறிய கத்யம்]........விலை 0-1-6**

இப்புஸ்தகங்கள் கிடைக்கும் இடம்: மானேஜர் ஸ்ரீ ஸத்வித்யா புக்டெப்போ, புஜங்கராவ் தெரு, ஸைதாப்பேட்டை, மதிராஸ்.

ஸ்ரீ:

ஶ்ரியை நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்.

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகி2லஶக்தித4ர: ஸ்வதா4ம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகா3தீ3ந்
ப்ராணாந்நமோ ப4க3வதே புருஷாய துப்4யம் ॥

பகவானுடைய அபஹத பாப்மத்வம்.

சென்ற ஸஞ்சிகையில், நமது மதத்தின் சிறப்பைப் பற்றி விசாரித்து வருமிடத்தில், நாம், 'நமது மதம் தர்மத்திலேயே ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றது. நமது ஈச்வரன் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் தர்மத்தையே ஆதரிப்பவன். நமது பக்தர்களும் தர்மத்திலிருந்து ஒருபொழுதும் அணுமாத்ரமும் விலகார். இந்தக் காரணங்களாலேயே நமது மதத்திற்கு விசேஷித்த சிறப்பு உண்டு' என்று எழுதி இருந்தோம்; இவ்விதம் எழுதுவதற்கு, ச்ருதிகளில் தென்படும் 'பகவான் அபஹத பாப்மா' என்பது முதலான வாக்யங்களையும் ப்ரமாண வாக்யங்களாக உதாஹரித்திருந்தோம். இதைப் பார்த்த சிலர், 'அபஹத பாப்மா' என்பதற்கு 'ஈச்வரன் எந்தப் பாபத்தைச் செய்த போதிலும், அந்தப் பாபம் ஒரு விதத்திலும் அவனைப் பாதிக்க மாட்டாது' என்பதன்றோ பொருளாகக் கூடும்? 'ஈச்வரன் ஒரு பொழுதும் பாபத்தைச் செய்யமாட்டான்' என்பது அதன் பொருளென்று சொல்வது எவ்விதத்தில் ஸாத்யமாகும்' என்று ஒரு ஆக்ஷேபத்தைச் செய்திருக்கிறார்கள். அதற்கு ஸமாதானத்தை இப்பொழுது விவரிப்பது நமக்கு ப்ராப்தமாகின்றது.

இந்த 'அபஹதபாப்மா' என்னும் சப்தத்தை நமது ஆசார்யர்கள் பின் வருமாறு விவரித்திருக்கிறார்கள்.

"अकृतकर्माश्लेषस्य सर्वसाधारणत्वात् कृतेऽपि कर्मणि तत्फलाश्लेष अनेनोच्यते ।

अत ईश्वरेण कृतानि पुण्यपापजातीयानि कर्म्माणि न शुभाशुभफलजननशक्तानि । कृतेऽपि पापे तत्फलजननशक्तिप्रतिभटत्वलक्षणः कश्चिदीश्वरस्य स्वभावविशेषोऽपहतपाप्मत्वम् ॥"

['பகவானைக் கர்மங்கள் ச்லேஷிக்க மாட்டா' என்பதற்கு 'அவன்] கர்மங்களைச் செய்த போதிலும், அவை அவனை ச்லேஷிக்கமாட்டா' என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும். ஏனென்றால், செய்யப்படாத கர்மங்களுக்கு ச்லேஷ ப்ரஸக்தியே இல்லையன்றோ? பகவானையோ மற்றவர்களையோ எவரையும் செய்யப்படாத கர்மங்கள் ச்லேஷிக்க இடமில்லை. ஆகையால் 'பகவான் அபஹத பாப்மா' என்பதற்கு 'அவன் புண்யத்தைச் செய்தாலும் பாபத்தைச் செய்தாலும் அந்தப் புண்ய பாபங்கள் அவனுக்கு எவ்வித சுபாசுப ரூபமான பலத்தையும் கொடுக்கமாட்டா; அம்மாதிரியான பலத்தைக் கொடுக்கும் திறமை அவன் விஷயத்தில் மழுங்கி விடுகின்றது' என்பதே தாத்பர்யமென்று சொல்லவேண்டும். அந்தத் திறமையை நசிப்பிக்கும் ஒரு ஸ்வபாவ விசேஷமே ஈச்வரனுடைய அபஹத பாப்மத்வமென்று சொல்லப்படுகின்றது]. இந்த விவரணத்தைப் பார்த்தால், 'ஈச்வரன் பாபத்தைச் செய்யலாம்; அப்படி அவன் அதைச் செய்தபோதிலும், அது அவன் விஷயத்தில் நிஷ்பலமாகவே நசித்துவிடும்' என்பது ஆசார்யர்களின் அபிப்ராயமாக இருக்குமோ என்று சங்கிக்க இடமுண்டு போலத் தோன்றும். அது அவர்களின் கருத்து அன்று. 'ஈச்வரன் ஒருகாலும் பாபத்தைச் செய்யமாட்டான்' என்பதை ஸித்தமாக வைத்துக் கொண்டு அவர்கள் இம்மாதிரி பேசி இருக்கிறார்கள். இவ்விதம் பேசுவது லோகத்தில் உண்டு என்பதை எல்லாரும் அறிவார்கள். இவ்வாறு அர்த்தம் கொள்ளாவிட்டால், 'ஈச்வரன் நிகில ஹேய ப்ரத்யநீகன்' என்பது போன்ற வாக்யங்களுக்கெல்லாம் விரோதம் ஸம்பவிக்கும்.

"यत्त्वत्प्रियं तदिह पुण्यमपुण्यमन्य-
न्नान्यत्तयोर्भवति लक्षणमत्र जातु ।
धूर्तायितं तव हि यत्किल रासगोष्ठ्यां
तत्कीर्तनं परमपावनमामनन्ति ॥"

[ஹே பகவன்! 'எது உனக்கு ப்ரியமோ அது தான் புண்யம்; எது உனக்கு அப்ரியமோ அதுதான் பாபம். புண்ய பாபங்களுக்கு வேறு ஒரு லக்ஷணமும் சரியான லக்ஷணமாக மாட்டாது' என்றே நான் நினைக்கிறேன். அவ்விதம் லக்ஷணம் கொள்ளாவிட்டால், நீ ராஸக்ரீடையில்

செய்த துஷ்ட கார்யங்களைப் பாடுவதும் ஆடுவதும் புண்யங்களென்று எவ்வாறு க்ரஹிக்கப்படக்கூடும்? அவைகளைப் பரம பாவங்களென்றன்றோ நமது மஹர்ஷிகள் சொல்லி இருக்கிறார்கள்?’] என்று ஸ்ரீ கூரேசன் அநுக்ரஹித்திருக்கிறாரே! ‘ராஸக்ரீடையில் பகவான் செய்தது துஷ்டமான க்ருத்யமே. ஆனால், அது பகவத் விசேஷ்டிதமானதால், அது துஷ்டமன்று என்று க்ரஹிக்கப்படவேண்டுமென்றோ? இது மாத்ரமின்றிக்கே அது மிகவும் ஸாதுவான்தே என்றும் கொண்டாடப் படவேண்டும் என்பதே ஸ்ரீ கூரேசனுடைய திருவுள்ளமென்றன்றோ இந்த ச்லோகத்திலிருந்து ஏற்படுகின்றது? இதற்குக் கதி என்ன? இவ்வாறு சிலர் ஆக்ஷேபிக்கக்கூடும். இது, ஹார்த்தமான ப்ரீதியின் பரீவாஹத்தின் கதியை அறியாதவர்களின் வார்த்தை. ப்ரேமம் உந்மஸ்தகமாய் மெய்மறந்து கதறுவர்களின் பாஷை வேறு; அவர்களுடைய நடவடிக்கைகளும் வேறு. அதன் பாவத்தையும் ரஸத்தையும் ரஸிகர்களே அறிவார்கள். அரஸிகர்களுக்கு அவை புலப்படமாட்டா.

*　　　　*　　　　*

ஸர். எஸ். ராதாக்ருஷ்ணன்.

இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒரு பெரிய கலாசாலையின் அதிகாரிகள், நமது மஹர்ஷிகளால் வெளியிடப்பட்டுள்ள ஆத்ம வித்யைகளைத் தமது தேசத்தியச் சிறுவர்களுக்குப் போதிப்பிக்கும் பொருட்டு நமது தேசத்து வித்வானாகிற ஸர். எஸ். ராதாக்ருஷ்ணன் என்பவரை அதன் ப்ரவசந கர்த்தாவாகத் தேர்ந்து எடுத்திருக்கிறார்களென்பதை அறிந்து நாம் மிகவும் ஆநந்திக்கிறோம். இந்த வித்வான் ஆங்கில பாஷையில் ப்ரவீணர்; தேசாடநம் செய்தவர்; சிறந்த மேதையுடன் கூடினவர்; நமது சாஸ்த்ரங்களையும் ஒருவாறு படித்தவர்; தாம் படித்திருக்கும் விஷயங்களைக் குண தோஷ விவேசந பூர்வகமாக வெளியிட்டுச் சொல்லும் திறமையும் அவரிடம் பூர்ணமாக வாய்ந்திருக்கின்றது. இவ்வளவு குணங்களால் நிறைந்துள்ள ஒரு வ்யக்தி நமது யூதத்தைச் சேர்ந்தவர்களுள் இருக்கிறார் என்பதும் அவர் இம்மாதிரி இதர தேசத்து வித்வான்களால் கௌரவிக்கப் பட்டார் என்பதும் ஸ்வ யூதாபிமாநமுள்ள எல்லாருக்கும் மிகவும் ஸந்தோஷகரமே.

ஆனால், நமக்கு இது விஷயத்தில் ஒரு அதிசங்கை உண்டு. அது என்னவென்றால், நமது மஹர்ஷிகளின் அபிப்ராயங்களை ஜகத்திற்கு வெளியிடுவதான பரத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் இவர், எவ்வித ஆக்ரஹமும் ந்யூநதையும் இன்றிக்கே அந்த மஹர்ஷிகளின் மதங்களை உள்ளபடி வெளியிட்டு, தமது பரத்தை சரிவர நிர்வஹித்து வருவாரோ என்பது தான். ‘நமது வேதம் முழுவதும் ஒரே சாஸ்த்ரம். அதற்குள் பூர்வாபர

விரோதம் என்பது இல்லை. ஆகையால் அது முழுவதும் நமக்கு ப்ரமாணம்’ என்பது ஸ்ரீவ்யாஸர் முதலான மஹர்ஷிகளின் அபிப்ராயம். அந்த மஹர்ஷிகளின் க்ரந்தங்களிலிருந்தும், அந்த க்ரந்தங்களுக்குப் பாஷ்யம் முதலியவைகளை இயற்றியுள்ள நமது ஆசார்யர்களுடைய ஸூக்திகளிலிருந்தும் நாம் இதை வ்யக்தமாக அறிகின்றோம். ப்ரஸ்துத வித்வானோ இதற்கு விருத்தமான எண்ணம் கொண்டவர். அவர் இந்தத் தேசத்திலும் தேசாந்தரங்களிலும் செய்திருக்கும் உபந்யாஸங்களிலிருந்தும், அவர் இயற்றியிருக்கும் பல க்ரந்தங்களிலிருந்தும், ‘வேதத்திற் சிற்சில அம்சங்களே உபாதேயம், மற்றவை த்யாஜ்யம்’ என்னும் அபிப்ராயத்தை அவர் உட்கொண்டிருக்கிறார்! என்பது வ்யக்தமாகத் தெரிகின்றது. வேதத்தின் அர்த்தத்தை இவ்வாறு தவறுதலாக க்ரஹித்திருக்கும் அவர், தம்மால் க்ரஹிக்கப்பட்டுள்ள அர்த்தமே அந்த வேதங்களாற் சொல்லப்படுகின்றன என்றுதானே பிறருக்குப் போதிப்பார். இவ்விதம் அவர் போதிக்கும் பக்ஷத்தில், அவர் தாம் ஏற்றுக்கொண்டிருக்கும் பரத்தை எப்படிச் சரிவர பூர்த்தி செய்தவர் ஆவார் என்பது நமக்கு விளங்கவில்லை.

நிற்க, இவர் எழுதியிருக்கும் க்ரந்தங்களிலிருந்து, இவர், நமது முக்ய ஆசார்யர்களாகிற ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்ரீராமாநுஜாசார்யர் ஸ்ரீமத்வாசார்யர் இவர்களுடைய ஸூத்ர பாஷ்யம் முதலான க்ரந்தங்களின் தாத்பர்யத்தைச் சிற்சில விடங்களில் விபரீதமாகவும் மற்றும் சில விடங்களில் அந்யதாவாகவும் க்ரஹித்திருப்பதாகத் தெரிகின்றது. அந்தப் பாஷ்யம் முதலான க்ரந்தங்களும் இவரால் விசாரிக்கப்படவேண்டிய க்ரந்தங்களுள் சேர்ந்திருப்பவை யாதலால், இவர் எவ்விதம் அந்த ஆசார்யர்களுடைய அபிப்ராயங்களை உள்ளபடி வெளியிடப் போகிறார் என்பது தெரியவில்லை. இவர் செய்யப்போகும் உபந்யாஸங்களெல்லாம் ஒரு க்ரந்த ரூபமாக வெளிவரும் என்பதில் ஆக்ஷேபமில்லை. அந்த க்ரந்தத்திற்கு அவர் ‘ஹிந்து மஹர்ஷிகளின் ஆத்ம விசாரம்’ என்று பெயரிடுவாரே யாயினும், அது இவரால் செய்யப்பட்ட ஆத்ம விசாரமாகுமென்றே நாம் பயப்படுகிறோம்.

*　　　　*　　　　*

யதீந்த்ர மத தீபிகை.

திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர் என்னும் ஒரு மஹாந், ஸ்வல்ப காலமாக அநர்க்கமான ஒரு ஜகதுபகாரத்தைச் செய்து வருகிறார் என்பதை நமது ஸுஹ்ருத்துக்களெல்லாரும் அறிந்திருக்கலாம். அவர், ஜந்மாந்தரத்தில் தாம் செய்திருந்த ஸுக்ருதத்தின் பலமாக, இந்த ஜந்மத்தில் ஸத்தமரான ஒரு ஆசார்யருடைய கடாக்ஷத்திற்குப் பாத்ரமானார். அது காரணமாக அவருக்கு, நமது ஆசார்யர்களும் ஆழ்வார் முதலியவர்களும் அருளிச் செய்திருக்கும் திவ்ய

ஸூக்திகளுடைய உட்கருத்துக்களெல்லாம் நன்கு ப்ரகாசித்திருக்கின்றன. இது மாத்ர மின்றிக்கே, தாம் தமது பாக்ய விசேஷத்தால் பெற்றிருக்கும் ஜ்ஞாநத்தையும் அந்த ஜ்ஞாந லாபமடியாகத் தாம் அநுபவித்து வரும் ஆநந்தத்தையும் மற்றை எல்லாரும் அநுபவித்து க்ருதார்த்தர்களாக வேண்டு மென்னும் ஒரு மநோரதமும் அந்த ஸதாசார்ய கடாக்ஷம் காரணமாகவே அவருடைய மனத்தில் தீவ்ரமாக உதித்தது. அந்த மநோரதத்தை நிறை வேற்றிக்கொள்ளும் சக்தி ஸம்பத்தையும் பகவான் தனது க்ருபா பரிவாஹத்தால் அநுக்ரஹிக்கவே, அவர் சென்றப் பத்துப் பன்னிரண்டு வர்ஷ காலமாக, நமது மஹர்ஷிகளும் ஆசார்யர்கள் முதலானவர்களும் அநுக்ரஹித்துள்ள அருமையான க்ரந்தங்களை எளிதானப் பாஷாந்தர நடையில் ஸாமாந்ய ஜநங்களும் ச்ரமமின்றி அறியுமாறு வ்யாக்யாநம் செய்து வருகிறார். இது பெரிய தொரு உபகாரமன்றோ ?

அவரால் இங்க்லிஷ் பாஷையில் எழுதப் பட்டிருக்கும் ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீ பாகவதம் முதலிய க்ரந்தங்களின் உரைகளின் மஹிமையை அவைகளைப் படித்தவர்களெல்லாரும் அறிவார்கள். தமிழ் நடையில் அவர் எழுதி இருக்கும் திருவாய்மொழி ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களின் உரைகளும் எல்லாருக்கும் மிகவும் உபகாரகங்களாக இருக்கின்றன. இப்பொழுது, ஸ்ரீ தொட்டையாசார்யரின் சிஷ்யரான ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யரால் எழுதப்பட்டுள்ள "யதீந்த்ரமத தீபிகை" என்னும் ஒரு உத்தம க்ரந்தத்தை எளிதான தமிழ் நடையில் மொழி பெயர்த்திருக்கிறார் ; அந்த மொழி பெயர்ப்புடன் சில அருமையான அநுபந்தங்களையும் எழுதி இருக்கிறார். இந்த "யதீந்த்ரமத தீபிகை' 'என்னும் க்ரந்தம்' ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் கொள்கைகளெல்லாவற்றையும் ஸங்க்ரஹமாகவும் தெளிவாகவும் வெளியிடுகின்றது. இதைச் சரிவரப் படித்தால் அந்த ஸித்தாந்தத்தை நிஷ்க்ருஷ்டமாக ஒருவன் அறியக்கூடும் என்பதில் ஆக்ஷேபமில்லை. ஸ்ரீ ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் ஆங்காங்கு எழுதப் பட்டுள்ள குறிப்புகளும் விசேஷார்த்தங்களெல்லாவற்றையும் நிஷ்க்ருஷ்டதரமாக ப்ரகாசிப்பிக்கின்றன. இந்த க்ரந்தத்தை இவர் இவ்வாறு ப்ரகாசித்துவருவதை இவரால் செய்யப்பட்டுவரும் மற்றை உபகாரங்களைக் காட்டிலும் மிகச் சிறந்ததாக நாம் க்ரஹிக்கின்றோம். இம்மாதிரி இன்னும் பல உபகாரங்களைச் செய்து கொண்டு அவர் இந்த விபூதியில் பல்லாண்டாக எழுந்தருளி யிருக்க வேண்டும் என்பதே நமது ஹார்த்தமான ப்ரார்த்தனை.

ஸ்ரீ:

முதற்குறள் உரைத் துளக்கமும், உவமையணி விளக்கமும்.

[ஸ்ரீ. உப. திருமலை ஈச்சம்பாடி. சடகோபராமாநுஜாசார்யர், சிரோமணி, திருவஹீந்த்ரபுரம்.]

[இந்த வ்யாஸத்தில் அதிகமாய் எழுதப்பட்டிருக்கும் விஷயம் அலங்கார சாஸ்த்ரமாகத் தோன்றினபோதிலும், அது வேதாந்த தத்வ விமர்சமுமாகும். பத்.]

இந்நில உலகத்தில் மநுஷ்ய ப்ரக்ருதியைத் தங்களுடைய பூர்வ ஜந்ம புண்ய கர்ம விபாகவசத்தினால் அடைந்திருக்கிற ஜீவன்கள் அதன் உண்மையான ஸ்வரூபத்தைத் தெளிவாய் அறிந்து பரம பலத்தை யடைந்துய்ய வேண்டிப் பரமகாருணிகனான பகவானால் ஏற்படுத்தப்பட்டுள்ள தர்மார்த்த காம மோக்ஷம் என்கிற சதுர்வித புருஷார்த்தங்களின் ஸ்வரூப ப்ரயோஜநத்தை விளக்கப் பல மஹான்களால் வடமொழியிலும் தென்மொழியிலும் "**यथावद्वस्तुवर्णनम्**" என்கிறபடி அபேக்ஷிதமாத்ரோபபாதகமாயும், அநபேக்ஷித வர்ஜிதமாயும், தெளிவாயும், சுருக்கமாயும், கம்பீரமாயும், பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவநாயனாரால் இயற்றப்பட்ட 'திருக்குறள்' என்னும் அரிய நூல் ஒன்று. இந்நூல் "அகர முதல வெழுத்தெல்லாம்" என்ற கடவுள் வாழ்த்துக் குறள் தொடக்கமாய், அறம் பொருள் காமம் என்னும் முப்பால்களால் தலைக் கட்டப்பட்டுள்ளது. இம்முதற் குறளின் பொருளைச் சிறிது விமர்சிப்போம்.

முதற்குறள்—

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவான் முதற்றேயுலகு"

என்பது. தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் மஹாவித்வானாய் விளங்கின பரிமேலழகர் என்னும் பெரியார் இதற்குரை யெழுதுங்கால் பதப்பொருள் இங்ஙனம் வரைந்துள்ளார். 'எழுத்தெல்லாம் - எழுத்துக்களெல்லாம், அகர முதல - அகரமாகிய முதலையுடையன ; (அதுபோல) உலகு - உலகம், ஆதிபகவன் முதற்று - ஆதிபகவனாகிய முதலை யுடைத்து.' தமிழ் எழுத்துக்களுக்கு மாத்திர மல்லாமல் வடவெழுத்துகளுக்கும்

முதலாதலை நோக்கி 'எழுத்தெல்லா' மென்றார். இக்குறளில் அகரத்துக்கும் ஆதிபகவனுக்கும் உவமை தோன்றுகிறது. எப்படி அகரம் மற்ற எழுத்துக்களுக்கு முதலில் நிற்கிறதோ, அதேமாதிரி ஆதிபகவன் உலகங்களுக் கெல்லாம் (உலகத்திலுள்ள பொருள்களுக் கெல்லாம்) முதலாகிறார் என்றபடி. நாயனார் இதனால் '**अक्षराणामकारोऽस्मि**' என்கிற கீதா வசநத்தின் உள்ளக் கருத்தை உணர்த்தவே, அலங்காரங்களுக்குள் முதன்மையான உவமையணியினால் தெளிவுபடுத்துகிறார் என்று ஏற்படுகிறது. பகவான் அநாதியாய்ப் புராணபுருஷனாய் இருப்பினும்,முதன்மை என்னும் பொருள்படவே 'ஆதிபகவன்' என்று கூறினபடி. 'த்வந்யாத்மகமான அகாராதி வர்ணங்கள் ஸ்தாஸ்நுவானவைகள்' என்கிற சப்த நித்யத்வ வாதிகளின் ஸித்தாந்தத்தை, "நாதமாத்திரையான வியல்பாற் பிறத்தலால்அகரத்துக்குத் தலைமையும், செயற்கையுணர்வா னன்றி யியற்கையுணர்வான் முற்றும் அறிதலான் ஆதி பகவனுக்குத் தலைமையும் கொள்க" என்பதனால் விளக்குகிறார். இங்கு 'நாத மாத்திரையான வியல்பாற் பிறத்தல்' என்பது, '**वायुर्नाभेरुत्थितः, उरसि विस्तीर्णः, कण्ठे विवर्तितः, मूर्धानमाहत्य-परावृत्तः, वक्त्रे विचरन्, विविधान् शब्दानभिव्यनक्ति ।**' என்கிறபடி ஸ்வத ஸ்தாஸ்நுவான வர்ண விசேஷங்கள் உயிர்முயற்சியால் நாபியிலிருந்து எழுகிற வாயுவினால்அபிவ்யக்தமாகிறதே தவிர ஜயந்த்வாஶ்ரயமல்லவென்பதை ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கிறது. அபிவ்யஞ்ஜக ஸாமக்ரீயான வாயுவினால் முதலில் அகரம் தானே வெளிப்படுகிறது என்பதை உணர்த்தவே இங்கு 'இயல்பு' என்னும் சொல் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமே பகவத் ஸ்வரூபம், "**नित्याऽसंकुचितज्ञानैकाकारः**" என்றும், "**अनन्याधीनप्रकाशत्वा-ह्लादकत्वरूपज्ञानमेव, यस्य परमात्मनो रूपं**" என்றும், "**यो वेत्ति युगपत्सर्वं प्रत्य-क्षेण सदा स्वतः**" என்றும், இவ்வாறு பல படிகளினாலும் ஏற்படுகிறபடியால், ஸ்வயம் ஸர்வஜ்ஞனான பகவான் மற்றவைகளை முழுதும் அறிகிறான் என்று உணர்த்தவே, 'செயற்கையுணர்வானன்றி இயற்கையறிவான்' எனப் பணிக்கப்பட்டது. இயல்பாற் பிறத்தல் காரணமாக எழுத்துக்களுக்குள் அகரத்துக்கு முதன்மையும், இயற்கையறிவினால் முழுவதும் அறிதல் காரணமாக 'ஆதிபகவனுக்கு முதன்மையும்' என்பது தேறிய பொருள். அகரத்துக்கும் ஆதிபகவனுக்கும் உளதான உவமை எத்தன்மையது என்பதை விசதமாய் விளக்க, "தலைமைபற்றி வந்த அகரத்துக்கும் ஆதிபகவனுக்கும் பிம்பப்ரதிபிம்பபாவம் காட்டுதலால் எடுத்துக்காட்டுவமையணி" என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால், பல்வகையால் விரிந்துள்ள உவமையணியின் ஒருவகை இக்குறளில் அமைக்கப்பட்ட விதம் அழகாய் ஸூசிக்கப்பட்டுள்ளது.

வடமொழியில் அலங்கார விஷயமாய்ப் பல நூல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அலங்காரம் என்பது, வர்ணீய வஸ்துவுக்கு உபஸ்காரத்தைச் செய்யக்கூடியது. '**अलङ्क्रियतेऽनेनेति**' என்று வ்யுத்பத்தி. சரீரியான புருஷனை, கை கால் முதலிய ஸம்ஸ்தாந விசேஷங்களில் அணிந்துகொள்ளப்பட்ட ஆபரண விசேஷங்கள் அந்தந்த அவயவ விசேஷங்களுக்கு உத்கர்ஷாதாநத்வாரமாக எப்படி சிறப்பிக்கின்றனவோ, அவ்விதமே சப்தார்த்தாஶ்ரயமான யமகாநுப்ராஸோபமாதிகள் தத்தத் வஸ்தூபஸ்காரமுகமாய் அங்கியான ரஸத்தைச் சிறப்பித்து, தந்முகமாய்க் காவ்யத்தையும் சோபிக்கச் செய்கின்றன. இந்த அலங்காரம் சப்தார்த்த ஸம்பந்த முகமாய் இரண்டு பிரிவையும், உபயகதமாய் மற்றொரு பிரிவையும் அடைகிறது. இதற்குள் அர்த்தாஶ்ரயமான அலங்காரங்களுக்குள் சேர்ந்தது உபமா. இது ஸர்வாலங்காரங்களுக்கும் முதன்மையாய் விளங்குகிறது. ஸ்ரீ ராமாயண பாரத புராணாதிகளில் பெரும்பான்மை உபமாலங்கார நிபந்தநம் தான். இதன் லக்ஷணம், "**साधर्म्यमुपमा भेदे**" என்று காவ்ய ப்ரகாஶத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது: உதாரணம் காட்டப்படும் பொருளாகிற உபமாநம், ப்ரக்ருதத்தில் வர்ணிக்கப்படுகிற வஸ்துவான உபமேயம், இவை இரண்டிற்கும் பொருத்தமான குணம் என்கிற ஸாதாரண தர்மம், இவ்வித பொருத்தத்தைத் தெரிவிக்கிற சப்தம் என்கிற உபமா வாசக சப்தம், என்கிற நாலுவித அங்கங்களுடன் கூடியது உபமாலங்காரமாகும். இந்நான்கும் உள்ளபோது பூர்ணோபமை என்றும், ஒன்றேனும் குறைவுபடின் லுப்தோபமை என்றும் சொல்லப்படும். உதாரணமாய்: '**शीतांशु-सदृशं कान्तामुखं शोभते**' என்னுமிடத்து, நாலும் உள்ளமை அறியலாம். இங்கு சோபநம் என்கிற ஸாமாந்ய தர்மம் தெரிகிறது. இப்படிப்பட்ட ஸாமாந்ய தர்மத்தை, ஒரு தரம் அல்லது இரண்டு தரம் நிர்த்தேசிப்பது என்று இருவகையுண்டு. இதை முறையே 'ஸக்ருந்நிர்தேசம்' என்றும், 'ப்ருதகுபாதாநம்' என்றும் பெயரிட்டழைப்பர். முன் கொடுத்த உதாரணத்தில், ஸக்ருந்நிர்த்தேசம் உபமாநோபமேய ஸாதாரணமாய் ஏற்பட்டிருக்கிறது. ப்ருதகுபாதாநம் என்னும் பிரிவு "**एकस्यार्थस्य शब्दद्वयेनाभिधानं वस्तुप्रतिवस्तुभावः**" என்கிற வஸ்துப்ரதிவஸ்து பாவ முறையாலும், "**द्वयोस्स-दृशयोरर्थयोर्द्विरुपादानं बिम्बप्रतिबिम्बभावः**" என்கிற பிம்ப ப்ரதிபிம்ப பாவ முறையாலும் இருவகையாகும். ஸாதாரண தர்மத்தை (அதாவது: ஏகார்த்தத்தை) சப்த த்வயத்தினால் உரைப்பது வஸ்து ப்ரதிவஸ்துபாவம். "**विश्वा-मित्रान्ववायोऽयं देशिकेन्द्रैरलङ्कृतः । रघुवंशद्वार्येण रामचन्द्रेण भूषितः ॥**" என்கிற விடத்தில் ஸாதாரண தர்ம வாசக பூஷிதாலங்க்ருத சப்தங்களும், அந்வவாய வம்ச சப்தங்களும் ஏகார்த்தத்தை விளக்குகின்றன. இதனால் வஸ்து ப்ரதிவஸ்து பாவம் தெரிகிறது. ஸத்ருசமான இரண்டு அர்த்தங்களை இரண்டு வாக்யங்களால் சொல்வது பிம்பப்ரதிபிம்ப பாவம். பர்யாய பத போத்யமான அர்த்தைகத்வத்திற்கும், விஸத்ருசமான

அர்த்தத்துக்கும் வ்யாவ்ருத்தி ‘ द्वयोस्सदृशयोः ’ என்பதினால் கிடைக்கிறது. “ செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழ் ”; “மின்னல் பொலிந்ததோர் கார்முகில்போல் கழுத்தினிற் காரையொடும், தன்னிற் பொலிந்த விருடீகேசன் ” என்ற விடங்களில், செங்கமலத்துக்கும் கழலுக்கும், கார்முகிலுக்கும் இருடீகேசனுக்கும் ஸத்ருச தர்மாஶ்ரய மடியாகப் பிம்பப்ரதிபிம்ப பாவம் தோன்றுகிறது.

இந்த பிம்பப்ரதி பிம்பபாவத்தைத் தான் முதற்குறளில் அகரத்துக்கும் ஆதிபகவனுக்கும் குறளாசிரியர் அமைத்திருக்கிறார் என்று காட்டவே “ இயல்பாற் பிறத்தலான் அகரத்துக்குத் தலைமையும், இயற்கையுணர்வான் முழுதும் அறிதலால் ஆதிபகவனுக்குத் தலைமையும் கொள்க ” என்று, முதல, முதற்று, என்னும் தனிப்பட்ட ஸமமான தர்மவாசக பதங்கள் உரையாசிரியரால விரித்துரைக்கப்பட்டுள்ளன. முதல, முதற்று என்னும் இச் சொற்கள் ஒரே பொருளை உணர்த்துவதாக வஸ்துப்ரதிவஸ்து பாவ சங்கை உதிக்காமலிருக்கவே சொற்பொருள் முன்பு கூறப்பட்டது. “ सामान्यधर्मस्य पृथग्वाक्यद्वयेनाभिधानं ” என்கிற வஸ்து ப்ரதிவஸ்து பாவ, லக்ஷணம் இல்லாமையாலும் இந்த சங்கை பராஹதமானபடி. த்விருபாதாநம் இருக்கிறபடியால் ஸக்ருந்நிர்தேஶம் என்கிறது மில்லை. அகரத்தின் முதன்மைக்கும், ஆதிபகவனுடைய முதன்மைக்கும் பொருள் வேறுபாட்டால் உவமையணிக்குச் சிதைவு வாராதோ வென்னும் ஐயந்திரிபற, “ தலைமைபற்றி வந்த அகரத்துக்கும் ஆதிபகவனுக்கும் ” என்று இரண்டுக்கும் பொதுவான விசேஷணத்தினால் நிரூபிக்கப்பட்டது. இதனால் ஸாதாரண தர்மத்துக்கு ஸாத்ருச்யம் ஏற்படுகிறது. ஸாத்ருச்யம் ஒரு அம்சத்தால் ஏற்படலாம். அகரத்தின் முதன்மையும் ஆதிபகவன் முதன்மையும் இவ்வகைப்பட்டன வென்பது யாவரும் அறிந்ததே. கேவலம் ப்ராதம்யம் விவக்ஷிதமேயன்றி வேறில்லை. ‘ தலைமையைப் பற்றி வந்த ’ வென்பதற்கு, ‘முன்னிற்பதை யொட்டி’ என்று பொருள் கூறுவதே தகுதியுடைத்து. எனவே இங்கு ‘ முதல, முதற்று ’ என்னும் இவ்விரு சொற்கள் ஸத்ருசமான ஸாதாரண தர்மத்தைத் தெரிவித்து, அகரத்துக்கும் ஆதிபகவனுக்கு முள்ள பிம்பப்ரதிபிம்ப பாவத்தை யுணர்த்துகிறதென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

நிற்க: பிம்பப்ரதிபிம்பபாவம் என்கிற சொல், ஒப்புமையால் உபமாநோபமேயங்கள் பிம்பமும் ப்ரதிபிம்பமு மெனத் தோன்றும் தோற்றத்தை முன்னிட்டுப் பெரியோர்களால் வைக்கப்பட்ட காரணப் பெயரேயன்றி வேறல்ல. இதனால் பிம்பம் நித்யம், ப்ரதிபிம்பம் அநித்யம் எனவோ, ப்ரதிபிம்பாநித்யத்வத்தினால் பிம்பமும் அநித்யம் என்று நினைக்கவோ, பிம்பநித்யதையினால் ப்ரதிபிம்பமும் நித்யம் என்று ப்ரஸங்கிக்கவோ ப்ரஸக்தி லேசமுமில்லை.

ஆகையால் இக்குறளில் பிம்ப ப்ரதிபிம்பபாவம் என்கிற உவமையணியின் ஒருவகையைக் குறிப்பிட்ட தெளி பொருளுரை எனும் பெயருக்கேற்றதோர் உரை யெழுதிய ஆசிரியர், வடமொழியிலும் தென்மொழியிலும் ஒப்புயர்வற்ற புலமையுடையவ ரென்று ஏற்படுகிறது. பற்பல விடங்களில் குறண்மூலத்துக்கும் மற்ற சாஸ்த்ரங்களுக்கு முள்ள மாறுதல்களை ஆங்காங்கு விளக்குவதே இதற்குப் போதிய சான்றாகும்.

ஸ்ரீ:

முப்பாற் றலைக் கடைப் பாக்கள்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உ.ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

“ மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.”

[திருமாலும் வாமனனாக அவதரித்து இரண்டு பெருமையுடைய திருவடிகளால் உலக மனைத்தையும் விரும்பி அளந்தான். மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும் தம்பினின்றுந் தோன்றி அந்நிலை நிற்கின்ற வெண்பாக் குறளின் இரண்டு சிறிய அடிகளால் அவ்வுலக மனைத்தினு முள்ளோரால் நினைக்கப்பட்டவை யெல்லாம் ஆராய்ந்து அளந்தார்.]

“ நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன், றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன்முறை ” என்றபடி, நான்முகன் அவதாரமென்று வள்ளுவரை முன்னோர் புகழ்ந்து கூறினர். அப்பிரமதேவர் ‘ திரிவர்க்கம் ’ என்ற மகா சாஸ்திரத்திற்கு ஆசிரியர். அறம், பொருள், இன்பம் என்ற முப்பகுதியினையுடையது அத்திரிவர்க்கம். இந்நூலைச் சுருக்கிப் பார்ஹஸ்பத்யம் சுக்ர நீதி முதலிய நூல்கள், வியாழன் வெள்ளி முதலியோரால் இயற்றப் பெற்றன. பிரமதேவர் இயற்றிய அப் பெரு நூலைப்போலவே வள்ளுவரும் திருக்குறளை இயற்றினர். இந் நூலுக்குப் பத்துப் பெயர்கள் உள. அவற்றிலொன்று முப்பால், முப்பால்

அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்று பால்களை யுடைய நூல். பால்—பகுப்பு. முப்பாலென்பது மூன்றாகிய பகுப்புடைய தெனப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்க் காரணக்குறி பெற்று நின்றது. ‘புருடார்த்தமாகிய தன்மார்த்த காம மோக்கங்களுண் முதன் மூன்றனையும் வழுவா தொழுகவே மோக்க மெய்து தலான் அதற்கு வேறு வகுத்துக் கூற வேண்டுவதின்மையின், அஃதொழித்து, ஒழிந்த தன்மார்த்த காமப் பகுதிகளை அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் பேர் கூறுவார்’ என்பது அரியதோர் உரைப்பாயிரம்.

‘முப்பாற்கு, பாரதஞ் சீராமகதை மனுப்பண்டை மறை நேர்வன மற்றில்லை நிகர்.’ வான்மீகி பகவான், ‘தவஸூாயுாய நிரதம்’ எனக் காயத்திரியின் முதல் எழுத்தாகிய தகாரத்தால் தொடங்கி, ‘ஶுசயாது’ என்னும் காயதித்ரியின் இறுதியாகிய தகரவொற்றால் முடித்தலான், தம் நூலைக் காயத்திரியின் அர்த்தமாகக் கொள்ளவைத்தார் என்பது ஆன்றோர் கொள்கை. திருவள்ளுவ நாயனாரும் ‘அகர முதல வெழுத்தெல்லாம்’ என அகர முதலாகத் தொடங்கி, ‘ஊடுதல்......பெறின்’ எனத் தமிழிற் சிறந்த னகர வொற்றிறுதியாகக் கூறியது தமிழுக்குப் பொருந்த வைத்தமை குறிக்கற்பாலது. எனவே முப்பாலின் தலைக் கடைப்பாக்களாய இவ்விரண்டினையும் சற்று விசாரிப்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கு.

திருக்குறள் அறத்துப்பால் பாயிரம் முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்துத் தலைப்பா.

‘அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.’

‘முப்பாலுக்கு, ஒருரை யின்றி யொன்பது சென்றும், ஐயுறவாக நையுறு காலை, வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க், குள்ளிய பொருளை யுரைத்தன னென்ன, விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்த’ பரிமேலழகர், இக்குறட்பாக் கருளிய உரை பின்வருமாறு:—

“அகரமாகிய முதலையுடையன எழுத்துக்க ளெல்லாம்; அதுபோல, ஆதிபகவனாகிய முதலை யுடைத்து உலகு.”

“இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய வியல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான்

முற்று முணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கே யன்றி வடவெழுத்திற்கு முதலாதல் நோக்கி ‘எழுத்தெல்லாம்’ என்றார். ஆதிபகவ னென்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன் முடிபு. உலகென்றது ஈண்டுயிர்கண் மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட் குண்மை கூறவேண்டுதலின், ‘ஆதிபகவன் முதற்றே யுலகு’ என வுலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முத லாதிபகவ னென்பது கருத்தாகக் கொள்க. ஏகாரந் தோற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற் கடவுள துண்மை கூறப்பட்டது.”

இதன் விசேட விளக்கவுரை கூறுதும்.

எழுத்துக்க ளெல்லாம் அகரமாகிய முதலையுடையன. இங்கு எழுத்து என்றது பரை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்னும் நால்வகை வாக்கினுள், அகத் தெழுவனவாகிய பரைமுதல் மூன்றனையு மொழித் தெழுந்து, புறத் திசைப்பதாகிய வைகரி வாக்கு. வடமொழியில் ஶப்தம் என்பதே ஈண்டெழுத் தென்றது. அதாவது ஒலி வடிவம்; வரிவடிவ மன்று. அந்தணர் வந்தார், வசிட்டரும் வந்தா ரென்புழி, அந்தணருட் டலைமை நோக்கி, அந்தணருள் ஒருவராகிய வசிட்டரைப் பிரித்துக் கூறுவதுபோன்று, ‘அகர முதல வெழுத்தெல்லாம்’ என்புழி, எழுத்துக்களுட் டலைமை நோக்கி எழுத்துக்களுள் ஒன்றாகிய அகரம் பிரித்துக் கூறப்பட்டதாகும். எடுத்துக் காட்டுவமை யணியாவது, உவமானத்தையும் உவமேயத்தையும் வெவ்வேறு வாக்கியமாக நிறுத்தி, இஃதுவமானம் இஃதுவமேயம் என்பது தோன்ற, இடையில் அதுபோல என்னும் உவம உருபு கொடாமற் கூறுவதாம். “அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு” என்புழி, இரண்டு பொருள் வேறு வேறு கூறியதன்றி அகரமுதல எழுத்தெல்லாம் அதுபோல என்றானும், ஆதிபகவன் முதற்றே உலகு அதுபோல என்றானும் ஒன்றாகத் துணியுமாற்றான் உவமையும் பொருளும் நீதியின் நிறுவாமையின் அது வேறுபட வந்த உவமத் தோற்றமாய் இதன் பாற்படும்; என்னை? ‘வேறுபட வந்த உவமத் தோற்றம், கூறிய மருங்கிற் கொள்வழிக்கொளாஅல்’ என்பவாகலின், மறுபொருளுவமை எனினும் எடுத்துக் காட்டுவமை எனினும் ஒக்கும்” என்பது இலக்கண விளக்கநூல் அணியியல். “நாதமாத்திரையா யெல்லா வெழுத்திற்குங் காரணமாய் முன்னிற்றலின் அம் முதல்” என்பது நன்னூற் சூத்திர விருத்தியுரை. அகரத்துக்கு முதன்மை விகாரத்தா னன்றி நாத மாத்திரையாகிய வியல்பாற் பிறத்தலானும், விகாரத்தானன்றி என்பதற்கு அண்பல் முதனா விளிம்புறல் முதலிய தொழில்களாற் பிறப்பதாகா தென்றும், இயல்பாற் பிறத்தல் என்பதற்கு அங்காந்து கூறும் முயற்சியாற்

பிறத்தலென்றும் பொருள் கொள்க. நாதம் என்பது வெண்கலமணி யடித்தபின் கலீரென் றுண்டாகும் பொதுச் சத்தம் போன்ற தொடர்ச்சியாகிய சத்தம். அஃது உயிர் முயற்சியா லெழுகின்ற உதான வாயுவாற் றோன்றுவது. ஆதி பகவன் என்பது ஆதியாகிய பகவன் என விரியும். இதில் ஆதி யென்பது சிறப்புப் பெயர்; பகவன் என்பது பொதுப் பெயர். ஒரு பொருளை யுணர்த்துதற் பொருட்டு நடுவே ஆகிய வென்னும் பண் புருபு தொக்கு நிற்கப் பொதுப் பெயருஞ் சிறப்புப் பெயரும் தம்முட் புணர்ந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இது தமிழ் நூன் முடிபாயின் 'ஆதிப் பகவன்' என்று வல்லொற்று மிகும். ஆதி பகவனுக்குத் தலைமை செயற்கை யுணர்வா னன்றி யியற்கை வுணர்வான் முற்று மறிதலால். செயற்கை யுணர் வென்பது நூலாராய்ச்சி முதலியவற்றா லாய வறிவு. இயற்கை யுணர்வு ஐயந்திரி பின்றிய இயல் பாகவே யுள்ள வறிவு. ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, சம்பத்து, ஞானம், வைராக்கியம் என்ற அறுகுணங்கள் பக மெனப்படும். அவ் வாறு குணங் களை யுடையவன் பகவன். உலகு என்பது, சித் அசித் என்ற உயிர்ப் பொருள் உயிரில் பொருள் என்னும் இரண்டையும் உணர்த்துவதாக, அவ்விரண்டிற்கும் ஆதி பகவன் முதலெனக் கூறாது, உயிர்ப்பொருட்கு மாத்திரம் ஆதி பகவன் முதலெனக் கூறியது உயிர்ப் பொருள் மெய் யுணர்வால் அவிச்சை முதலிய மாசு நீங்கி முத்தி பெறுதற் குரியதாஞ் சிறப்புப் பற்றி. 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என ஆதி பகவனை உடைமையாகவும் உலகை உடையதாகவும் வைத்துக் கூறினரெனினும், உலகத்தை உடைமையாகவும் ஆதி பகவனை உடையவனாகவும் கொள்ள வேண்டும். ஆசிரியர் நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மொழிமரபு "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்" என்னும் சூத்திர வுரையில், "இறைவ னியங்குதிணைக்கண்ணு நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் றன்மையாய் நிற்குமா றெல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரம் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்தவற்றின் றன்மையாயே நிற்கு மென்பது சான்றோர்க் கெல்லா மொப்ப முடிந்தது. "அகர முதல' என்னும் குறளான், அகரமாகிய முதலை யுடைய வெழுத்துக்க ளெல்லாம் அதுபோல இறைவனாகிய முதலையுடைத் துலகமென வள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும், கண்ணன் 'எழுத்துக் களில் அகரமாகின்றேன் யான்' எனக் கூறியவாற்றானும், பிற நூல்களா னும் உணர்க" என்று கூறியிருப்பது சிந்திக்கற்பாலது. இங்ஙனம் தலைமை பற்றி வந்ததை ஆதி சாமான்யம் என்றும், அகரமும் இறைவனும் எழுத் தின்கண்ணும் உயிர்க்கண்ணும் கலந்தியக்கும் தன்மையை ஆப்தி சாமான்யம் என்றும் கூறுவர் வடநூலார். தலைமையாகிய பொதுத்

தன்மை ஆதி சாமான்யம். வ்யாப்தியாகிய பொதுத் தன்மை ஆப்தி சாமான்யம்.

இக்குறளின் விசேட விரிவுரையை இனிப் பகர்வாம்.

'அகர முதல' என்ற குறளில் இறைவனது உண்மை யுரைக்கும் முகத்தான் அவனது தலைமையையும் விளக்கினர் தலைமைத் தமிழ்ப் புலவராய திருவள்ளுவ நாயனார். "அகாரம் ஸகல ஶப்தத்துக்கும் காரண மாய் நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே, ஸகல ஜகத்துக் கும் காரணமாய் ஸர்வரக்ஷகனை எம்பெருமானைச் சொல்லுகிறது."

"ஸஹஜஶப்தஜாதஸ்ய காரணத்வாத் ஸ்வபாவதஃ ।
ஸஹஜ வாச்யஜாதஸ்ய காரணம் விஷ்ணுரேவ ஸ்வபாவதஃ ।
வாச்யவாசகஸம்பந்தஸ்தயோரர்த்தாத் ப்ரதீயதே ॥"

[இயல்பாகவே அகாரம் எல்லாச் சொற்களுக்கும் காரணமா யிருப்பத னாலும், இயல்பாகவே பரப்பிரமமும் எல்லாப் பொருள்கட்கும் காரணமா யிருப்பதனாலும், அகாரத்துக்கும் பரப்பிரமத்துக்கும் சொல்லும் பொருளு மாகின்ற ஸம்பந்தம் பொருள் தன்மையால் தோன்றுகின்றது.]

"அகாரோ வை ஸர்வா வாக் ।"

[ஸமஸ்த வாக்குக்களும் அகாரமாயே யிருக்கும்]

"யோ வேதாதௌ ஸ்வரஃ ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டிதஃ ।
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய யஃ பரஸ்ஸ மஹேஶ்வரஃ ॥"

[யாதொரு பிரணவமானது வேதங்களின் முதலில் சொல்லப்பட்டதோ, வேதத்தின் முடிவிலு மிருக்கிறதோ, ஸ்வகாரணமான அகாரத்திலே அடங்கியிருக்கிற அந்தப் பிரணவத்திற்கு யாதொரு நாராயணன் பொருளோ, அப்படிப்பட்ட பொருளாகிய நாராயணன்தான் பரமேஶ் வரன்.]

"ப்ரக்ருத்யர்த்தமான ஈஶ்வரனுடைய காரணத்வமும், தாத்வர்த்த மான ரக்ஷகத்வமும், அர்த்த பலத்தால் வந்த ஶ்ரிய:பதித்வமும், ப்ரத்யய ஸித்தமான சேதநஶேஷத்வ ப்ரதி ஸம்பந்தியான ஶேஷித்வமும் ஆகிற அகாரார்த்தத்தை அருளிச்செய்தா ராயிற்று."

இங்ஙனம் தலைவனா யிருக்கின்ற இறைவன் திருவடியையே உபாய மாகப் பற்றி உய்யவேண்டுமென்று பின்னுரைக்கப் பெறுதற்குத் தோற்று வாயாக, அவ்விறைவன் குண பூர்த்தி யுடையவ்ன் என்பதைப் பகவத் சப்தத்தாற் கூறினர். இந்த பகவச் சப்தமானது ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்ற ஆறு குணங்களையும் குறிக்கும். இறைவன் அனந்த கல்யாண குணகண மஹோததி. 'நற்குணக் கடல்' என்றானிறே கம்பனும். எம்பெருமானுடைய ஸ்வரூப நிரூபக தர்மங் களையும், நிரூபித ஸ்வரூப விசேஷணங்களையும் அறிதல் அவசியம். பகவா னுடைய அபரிமிதமான குணங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை தாம் பிறர்க் குபயோகப்படுங் குணங்கள், தன்னியல்பை விளக்குங் குணங் கள் என்பன. ஸர்வஜ்ஞத்வம், ஸர்வ சக்தித்வம், ஸத்ய ஸங்கல்பத்வம், ஸத்ய காமத்வம், பரமோதாரத்வம், கிருதஜ்ஞதை, ஆச்ரித வத்ஸலத்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஆச்ரித பாரதந்த்ர்யம் முதலானவை பகவா னதுஎண்ணிறந்த மஹா குணங்கள். எப்பொழுதும் எல்லா வஸ்துக்களையும் உள்ளது உள்ளபடியே பார்ப்பது ஸர்வஜ்ஞத்வம். நினைத்ததை நினைத்த படியே முடிக்கச் சக்தி யுண்டாயிருத்தல் ஸர்வ சக்தித்வம். போக்யமான வஸ்துக்கள் நினைத்தபோது ஸித்தமாயிருக்கை ஸத்ய காமத்வம். தான் நினைத்ததற்கு ஒருவராலும் தடையில்லாமல் ஸங்கல்பித்தபடியே நிறை வேற்றுகை ஸத்ய ஸங்கல்பத்வம். ஆஸ்ரிதர்களுக்கு அவர்கள் அபேக்ஷித்த தற்கு அதிகமாகவே கொடுத்தும் 'நாமென்ன கொடுத்தோம்' என்றிருத் தலே பரமோதாரத்வம். தன் விஷயத்தில் அல்பம் செய்தாலும் அதை எப் போதும் அதிகமாக நினைத்திருக்கை கிருதஜ்ஞதை. ஆஸ்ரிதர்களிடத்தில் எவ்வளவு குற்ற மிருந்தாலும் அதைப் பாராதுபே ாலிருக்கை ஆச்ரித வத்ஸலத்வம். தான் ஸகலரையும் விட ஸர்வ ப்ரகாரத்தாலும் உத்தமனா யிருந்தும், எல்லாவற்றிலும் தாழ்ந்தவர்களுடன் பிரியமாகப் பழகுந் தன்மை ஸௌசீல்யம். ஆஸ்ரிதர்கள் நினைத்த மாத்திரத்தில் அவர்களிருக்கு மிடத்திற்குத் தானே வந்து கிட்டுகை ஸௌலப்யம். தான் ஸர்வேச் வரனாயிருந்தும் ஆச்ரிதரிட்ட வழக்காக அவர்கள் இடும் ஏவல் தொழில் களைத் தன் மேன்மைக்குத் தகததாயிருந்தாலும் மிக்க அன்புடன் செய்வது ஆச்ரித பாரதந்த்ர்யம்.

"ஞானனந்த மயமாய் ஞான பல ஐசுவரிய சீலாத்யநந்த கல்யாண குணகண மஹோததி" என்பது ஈட்டு வாக்கியம். "ஆழ்வான் பிள்ளைப் பிள்ளையைப் பார்த்து, 'நிர்க்குண மென்பார் மிடற்றைப் பிடித்தாற்போலே ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே என்று 'பணித்தான்.'" அடைக்கலம் புகுகின்றவன் குண பூர்த்தியில்லாத வஸ்துவைப் பற்றுவா னேல், அவன் காரிய ஸித்தி யடையான். ஸ்ரீராமபிரான் வருணனைச்

சரண்புக்கதும், தசரதன் பரசுராமனை அடைக்கலம் புகுந்ததும் பலியா தொழிந்தமை அனைவரும் அறிந்தனவே. பகவானிடமுள்ள வாத்ஸல்யாதி குணங்கட்கும், பராக்ரமம் முதலிய குணங்கட்கும், முறையே அநுகூலரும் பிரதிகூலரும் விஷயமாவார்கள். ஆனால் முற்கூறிய ஜ்ஞாந முதலிய ஆறு குணங்கட்கும் அநுகூலர் பிரதிகூலர் என்ற வேறுபாடின்றி அனைவரும் விஷயமாவார்க ளாதலால், இக்குணங்களைக் குறிக்கும் பகவச் சப்தத்தை வள்ளுவர் முதற் குறளில் அமைத்துள்ளார். இதுவன்றிச் சரணம் புகும வன், தனக்குள்ள விரோதியை யறிந்து போக்கி, நற்பலனைத் தருதற்குரிய ஜ்ஞாநம் முதலிய குணங்களை யுடையவனையே அடைவான் என்பதும் நன்கறிந்த விஷயம். எனவே இந்த ஷட்குணங்களின் பொருள் உரைப்பாம்.

(i) ஜ்ஞாநமாவது—எப்பொழுதும் ஸ்வத: ஏககாலத்தில் பஞ்சேந் திரியங்களினாலும் அறியக்கூடியவற்றை யெல்லாம் ஸாக்ஷாத்கரிக்கை.

" 𑌅𑌜𑌸𑍍𑌰𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌬𑍋𑌧𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌗𑌾𑌹𑌨𑌮𑍍 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌗𑍁𑌣𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 ॥ "

(ii) சக்தியாவது—ஸ்வ ஸங்கல்ப மாத்திரத்தால் அஸங்க்யேயமான புவநங்கட்கும் உபாதாந காரணமாகை.

" 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌭𑌾𑌵𑍋 𑌯𑌸𑍍𑌸𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 "

(iii) பலமாவது—ஸமஸ்த சித் அசித் ஸமூஹங்களையும் சிறிதும் இளைப்பின்றித் தாங்கும் ஸாமர்த்யம்.

" 𑌬𑌲𑌂 𑌧𑌾𑌰𑌣𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍍 "

(iv) ஐசுவர்யமாவது—எல்லாவற்றிற்கும் கர்த்தாவா யிருத்தலின் லக்ஷணமான ஸ்வாதந்தர்யத்தோடு எங்குந் தடையின்றிச் செல்லும் ஸங்கல்பத்தை யுடைமை.

" 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌮 𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌪𑌰𑌿𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌮𑍍 ।
𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌨𑌾𑌮 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌗𑍁𑌣𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑍈𑌃 ॥ "

(v) வீர்யமாவது—தான் உபாதாந காரணமாகிச் சேதநாசேதநங் களை யுண்டாக்கியும் தனக்கு ஒரு விகாரமின்றிக்கே யிருக்கை.

" 𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌵𑌿𑌕𑌾𑌰𑌵𑌿𑌰𑌹𑍋 𑌹𑌿 𑌯𑌃 ।
𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌨𑌾𑌮 𑌗𑍁𑌣𑌸𑍍𑌸𑍋𑌽𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌤𑍍𑌵𑌾𑌪𑌰𑌾𑌹𑍍𑌵𑌯𑌃 ॥ "

(vi) தேஜஸ்ஸாவது—வேறொருதவியின்றி அடைந்தாரது தாபங் களைப் போக்கியும், எதிரிகட்குத் தாபத்தைத் தந்தும் போருந் தன்மை.

இதன் முழு விவரங்களை ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் உத்தர சதகத்தில் பரக்கக் காணலாம்.

முதற் குறளால் கூறப்பட்ட ஆறு குணங்களையும் நாயனார், பின்னர் "எண் குணத்தான்" என்ற குறளில் விவரிப்பது குறிப்பிடத் தக்கது.

எண் குணங்களாவன:—"அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோ அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:"

பாபமின்மை, நரையின்மை, மரணமின்மை, சோகமின்மை, பசியின்மை, தாகமின்மை, ஸத்ய காமம், ஸத்ய ஸங்கல்பம் என்பன இவற்றின் பொருள். "நற்றாள்," "மாணடி" என்ற பதங்கள் நரையின்மையைப் புலப்படுத்தும். "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்றதனால் பாபமின்மை பெறலாம். "இறைவன் பொருள்சேர் புகழ்" என்றதனன் ஸத்ய காமம், ஸத்ய ஸங்கல்பம் விளங்கும். "பொறிவாயி லைந்தவித்தான்" என்றதனால் பசியின்மை, தாகமின்மை, சோகமின்மை, மரணமின்மை என்ற குணங்களும் அறியக் கிடக்கின்றன. விரிக்கிற் பெருகும்.

மேலும், 'மொழி முதற் காரணமா மணுத்திரளொலி எழுத்து' என்பது நன்னூற் சூத்திரம். எழுத்தின் பிறப்பு:

"நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே."

"அவற்றுள், முயற்சியுள் அகூ அங்கப்புடைய."

என்று குறிக்கப்பட்டுள்ளது. இனி எழுத்து என்பது நூல் என்ற பொருளையுந் தரும். ஔவையார் ஆத்திசூடியில் 'எண்ணெழுத் திகழேல்' என்றும், கொன்றை வேந்தனில் 'எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்' என்றும் அருளியிருத்தல் கவனிக்கத் தக்கது. வள்ளுவரும்,

"எண்ணென்ப வேனையெழுத் தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு." என்றார்.

இதற்குப் பரிமேலழகர் 'அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றை யெழுத்தென்று சொல்லுவனவும் ஆகிய விக்கலைகள் இரண்டனையும் அறிந்தார் சிறப்புடைய உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர்' என உரை வகுத்துள்ளார்.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

[இயற்றமிழை யறிந்தால் ஒருவனுக்குப் பேதைமையானது ஒழியும். அது ஒழிந்தால் அவன் சொற்பகுப்பிற் றோன்றும் மாறுபாட்டை ஒழிக்குந் தன்மையை யுடையவனாவான். அம்மாறுபாட்டை யொழித்த நல்லறிவுடையவன் முதல் நூலின் பொருளை ஐயந்திரிபற அறிந்து பந்தத்தை யொழித்து மோட்சத்தை யடைவான்.]

எனவே 'எழுத்தெல்லாம் அகர முதல' என்பதற்கு, சகல சாஸ்திரங்களும் அகாரவாச்யனை எம்பெருமானையே முதலாக உடைத்து. அவை அவனையே குறிக்கின்றன; அவனிடத்தினின்றே உண்டாயின.

"புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலை சாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயண பதம். அவையாவன—வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும், ஸௌசீல்யமும், ஸௌலப்யமும், ஜ்ஞாநமும், சக்தியும். குற்றங் கண்டு வெருவாமைக்கு வாத்ஸல்யம்; கார்யஞ் செய்யுமென்று துணிகைக்கு ஸ்வாமித்வம்; ஸ்வாமித்வங் கண்டு அகலாமைக்கு ஸௌசீல்யம்; கண்டு பற்றுகைக்கு ஸௌலப்யம்; விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞாந சக்திகள்" என்ற முமுக்ஷுப்படி சூர்ணிகையையும், பகவன் என்ற பதார்த்தத்தையும் நன்கு ஒப்பு நோக்குக.

'பகவன் முதற்றே யுலகு' என்றதால் சித்துக்கும் அசித்துக்கும் சரீரி எம்பெருமான் என்பதும், அவன் ஆண்டான் நாம் அடிமை என்றும், அவன் ஸ்வாமி நாம் அவன் சொத்து உடைமை என்பதும் பெறலாம். உலகு என்பது லீலா விபூதியைக் காட்டி, அத்தால் நித்ய விபூதியையும் குறிக்கும். இதனால் பகவான் உபயவிபூதி நாயகன் என்பதும் தெளிகின்றது. அகரம் என்ற ஓரெழுத்தே பிற எழுத்துக்களாக ஆனாற்போல, பகவானே எல்லாமுமானன்; அதாவது ஸகலமும் அவன் ஸங்கல்பப் பிரகாரம் நடக்கின்றன என்பதும் பெற்றாம். இங்ஙனமாவதை, 'அகர முதல வெழுத்தெல்லா மாதி' என்பதே குறிக்கும். 'ஆலமர் வித்தின் அருங்குறள், ஓங்கி யுலகளந்த உத்தமனன்' போன்று, குறில் நெடில் ஆயிற்று என்பதும் தொனியர்த்தம்.

பரம வைஷ்ணவ ரென்று பலர் கொண்டாடும் பரிமேலழகர், முதற் குறளிலுள்ள 'பகவன்' என்ற பதத்துக்கு உரை வகுக்காது விட்டதும்,

'கோளில் பொறியில்' குறளிலுள்ள 'எண் குணத்தான்' என்பதற்கு எண் வகைப்பட்ட குணங்களையுடையான் என்று கூறி, எண் குணங்களாவன என விரித்து இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது என்று முடிப்பதை நோக்க, இவர் பட்ச பாதமுள்ளவ ரென்பதையும் உண்மையான ஸ்ரீ வைஷ்ணவர் என்று முற்றுங் கருத இடமில்லை என்பதையும் அறிஞர் கண்டுணர்க. மேலும் 'இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுளை யெனவறிக' என கடவுள் வாழ்த்து உரையாரம்பத்தில் இவர் கூறியது எம்மட்டில் பொருத்த முடைய தென்பதும் சிந்திக்கற்பாலதே. அது, வள்ளுவர் வழிபடு கடவுளையே வாழ்த்தினார் என்பதே சான்றோர் அபிமதம்.

காமத்துப்பால் கற்பியல் ஊடலுவகை என்ற அதிகாரம் இறுதிச் செய்யுள் :

“ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.”

இதற்குப் பரிமேலழகருரை வரைகுதும்.

“தலைமகளை யூடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனுய்த் தன்னுள்ளே சொல்லியது. காம நுகர்ச்சிக் கின்ப மாவது, அதனை நுகர்தற்குரியராவார் ஆராமைபற்றித் தம்மு ளூடுதல் ; அவ்வூடுதற் கின்பமாவது, அவனை யளவறிந்து நீங்கித் தம்முட்கூடி முயங்குதல் கூடுமாயின், அம்முயக்கம். கூடுதல் - ஒத்தவளவின ராதல். முதிர்ந்த துனியாய வழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாய வழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண்டற்கு மிடையாகிய வளவறிந்து நீங்குத லரி தென்பது பற்றிக் 'கூடி முயங்கப் பெறின்' என்றான். அவ்விரண்டின்பமும் யான் பெற்றே னென்பதாம்.”

'காமத்துப் பாலுக்குக் காமத்தைக் குறித்துச் செம்பொருளாகச் சொல்லப்பட்ட சிற்றின்பப் பொருளன்றி மோட்சத்தைக் குறித்துக் குறிப்புப் பொருளாகச் சொல்லப்பட்ட பேரின்பப் பொருளுமுண்டு' என்று ஆன்றோர் கூறுவர்.

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் ஸம்ஸார ஸம்பந்தத்தை யறுத்துத் தந்தருளவேண்டுமென்று எம்பெருமானைப் பிரார்த்தித்து, திருவாசிரியத்தில் அவன் தன்னுடைய வடிவழகைக் காட்டிக்கொடுக்கப் பூர்ணமாக அனுபவித்தார். பெரிய திருவந்தாதியில் த்ருஷ்ணுனுகுணமாகப் பேசியும் நினைத்

தும் தரித்துத் திருவாய்மொழியில் எம்பெருமானைக் கண்டு அனுபவித்துத் தம்முடைய பிரகிருதி சம்பந்தமாகிற பிரதிபந்தக மற்று எம்பெருமானைப் பெற்று முடிக்கிறார். திருவிருத்தம் 100, திருவாசிரியம் 7, பெரிய திருவந்தாதி 87, திருவாய்மொழி 1102 பாடல்கள்; ஆக சடகோபர் பாடிய பாக்களின் தொகை 1296. இதில் திருவாய்மொழியை 'உயர்வற வுயர் நல முடையவன்' என்று உகாரத்தில் தொடங்கி,

'அவா வறச் சூழரியை யயனை யரனை யலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன
அவாவி லந்தாதிகளா லிவையா யிரமு முடிந்த
அவாவி லந்தாதிப் பத்தறிந்தார் பிறந்தா ருயர்ந்தே.”

என்று அகாரத்திலேயே முழுதும் தலைக்கட்டுகிறார். இவ்வாழ்வார் திருவடியை அடியொற்றிய திருவள்ளுவரும் 'அகரமுதல' என ஆழ்வார் நிறுத்திய படியான அகரத்தில் ஆரம்பித்து, உகரத்துக்கு நெடிலான ஊகாரத்தில், 'ஊடுதல் காமத்திற்கு இன்பம்' என்று முடிக்கிறார். மேலும் இவர் பாடிய குறட் பாக்கள் 1330. இதில் பாயிரம் 40 குறட் பாக்கள் நீங்க 1290 ஆகும். இருவர் பாசுர வகையும் அனேகமாய் ஒத்திருத்தல் காண்க. என்னே அவதார புருஷர்களின் மஹிமை!

எம்பெருமானை நாயகனாகவும் நம்மை நாயகியாகவும் கருதி, பக்தி பிரபத்திகளால் அவனை அடைவதே நம்மனோர் கண்டமுறை. காமத்துப் பாலில் இப்பாவத்தி லிறங்கி ஈடுபடுகிறார் தமிழ்த் தலைக்கவி வள்ளுவனார். 'காம அனுபவத்திற்கு இன்பமாவது புலவி செய்வதாம். அவ்வூடலுக்கு இன்பமாவது புலவியை நீட்டிக்காமல் அளவறிந்து நீங்கி ஒத்த அன்பாய் இருவரும் கூடிக்கலந்து ஒருவரோடு ஒருவர் தழுவிப் பெறுதலாகிய இன்பமாகும்' என்று தம் பிரபந்தத்தைத் தலைக்கட்டியுள்ள அழகே அழகு. ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒருவரோ டொருவர் எங்ஙனம் தழுவிப் பரிமாறி வாழவேண்டு மென்பதைக் குறிப்பால் தெரிவிப்பது நோக்கற்பாலது.

'பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக் கமரரும்ப
தேவிற் றிருமாலெ னச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.”

“கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.”

ஸ்ரீ:

சாரீரக மீமாம்ஸையில் அபசூத்ராதிகரணம்

[ஸ்ரீ காஞ்சீ, பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்யர்]

ப்ரஹ்மஸூத்ரத்தில் முதலத்யாயம் மூன்றாவது பாதத்தில் அபசூத்ராதிகரணம் என்றொரு அதிகரண முள்ளது. அதன் ப்ரமேயம் இன்னதென்பதை ஸ்ரீ பாஷ்யத்தை யடியொற்றி இங்கு விவரிக்கின்றேன். இப்போது இந்த விசாரத்திற்கு ப்ரஸக்தி என்னென்னில்: ஸ்ரீ பாஷ்யத்தில் அதிகமான ப்ரவேசம் இல்லாதவர்களும், ஸ்ரீ பாஷ்யத்திலுள்ள மிகவும் ஆவச்யகமான பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளக் கடவர்கள் என்று அடியேனுக்குத் தோன்றினமையே. முக்யமான அதிகரணங்களின் ப்ரமேயங்களை எளிய நடையில் தெளிய வெழுதி உபகரிக்கலாமென்று எண்ண முண்டாயிற்று. க்ரமேண பல அதிகரணங்களின் ஸாராம்ஸங்களைத் தொகுத்தெழுதலாமென நினைத்து, முந்துற முன்னம் அபசூத்ராதிகரணம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கு முன், மநுஷ்யர்கள் தவிர மற்ற தேவதைகளுக்கும், வஸு முதலிய தேவதா விசேஷங்களுக்கும், ப்ரஹ்ம வித்யையில் அதிகார முண்டா இல்லையா என்று விசாரிக்கப்பட்டு, உண்டு என்றே நிஷ்கர்ஷிக்கப்பட்டது. அதிகார முண்டென்பதை உபபாதநம் செய்வதற்கு உறுப்பான ஹேதுக்கள் இரண்டு. அவையாவன—அர்த்தித்வம் ஸாமர்த்யம் என்பவை. அர்த்தித்வமாவது—'இது நமக்கு வேணும்' என்கிற விருப்பமுடைமை. ஸாமர்த்யமாவது—அதிகரிப்பதற்கு அவசியமான தேஹேந்த்ரிய சக்தி முதலியன குறை யற்றிருக்கை. இவ்விரண்டும் தேவதைகளுக்கு ஸம்பவிக்கு மாதலால், அவர்களுக்கு ப்ரஹ்ம வித்யையில் அதிகாரம் தடையற்றது என்று நிரூபிக்கப்பட்டது. அதன்மேல் ஒரு சங்கை தோன்றியது. அர்த்தித்வமும் ஸாமர்த்யமுமே அதிகார ப்ரயோஜகங்கள் என்று கொள்ளுமளவில், மநுஷ்யர்களில் ஒரு வகுப்பான நான்காவது வருணத்தவர்கட்கும் அர்த்தித்வ ஸாமர்த்யங்கள் இருக்கக்கூடு மாதலால், அவர்களுக்கும் ப்ரஹ்ம வித்யையில் அதிகாரம் உண்டென்று கொள்ளவேண்டி வாராதோ? என்று.

அஃது உண்டு என்று சொல்லலாமா இல்லை யென்று சொல்லலாமா என்று விசாரிக்கப் புகுமிடத்து, இல்லை யென்று சொல்லவேண்டு மென்பதே ஸித்தாந்தம். இது நன்கு தேறுவதற்காக, சூத்ரர்களுக்கும் ப்ரஹ்ம வித்யாதிகார முண்டென்பதைப் பூர்வபக்ஷ கோடியாக வைத்து, அதற்குரிய ஆதாரங்கள் முன்பு காட்டப்படுகின்றன.

பூர்வபக்ஷீ:—ஒன்றில் ஒருவனுக்கு அதிகாரமுண்டென்பதற்கு ஸாதகம் அர்த்தித்வமும் ஸாமர்த்யமுமே யாதலால், அவை ப்ரஹ்ம வித்யா விஷயத்தில் சூத்ரர்களுக்கும் இருக்கக்கூடு மாதலால், அவர்களும் ப்ரஹ்ம வித்யாதிகாரிகளாகக் குறையில்லை.

(இடையில் ஸித்தாந்தியின் ஆக்ஷேபம்.)

சூத்ரனுக்கு அக்நி கார்யத்தில் அதிகாரமில்லை யென்பது சாஸ்த்ர ஸித்தம். ஆகவே அக்நி கார்யங்களை அபேக்ஷித்திருக்கின்ற ப்ரஹ்ம வித்யைகளில் சூத்ரன் அதிகரிக்க ப்ராப்தியில்லையே.

(இதற்குப் பூர்வபக்ஷியின் ஸமாதாநம்.)

ப்ரஹ்ம வித்யையாவது ப்ரஹ்மோபாஸநம். அது மநோவ்ருத்தி ரூபமே யல்லது கர்ம ஸாத்ய மன்று. உபாஸநம் சாஸ்த்ரீய கர்மாக்களையும் அபேக்ஷிக்கிறது என்று கொண்டாலும், அந்தந்த வருணத்தவர்கட்கு உரிய கர்மாக்களையே அபேக்ஷிக்க ப்ராப்தமாதலால், சூத்ரனுக்கும் தன் வருணத்திற்குரிய ப்ராஹ்மணஸுச்ரூஷா ரூபமான கர்மம் உண்டாதலால் அதனைச் செய்து அதிகாரியாகக் குறையில்லை.

வேத மோதாமலும் வேதாந்த ச்ரவணம் பண்ணாமலு மிருந்து, அதனால் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் உபாஸந ப்ரகாரத்தையும் அறியப் பெறாதிருக்கும் சூத்ரனுக்கு ப்ரஹ்மோபாஸநம் எப்படி ஸம்பவிக்கும் என்கிற ஆக்ஷேபமும் பொருந்தாது. வேத வேதாந்தங்களில் ப்ரவேச மில்லாதிருந்தாலும், இதிஹாஸ புராணங்களைக் கேட்டு ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் உபாஸந ப்ரகாரத்தையும் தெரிந்துகொள்வது ஸாத்யமேயன்றோ? "**श्रावये-च्चतुरो वर्णान् कृत्वा ब्राह्मणमग्रतः**" இத்யாதி ப்ரமாணங்களினால் சூத்ரனுக்கும் இதிஹாஸ புராணங்கள் கேட்பதில் அதிகாரம் அநுமதிக்கப்பட்டிருக்கின்றதன்றோ? விதுரர் துலாதாரர் தர்மவ்யாதர் முதலானோர் ப்ரஹ்ம நிஷ்டர்களாக இதிஹாஸ புராணங்களிற் கூறப்பட்டிருக்கவுங் காணாநின்றோம்.

அன்றியும், சாந்தோக்யோபநிஷத்தில் ஸம்வர்க்க வித்யா ப்ரகரணத்திலுள்ள வாக்யத்தை நோக்குமிடத்து, சூத்ரனுக்கும் ப்ரஹ்ம வித்யாதிகாரம் உண்டென்னுமிடம் புலப்படுகின்றது. எங்ஙனே யென்னில்: ஜாநச்ருதி யென்பவன் ரைக்வ மஹர்ஷியை அடுத்துத் தனக்கு ப்ரஹ்மவித்யோபதேசம் பண்ணுமாறு ப்ரார்த்திக்க, அவர் அப்படியே இவனுக்கு உபதேசம் பண்ணினதாகச் சொல்லியிருக்கின்றது. இந்த ஜாநச்ருதி, ஜாதியில் சூத்ரனென்பது அங்குப் புலப்படுகின்றது. ரைக்வர் இவனை நோக்கிக் கூறின

வாக்யத்தில் 'ஶூத்ர!' என்கிற ஸம்போதநம் காண்கின்றதன்றோ? ஆக இவ்வளவு காரணங்களினால் சூத்ரனுக்கும் ப்ரஹ்ம வித்யாதிகாரம் உண்டென்று கூறத் தட்டில்லை. (இவ்வளவும் பூர்வபக்ஷம்.)

இதன்மேல் ஸித்தாந்தம்.

சூத்ரனுக்கு ப்ரஹ்ம வித்யாதிகாரம் ஸம்பவிக்க மாட்டாது. அதிகார ப்ரயோஜகங்களான அர்த்தித்வ ஸாமர்த்யங்களிரண்டினுள் ஸாமர்த்யமில்லாமல் வெறும் அபேக்ஷை மாத்ரம் இருந்தால் என்ன பயன்?

ஸாமர்த்யம் இல்லையென்பது எங்ஙனே தெரிகின்றதென்னில்: தேஹேந்த்ரிய சக்தி குறையற்றிருப்பது மாத்ரம் ஸாமர்த்யமென்னவொண்ணாது. இன்றியமையாத ஸாதநஸம்பத்தி குறையற்றிருப்பதும் ஸாமர்த்யமாகும். ஒரு யஜ்ஞமநுஷ்டிக்க வேணுமென்று ஒருவனுக்குத் தோன்றினால், அதைச் செய்வதில் தனக்கு அபேக்ஷையும் சரீரபலமும் உள்ளனவென்பது மாத்ரமே கொண்டு, அதைச் செய்ய ப்ரவர்த்தித்துவிடலாமோ? இன்னமும் அதற்கு வேண்டியனவாக சாஸ்த்ரங்களிற் கூறப்பட்டுள்ள யோக்யதா ஸம்பத்திகளும் உடன் அமைய வேணுமன்றோ? அதுபோல, ப்ரஹ்ம வித்யாதிகாரத்திற்கும் வேதாத்யயநம் முக்ய உதவியாகத் தேறுதலால், அஃதில்லாத சூத்ரனுக்கு அவ்வதிகாரம் ஸித்திக்க மாட்டாது. ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் உபாஸந ப்ரகாரத்தையும் தெரிந்துகொள்ளாதவனுக்கு உபாஸநாதிகாரம் அஸம்பாவிதம். இதிஹாஸ புராண ச்ரவணத்தாலே அவற்றைத் தெரிந்துகொள்ளலாமென்றதும் ஒவ்வாது. சூத்ரன் இதிஹாஸ புராணங்களைக் கேட்கலாமென்று சாஸ்த்ரங்களில் அநுமதிக்கப்பட்டிருப்பது வாஸ்தவமே. ஆனால் பாபங்களைப் போக்கிக் கொள்வதற்காக அவனுக்கு அந்த ச்ரவணம் அநுமதிக்கப்பட்டதேயல்லது, உபாஸநத்தில் அவன் அதிகரிக்கலாமென்பதற்காக அநுமதிக்கப்பட்டதன்று. இதிஹாஸ புராணங்கள் வேதோபப்ரும்ஹணம் செய்துகொண்டே உபாயமாகுமேயல்லது, ஸ்வதந்த்ரமாக உபாயமாக மாட்டாது. வேதத்தில் அதிகாரமற்ற சூத்ரனுக்கு இதிஹாஸ புராண ச்ரவணம் பாபக்ஷயந் தவிர வேறு என்ன பலனைத் தரக்கூடும்? உபாஸநத்திற்கு உபயோகியான ஞானத்தை ஒருநாளும் அது உண்டுபண்ண மாட்டாது. ஆகவே சூத்ரனுக்கு உபாஸநத்தில் அதிகாரம் கிடையாது.

விதுரர் முதலான சில மஹான்கள் சூத்ர யோநியிற் பிறந்திருந்தும் ப்ரஹ்ம நிஷ்டர்களாயிருந்தார்களென்பது உண்மையே. அதையெடுத்துக் காட்டுவதில் பயனில்லை. அவர்கள் ஜந்மாந்தரங்களில் பெற்ற ஞானம் குன்றாதிருக்கப் பெற்றவர்களாதலால், அதனால் ப்ரஹ்ம நிஷ்டர்களாக

ஆனார்களத்தனை. அப்படியானால் அவர்கள் சூத்ரயோநியில் ஏன் ஜநித்தார்களென்னில்: ஏதோ ப்ராரப்த கர்மமடியாக ஜநித்தார்கள். அப்படிப்பட்ட சில விசேஷாதிகாரிகளை மற்றையோர் த்ருஷ்டாந்தமாகக் கொள்ளலாகாது.

சாந்தோக்யோபநிஷத்தில் ஸம்வர்க்க வித்யா ப்ரகரணத்தில்—ரைக்வரிடம் ப்ரஹ்ம வித்யையை அதிகரித்த ஜாநச்ருதி சூத்ர ஜாதியிற் பிறந்தவனென்று தெரிகிறது என்றதும் பிசகு. அந்த ஸ்தலத்தில் சூத்ர பதத்தினால், ஒரு தடவைக்கு இருதடவை ஜாநச்ருதி ஸம்போதநமிருப்பது வாஸ்தவமே. ஆனால் அந்த சூத்ர பதம் சூத்ர ஜாதீயனென்கிற பொருளில் வந்ததன்று; சோகமுடையவனென்ற பொருளில் வந்த தத்தனை. இதைப் பற்றிச் சிறிது விவரணம் செய்வோம்.

சாந்தோக்யோபநிஷத்தில் நான்காவது ப்ரபாடகத்தில் முதலிரண்டு கண்டங்களில், அந்த ஜாநச்ருதியின் உபாக்யாநம் ஓதப்பட்டுளது. அதாவது: புத்ரன் என்பவனுடைய மகன் ஜநச்ருதியென்பான்; அவனுடைய மகன் ஜாநச்ருதி. இவன் பெருத்த தநிகன்; அபாரமாக அதிதி ஸத்காரங்களைச் செய்பவன்; நான்கு திசைகளிலும் பலபல தர்ம ஸத்ரங்களை ஏற்பாடு பண்ணினவன். ஒரு நாள் இவனிடம் ஸத்காரம் பெற்ற சில மஹாத்மாக்கள், இவனுக்கு ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை உண்டுபண்ணவெண்ணி, அன்றிரவு ஹம்ஸ ரூபிகளாய் இவனுடைய பார்வையில் மேலே ஸஞ்சரிக்கையில், முன்னே செல்லுகின்ற ஹம்ஸத்தை நோக்கிப் பின்னே செல்லுகின்ற ஹம்ஸமானது, 'அப்பா! கீழே சயனித்திருக்கின்ற மஹானுடைய சோதி எங்கும் பரவியிருக்கின்றது; அது உன்னைக் கொளுத்தாதபடி விநயமுடன் செல்வாயாக' என்று சொல்லிற்று. இதைக் கேட்ட ஹம்ஸம், 'இவன் ரைக்வரென்கிற மஹாநுபாவரைப்போல ப்ரஹ்ம ஜ்ஞாநியல்லனே; வெறும் பணக்காரனான இவனுக்கு என்ன சோதி? அது என்னைத் தஹிக்க ப்ரஸக்தியுமில்லை' என்று அதற்குப் பதில் சொல்லிற்று. அதைக் கேட்ட அன்னம் 'அந்த ரைக்வரென்பவர் யாவர்?' என்று கேட்க, 'அவர் சிறந்த ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நர்' என்று மற்றொரு அன்னம் விடையளித்தது. இப்படி ரைக்வரென்பவரைப் புகழ்ந்தும் தன்னையிகழ்ந்தும் அவ்வன்னப் பறவை சொல்லிக்கொண்டு போனதைக் கேட்ட ஜாநச்ருதி, அந்த ரைக்வர் எங்கிருக்கிறாரென்று தேடியறிவதற்காக ஒருவனையனுப்பி, அவனும் ச்ரமப்பட்டுக் கண்டறிந்து வந்த பின், தானும் அவரிடஞ் சென்று, விசேஷ தக்ஷிணைகளைத் திருமுன் காணிக்கையாக ஸமர்ப்பித்து, 'ஸ்வாமிந்! தேவரீர் உபாஸிக்கும் தேவதையை அடியேனுக்கு உபதேசிக்கவேணும்; அதாவது: தேவரீர் அநுஷ்டிக்கும்

ப்ரஹ்மோபாஸநத்தை அடியேனுக்கும் உபகரிக்கவேணும்' என்று வேண்டிக்கொண்டான்.

அது கேட்ட ரைக்வர் யோக மஹிமையினால் எதையும் அறியவல்லராதலால், இவன் ஹம்ஸத்தின் இகழ்வுரையைக் கேட்டு மிகவும் சோகமுற்று ப்ரஹ்ம ஜ்ஞாநம்பெற விரும்பி வந்திருக்கிறானென்பதை யுணர்ந்து, இவன் உபதேச பாத்ரமே யானாலும், நெடுங்காலம் சுச்ரூஷை பண்ணுதலின்றி, ஏதோ பொருள்களை ஸமர்ப்பித்துவிட்டு ஞானம் பெற்றுப் போவதாக இருக்கிற இவன், தன்னுடைய ஆற்றலுக்குத் தக்கவாறு இன்னமும் அதிகமான பொருள்களை ஸமர்ப்பித்தாலல்லது ப்ரஹ்மவித்யை ப்ரதிஷ்டிதமாக இருக்கப் பெறான் என்று கருதி, அவனை நோக்கிச் சில வார்த்தைகள் சொல்லும்போது,

" अहहारे त्वा शूद्र ! तवैव सह गोभिरस्तु "

என்றார். 'நீ இப்போது காணிக்கையாகத் தந்த பொருள்கள் உனக்கே யிருக்கட்டும்' என்றார். இன்னமும் அதிகமான பொருள்களை ஸமர்ப்பிக்க வேணுமென்பது குறிப்பு. அந்த வார்த்தையின் இடையில் '**शूद्र !**—சூத்ர !' என்கிற ஸம்போதநமுள்ளது. இதையே பூர்வபக்ஷி தனக்கு முக்ய ஸாதகமாகக் கொண்டான். இந்தப் பதம் இங்கு ஜாதிபரமன்று. '**शोचतीति शूद्रः**' என்று அவயவ வ்யுத்பத்தியில் நோக்கு. 'சோக முடையவனே!' என்பது அதற்குப் பொருள். தனக்கு ப்ரஹ்ம ஜ்ஞாநமில்லையே யென்கிற சோகம் முகத்திலே பொலிய அவன் வந்தானாதலால், அந்த சோகத்தை ரைக்வர் அறிந்தமை தோன்ற ஸம்போதிக்கிறபடி. உன்னுடைய அளவிலாத சோகம் தீரும்படியாக நீ சிறந்த ப்ரஹ்ம ஜ்ஞாநம் பெறவேணுமானால், நெடுநாள் சுச்ரூஷை பண்ணவேண்டியதற்குப் பதிலாக உன் சக்திக்குத் தகுதியாகவாயினும் தக்ஷிணை ஸமர்ப்பிக்கவேண்டாவோ என்று காட்டினபடி.

ரைக்வர் இங்ஙனம் சொல்லக் கேட்ட ஜாநச்ருதி மீண்டும் தன் சக்திக்கு ஏற்றவாறு விசேஷ பொருள்களை ஸமர்ப்பித்து அணுகி நிற்க, அப்போது ரைக்வர் அவனுடைய யோக்யதையை வெளியிடா நின்று கொண்டு சூத்ர சப்தத்தினாலேயே விளித்து ஒரு வார்த்தை சொன்னார்.

" आजहारेमाश्शूद्र ! अनेनैव मुखेन आलापयिष्यथाः । "

'உன்னுடைய சக்திக்கு ஏற்ற பொருள்களைக் கொணர்ந்து ஸமர்ப்பித்தாய்; நெடு நாளைய சுச்ரூஷை யில்லாவிடினும், இந்த அரிய பெரிய காணிக்கை மூலமாகவே என் வாக்கிலிருந்து ப்ரஹ்மோபாஸந க்ரமத்தின்

உபதேசத்தைப் பெறுவாய்' என்றார். உபதேச பாத்ரமாவதற்கு ஆர்த்தியே முக்யம். அஃது அவனுக்கு மெய்யே இருக்கின்றது என்கிற யோக்யதா பூர்த்தியை வெளிப்படுத்தவே ரைக்வர் 'ஆர்த்தியை யுடையவனே!' என்கிற பொருளுடையதான 'சூத்ர!' என்ற ஸம்போதந பதத்தை ப்ரயோகித்தாரென்று கொள்ளவேணும்.

இந்த ஜாநச்ருதி க்ஷத்ரிய ஜாதியிற் பிறந்தவனே யன்றிச் சூத்ரஜாதியிற் பிறந்தவனல்லன் என்பதும், அந்த ப்ரகரணத்திலுள்ள பல சப்தங்களின் ஸ்வாரஸ்யத்தால் புலப்படுகின்றது. அன்றியும் அவன் உபதேசம் பெற்ற ஸம்வர்க்க வித்யையில் அந்வயித்த மற்றுஞ் சிலரை அந்த உபநிஷத்தே கூறியிருக்கின்றது. ப்ராஹ்மண க்ஷத்ரிய ஜாதியர்கள் தவிர இதரர்கள் அந்வயித்ததாக இல்லை. ஆக இவ்வகைக் காரணங்களினால், பரப்ரஹ்மோபாஸநத்தில் சூத்ரனுக்கு அதிகாரமில்லை யென்பது ஸித்தாந்தமாகத் தேறிற்றுகிறது.

இந்த அதிகரணத்தில் ஏழு ஸூத்ரங்களுள்ளன. அவற்றுள் முதல் ஸூத்ரம்:

'**शुगस्य तदनादरश्रवणात्तदाद्रवणात्सूच्यते हि**' என்பதாம்.

[இதன் பொருள்.] **तदनादरश्रवणात्**—அந்த ஹம்ஸ பக்ஷி சொன்ன இகழ்வுரையைக் கேட்டதனாலே, **तदा आद्रवणात्**—அப்போதே ஆசார்யனிருக்குமிடம் நோக்கி அந்த ஜாநச்ருதி ஓடிவந்தபடியினால், **अस्य शुक् सूच्यते हि**—அவனுடைய முகக் குறியைக் கண்ட ஆசார்யனால் 'இவன் ஆர்த்தி மிகுந்து வந்திருக்கிறான்' என்பது தெரிவிக்கப் படுகிறது. அதைத் தெரிவிக்குமதுவே சூத்ரசப்தம் என்றபடி.

மேலுள்ள ஆறு ஸூத்ரங்களும் அந்த ஜாநச்ருதி க்ஷத்ரியனே யென்பதையும், சூத்ரனுக்கு ப்ரஹ்ம வித்யாதிகாரம் இல்லை யென்பதையும் நன்கு உபபாதநம் செய்வதற்கே உறுப்பாக அவதரித்தவை. விரிப்பிற் பெருகுமென்று விடுக்கின்றேன்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் இவ்வதிகரணத்தின் ஸாரமான ப்ரமேயத்தை அதிகரண ஸாராவளியில் மூன்று ச்லோகங்களாலே சுருங்க வருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீ:

திருமடல்

[ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசாரியர். B. A., B. L., அட்வொகேட், திருவல்லிக்கேணி.]

மடலூர்தல் அல்லது மடலெடுத்தல் என்பது, நாயகியைப் பிரிந்த நாயகன் பிரிவாற்றாமையாலே செய்வதொரு ஸாஹஸ க்ருத்யம். மடல் என்பது பனை மரத்தின் கருக்கு. அக்கருக்கினால் குதிரை போன்ற ஒரு வடிவம் செய்து, அதன் மீது ஊர்ந்து செல்லுதல் மடலூர்தல் எனப் படும்.

"ஆங் கோலைகள்செய்து குதிரியாய் மடலூர்துமே."

என்ற ஆழ்வார் அருளிச் செயலையும் காண்க. இவ்வடிவை 'மடல்மா' என்றும் வ்யவஹரிப்பர்கள். "உண்ணாதே குளியாதே உகந்த விஷயத்தை ஒரு படத்திலே லிகித்து அதனைக் கொண்டு திரிகையும், அறவிளைந்தால் அதன் காற்கடையில் விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கக் கிடக்கையும், அங்ஙனே முடிகையுமாம். இத்தால் ப்ரயோஜநம் என்னென்னின்: எம்பெருமான் இரங்கும் என்கை. இல்லையாகில் இது தானே ப்ரயோஜனமாதல்" என்று இதன் லக்ஷணம் கூறுவர். 'மாசறு சோதி' வ்யாக்யாந அவதாரிகையில் இம் மடலெடுக்கும் முறை, "அபிமத விஷயத்தைப் பிரிந்த ஆற்றாமையாலே அவ்விஷயத்தை ஒரு படத்திலே எழுதி, வைத்தகண் வாங்காதே அத்தைப் பார்த்துக்கொண்டு, பனைமடலைக் குதிரையாகக் கொண்டு, பிரிந்த போது தொடங்கி ஊணும் உறக்கமும் இன்றிக்கே........மயிரை விரித்துக் கொண்டு திரியாநின்றால்" என்று அருளிச் செய்யப்பட்டுள்ளது. இந்த தர்ம ஹாநியைக் கண்ட க்ஷத்ரியாதிகள், அல்லது பந்துக்கள், அல்லது தோழிகள், இவன் இஷ்டப்படும் நாயகியைக் கூட்டிவைப்பார்கள். அன்றியும், அது வரையில் உடன்படாத நாயகி மனமிரங்கியோ பழிக் கஞ்சியோ கூடுதலும் உண்டு என்று நம் பூர்வாசாரியர்கள் ஸாதிப்பர்.

ப்ராசீநமான தமிழ் நூல்களில் இம்மடலெடுக்கை, 'கைக்கிளை', 'ஐந்திணை' என்னும் முறைகளில் விதிக்கப்படாமல், 'பெருந்திணை' என்று சொல்லப்படும் பொருந்தாக் காமத்தின்பால் வைக்கப்படும். ஆகவே, தமிழறிஞர் இதனை ச்லாக்யமாகக் கொண்டாரில்லை என்பது

தோற்றும். ஆயினும் அது ஒரு ப்ராசீந வழக்காய் வந்தபடியால், ஆசிரியர் தொல்காப்பியனார் முதலானோர் அதனைக் 'களவியல்' என்னும் மண முறையில் எடுத்தாளுகிறார்கள். அப்படி ஆளும் வகையில், புருஷன் மடலெடுக்கலாமே யன்றி ஸ்த்ரீகள் மடலெடுக்க லாகாது என்று ஒரு வரம்பு கட்டினார்கள்.

"கடலன்ன காமமுழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்."

என்று தொல்காப்பியரும்,

"கடலன்ன காமத்த ராகிலும் மாதர்
மடலூரார் மற்றையார் மேல்"

என்று வள்ளுவரும் கூறுவர். நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்ணின் ஸ்வபாவத்துக்கு ஸாஹஸங்கள் கூடாமையே.

இவ்வரம்பறுத்தல் எல்லாம் அப்ராப்தமாயும் அல்பாஸ்திரமாயுமுள்ள சிற்றின்பத்துக்கே யன்றி, பகவத் காமமாகிற பேரின்பத்துக்கு வரம்பொன்றுமில்லை என்பது வடநூலோரும் தமிழறிஞர்களும் ஒப்புக் கொண்ட விஷயம்.

"மடன்மாப் பெண்டி ரேறா ரேறுவர்
கடவுளர் தலைவராய் வருங்காலே"

என்றும், "கடவுளர் மேற்றே காரிகை மடலே" என்றும் தமிழ் நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளன. அப்படி யிருந்தும் சில தமிழர்கள் அப்ராப்த விஷயத்தில் சொன்ன விதியை ப்ராப்த விஷயத்துக்கும் ஆம் எனக் கொண்டு ப்ரமித்தார்கள் போலும். அந்த ப்ரமையைத் திருமங்கை மன்னன் பெரிய திருமடலில்,

"மானேக்கின்
அன்ன நடையா ரலரேச வாடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவதுண்டு அதனையாம் தெளியோம்
மன்னும் வடமொழியே வேண்டினோம்"

என்று எடுத்துக் கழித்தார் போலும். 'ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரத்தையே வேண்டுவோம்' என்று ஸாதித்ததற்குத் தென்மொழிக்கும் வடமொழிக்கும் வித்யாஸங்கள் உண்டு என்று எண்ண இடமில்லை. இரண்டும் ஆரியனின் வாக்கு; பாஷாபேதமே யொழிய விஷய பேதம் ஒன்றுமில்லை.

ஸ்ம்ருதி கர்த்தாக்களால் விதிக்கப்பட்ட ப்ராம்ஹம் ஆர்ஷம் முதலான விவாகங்கள் கற்பியல் என்றும், காந்தர்வம் ராக்ஷஸம் பைசாசம் முதலிய மணங்கள் களவியல் என்றும் சொல்லப்படும். இவ்விரண்டு வழக்குக்களும் எல்லா நாடுகளிலும் இடங்களிலும் காலங்களிலும் ஸம்பாவிதங்களே. அபிமத விஷயம் கைகூடாமற் போனால் சிலர் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். மடலேறுதல், வரைபாய்தல், ப்ராயோபவேசம் முதலிய ஸாஹஸ கார்யங்கள் அபூர்வமாய் நடந்தேறிவருகின்றன. இது ஸ்வாபாவிகம். ஆயினும் இதனை வடநூலோராவது தமிழ் நூலோராவது ந்யாயம் என்று ஒப்புக்கொள்ளார்கள். எப்படியாயினும் உலக வழக்கைக் கூறியதேயாம். தத்வ ஜ்ஞாநிகளுக்கு இச்சிற்றின்பத்தின் அல்பாஸ்திரத்வத்தை நோக்கினால், இது ச்லாகநீயமல்லவென்று தோன்றும்.

அதீந்த்ரியனான எம்பெருமானை அடைவதற்கு உண்டாகும் பக்தி வளத்தை எந்தச் சொற்களால் சொன்னால் என்ன? அது பாஹ்ய ஸம்ச்லேஷம் அன்று.

“யாமடலூர்ந்துமெம் மாழியங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்”

என்று, ‘நான் மடலெடுத்தாகிலும் எம்பெருமானை அடைவேன்’ என்பது ப்ரேம ஸ்வபாவமாய் மாநஸாநுபவமேயொழிய, சிற்றின்பத்தில் சிறிதும் சேராது. ஆகையால் அதில் எவ்வித தோஷமும் இல்லை. அப்ராப்த விஷயத்தில் த்யாஜ்யமான ஸாஹஸ க்ருத்யமே ப்ராப்த விஷயத்தில் உபாதேயமாகும். பகவத் காமத்தை ‘நிதி[illegible]’ என்று வேத புருஷனே விதித்திட்டான். ‘நான்கிலுங் கண்ணனுக்கே யாமது காமம்’ என்றும், ‘விஞ்ச நலங்கியதும் மாறன் இங்கே நாயகனைத் தேடி மலங்கியதும் பக்திவளம்’ என்றும் நம் பூர்வாசாரியர்கள் நிஷ்கர்ஷிப்பர். “ஸம்பந்த உபாய பலங்களில், உணர்த்தி துணிவு பதற்றம் ஆகிய ப்ரஜ்ஞாவஸ்தைகளுக்குத் தோழி, தாயார், மகள் என்று பெயர்.” திருமந்த்ரத்தில் ப்ரதம பதத்தில் தோன்றும் அநந்யார்ஹ சேஷத்வ ஜ்ஞாநத்தைத் தோழி சொல்லாகவும், மத்திம பதத்தில் தோன்றும் உபாயஜ்ஞாநத்தைத் தாய்ச் சொல்லாகவும், சரமபதத்தில் நாயகன் வைலக்ஷண்யத்தில் ஈடுபட்டுக் குலமர்யாதைகளையும் பாராதே அவனைக் கிட்டியல்லது ஜீவிக்கமுடியாத ப்ராப்ய த்வரையை மகள் சொல்லாகவும் ஆழ்வார்கள் அருளிச் செய்வார்கள். ஸாத்யோபாயமாகிற பக்தியைக் காட்டிலும் ஸித்தோபாய பக்தி ச்ரேஷ்டம். ஒன்று வைதிக விதியை ஒட்டி வைதமாய் வருவது; மற்றொன்று ஸ்வரூப ப்ரயுக்தமாய் ஒருக்காலும் விடவொண்ணாதது. ஆகையால், இத்தகைய

பக்திரூபாபந்நமான மடலெடுக்கை ப்ராப்யமான கைங்கர்யத்துக்குப் பூர்வகாலீநமாயிருப்பதான பரமபக்தி தசையைக் காட்டும்.

“மன்னனிராமன்பின் வைதேகியென்றுரைக்கும்
அன்ன நடைய வணங்கு நடந்திலளே”

என்று இம்மடலெடுக்கை போன்றன. சிஷ்டாசார ஸித்தமுமாய் இருக்கும்.

பெரிய திருமடல் சிறிய திருமடல் என்று இரண்டு ப்ரபந்த ரூபமாக, இதனை மங்கை மன்னன் அருளிச்செய்தார். அவைகளில் கர்ம ஜ்ஞாந ஸம்ஸ்க்ருதாந்தக்கரணனைக் காட்டிலும், பக்தி ரூபாபந்நமான காமி ச்ரேஷ்டன் என்றும், ‘தர்மமும், அர்த்தமும், மோக்ஷமும் வேண்டேன்; பகவத் காமமே வேண்டும்’ என்றும் அதில் ஈடுபடுகிறார். இந்த ஈடுபாட்டில் இவருக்குண்டான கலக்கத்தின் காரியம் மடலெடுக்கை. இக் கலக்கம் உண்டாகாவிடில் எம்பெருமான் வைலக்ஷண்யத்துக்கு ஒரு நமஸ்காரம்; ஆழ்வார் ப்ரேமத்துக்கும் ஒரு நமஸ்காரம் என்பர்.

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத

[ஸ்ரீ- உப. ஏ. வி. கோபாலாசார்யர், M.A., B.L., அட்வொகேட், திருச்சி]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 10.

[பதவுரை] [illegible] - கோரினதை (உயர்ந்ததைக்) கொடுக்கும் ப்ரபுவே! [illegible] - நீர்கூட உள்ளே ப்ரவேசித்திருப்பதால், [illegible] - உத்பத்தியையும் மேன்மையையும் அடைந்திருக்கிற, [illegible] - ப்ரஹ்மா முதலியவரும், [illegible] - சிவன் முதலியவருமான, [illegible] - உம்முடைய சட்டைகளிடத்தில், [illegible] - (உள்ளேயுள்ள உயிரில் கண் செல்லாமல்) மேலுடையை மட்டும் பார்ப்பதால் ஏமாந்த புத்தியுடையவராய்,

தாதாத்ம்ய ஸம்ஶயம் - (ஐக்யம், அபேதம்) ஒன்றே என்கிற மோஹங் கொண்ட மனத்தராய், அபுதா: - புத்திசாலி அல்லாதவர், நிபதந்தி - அவர்களை அடிபணிகிறார்கள் (பழம் நழுவி விழுகிறார்கள்.)

ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களையுடைய ப்ரபஞ்ச நாடகத்தில் வரதன் அநேக விதமான வேஷங்களைப் பரிக்ரஹிக்கிறரென்று முன் ச்லோகத்தில் கூறப்பட்டது. மூன்று மூர்த்திகளும் அவருடையவேஷங்களானால், விஷ்ணு மூர்த்தி வரதனைக் காட்டிலும் வேறு ? அல்லது ப்ரஹ்மா சிவன் இவர்கள் மட்டும் வேறு, விஷ்ணு அவரே என்பது தத்வமா ? அல்லது வரதன் மூவரிலும் வேறு ? மூவரும் ஜீவர்களா ? 'இந்த ஜீவனால் என்னால் பூதங்களுள் அநுப்ரவேசித்து நாம ரூபங்களை விரிக்கக்கடவேன்' என்கிற நாம ரூப வ்யாகரண ஸங்கல்பத்தில் விஷ்ணு அந்த ஜீவனா ? அல்லது எல்லா ஜீவர்களுடைய ஸமஷ்டி (மொத்தம்: ஸமுதாயம்) என்னும் ப்ரஹ்மா அந்த ஜீவனா ? 'ஒரே மூர்த்தி மூன்று மூர்த்திகளாகப் பிரிந்தது; மூவரும் ஸமரே' என்கிற பக்ஷம் மஹா கவியான காளிதாஸரால் குமார ஸம்பவத்தில் பேசப்பட்டது. தத்வ முக்தாகலாபம் நாயகஸரம் 13-வது ச்லோக வ்யாக்யாநத்தில், 'ஒரே பரப்ரஹ்மத்துக்கு ராமக்ருஷ்ணாதிகளைப் போல ஸாக்ஷாதவதாரத்தில் மூன்று ப்ரகாரமாகப் பிரிவு என்கிற பக்ஷம், 'ஏகைவ மூர்த்திர் பிபிதே த்ரிதா ஸா' என்கிற காளிதாஸ ச்லோகம் முதலியவற்றில் ப்ரஸ்தாவிக்கப்பட்டது' என்று பூர்வபக்ஷமாக ஸ்வாமியால் ஸாதிக்கப்பட்டது. 'த்ரிமூர்த்திகளும் ஸமரென்றும், த்ரிமூர்த்திகள் ஏகதத்வமென்றும், த்ரிமூர்த்யுத்தீர்ணன் ஈச்வரனென்றும், த்ரிமூர்த்திகளுக்குள்ளே ப்ரஹ்மாவாதல் ருத்ரனாதல் ஈச்வரனென்றும் சொல்லுகிற ஸாம்ய ஐக்ய உத்தீர்ண வ்யக்த்யந்தர பக்ஷம் வடியாது' என்று பரதேவதா பாரமார்த்யாதிகாரத்தில் ஸாதித்ததை அநுஸரித்து, இங்கே 15-வது ச்லோகம் வரையில், 'வரதனே பரதேவதை, வரதனே ஜகத்காரண வஸ்து' என்பதை ஸப்ரமாணமாக நிரூபிக்கிறார்.

ஜகத் காரணமான பரம்பொருள்தான் பலங்களைக் கொடுக்க ஸமர்த்தமாகும். எந்தத் தேவதையை உபாஸித்தாலும் அதற்குள்ளே உயிராயுள்ள பரமாத்மாதான் பலப்ரதாந ஸங்கல்பம் பண்ணிப் பலத்தை அடையச் செய்யவேணும். இது கீதையில் ஸ்பஷ்டமாய் அருளிச்செய்யப்பட்டது. முதல் திருவாய் மொழியிலேயே ஆழ்வார், 'அவரவர் தமதமவறிவறி வகைவகை' என்ற பாசுரத்தில் அருளிச் செய்தார். ஸூத்ரகாரரும் மூன்றாவது அத்யாயத்தின் இரண்டாவது பாதத்தின் முடிவில் பலாதிகரணத்தில் இதை நிர்ணயித்தார். ஸங்கல்ப ஸூர்யோதயம் முதல் ச்லோகத்தில், 'எந்தத் தேவதையை உபாஸிப்பதில் அதே தேவதை அந்த உபாஸநத்தின் பலத்தைக் கொடுக்க ஸங்கல்பிக்குமோ' என்று ஸ்ரீமானான நாராயணனுக்கு லக்ஷணம் ஸாதித்தார். தாத்பர்ய சந்த்ரிகையிலும் அப்படியே லக்ஷணம் ஸாதிக்கப்பட்டது. பரம காரண தத்வமானால் தான் வரதனாயிருக்கக்கூடும். ஔதார்யத்தாலும் ஸர்வகாரணத் தன்மையாகிய பரத்வத்தை நிரூபிக்கவேணும். இங்கே அடுத்த ச்லோகத்தில் 'ப்ரஹ்மாவுக்கும் சிவனுக்கும் நடுவில் அவதாரம் செய்யும் நீர் அவர்களோடு ஸமராக எண்ணப்படுகிறீர்' என்று த்ரிமூர்த்தி ஸாம்ய பூர்வ பக்ஷத்தை ஸாதிக்கிறார்.

ஐம்பதாவது ச்லோகமாகிய பஞ்சாசத்தின் முடிவில், 'ஸர்வ ஜநநீ தேவதா' என்று வர்ணிக்கிறார். 'ஸேயம் தேவதைக்ஷத' என்று சாந்தோக்யோபநிஷத்தில் காரணவாக்யமான ஸத்வித்யையில் கூறப்படும் காரணதேவதை வரதன் என்று திருவுள்ளத்தை அங்கே ஸூசிக்கிறார். வரமென்பது எல்லாப் புருஷார்த்தங்களிலும் உயர்ந்ததான மோக்ஷம். அதை மட்டு மல்ல; எல்லாப் பலங்களையும் கொடுப்பது வரதனென்னும் ஜகத்காரண தேவதை.

ஆநந்தமயம்தான் ஜகத்காரண மாகும். அதுதான் எல்லார்க்கும் ஆநந்தத்தை அளிக்கும். இப்படி தைத்திரியோபநிஷத்து தீர்மானிக்கிறது. ப்ரஹ்மஸூத்ரம் முழுவதும் இந்த ஸ்தோத்ரத்தில் நுழைந்துளது. ப்ரஹ்ம ஸூத்ரங்களும், ஸகலோபநிஷத்துக்களும், ஸகல வேதங்களும் வரதனிடத்தில் ஸமந்விதம் என்பதை அங்கங்கே ஸ்வாமி நிரூபிப்பதை எடுத்துக் காட்டுவோம். ஆநந்த மூர்த்தியான ஸுகமய பரப்ரஹ்மத்தினிடம் எல்லா வேதாந்தங்களும் ஸமந்விதம். 15-வது ச்லோகம் வரையில் பரத்வத்தை ஸ்தாபித்ததும், 16-வது ச்லோகத்தில் 'நிஷ்க்ருஷ்ட நிஷ்ப்ரதிக விலயோதய ஸ்வதந்த்ர:' என்றும், 17-வது ச்லோகத்தில் 'விஶ்வாதிஶாயி ஸுகரூப' என்றும் ஆநந்தமயத்வத்தையும் ஸாதிக்கப் போகிறார்.

இங்கே அநுப்ரவேசத்தையும் ப்ரஹ்மாத்மகத்வ மென்னும் ஐததாத்ம்யத்தையும், முடிவில் 50-வது ச்லோகத்தில் 'ஸர்வ ஜநநீ தேவதா' என்றும் பேசுவதால், ஸத்வித்யையை வரதனிடம் ஸமந்வயம் செய்வது ஸ்பஷ்டம். தத்வமுக்தாகலாபத்தில் பரத்வ நிர்ணயம் பண்ணும் க்ரமம் இங்கு முள்ளது. அதனை அங்கங்கே காட்டுவோம்.

ப்ராதுர்பவோதயேஷு—உதயமென்பது உத்பத்தியையும் மேன்மையையும் சொல்லும். பத்மாஸநரென்னும் ப்ரஹ்மா முதலியவர்கள் உம்முடைய

அநுப்ரவேசத்தால் உத்பத்தியாகிறவர்கள்; உம்மால் படைக்கப்படுகிறவர்கள். அதனால் அவர்கள் நீரே என்று நினைப்பது அறியாமையாகும். உத்பத்தி மட்டுமல்ல; அவர்களுடைய எல்லா மேன்மையும், நீர் அவர்களுக்குள் ஆத்மாவாக அநுப்ரவேசிப்பதால் தான். 'அவர்கள் உதயமடைவது' என்பதால், அவர்கள் உயர்ந்த தேஜஸ்ஸுகள் என்றும், அவர்களுக்கு அஸ்தமய முண்டென்றும் ஸூசிதமாகிறது. நீரோ வென்றால், ப்ருஹதாரண்யகத்தில் ஓதப்பட்டபடி உதிக்கிறவ ரல்லர்; அஸ்தமடைகிறவரல்லர்; எப்பொழுதும் ஏக ரூபமாய் உச்சியில் நடுவே இருப்பவர். உதயாஸ்தமய மில்லாமல் எக்காலமும் ப்ரகாசிப்பவர்.

வரத கஹ நரவபுவெஶாத்—அவர்களுக்கு அத்தனை மேன்மை எங்கிருந்து வந்தது? ஹே! வரத! வரத்தைக் கொடுக்கும் உம்மாலே தான் வந்தது. இந்த வரத என்னும் ஸம்போதநத்தை இங்கே நடுவில் வைத்தது அழகு. நீர் உயர்ந்த வரத்தைக் கொடுப்பதற்காகவே உள்ளே அந்தர்யாமியாக ப்ரவேசிக்கிறீர். மோக்ஷமென்னும் ஸர்வோத்க்ருஷ்ட பலத்தைக் கொடுக்க ஆசைப்பட்டே நீர் உள்ளே ப்ரவேசித்து, அங்கே கடைசிவரையில் துணையாகக் குடிகொள்ளுகிறீர் என்கிறார்.

கஹ நரவபுவெஶாத்—'இந்த ஜீவனால் அநுப்ரவேசித்து நாம ரூப வ்யாகரணம் செய்வேன்' என்ற ஸங்கல்பத்தில், அநுப்ரவேசம் செய்கிறவன் ஜீவன் என்றும், நாம ரூப வ்யாகரணம் செய்வது பரதேவதையென்றும், சாங்கர ஸூத்ர பாஷ்யத்தில் முதல் யோஜனை. இரண்டுக்கும் ஓரே கர்த்தாவென்று சொல்லவேணு மென்பதை இங்கே 'உம் அநுப்ரவேசத்தால்' என்பதால் விளக்குகிறார். இந்த அநுப்ரவேசமடியாகச் சேதநாசேதநமான எல்லாப் பொருள்களோடும் ஸமாநாதிகரணமாக (ஒன்றாகப்) பேச்சு வருகிறதென்கிற நம் ஸித்தாந்த ஸூக்ஷ்மத்தைக் காட்டுகிறார். எல்லா உபநிஷத்துக்களையும் வேத வர்க்யங்களையும் ஏககண்டப்படுத்துவதற்கு இதுதான் திறவுகோல். எல்லாச் சிக்குகளையும் இது எடுத்துவிடும். சரீராத்ம ஹாவமே ஸமாநாதிகரணப் பேச்சுக்கு மூலம்; அபேதமல்ல. எப்பொருளிலும் உயிராகப் பரமாத்மா உள்ளே ப்ரவேசிப்பது தான் சரீராத்ம ஹாவத்துக்கு மூலம்.

வஜ்ராஸநாதிஷு—பத்மாஸநரும் அவரைச் சேர்ந்த தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகளும். அவரைச் சேர்ந்தவர்களான தக்ஷர் முதலிய ப்ரஜாபதிகள் நீரே யென்றுவது, உமக்கு ஸமரென்றுவது எப்படி ஒருவரும் சொல்லுகிறதில்லையோ, அப்படியே ப்ரஹ்மாவும் உம்மோடு ஒன்றென்றுவது ஸமாந ரென்றுவது பேசக்கூடா தென்பது இங்கே ஆதி சப்தத்தால்

ஸூசிக்கப்படுகிறதென்று முன் வ்யாக்யாநங்களில் விளக்கியிருப்பது மிக்க அழகு. பத்மாஸந ரென்பதால் நாபீ கமலத்தில் உதித்ததையும் காட்டி, தகப்பனைக் காட்டிலும் புத்ரன் வேறென்பதையும், வரதன் இவருக்குக் காரண மென்பதையும் காட்டுகிறார். 'ஆயிரம் கோடி யுக காலம் பத்மபூவானவர் விஷ்ணுவை ஆராதித்து த்ரைலோக்யத்தைப் படைக்கும் அதிகாரத்தை அடைந்தார். ப்ராப்தவான் என்று நாம் கேட்டுளோம்' என்கிற ப்ரமாண வசநத்தை நினைப்பூட்ட 'ஜாதோதய' சப்தத்தையும் 'வஜ்ராஸந' சப்தத்தையும் ப்ரயோகித்தார் ஸ்வாமி. 'உதயம்' என்பது த்ரைலோக்யத்தைப் படைக்கும் மஹிமை.

ஶிவாதிஷு—சிவனும், அவரைச் சேர்ந்த காலாந்தகர் முதலியவர்களும். 'ருத்ரர் காலாந்தகர் முதலியவர்' என்பது ப்ரமாண ச்லோகம். அங்கே யுள்ள ருத்ரர் என்னும் பெயரை மாற்றிச் சிவர் என்று இங்கே ப்ரயோகித்ததில் ஸ்வாரஸ்ய முண்டு. 'ஶிவஸ்ஸிவோஹம்' என்றுசிவத்வமும் உம்மால் வந்தது. சிவரென்னும் திருநாமம் கிடைத்ததும் ஓர் உதயம். சிவரென்னும் மங்கள நாமோதயம் உம்மால் ப்ராப்தம். அவர் தகப்பனார் இட்ட பெயர் ருத்ரர்.

கஂசுகேஷு—உம்து பெருமையைப் பார்க்கையில் இவர்களெல்லாம் புருஷர்களென்று சொல்லக்கூட ஸாத்ய மில்லை. அவர்களை உம்முடைய உடுப்புக்கள் (கஞ்சுகங்கள்) என்றே சொல்லவேண்டும். அவர்கள் உமக்குக் கஞ்சுகங்கள் ஆனதால், அவர்களுக்கு ஸமர்ப்பிக்கும் மாலை முதலிய பூஜைகள் உம்மையே சேரும். 'பார்த்தன் தெளிந்தெழுந்த பைந்துழாயான் பெருமை பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே' என்னும் பாசுரம் இங்கே அழகாக உதாஹரிக்கப்பட்டுளது. முன் ச்லோகத்தில் பேசிய நாடகத்திற்கு வேஷ பரிக்ரஹத்திற்குக் கஞ்சுகங்கள் (உயர்ந்த உடுப்புகள்) வேண்டுமே. அதை இங்கே பேசுகிறார். அவர்கள் கஞ்சுகங்கள்; நீர் கஞ்சுகீ. கஞ்சுகீ என்பவர் நாடகங்களில் வ்ருத்தராயும், ஹிதத்தைச் சிந்திப்பவராயும், எல்லாக் கார்யங்களிலும் குசலராயு மிருப்பவர். நீரே கஞ்சுகீ; நீரே ஸூத்ரதாரர்.

தத்த்வமஸ்யந்தர்பஹிரபி தமஸ்ஸம்ஶ்ரயணீகாஃ—அநுப்ரவேச சப்தத்தால் உள்ளே யுள்ள உயிரான முக்ய தத்வம் பரமாத்மாவான நீரே. தன் ஆத்மாவை விட்டுத் தேஹத்தை மட்டும் பார்ப்பவன் மிகவும் வெளிப் பார்வையை (ஸ்தூலமான த்ருஷ்டியை) உடையவன். உடலை மட்டும் பார்ப்பவனிலும், தேஹத்தையும் தன் ஆத்மாவையும் மட்டும் பார்ப்பவன் கொஞ்சம் ஸூக்ஷ்ம தர்சியானாலும், அவனும் முழுவதும் பார்த்தவ

னல்லன். தன் ஆத்மாவும் பரமாத்மாவுக்கு உடலானதால், அவனும் ஒரு ப்ரகாரமாய் உடல் பார்வையோடு நிற்பவனே. உயிருக்குயிரான உம்மை அவன் பார்க்க வில்லை. எல்லாப் பொருள்களுக்குள்ளும் ப்ரஹ்ம சிவாதிகள் உட்பட எல்லா ப்ராணிகளுக்குள்ளும் உயிராக நீர் ப்ரவேசித்து வ்யாபித்துத் தாங்குகிறீர். இது தத்வம். ப்ரஹ்ம சிவாதிகள் உமக்கு உடல்; உடுப்பு. உடுப்பை ஆள் விழுங்கி என்பர். அது உள்ளே யிருப்பதை மறைக்கும். உள்ளே யுள்ள பரமாத்மா வென்னு முயிரை இந்த ப்ரஹ்ம சிவ கஞ்சுகங்கள் மறைத்து விடுகின்றன. ச்ருதி ஸ்ம்ருதி யென்னும் இரண்டு கண்களைக் கொண்டு காரணமான உள்ளுயிரைப் பார்க்க வேணும். அந்தக் கண்களை 12, 13, 14-ச்லோகங்களில் ஸாதிக்கிறார். அவ்வுயிரை மாம்ஸக் கண்ணால் பார்க்க முடியாது. அத்யயந மநநங்களைக் கண்ணாக உடையவரே அவ்வுயிரைப் பார்ப்பர். 'தநீர்த்ரம்' என்பதற்குச் 'சொக்காயை மட்டும்' என்று அர்த்தம். மேல் சொக்காயை மட்டும் பார்ப்பதோடு நின்று, அதையே முடிவான தத்வமென்று கொள்வதால் புத்தி வஞ்சிக்கப்படுகிறது; இத்தோடு முடிவு என்று எண்ணிவிடுகிறார்கள். 'வெளிக் கண்ணால் பார்க்க முடியாது; விசுத்தமான மனத்தால் பார்க்கலாம்; அக்ர்யமான ஸூக்ஷ்மமான புத்தியால் பார்க்கப்படும்' என்று உபநிஷத்துக்கள் கூறியபடி, புத்தியால் பார்ப்போமென்றால் புத்தி மோசம் போயிற்று. இங்கே ஸ்ரீ பாஷ்யம் முதல் ச்லோகத்திலுள்ள 'ஶேமுஷீ' சப்தத்தால், புத்தியென்னும் பொருளைக் குறிக்கிறார். ச்ருதப்ரகாசிகை உம்முடைய அநுக்ரஹத்தால் ப்ரவஹித்தது. தத்வடீகையும் உம்முடைய அருளால் ப்ரவஹித்ததுதான். 'கரிசைல க்ருஷ்ண மேகமான நீர் எந்த யதிராஜன் அர்ப்பணம் செய்த (கிணற்று) ஜலத்தைப் பாநம் செய்து வேண்டிற்றெல்லாம் வர்ஷிக்கிறீரோ, அக்கருணைக் கடலான உடையவர் வாழி' என்று அங்கே மங்கள ச்லோகம். ஸ்ரீ பாஷ்யம் மஹா ஸித்தாந்தத் தொடக்கத்தில் பூர்வபக்ஷிகள், 'அநாதி தோஷ வாஸனையால் துஷிதமான அசேஷ சேமுஷியையும் உடையவர்' என்று ஸாதித்ததை இங்கே அநுஸரிப்பது ஸ்பஷ்டம். அவர்கள் பேரில் குற்றமில்லை; அவர்கள் புத்தி ஏமாந்து போயிற்று. அதற்குக் காரணம் 'உள்ளே யுள்ள உயிர் கண்ணுக்குப் புலப்படாததுதான்.' உள்ளே அநுப்ரவேசித்துள்ள பரமாத்மாவின் அக்யாதி (புலப்படாமை). அடுத்த ச்லோகத்தில் 'வ்யாமோஹவிததோதயா' என்று அந்யதா க்யாதியைப் பேசுகிறார். இங்கே அக்யாதியைப் பேசுகிறார். ப்ரஹ்மத்துக்கு இரண்டும் காரணமாகும். முழு சாஸ்த்ரமாயிருக்கிறது இந்தப் பஞ்சாசத்து. கொஞ்சம் கொஞ்சமாவது காட்டுவோம்.

தாதாத்ம்ய ஸமுதய:—மூன்றும் ஒன்றே என்கிற அபேத புத்தியான மோஹத்தால் மநஸ் மயங்கி விட்டது. அவர்களும் ஆத்மாவே; உயிரே. உடலல்ல. கஞ்சுக மல்ல வென்று அபேத புத்தி. இங்கே நம்முடைய நினைப்பிலுள்ள ஸத்வித்யை ஒன்பது தரம், 'ஸத்தென்னும் காரணப்பொருளே ஸர்வத்துக்கும் ஆத்மா; 'ஐதம் ஸர்வம்' (இதெல்லாம்). இந்தக் காரணத்தை ஆத்மாவாக—உயிராக—உடையது; அதுவே ஸத்யம்' என்று கோஷிக்கிறது. 'ஐததாத்ம்யம் ஸத்யம்' என்று திரும்பவும் திரும்பவும் ச்ருதி பேசுகையில், இவர்கள் கார்யரான ஜீவர் தாமே காரணமான உயிரென்கிறார்கள். 'தாதாத்ம்யம் ஸத்யம்' என்று இவர்கள் நினைப்பு. 'பகவானான பவருக்கு விஷ்ணு ஆத்மா' என்பது ப்ரமாண வசநம். 'ப்ரஹ்மா நாராயணாத்மக:' என்பது விஷ்ணு புராண வசநம்.

நிவர்தநி--இதற்கு இரண்டு பொருள். நாடகத்தில் ராமவேஷ மாடுகிறவருடைய உடுப்பை (வேஷத்தைப்) பார்த்து ராமனே! என்று மோஹித்துக் காலில் விழுவதுபோல. இதனால் பலம் நழுவிக் கீழே விழுகிறார்கள். கீதையில், 'ஸுத: ப்ரவ்ருத்திதே' என்று ஸாதித்ததை நினைக்கவேணும்.

தீரா:—'ஸூக்ஷ்மமான மதியென்னும் கண்ணினால் காரணப் பொருளைத் தீரர் பார்ப்பார்கள்' என்று உபநிஷத்து பணித்தது. 'அவதாரத்தின் உண்மையைத் தீரர் நன்கு அறிவார்'; 'அப்பூத காரணத்தைத் தீரர்கள் நன்றாய்ப் பார்ப்பர்'; 'யாரோ ஒரு அபூர்வமான தீரன் உள்ளுயிரைப் பார்ப்பன்' என்கிற ச்ருதி வாக்யங்களை இங்கே நினைக்கிறார். காரணப் பொருள் அத்ருஶ்யம். அதைப் பார்க்க ஆசார்யன் நாவினால் உச்சரிக்கப்படுவதும், தன் காதினால் கேட்பதுமான ச்ருதியென்னும் கண் தான் ஸமர்த்தமாகும். நம் கண் மாத்ரத்தைக்கொண்டு காண முடியாது.

ஸ்ரீ:

விசார விவாத பக்கங்கள்.

ஸ்த்ரீ சூத்ரர்களின் வித்யாதிகாரம்

[ஸ்ரீ. உப. வி. அநந்தாசார்யர், ஸம்ஸ்க்ருத பண்டிதர், பச்சையப்பன் கலாசாலை, சென்னை.]

சென்ற மார்கழி மாதத்திய வேதாந்த தீபிகையில் எனது நண்பர் ஸ்ரீ. உப. வித்வான் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, மேற்சொன்ன விஷயத்தைக் குறித்து ஒரு உபந்யாஸம் வெளியிட்டார். அதில் கண்ட விஷயங்கள் யாவும் சாஸ்த்ரங்களைச் செவ்வனே ஆராய்ந்து சொல்லப்பட்டவையென்றும், அவை வித்வான்களால் ஒத்துக்கொள்ளக் கூடியவை என்றும் உறுதியாய்ச் சொல்லக்கூடும். ஆயினும், அந்த ஸ்வாமி சாஸ்த்ர வசநங்களைக் கையாண்டிருக்கும் வழியைப்பற்றி மாத்ரம் கொஞ்சம் விசாரிக்க வேண்டி யிருக்கிறது.

முதல் விஷயமாக எடுக்கப்பட்ட அக்ஷராப்யாஸாதிகாரத்தில், அந்த ஸ்வாமி, பட்டதும் படாததுமாகத் தமது அபிப்ராயத்தை வெளியிட்டிருப்பது மிகவும் வியக்கத்தக்கது. 'ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அக்ஷராப்யாஸத்தில் அதிகாரம் உண்டானல், இதிஹாஸ புராணங்களைத் தவிர்த்து வேறு அவர்கள் படிக்கக்கூடிய க்ரந்தங்களைப் படிக்கப் பூர்வாங்கமாகக் கொள்க' என்று முன் சொல்லி, பின்னே, 'ஜாதகர்மம் முதலிய சடங்குகளுக்கு இடையே வந்த இதுவும் த்விஜர்களுக்கே உரியது என்று சொல்ல இடமுண்டு' என்ருர். இந்த ஸ்வாமிக்குத் தர்ம சாஸ்த்ரங்களைப் பார்த்து நிஷ்க்ருஷ்டமான அபிப்ராயம் சொல்ல அதிகாரம் இல்லையா? ஏன் இப்படித் தாமரை யிலையில் தண்ணீர்போல் நிலையற்றிருக்க வேணுமோ தெரியவில்லை. ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்காரங்களின் நடுவில் அக்ஷராப்யாஸத்தைச் சொல்லியிருப்பதால், இது த்ரைவர்ணிகர்களுக்கு மாத்ரம் உரியது என்று சொல்லுவது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. அப்படியானல், தைத்திரீயோபநிஷத்தில், சீக்ஷாவல்லியில், வேதங்களைப் படிப்பித்தபிறகு ஆசார்யன் உபதேசிக்கவேண்டியதாகச் சொன்ன 'ஸத்யம்வத' முதலியவைகளும் மற்றவர்களுக்கு இல்லாமற்போக ப்ரஸங்கிக்கும். ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அக்ஷராப்யாஸம் இல்லையானல் அவர்கள், கடிதம் எழுதல், வாசித்தல், கடன் பத்திரங்களில் கையெழுத்து இடுதல் முதலிய ஒன்றும் செய்யக்கூடாதல்லவா?

கமலாகரபட்டர்சூத்ர ப்ரகரணத்தில், சூத்ரர்களுக்கு உபநயநத்தைத் தவிர்த்து ஜாதகர்மாதிகள் எல்லாம் புராணோக்தங்களான மந்த்ரங்களால் செய்யவேண்டியவை என்று எழுதியிருக்கிருர். பும்ஸவந ஸீமந்தம் உள்பட எல்லாக் கர்மங்களும் சூத்ரர்களுக்குச் செய்யவேண்டி வரும்போது, அக்ஷராப்யாஸத்திற்கு மாத்ரம் விலக்குவிதி இருப்பதாய்க் காணப்படவில்லை. இது நிற்க: 'அஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம் முதலான மஹாமந்த்ரங்களை ஜபிக்க அதிகாரம் பெற்றவர், மேற்சொன்ன மந்த்ரங்கள் அடங்கிய க்ரந்தங்களை மாத்ரம் ஏன் படிக்கக் கூடாது?' என்ற கேள்விக்கு 'அந்த ஸ்வாமி சொல்லியிருக்கும் ஸமாதாநம் அடியேனுக்கு அவ்வளவு த்ருப்திகரமாகத் தோன்றவில்லை. அதாவது: 'வச நாசு நிவ்ருத்தி: வச நாசு ப்ரவ்ருத்தி:' என்ற ந்யாயத்தைக் கொண்டு, ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அஷ்டாக்ஷராதிகளில் அதிகாரம் சாஸ்த்ர வசநத்தால் கிடைத்தது என்றும், அந்த மந்த்ரங்களுக்குப் பக்கத்தில் இருக்கும் அக்ஷரங்களை வாசிக்க வசநங்கள் அதிகாரம் கொடுக்கவில்லை என்றும் இந்த ஸ்வாமி அபிப்ராயப்படுகிருர். இப்படிப்பட்ட வசநங்கள் அடியேன் தேடிப் பார்த்தவரையில் எங்கும் தென்படவில்லை.

ஒரு விஷயத்தை இன்னதென்று குறிப்பிட்டு நிர்ணயிப்பதற்கு ப்ரமாண வசநங்கள் அகப்படாமற் போனல், சாஸ்த்ரங்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட ந்யாயங்களைக்கொண்டு தானே வசநங்களை ஸமரஸப்படுத்தவேணும். ஒரு சாஸ்த்ர வசநம், 'ஸ்த்ரீ சூத்ரர்கள் இதிஹாஸ புராணதிகளைப் படிக்கக் கூடாது' என்று நிஷேதித்திருப்பதையும், மற்ரெரு சாஸ்த்ர வசநம், 'வைஷ்ணவ ஸ்த்ரீ சூத்ரர்கள் பகவந் மந்த்ரங்களைக் கொண்டு தீக்ஷித்துப் பகவதாராதநாதிகளைச் செய்யலாம்' என்று விதித்திருப்பதையும் கண்டு, இவ்விரு வசநங்களையும் ஸமரஸப்படுத்துவதற்கு ஸாமாந்ய விசேஷந்யாயம் (அதாவது: பொதுவிதி, விலக்குவிதி) தவிர வேறு எந்த ந்யாயம் உபயோகப்படும் பாருங்கள். ஆகையால், இதிஹாஸ புராணங்களைத் தொடக்கூடாது என்று சொல்லும் வசநமெல்லாம் ஸாமாந்ய ஸ்த்ரீ சூத்ர விஷயம் என்றும், ஸதாசார நிஷ்டர்களான ஸ்த்ரீ சூத்ரர்களுக்குப் பஞ்ச ஸம்ஸ்காராதிகளின் வழியாய் அதிகாரம் கிடைக்கும் என்றும் ஒப்புக்கொள்வது உசிதம் எனத் தோன்றுகிறது. வேதங்களுக்கு வ்யாக்யாநம் செய்யவந்த இதிஹாஸ புராணங்களில் வேதாநதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லும் பக்ஷத்தில், இந்த ந்யாயம் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகள் விஷயத்திலும் ப்ரஸங்கிக்கும். இந்த அதிப்ரஸங்கத்தை நம்முடைய நண்பர் ஸ்ரீ. உப. வேணுகோபாலாசார்ய ஸ்வாமி ஒப்புக்கொள்ளமாட்டார் என்று நம்புகிறேன். சூத்ரர்களுக்குப் பஞ்சமகா யஜ்ஞம் முதலாக நித்ய நைமித்திகங்களை விதித்த

யாஜ்ஞ்யவல்க்ய ஸ்ம்ருதியைக் கையாண்டு வ்யாக்யாநம் செய்யும்போது சில விமர்சகர்கள் பட்ட கஷ்டத்தையும் இங்கு உரைக்கிறேன். சிலர் ‘நமஸ்காரேண மந்த்ரேண’ என்னும் பதத்திற்கு ‘நம:’ என்ற இரண்டு அக்ஷரங்களைக்கொண்டுதான் சூத்ரர்கள் ஸந்த்யோபாஸநாதி ஸகல கர்மங்களையும் செய்யவேணும் என்றார். சிலர், ‘நமஸ்கார மந்த்ரம் என்பது ஒரு பாரிபாஷிகமான பெயர்; அதாவது: ‘தேவதாப்ய: பித்ருப்யஶ்ச’ என்று தொடங்கிச் சொல்லும் மந்த்ரத்திற்கு நமஸ்கார மந்த்ரம் எனப் பெயர்; இந்த ஒரு மந்த்ரத்தைக் கொண்டே எல்லா க்ரியைகளையும் செய்ய வேணும்’ என்றார். மற்றவர், ‘புராணோக்தங்களான எல்லா மந்த்ரங்களையும் சொல்லி, முடிவில் ‘நம:’ என்னும் பதத்தைச் சேர்த்து உச்சரிக்க வேணும்’ என்றார். இன்னும் சிலர், ‘சூத்ரர்கள் எந்த மந்த்ரத்தையும் வாயினால் உச்சரிக்கக் கூடாது; ஒரு ப்ராஹ்மணன் அருகில் இருந்து மந்த்ரங்களைச் சொல்ல, சூத்ரன் சரீர வ்யாபாரங்களை மாத்ரம் செய்து நித்யகர்மங்களை முடிக்கவேணும்’ என்றார். இவை யெல்லாவற்றையும் காணும்போது, ரிஷிகளுடைய மநோபாவத்திற்கும் வ்யாக்யாநம் செய்தவர்களுடைய மநோ பாவத்திற்கும் வித்யாஸம் நன்கு புலப்படும். ஆனால் நான் இப்போது வ்யாக்யாநம் செய்தவர்களிடத்திலும் குற்றம் கூறத் துணியவில்லை. ‘[illegible]’ என்கிற ந்யாயமாய்ப் பலவிதமான ரிஷி வசநங்களை ஒழுங்குபடுத்தும்போது, பலவிதமான ந்யாயங்களால் இப்படி அபிப்ராயபேதம் ஏற்படுவது ஸஹஜமே. மிதாக்ஷராவில், சூத்ரர்களுக்கு ஆபத் தர்மம் விதிக்கும்போது, தர்க்கம் முதலிய வித்யைகளைக்கொண்டு ஜீவிக்கலாம் என்று சொல்லியிருப்பதையும் இங்கு நினைப்பது உசிதம்.

ஸூதபௌராணிகருடைய சரித்ரத்தைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். ஸூதரில், வேதத்தில் அதிகாரமுள்ளவர் என்றும், வேதத்தில் அதிகாரமில்லாதவர் என்றும் இருவகை உண்டு. பாத்ம புராணத்தில் பூமி கண்டத்தில் ஸூத பதத்தைப் பாரிபாஷிகமாக வேதாதிகாரி கோஷ்டியில் சேர்த்து நிர்வஹிக்கப்பட் டிருக்கிறது. மற்றொரு ஸூதன் ஸங்கர ஜாதியில் பிறந்தவன். இவனுக்கு வேதாதிகாரம் இல்லை. இவன் ப்ரதிலோம ஜாதியானதலால், ரோமஹர்ஷணருடைய புத்ரரான ஸூதர் வேதாதிகாரம் இல்லாதவர். இவ்விஷயம் அநேக வ்யாக்யாநங்களாலும் மூல ப்ரமாண வசநங்களாலும் நன்கு விளங்கும். இதுவும் வித்வான்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டிய விஷயம். ;அடியேனுக்கு இவ்விஷயத்தில் ஆக்ரஹம் ஒன்றும் இல்லை. சாஸ்த்ரங்கள் காட்டும் வழியைப் பின்பற்ற ஸித்தமாயிருக்கிறேன்.

ஹரிப்ரீதியும் ஸ்ரீ காளிதாஸரும்

[ஸ்ரீ. உப. டி. சுந்தராசாரி, சீர்காழி]

ஸ்ரீ காளிதாஸரின் கவித்திறமை இங்கு மட்டில் அல்ல உலகமெங்கும் புகழ்பெற்றதே. அவரையொத்த நற்கவிகள் ப்ரதிபை வ்யுத்பத்தி என்று சொல்லப்படும் இரு கண்களை அவலம்பித்து விச்வத்தை நோக்கி எவரும் கண்டறியாத காட்சிகளை காணப்பெறுவரேனும், க்ஷீராப்தி சயனனைப் போன்றதோர் தெய்வத்தைப் பக்தி செய்யும் ஸுகத்திற்கு அவ்வானந்தம் ஒன்றும் ஈடாகாதென்னும் ஸித்தாந்தம் உடையவர்கள். இதை வெகு அழகாக ஸ்ரீ ஆநந்தவர்த்தநர் தெரிவிக்கிறார்:

“या व्यापारवती रसान्रसयितुं काचित्कवीनां न वा
दृष्टिर्या परिनिश्चितार्थविषयोन्मेषे च वैपश्चिती ।
ते द्वे अप्यवलम्ब्य विश्वमखिलं निर्वर्णयन्तो वयं
श्रान्ता नैव च लब्धमब्धिशयन त्वद्भक्ति तुल्यं सुखम् ॥”

இந்த பக்தி ஸுகம் பெறுவதற்கு அவலம்பமாக அவர்கள் ஸ்வீகரிக்கும் மூர்த்தி விசேஷங்கள், ஆசாரம் அபிருசி இவ்விரண்டையும் முக்யமாய்த் தழுவுகின்றன. ஆனால் ஆசாரம், அபிருசி இவ்விரண்டும் ஏக முகமாகவே எப்போதும் ப்ரவர்த்திப்பதில்லை. சிலர் விஷயத்தில் ஆசாரம் ஒரு புறமிருக்க, அதன் அதிக்ரமமின்றிக்கே அபிருசி வேறிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறதைக் காண்கிறோம். இதை ஸ்வாநுபவ ஸித்தமாக லீலாசுகர் வெகு ரஸமாகப் பாடுகிறார்:

“शैवा वयं न खलु तत्र विचारणीयं पंचाक्षरीजपपरा नितरां तथापि ।
चेतो मदीयमतसीकुसुमावभासं स्मेराननं स्मरति गोपवधूकिशोरम् ॥”

இங்கு நாம் காளிதாஸரின் பக்தி ப்ரகாரத்தைப் பரிசீலனை செய்யும்போது, அவரால் ஆக்கப்பெற்ற நாடகங்களிலுள்ள வாழ்த்துரைகளிலிருந்தும் ரகுவம்ச காவ்யத்தின் வழிபாட்டுரையிலிருந்தும் ஸ்வாசாராநுஸாரமாக அவர் ஹரன் என்னும் மூர்த்தி விசேஷத்தைப் போற்றுபவரென விளங்குகிறது. ஆனால் அவருக்கு இயற்கையாயுள்ள அபிருசியும் ஏதநுஸாரமா வென்பது விமர்சிக்கத் தக்கதோர் அம்சமாகும். மும்மூர்த்திகளிலும் உயர்வு தாழ்வைப் பொருத்துள்ள ஸித்தாந்தம் எதையும் ஸ்ரீ காளிதாஸர் அபிமானிக்கவில்லை என்பது குமார ஸம்பவத்தில் அவர் சொல்வதிலிருந்தே ஸ்பஷ்டமாகிறது.

" एकैव मूर्ति र्बिभिदे त्रिधा सा सामान्यमेषां प्रथमावरत्वं ।
विष्णोर्हर स्तस्य हरिः कदाचिद्वेधास्तयोस्तावपि धातुराद्यौ ॥ "

ஆனால் தத்வ நிர்ணயத்தை ஒட்டி இவ்வித ஸாம்ய புத்தியோ, அல்லது அபேத புத்தியோ ஒருவருக்கு உண்டானாலும் கூட, அபிருசியின் ஆதிக்யத்தால் ஒரு மூர்த்தி விசேஷத்தையே தம் சிந்தைதன்னுள் நீங்காதிருக்கும் உத்தம த்ரவ்யமாகக் கொள்வது இயல்பே யாகும். இந்த மர்மத்தை ஸ்ரீ பர்த்ருஹரியை விட ரம்யமாய் உரைசெய்தவர் வேறு எவருமில்லை. அவர் கூறுவதாவது :

" महेश्वरे वा जगतामधीश्वरे जनार्दने वा जगदन्तरात्मनि ।
न वस्तु भेदप्रतिपत्तिरस्ति मे तथापि भक्तिस्तरुणेन्दुशेखरे ॥ "

ஸ்ரீ காளிதாஸரைப் பற்றிய வரையில் இந்த '**तथापि भक्तिः**' என்பது ஸ்ரீ ஹரியையே ஆச்ரயித்து நிலைபெற்றிருக்கிற தென்பதற்குப் பல லிங்கங்கள் அவர் ஆக்கிய ப்ரபந்தங்களான ரகுவம்சம், மேக ஸந்தேசம், குமாரஸம்பவம் இவைகளில் மிகவும் ப்ரபலமாய்க் காணப்படுகின்றன. ஆனால் அவைகள் பெரும்பாலும் பரோக்ஷத்தையே அவலம்பித்திருப்பதால் எளிதிற் புலப்படத்தக்கவை யல்ல. ஏன் பரோக்ஷத்தை அவலம்பித்திருக்கவேண்டும் ? '**परोक्षप्रिया इव हि देवाः**' என்று ஸாமாந்ய தைவங்கள் விஷயத்திலேயே ச்ருதி, சொல்லுமே யானால் '**दैवतं देवतानां च**' என்றிருக்கும் ஹரி விஷயத்தில் வேறு எது பொருத்தமாகும் ? ஸ்ரீ காளிதாஸர் இந்தப்பரோக்ஷ மார்க்கத்தால் தன்னுள்ளிருக்கும் ஹரி ஸ்ம்ருதியை ப்ரகாசிப்பிக்கும் ப்ரகாரங்கள் மிகவும் விசித்ரமானவை. உதாஹரணமாக :

" सपदि मुकुलिताक्षीं रुद्रसंरम्भभीत्या दुहितरमनुकम्प्यामद्रिरादाय दोर्भ्याम् ।
सुरगज इव बिभ्रत्पद्मिनीं दन्तलग्नां प्रतिपथगतिरासीद्वेगदीर्घीकृताङ्गः ॥ "

என்றுள்ள குமார ஸம்பவ ச்லோகத்தையும்,

" दंष्ट्राग्रविन्यस्तमशेषमेतद्भूमण्डलं नाथ विभाव्यते ते ।
विगाहतः पद्मवनं विलग्नं सरोजिनीपत्रमिवोढपङ्कम् ॥ "

என்றுள்ள ஸ்ரீ விஷ்ணுபுராண ச்லோகத்தையும் எடுத்துக்கொண்டு, அவைகளிலுள்ள ஸாத்ருச்யாம்சங்களை உற்றுணரும்போது, பர்வதாகாரமானதோர் பன்றி உருவம் கொண்டு இப்பூமிதேவியைத் தூக்கிச் சென்ற ஸ்ரீ ஹரியின் திவ்ய ஸந்நிவேசம் ஸ்ரீ காளிதாஸர் உள்ளத்தில் உறைந்து கிடந்து, இங்கு உருகி வெளிவந்ததை எந்த ஸஹ்ருதயர்கள்தாம் மறுக்கத் துணிவார்கள் ? அப்படி மறுக்கத் துணிவோர்களை,

" रसातलादादिभवेन पुंसा भुवः प्रयुक्तोद्वहनक्रियायाः ।
अस्याच्छमम्भः प्रलय प्रवृद्धं मुहूर्तवक्त्राभरणं बभूव ॥ "

என்றுள்ள ரகுவம்ச பத்யம் தடை செய்யாது விடுமா ? இதே ப்ரகாரமாக

" तेषामाविरभूद्ब्रह्मा परिम्लानमुखश्रियाम् ।
सरसां सुप्तपद्मानां प्रातर्दीधितिमानिव ॥ "

என்றிவர் சொல்லிய போதும் அவர் உள்ளத்திலிருந்து தூண்டியது

" तासामाविरभूच्छौरिः स्मयमानमुखाम्बुजः ।
पीताम्बरः धरस्रग्वी साक्षान्मन्मथ मन्मथः ॥ "

என்றதே யாகும்.

" या मे प्रीतिः पुष्कराक्ष त्वद्दर्शनसमुद्भवा ।
सा किमाख्यायते तुभ्यमन्तरात्मासि देहिनाम् ॥ "

என்று மஹாபாரதத்தில் உள்ள ஸ்ரீவிதுரவாக்யத்தை மனத்தில் த்யானித்துக்கொண்டு,

" या नः प्रीतिर्विरूपाक्ष त्वदनुध्यानसम्भवा ।
सा किमावेद्यते तुभ्यमन्तरात्मासि देहिनाम् ॥ "

என்று குமாரஸம்பவத்தில் எழுதி யிருப்பதைப் பார்த்தால், '**रुद्राणां शङ्कर-श्चास्मि**' என்றுள்ள கீதாப்ரமாணத்தைக் கொண்டு ஹரனிடத்தில் நம் கவி ஹரிபாவனையைச் செய்தே அவரைக் கொண்டாடுகிறாரென நினைக்க வேண்டி வருகிறது.

சில விடங்களில் ஒரு சிறிய பதப்ரயோகத்தாலேயே அக்கவி ஸார்வபௌமருக்கு ஹரிசரிதத்திலுள்ள ஈடுபாட்டின் பரோக்ஷோதயம் த்வநிதமாகும். '**इति ध्रुवेच्छा मनुशासती सुतां**' என்று ஸ்ரீ பார்வதி தேவி தவம் புரியத் தீர்மானித்ததை அவர் சொல்லும்போது **ध्रुव** என்னும் பதம், அப்பெயர் பூண்டதோர் குழந்தை ஹரியை ப்ரத்யக்ஷீகரிக்க மதுவனம் ஏகிய கதை அக்கவியின் மனத்தை விட்டு அகலாமலிருப்பதைக் குறிப்பிடுகிறது. குமார ஸம்பவம் ஆறுவது ஸர்க்கம், ரகுவம்சம் பதின்மூன்றும் ஸர்க்கம், இவைகளில் ஹிமவானும் ஸமுத்ரமும் முறையே வர்ணநீயர்களாய் ஏற்படும் போது, ஸ்ரீ காளிதாஸரின் ஹரிப்ரீதி உத்களித்து வெளிவருவது மத்ஸரி சிகாமணிகளாலும் மறுக்கக்கூடியதல்ல. முக்யமாய், சிரத்தில் கங்கை தரித்தோருக்கு ச்வசுரபாவத்தை அடைவதிலுள்ள உயர்வைத் தெளிவிக்க வந்த ஸப்த ரிஷிகள் ஹிமவானைப் பார்த்து, '**यथैव श्लाघ्यते गङ्गा**

पादेन परमेष्ठिनः ' என்று சொன்னார்களெனச் சொல்லும்போது, ஹரிப்ரீதியின் ஆதிக்யத்தால் அந்த மஹர்ஷிகளைப் போலவே கவியும் தம்மைத் தாம் மறந்து விட்டாரென ஏற்படுகிறது. 'பரமேஷ்டி' (**परमेष्ठी**) என்பது ப்ரஹ்மாவுக்குப் பெயர் என்று நைகண்டுகர்கள் மதமேயொழிய, அச்சொல் பரமபதநாதனை ஸ்ரீமந் நாராயணனுக்கே உரியதென்பது நம் கவியின் ஸித்தாந்தம். ஆதலால் தான், ரகுவம்சத்திலும் அவர் '**न स्तुतिः परमेष्ठिनः**' என்று கூறியிருப்பது. மேலும் அம்மஹர்ஷிகள்,

स्थाने त्वां स्थावरात्मानं विष्णुमाहुस्तथा हि ते ।
चराचराणां-भूतानां कुक्षिराधारतां गतः ॥

என்று சொன்னதிலும் ஒரு ஸூக்ஷ்மம் இருக்கிறது. '**स्थावराणां हिमालयः**' என்றுள்ள கீதா வாக்யாநுஸாரமாக இங்கு ஹிமாலயம் ஹரியின் ஸ்வரூபாந்தரமாக விசேஷிக்கப் பெற்றது, க்ரந்தாரம்பத்திலேயே '**हिमालयः**' என்று கேட்கப்படுகிறதை ஆகர்ஷிப்பது போலும். அங்கே தொடக்கமோ '**अस्त्युत्तरस्याम्**' என்று. இதில் அகார உகார மகாரங்கள் ஒலிக்கப் பெற்றதிலிருந்து ப்ரணவோச்சாரண ரூபமான மங்களாசரணம் கவிஹ்ருதயமென ஏற்படுகிறது. அப் பிரணவம், அதிலுள்ள உபக்ரமாக்ஷரமான 'அ'காரம், இவை ஹரியின் வாசகமே என்று தான் ஸித்தாந்தித்திருப்பதை, கவி நமக்குத் தெரியப்படுத்து வதற்காக அந்த ஹரியின் ஸ்வரூபாந்தரமான ஹிமாலயத்தின் வர்ணநத்தால் காவ்யத்தை உபக்ரமம் செய்து அதை ப்ரணவ பூர்வமாயும் தொடங்கினர். '**प्रणवश्छन्दसामिव**,' என்றிவர் ரகுகுலத்தின் ஆதி புருஷரைக் குறிப்பிட்டதும் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

குமாரஸம்பவம் பார்வதீ பரமேச்வரர்களுடைய ஸுரத வர்ணநத்தில் முடிவு பெற்றிருப்பதின் ஔசித்யம் எவ்வாறு இருப்பினும், '**शृङ्गारो विष्णुदैवत्यः**' என்றுள்ள சாஸ்த்ரப்படி ஸ்ரீ ஹரியை தேவதையாய்ப் பெற்ற ரஸத்தில் அவஸாநமடைவதின் வாயிலாகக் கவியின் ஹரிஸ்ம்ருதி சரிதார்த்தமடைவது ஸமஞ்ஜஸமே யாகும்.

இந்தப்படி ஸ்ரீ காளிதாஸருக்கு இயற்கையாயுள்ள பாநுரக்திக்கு விஷய பூதமாயிருப்பவர் ஸ்ரீ ஹரியே. இவருடைய திவ்யாவதாரத்தைப் பாட வேண்டியே ரகுவம்சத்தின் ஆதியில் அவர் 'வாகர்த்த ப்ரதிபத்தி'யை வேண்டியது. வேறொன்றை விஷயமாக்கி வர்ணிக்கும் போதும், ஸ்ரீ ஹரி ஸ்மரணம் அவர் மனத்தை விட்டு நீங்குவதில்லை என்பதைக் காண்கிறோம். இவரை நாம் அந்தரங்க வைஷ்ணவரென அழைப்பதில் அநுபபத்தி ஒன்றுமில்லை. '**शापान्तो मे भुजगशयनादुत्थिते शार्ङ्गपाणौ**' என்று மேகஸந்தேசத்தில் சொல்லியது இக்கவியின் ஸ்வாநுபவஸித்தமான ஏதோ ஒன்றின் த்வநியைத் தருகிறது. ரகுவம்சத்தில் அயோத்திமா நகரின் அதிதேவதை குசனுக்கு முன் ப்ரத்யக்ஷமாகித் தன் குறையைச் சொல்லி முடிக்கும்போது,

" तदर्हसीमां वसतिं विसृज्य मामभ्युपैतुं कुलराजधानीम् ।
हित्वा तनुं कारणमानुषीं तां यथा गुरुस्ते परमात्ममूर्तिम् ॥ "

என்று கூறியிருப்பதின் உட்பொருளை நோக்கும்போது, இவர் ஸித்தாந்தப்படி பரமாத்மா ஸ்ரீ ஹரியே என்றும், அவருக்கு அப்ராக்ருத திவ்ய மங்கள மூர்த்தி உண்டென்பதும் ஏற்படுகிறது. பதின்மூன்றுவது ஸர்க்கத்தில் ஸமுத்ர வர்ணனையில்,

" तां तामवस्थां प्रतिपद्यमानं स्थितं दश व्याप्य दिशो महिम्ना ।
विष्णोरिवास्यानवधारणीयमीदृक्तया रूपमियत्तया वा ॥ "

என்று சொல்லியதிலிருந்து ஸ்ரீ ஹரி ஸர்வ ஜகத் சரீரியாயுமிருப்பது உபபாதநம் செய்யப்படுகிறது. அதிலேயே,

" नाभिप्ररूढाम्बुरुहासनेन संस्तूयमानः प्रथमेन धात्रा ।
अमुं युगान्तोचितयोगनिद्रः संहृत्य लोकान्पुरुषोऽधिशेते ॥ "

என்றிருப்பதால், 'நான்முகனை நாராயணன் படைத்தான்' என்பதும் பிந்திக்குமார ஸம்பவத்தில்

' प्रणेमतुस्तौ पितरौ प्रजानां पद्मासनस्थाय पितामहाय । '

என்று இவரே சொல்வதால் " நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் " என்பதும், ஆழ்வார்களை ஒக்க இக்கவி ஸார்வபௌமருக்குமுள்ள அந்தரங்க மதமெனப் புலப்படுகிறது. ரகுவம்சத்தின் ஹ்ருதய பாகமான பத்தாவது ஸர்க்கத்திலுள்ள ஹரிஸ்தோத்ரத்தில் 'அவரே ஜகத்காரணர், ஸர்வ சரண்யர்' என்பது முதலிய அஸாதாரணங்கள் ப்ரதிபாதநம் பண்ணப்பெற்றிருப்பதும், அந்த ஸ்தோத்ரத்தை உபஸம்ஹரிக்கும்போது கவியே தன் வாயால் '**न स्तुतिः परमेष्ठिनः**' என்று உறுதி கூறினதும் ஸ்பஷ்டமாயிருப்பது பற்றி இங்கு விஸ்தரிக்கப்படவில்லை.

ஸ்ரீ காளிதாஸன் ஹரிப்ரீதியைக் கண்டு, பிந்திய காலத்தில் அவரிடத்தில் அத்யந்த ப்ரேமை பாராட்டியவர்களில் ஸ்ரீ நிகமாந்த தேசிகனே ப்ராதாந்யத்தை வகிப்பவராவர். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதராலேயே '**कवितार्किकसिंहः**' என்று ஸத்கரிக்கப் பெற்ற அம்மஹாநுபாவர், ஸ்ரீ காளிதாஸரிடத்தில் தமக்குள்ள ப்ரீதி அதிசயத்திற்கு ஓர் அறிகுறியாகவே அவருடைய ரகுவம்சத்திற்கும் மேகஸந்தேசத்திற்கும் ஒத்ததோர் துணைகளாய், யாதவாப்யுதயம் ஹம்ஸ ஸந்தேசம் என்ற ப்ரபந்த ரத்நங்களை ஸ்ருஷ்டித்தருளி, அம்மஹா கவியின் ஹரிப்ரீதியை '[illegible]' என்னும் குணோத்கர்ஷத்துடன் கூட்டிவைத்தார் போலும்.

ஸ்ரீ:

க்ரந்த விமர்சம்.

1. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ:—இப்பெயர் பூண்ட ஒரு மாதப் பத்ரிகையின் முதல் இரண்டு ஸஞ்சிகைகளை நாம் வரப்பெற்றோம். 'ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந ஸபை' என்னும் ஸபை ஸம்பந்தமாக ஸ்ரீ. உ.வே. வடகரை இராமாநுஜாசார்யர் ஸ்வாமி இந்தப் பத்ரிகையை நடைபெறுவிப்பதாக நாம் அறிகின்றோம். உபய ஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்ய ஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் இதில் வெளிவருமென்றும், ஒரு ஸம்ப்ரதாயத்தைப் பற்றியும் இழிவான வார்த்தைகள் எக்காரணத்தையிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாவென்றும் சில நிபந்தனைகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ.வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி இதன் ஸம்பாதகர். வர்ஷச்சந்தா ரூ 1—0—0 இது கிடைக்குமிடம்:—"25, ஆசாரப்பன் தெரு, ஜி. டி. மதிராஸ்".

2. ஸ்ரீ. தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ:—இதுவும் ஒரு மாதப் பத்ரிகை இதன் ஸம்பாதகர், அன்பில். ஸ்ரீ. உ.வே. கோபாலாசார்ய ஸ்வாமி; ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால் ப்ரசுரம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் வர்ஷச்சந்தா ரூ 1—0—0. இது கிடைக்குமிடம்:- கார்யதர்சி, ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, ஸ்ரீரங்கம்.

3. ஸ்ரீ தேசிக ஸூக்தி ஜயத்வஜமாலை. இது மற்றுமொரு மாதப் பத்ரிகை. ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ.வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி இதன் ஸம்பாதகர்- இதன் வர்ஷச்சந்தா ரூ 1—0—0. இது கிடைக்குமிடம்:-" 25, ஆசாரப்பன் தெரு ஜி. டி. மதிராஸ்"

கடிதங்கள்.

(1)

மதிராஸ் புரசைவாக்கத்தில் ஸ்ரீ. உ.வே. வித்வான் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீகீதாபாஷ்யம் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களை எல்லாருக்கும் அவகாஹமாகும்படிக்கும் ஆஹ்லாதகரமாகவும் ப்ரதிதினம் உபந்யஸித்து வருகிறார். ஸ்ரீமத் ராமாயணமும் ப்ரதிவாரம் ஞாயிறு திங்கள் கிழமைகளில் வெள்ளாழத் தெருவில் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் ஒரு வர்ஷமாக ப்ரவசநம் செய்யப்பட்டு வந்து, இப்பொழுது பட்டாபிஷேக கட்டம் முடிந்துவிட்டது. மேல் உத்தரகாண்டமும் நடக்கிறது.

புரசைபாக்கம்
24-11-35

V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் B. A.

(2)

10-11-35 ஞாயிற்றுக்கிழமை தினம் மாலை 4-மணிக்கு சிதம்பரம் அட்வோகேட் ஸ்ரீ. உ.வே. வி. தேசிகாசார்யர் அக்ராஸநத்தின் கீழ் அவர் திருமாளிகையில் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையின் உபாத்யக்ஷர் ஸ்ரீ. உ.வே. வித்வான் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ஒரு பெரிய உபந்யாஸம் செய்யப்பட்டது.

பி. எஸ். ராஜகோபாலன்.

என்றும் சொல்லுகிறபடியால் உலகத்தில் தன்னை நான் என்றும் தன்னைக் காட்டிலும் வேறுபட்ட புருஷனை 'ஸ்வயம்' என்றும் வேறுபட்ட அசேதந வஸ்துக்களை 'இமா:' (இவைகள்) என்றும் சொல்லுவது வழக்கமாகையாலும், அந்த ஆத்மாவைக்காட்டிலும் ப்ருதிவீ ஜலம் தேஜஸ் இவைகளுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் வேறுபாடு காட்டப்படுகிறது.

இதனால் அசித், சித், பரமாத்மா என்று மூன்று தத்வங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. பரமாத்மா தான் ப்ரஹ்மம் 'ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய' என்கிற வாக்யத்தில் அந்த 'ஸத்' என்று சொல்லப்பட்ட பரமாத்மா (நான் பகுவாகக்கடவேன்; அதற்காக ஜனிக்கக்கடவேன்) என்று ஸங்கல்பித்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படி ஸங்கல்பித்தபின், அது நடத்தின கார்யங்களைச் சொல்லும் ப்ரகரணத்தில் ஜலம் தேஜஸ் ப்ருதிவீ இவைகளை ஸ்ருஷ்டித்ததாகவும், இந்த மூன்றையும் த்ரிவ்ருத்கரணம் பண்ணி அதைக்கொண்டு தேவ மநுஷ்யாதி நாமரூபங்களை உண்டாக்கினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு நாமரூப வ்யாகரணம் பஹுபவந ஸங்கல்பத்தின்படி நடத்தின கார்யம் என்றும் தேஜஸ் ஜலம் ப்ருதிவீ இவைகளின் ஸ்ருஷ்டி 'ப்ரஜாயேய' (ஜனிக்கக்கடவோம்) என்கிற ஸங்கல்பத்தின்படி நடத்தின கார்யம் என்றும் ஏற்படுகிறது. ஆகையால் அந்த ஸங்கல்பங்களின்படி, தான் தேவ மநுஷ்யாதி நாமரூப விபாகவத்தான ப்ரபஞ்சரூபமாக ஆயிற்று என்றும் தேஜஸ் ஜலம் ப்ருதிவீ ரூபமாக உண்டாயிற்றென்றும் கிடைக்கிறது.

இங்குப் பரமாத்மாவுக்குத் தன்னைக்காட்டிலும் வேறுபட்டதாகச் சொல்லப்பட்ட ப்ரபஞ்சரூபமான குகையும் தன்னைக்காட்டிலும் வேறுபட்ட ப்ருதிவீ ஜலம் தேஜஸ் இவைகளுக்கு மூலகாரணமாகிய தமோரூபமாயிருக்கையும் அநுபந்நமாகிறது. இந்த அநுபபத்திகளையும் இன்னும் மேல்கண்டங்களில் வரும் சில அநுபபத்திகளையும் பரிஹரிக்கைக்காக எட்டாவது கண்டம் முதலிய கண்டங்களில் 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத் ஸத்யம் ஸ ஆத்மா' என்கிற வாக்யங்களால் பரமாத்மாவுக்கும் சேதநாசேதநரூப ப்ரபஞ்சத்துக்கும் சரீராத்மபாவம் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ருஹதாரண்யகத்தில் அந்தர்யாமிப்ராஹ்மணத்தில் ப்ருதிவியைத் துடங்கி தமஸ் அளவும் ஒவ்வொன்றுக்கும் ப்ரத்யேகமாகப் பரமாத்ம சரீரத்வம் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும் முன் சொன்ன அநுபபத்திகளைப் பரிஹரிப்பது ஆவஶ்யகமாகையாலும், 'ஐததாத்ம்யம்' என்கிற வாக்யத்துக்கு இந்த அர்த்தம் ஸம்பவிக்கக்கூடுமாகையாலும், இந்த வாக்யத்துக்கு இதுவே அர்த்தம். இதனால் பரமாத்மாவுக்கும் தமஸ்ஸுக்கும் அதின் பரிணாமமான ப்ரபஞ்சத்துக்கும் சொல்லப்படும் ஐக்யம் அதாவது,

'அஹம் ப³ஹு ஸ்யாம்' என்றும், 'ஸத் ஏகம் ஏவாஸீத்' என்றும் சொல்லப்படும் ஐக்யம் 'க்ருஶோऽஹம் ஸ்தூல: ஸ்யாம்' (க்ருசனான நான் ஸ்தூலனாகக் கடவேன்) என்கிற இடத்தில் தேகத்துக்கும் ஆத்மாவுக்கும் சொல்லப்படும் ஐக்யம்போல் ப்ரபஞ்சத்துக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சரீராத்ம பாவரூபம் என்று காட்டப்படுகிறது.

இதனால் 'ஸத் ஏகம் ஏவாஸீத்' என்கிற இடத்தில் பரமாத்மா ஸ்ருஷ்டிக்கு முன் தமஸ் சரீரகனயிருந்தான். அந்தப் பரமாத்மா 'ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய' என்று ஸங்கல்பித்து அக்ஷர சரீரகனய், மறுபடி 'ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய' என்று ஸங்கல்பித்து அவ்யக்த சரீரகனய், இந்த ரீதியில் வாயு சரீரகனய் மாறி, மறுபடி 'தத்தேஜ ஐக்ஷத ப³ஹு ஸ்யாம்' என்று மாறி தேஜஸ் சரீரகனய், மறுபடி அப்படியே ஸங்கல்பித்து ஜல சரீரகனய், முன்போல் மறுபடி ஸங்கல்பித்து, ப்ருதிவீ சரீரகனய் மாறுதலை யடைந்து, தேஜஸ் ஜலம் ப்ருதிவீ இவைகளை த்ரிவ்ருத்கரணம் பண்ணி, த்ரிவ்ருத்க்ருதமான அந்தப் பூதங்களில் தன் சரீரமான ஜீவன் வழியாக ப்ரவேசித்து, அந்தப் பூதங்களைக்கொண்டு தேவ மநுஷ்யாதி ப்ரபஞ்சத்தை உண்டாக்கி, அந்த ப்ரபஞ்ச சரீரகனக மாறுதல் அடைகிறான்.

'ஸதே³வ ஸோம்யேத³ம்' என்று தொடங்கி, 'நாமரூபே வ்யாகரவாணி' என்கிற வரையில் உள்ள வாக்யங்களால் இந்த அர்த்தம் சொல்லப்படுகிறது. இங்கு ப்ரஹ்மத்துக்கு நாமரூப விபாகத்தை யிழந்த தமஸ் சரீரகனயிருக்கை காரணவஸ்தை, தேவ மநுஷ்யாதி நாமரூப விபாகத்தையுடைய ப்ரபஞ்ச சரீரகனயிருக்கை கார்யாவஸ்தை. ஆகையால் 'ஸதே³வ ஸோம்யேத³மக்³ர ஆஸீத்' என்கிற வாக்யத்தில் கார்யமான ப்ரபஞ்சத்தைச் சொல்லும் 'இத³ம்' பதத்துக்கு தேவ மநுஷ்யாதி நாமரூப விபாகத்தையுடைய ப்ரபஞ்ச சரீரகமான ப்ரஹ்மம் என்று அர்த்தம்.

ஏகம் ஏவாஸீத்' என்பதற்கு நாமரூப விபாகத்தை யிழந்திருந்த தமஸ் சரீரகமான ப்ரஹ்மமாயிருந்தது என்பது அர்த்தம். இப்படி அசேதநமான ப்ரக்ருதிக்குக் கார்யாவஸ்தையைச் சொல்லி அதன்வழியாக ப்ரஹ்மத்துக்குக் கார்யாவஸ்தையைச் சொல்லிற்று. இனி 'அநேந ஜீவேநாத்மநா அநுப்ரவிஶ்ய' என்று தொடங்கி சேதநனை ஜீவாத்மாவுக்குக் கார்யாவஸ்தையைக் காட்டி, அதன் வழியாக ப்ரஹ்மத்துக்குக் கார்யாவஸ்தையைச் சொல்லுகிறது. இங்கு 'அநேந' என்கிற

பதம் இவன் என்கிற அர்த்தத்தைச் சொல்லி, அதனால் ப்ரளயகாலத்தில் இருந்த நிலையைக் காட்டுகிறது. அந்த நிலை மநு ஸ்ம்ருதியில்

'ஆஸீதி³த³ம் தமோபூ⁴தம் அப்ரஜ்ஞாதம் அலக்ஷணம் ।
அப்ரதர்க்யம் அவிஜ்ஞேயம் ப்ரஸுப்தமிவ ஸர்வத: ॥

என்று ப்ரளயத்தைச் சொல்லும் ஶ்லோகத்தில் 'அவிஜ்ஞேயம்' என்கிற இவ்வளவால் அசேதந வஸ்துவினுடைய நிலையைச் சொல்லி, சேதநனுடைய நிலையைச் சொல்லும் 'ப்ரஸுப்தமிவ ஸர்வத:' என்கிற இதனால் காட்டப்படுகிறது. 'ப்ரஸுப்தமிவ' என்கிற இதற்கு மெய் மறந்த தூக்கத்தை யடைந்ததுபோல் என்று அர்த்தம். இதனால் மிகவும் ஜ்ஞாநஸங்கோசத்தை யடைந்து அசேதநத்தோடு ஒப்பாயிருந்த நிலை காட்டப்படுகிறது. இதனாலும் அந்த ப்ரளயகாலத்தில் 'ப³ஹு ஸ்யாம்' என்று ஸங்கல்பித்த ஸர்வஜ்ஞ ஸர்வசக்திக ஸத்யஸங்கல்ப ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபடும் 'த³யநீயத³ஶை' (அதாவது: கண்டு பரிதாபப்படும்படியான நிலை) யும் காட்டப்படுகிறது.

'ஜீவேநாத்மநா' என்கிற இடத்தில் 'ஜீவேந' என்கிற பதமே போதும். 'ஆத்மநா' என்னும் பதம் அதிகம். ஸர்வத்திலும் வ்யாபித்திருக்கும் ப்ரஹ்மத்துக்கு இப்போது 'அநுப்ரவிஶ்ய' என்று புதிதாய் அநுப்ரவேசம் சொல்வது அநுபபந்நமாகிறது. ஆகையால் 'ஜீவேநாத்மநா' என்பதற்கு ஜீவாத்மாவினாலே என்று அர்த்தமன்று. 'ஆத்மநா' என்பதற்கு சரீரத்தால் என்று அர்த்தம். ஆத்ம சப்தத்துக்குச் சரீரமும் அர்த்தம் என்று நிகண்டுவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் 'ஜீவேநாத்மநா அநுப்ரவிஶ்ய' என்கிற இதற்கு ஜீவனாகிற சரீரத்தின் வழியாய் ப்ரவேசித்து என்று அர்த்தம். இதனால் ஸர்வ வ்யாபகமான ப்ரம்ஹத்துக்குப் புதிதாய் அநுப்ரவேசம் சொல்வது அநுபபந்நம் என்கிற சங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. ப்ரம்ஹம் ஸர்வ வ்யாபகமா யிருந்ததேயாகிலும் அணுவானஜீவாத்மாவின் வழியாகப் புதிதாய் ப்ரவேசம் அநுபபந்நமன்று. இங்கு த்ரிவ்ருத்க்ருதமான தேஜோ ஜல ப்ருதிவிகளில் ஜீவாத்மாவுக்கு ப்ரவேசம் சொல்லி, ஜீவாத்மாவினால் ப்ரவேசிக்கப்பட்ட தேஜோ ஜல ப்ருதிவிகளைக் கொண்டு தேவ மநுஷ்யாதி சரீரங்களையும் அந்தந்த நாமங்களையும் ஸ்ருஷ்டித்தபடியைச் சொல்லுகிறபடியால் தேவமநுஷ்யாதி சப்தங்கள் தேவ மநுஷ்யாதி சரீரத்தின் வழியாக ஜீவாத்மாக்களுக்குப் பேராகிறதென்றும் தேவத்வமநுஷ்யத்வாதி ரூபமான சரீரத்தின் அவஸ்தைகள் சரீரத்தின்வழியாக ஜீவாத்மாவில் ஸம்பந்திக்கிறதென்றும் காட்டப்படுகிறது. அப்படியே

ஜீவாத்மாக்களாகிற சரீரத்தின் வழியாக ப்ரஹ்மம் தேஜோ ஜல ப்ருதிவீகளில் ப்ரவேசித்து நாமரூபங்களை ஸ்ருஷ்டித்தது என்று சொல்லுகையால் தேவமநுஷ்யாதி சப்தங்கள் தேவ மநுஷ்யாதிகளாகிற சரீரத்தின் வழியாக ஜீவாத்மாவைச் சொல்லி ஜீவாத்மரூபமான சரீரத்தின் வழியாக ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது என்றும் தேவத்வ மநுஷ்யத்வாதி ரூபங்களான அவஸ்தைகள் தேவமநுஷ்யாதி ரூபங்களான சரீரத்தின் வழியாக ஜீவாத்மாக்களிலும் ப்ரம்ஹத்துக்குச் சரீரமான அவர்கள் வழியாக ப்ரஹ்மத்திலும் ஸம்பந்திக்கிறதென்றும் காட்டப்படுகிறது. இதனால் ஜீவாத்மாவுக்குச் சரீரத்தின் வழியாகக் கார்யத்வம் என்றும் ப்ரம்ஹத்துக்கு அவன் வழியாகக் கார்யத்வம் என்றும் காட்டபட்டதாகிறது.

புருஷஸூக்தத்தில் 'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் । ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரே । ஸர்வாணி ரூபாணி விசித்ய தீர: । நாமானி க்ருத்வா அபிவதந் யதாஸ்தே' என்கிறவிடத்தில் ஒரு மஹாபுருஷனுக்கு ப்ரபஞ்சத்துக்கு நாமரூபங்களை உண்டாக்குகை சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு 'ஸேயம் தேவதா' என்று தொடங்கி, 'நாமரூபே வ்யாகரவாணி.' என்கிற இவ்வாக்யத்தால் முன் 'ஸத்' சப்தத்தால் தொடங்கப்பட்டு இங்கு 'ஸேயம் தேவதா' என்கிற இடத்தில் தேவதா சப்தத்தால் சொல்லப்படும் தேவதைக்கு அந்த ப்ரபஞ்சத்துக்கு நாமரூபங்களை உண்டாக்குகை சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த அடையாளத்தால் கீழ்ச் சொன்ன புருஷஸூக்த வாக்யத்தில் சொல்லப்பட்ட மஹாபுருஷன்தான் இந்தத் தேவதை யென்று கிடைக்கிறது. 'அத்புய: ஸம்பூத:' என்கிற அநுவாகத்தில் 'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ।' என்கிற வாக்யத்தில் அந்த மஹா புருஷனைத் தொடங்கி 'ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என்கிற விடத்தில் அந்த மஹாபுருஷனுக்கு லக்ஷ்மீபதித்வம் சொல்லியிருக்கிறபடியால் நாராயணன்தான் அந்த மஹாபுருஷன் என்று கிடைக்கிறது. ஆகையால் 'ஸேயம் தேவதா' என்கிற இடத்தில் ப்ரபஞ்சத்துக்கு நாமரூபங்களை உண்டாக்கினதாகச் சொல்லப்படும் தேவதை நாராயணன்தான் என்று கிடைக்கிறது. 'யேநாச்ருதம் ச்ருதம்' என்கிற ஆரம்ப வாக்யத்தில் 'யத்' சப்தத்தால் ஒருவனைத் தொடங்கி 'ஸதேவ-ஸோம்ய' என்கிற வாக்யத்தில் 'ஸத்' சப்தத்தால் அவனைச் சொல்லி, பின்பு 'ஸேயம்தேவதா' என்கிற இடத்தில் தேவதா சப்தத்தாலே அவனையே தொடங்குகிறபடியால் முன் 'யத்' சப்தம் 'ஸத்' சப்தம் இவைகளால் சொல்லப்படுமவனும் நாராயணன்தான் என்று கிடைக்கிறது. ஆகையால் ஒருவனை யறிந்தால் ப்ரபஞ்சமெல்லாம் அறியப்பட்டதாகிறது என்று சொல்லு மிடங்களி லெல்லாம் ஒருவன் என்பது நாராயணன்தான்

என்று ஸித்திக்கிறது. ஆகையால் ப்ரஹதாரண்யகோபநிஷத்தில் மைத்ரேயீ ப்ராஹ்மணங்களில்

'ஆத்மநி வா அரே த்ருஷ்டே ச்ருதே மதே விஜ்ஞாதே இதம் ஸர்வம் விதிதம் பவதி'

என்கிற விடத்தில் ஆத்மாவை யறிந்தால் இந்த ப்ரபஞ்சமெல்லாம் அறியப் பட்டதாகிறது என்று சொல்லப்படும் ஆத்மா நாராயணன்தான் என்றும் முண்டகோபநிஷத்தில்

'கஸ்மிந்நு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி'

என்று யாரை யறிந்தால் இந்த ப்ரபஞ்சமெல்லாம் அறியப்பட்டதாகிறது? என்கிற கேள்விக்குப் பதில் சொல்லும் 'யத்தத்ரேச்யம்' என்று தொடங்கி 'யத்பூதயோநிம் பரிபச்யந்தி தீரா:' என்கிற வாக்யத்தில் சொல்லப்படும் அக்ஷரபுருஷனும் இந்த நாராயணன்தான் என்று கிடைக்கிறது.

அப்படியே இங்கு 'ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேய' என்கிற வாக்யத்தில் 'தத்' சப்தத்தால் நாராயணனையே சொல்லி, அவனுக்குச் சொல்லப்படும் பகுபவந ஸங்கல்பம் தைத்திரீயோபநிஷத்தில் ஆநந்தவல்லியில் 'ஸோகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி' என்கிற விடத்தில் 'ஸ:' என்கிற சப்தத்தால் சொல்லப்பட்ட ஆநந்தமய புருஷனுக்குச் சொல்லுகிறபடியால் அந்த ஆநந்தமய புருஷனும் நாராயணன்தான் என்று கிடைக்கிறது. ஆகையால் ப்ருஹதாரண்யகோபநிஷத்தும் முண்டகோபநிஷத்தும் தைத்ரீயோபநிஷத்தும் சாந்தோக்யோபநிஷத்தும் இவை நான்கும் நாராயணனுக்கே ப்ரபஞ்சத்தைக் குறித்து உபாதாந காரணத்வத்தை ப்ரதிபாதிக்கின்றன.

இப்படி நாராயணன் 'நாம் பஹுவாகக்கடவோம்' என்று ஸங்கல்பித்து ப்ரபஞ்சத்துக்குத் தேவ மநுஷ்யாதி ரூபங்களை உண்டுபண்ணி, தேவ மநுஷ்யாதி ரூபத்தால், தான் பஹுவாக ஆகுகைக்கு உத்தேச்யமான ப்ரயோஜநம் என்னவென்று மேலே விசாரிப்போம்.

முண்டகோபநிஷத்து 'யத்தத்ரேச்யம்' என்கிற வாக்யத்தில் முன் அக்ஷர சப்தத்தால் சொல்லப்பட்ட பரப்ரஹ்மபூதனான நாராயணனுக்கு 'யத்பூதயோநிம்' என்கிற இத்தால் ப்ரபஞ்சத்தைக்குறித்து உபாதாந காரணத்வத்தைச் சொல்லி

'𑌯𑌥𑍋𑌰𑍍𑌣𑌨𑌾𑌭𑌿𑌃 𑌸𑍃𑌜𑌤𑍇 𑌗𑍃𑌹𑍍𑌣𑌤𑍇 𑌚, 𑌯𑌥𑌾 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌷𑌧𑌯𑌸𑍍𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌸𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌤𑍍 𑌕𑍇𑌶𑌲𑍋𑌮𑌾𑌨𑌿 𑌤𑌥𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍 𑌸𑌂𑌭𑌵𑌤𑍀𑌹 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍍'

என்று கீழ்ச்சொல்லப்பட்ட உபாதாந காரணத்வத்தை விவரிக்கும் மந்த்ரத்தில் ஊர்ணநாபி (ஈப்புலி என்கிற பூச்சி) த்ருஷ்டாந்தத்தாலே ஜகத் ஸ்ருஷ்டிக்ரமம் விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ச்ருதியில்

'𑌯𑌥𑍋𑌰𑍍𑌣𑌨𑌾𑌭𑌿𑌰𑍍𑌹𑍃𑌦𑌯𑌾𑌦𑍂𑌰𑍍𑌣𑌾𑌂 𑌸𑌂𑌤𑌤𑍍𑌯 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 ।
𑌤𑌥𑌾 𑌵𑌿𑌹𑍃𑌤𑍍𑌯 𑌭𑍂𑌯𑍋𑌽𑌪𑌿 𑌗𑍍𑌰𑌸𑌤𑍍𑌯𑍇𑌵 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ॥'

என்கிற ஊர்ணநாபி த்ருஷ்டாந்தாபிப்ராயத்தை விவரிக்கும் உபப்ரஹ்மண வசநத்தில் ஈப்புலி என்கிற பூச்சியானது தன்னுடைய சரீராவயவத்திலிருந்து நூலை வெளியில் பரவும்படி செய்து அந்த நூலினால் விளையாடி மறுபடியும் அதை விழுங்குகிறாப்போல் பகவானும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பகவான் தான் செய்யும் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு விளையாட்டே ப்ரயோஜநம் என்று ஏற்படுகிறது. இந்த அம்சம் மஹோபநிஷத்தில் '𑌏𑌕𑍋 𑌹 𑌵𑍈 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌆𑌸𑍀𑌨𑍍𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌨𑍇𑌶𑌾𑌨𑌃' என்று தொடங்கி '𑌸 𑌏𑌕𑌾𑌕𑍀 𑌨 𑌰𑌮𑍇𑌤' என்கிற வாக்யத்தால் ஜகத்காரணமான நாராயணனுக்கு, தான் ஒருவனாய் இருப்பதில் அரதியை (அஸந்தோஷத்தைச்) சொல்லி மேல் ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறபடியால் ஸ்ருஷ்டிக்கு அரதிபரிஹாரமே ப்ரயோஜந மென்று சொல்லுகிறபடியால் தேவமநுஷ்யாதி பூதங்களைக் கொண்டு லீலாரஸத்தை அநுபவிப்பதே ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜந மென்று ஸ்பஷ்டமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. '𑌸 𑌏𑌕𑌾𑌕𑍀' அந்த நாராயணன் தான் தனிமையாயிருப்பதில் '𑌨 𑌰𑌮𑍇𑌤' (𑌨 𑌰𑌮𑌤𑍇) ரதியை (ஸந்தோஷத்தை) அடையவில்லை என்று இந்த ச்ருதியின் அர்த்தம்.

'𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌂𑌹𑌾𑌰𑌸𑌂𑌹𑍃𑌤𑍀𑌃 [illegible] 𑌨𑌿𑌯𑌾𑌮𑌕𑌃 ।
𑌹𑌰𑍇 𑌵𑌿𑌹𑌰𑌸𑌿 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌕𑌨𑍍𑌦𑍁𑌕𑍈𑌰𑌿𑌵 𑌜𑌨𑍍𑌤𑍁𑌭𑌿𑌃 ।
𑌮𑍋𑌦𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌭𑍂𑌤𑍈𑌃 𑌬𑌾𑌲𑌃 𑌕𑍍𑌰𑍀𑌡𑌨𑌕𑍈𑌰𑌿𑌵' ॥

இத்யாதி புராண வசநங்களில் பந்துக்களாலும் விளையாட்டுப் பொம்மைகளாலும் விளையாடுவது போலவும் ஜந்துக்களால் பகவான் விளையாடுகிறான் என்று சொல்லுவதாலும் விளையாட்டே ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் என்று ஏற்படுகிறது.

'𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾 𑌦𑍇𑌹𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌨𑌿𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌕𑍃𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌹𑌸𑍍𑌤𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌾' ॥

என்கிற உபப்ரஹ்மண வசநத்தில் ஜீவாத்மா பகவானிடத்தில் தன்னை ஸமர்ப்பிக்கைக்காக கை கால் முதலான அவயவங்களோடும் கண் காது முதலிய இந்த்ரியங்களோடும் கூடிய விசித்ரமான தேஹத்தைப் பகவான் ஜீவனுக்கு ஸ்ருஷ்டித்திருக்கிறான் என்று சொல்லியிருக்கிறபடியால் இந்த சரீரத்தைக்கொண்டு பகவானை ஆராதித்து அவனுடைய அநுக்ரஹத்தால் மோக்ஷத்தைப் பெறுவதும் இந்த ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் என்றும் ஏற்படுகிறது. கீழ்க்கண்ட ச்ருதியில் சொன்ன ஊர்ணநாபி த்ருஷ்டாந்தத்தின் அபிப்ராயத்தை விவரிக்கைக்காக ப்ருவ்ருத்தமான '𑌯𑌥𑍋𑌰𑍍𑌣𑌨𑌾𑌭𑌿𑌃' என்கிற உபப்ரஹ்மண வசநத்தில் '𑌗𑍍𑌰𑌸𑌤𑌿' என்கிறவளவால் ஊர்ணநாபித்ருஷ்டாந்தத்தை விவரித்து '𑌏𑌵𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃' என்கிறவித்தால் '𑌤𑌥𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌸𑌂𑌭𑌵𑌤𑍀𑌹 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂' என்று ச்ருதியில் ஜகத்காரணத்தைச் சொல்லும் அக்ஷரசப்தத்தால் சொல்லப்படுமவன் நாராயணன் என்று விவரிக்கப்பட்டது. ஆகையினாலும் முண்டகோபநிஷத்து நாராயணனுக்கே உபாதாந காரணத்வத்தைச் சொல்லுகிறது என்று கிடைக்கிறது. கீழ்ச்சொன்ன ச்ருதி ஸ்ம்ருதி வசநங்களில் ஸ்ருஷ்டிக்கு லீலை ப்ரயோஜநமென்று சொல்லுகிறபடியால் பகவான் சேதநாசேதந ரூபமான ப்ரபஞ்சத்தைத் தன் லீலைக்கு ஸாதநமாக்கி இவைகளைக்கொண்டு ஸ்ருஷ்டி ஸம்ஹாராதி லீலைகளை நடத்தி, லீலாரஸத்தை அநுபவிக்கிறான் என்றும் ஸார்வபௌமனுக்குப் பந்து முதலியவைபோல இப்ரபஞ்சம் பகவானுடைய லீலைக்கு ஸாதநமானதாய் அவனிட்ட வழக்காய் அவனுக்கு லீலாரஸத்தை வ்ருத்தி பண்ணிக்கொண்டு அவனுக்குச் சேஷபூதமா யிருக்கிறதென்றும் கிடைக்கிறது. இதனால் உபநிஷத்துக்களில் அந்தந்த ப்ரஹ்ம வித்யாப்ரகரணத்தில் ஜகத் ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறதற்குப் ப்ரயோஜநமும் காட்டப்பட்டதாகிறது. அந்த ப்ரயோஜநமாவது இந்த ஜீவாத்மா பகவானுடைய லீலாஸங்கல்பமாகிற பெருங்காற்றால் சுழற்றப்பட்டுச் சுழலுகிற ஸ்ருஷ்டி ப்ரளயங்களாகிற சக்ரத்தில் அகப்பட்டுக்கொண்டு சுழன்று சுழன்று சொல்ல முடியாத பஹுவிதமான துக்கங்களை அநுபவித்து வருகிறான். பகவானை அந்தந்த ப்ரம்ஹவித்யையைக் கொண்டு உபாஸித்து அவனுடைய அநுக்ரஹம் பெற்றால் பகவான் இவனிடத்தில் ப்ரீதியுள்ளவனாய் இவனை ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களாகிற லீலைக்கு உபகரணமாக்குவதினின்றும் நீக்கி, தன்னோடு அத்யந்த ஸாம்யத்தை உண்டாக்கி ஒருகாலும் அழிவில்லாததான ஆநந்தவிசேஷத்தை அநுபவிக்கும்படி செய்கிறான் என்று காட்டுவதே. ப்ரஹ்ம வித்யையை

அநுஷ்டித்தால் கீழ்ச்சொன்ன பலம் கிடைக்குமென்கிற இந்த அம்சம் ஸ்ரீ பகவத்கீதையில் 14வது அத்யாயத்தில்.

> ‘இதம் ஜ்ஞாநமுபாச்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: ।
> ஸர்கேபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச ॥’

என்கிற ச்லோகத்தில் ஸ்பஷ்டம். இந்த ப்ரஹ்மவித்யையை அநுஷ்டித்து என்னோடு பரமஸாம்யத்தை அடைந்தவர்கள் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கு விஷயமாகமாட்டார்கள் என்று இந்த ச்லோகத்தின் பொருள்.

இப்படி பகவான் செய்யும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களும் உபநிஷத்துக்களில் ஒவ்வொரு ப்ரஹ்மவித்யா ப்ரகரணத்திலும் ஸ்ருஷ்டி ஸம்ஹாராதிகளைச் சொல்வதும் விசேஷ ப்ரயோஜனம் உள்ளதே என்று ப்ரமாணங்களால் கிடைக்கிறது.

மூன்றுவது கண்டம் முற்றிற்று.

> தத்தே ததாத்வஸுக தத்ஸௌகுமார்யஹோ ஸஹாஸோ
> பாவாந்யாவிபவரூபகுணா பஜதே பவதாம் ।
> தாவாம்ஸ்யாவிபவரூபகுணஸ்ய நவ்யக்தி
> ஸம்ஸ்லிஷ்யஸி க்ஷீதிஹ தேந ஸமாநயந்தி ॥ 66

[ப - ரை] த்வம் - நீ, பஜதாம் - [உன்னை] ஆச்ரயிப்பவர்களுக்கு, ததாத்ருசே தத்ஸ்வபாவ விபவரூபகுணே :—அந்த ஆச்ரிதர்கள் அதீநமாகச் செய்யப்பட்டுள்ள உன் விபவம் ஸ்வரூபம் குணம் இவைகளால், ஸ்வஸாத்ருச்யவாஹிமாநுவஸி - உனக்கு ஸமாநமாயிருக்கும் தன்மையை உண்டு பண்ணுவதற்கு விரும்புகிறாய். [அதாவது, ஆச்ரயிப்பவர்களுக்கு உன்னுடைய ஸர்வத்தையும் கொடுத்து, அது வழியாக உனக்கு ஸமர்களாய் அவர்களைச் செய்ய விரும்புகிறாய்]. ததேவஹி - அந்தக் காரணத்தாலேயே, தவ பரமம் ஸாம்யம் - உன்னுடன் பூர்ணமாக ஸமமாயிருப்பதை, முக்திமாஹு:—மோக்ஷமென்று சொல்லுகிறார்கள். விதுஷாம் - [ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை] அறிந்தவர்களுக்கு, தச் சேஷ்டஸ்யைவ- [ஆத்ம ஸ்வரூபத்திற்கு அநுகுணமென்று] ப்ரஸித்தமான உன்னுடைய கைங்கர்யமே, பரமம் பதம் - மிகவும் ச்லாக்யமென்று எண்ணப்படுகின்றது.

ஒருவன் பகவானை ஆச்ரயிக்கும் பொழுதே, பகவான் அவனுக்குத் தனது ஸௌசீல்யத்தைக் காட்டின போதிலும், மோக்ஷத்தை அடைவித்த பிறகே பரமமான ஸாம்யம் ஏற்படுகிறபடியால், அந்த ஸௌசீல்யம் மோக்ஷமாகிற அநுபவ தசையிலேயே பூர்ணமாக ப்ரகாசிக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பகவானுக்குக் கைங்கர்யம் செய்வது என்பது குறைவற்ற ஸம்ச்லேஷத்தின் எல்லை நிலம்; ஆகையால் அந்தக் கைங்கர்யத்தையே, அதன் உண்மையை அறிந்தவர்கள், பரமமான ஸௌசீல்யாநுபவம் என்று சொல்லுகிறார்கள். 65

66. அந்த ஸௌசீல்யத்தையே வேறு விதமாக அநுபவிக்கிறார். உபநிஷத்துக்களில் ‘பகவானை நாம் எந்த எந்தக் குணங்களுடன் கூடினவனாக உபாஸிக்கிறோமோ, அந்தந்தக் குணங்களுடன் கூடினவனாக நாம் அவனை அநுபவிக்கிறோம்’ என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி பகவான், பக்தனால் அநுஸந்திக்கப்படும் குணங்களுடன் அவனுக்குத் தன்னை ப்ரகாசித்துக் கொண்டு அவனுடன் ஸம்ச்லேஷிக்கிறபடியால், அவனுடைய ஸௌசீல்யாதிசயம் நன்கு வெளிப்படுகின்றது என்பது

நீலாஜ்நாத்ரி நிபமுந்நஸமாயதாக்ஷ
மாஜாநுலம்பிஜயிதாயதபாஹுமாலம் ।
ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முகோஜ்வல பூஷணம் த்வாம்
பஸ்யேம தேவ ஸதசங்க சதாங்க பாணிம் ॥ 67

இந்த ச்லோகத்தாற் சொல்லப்படுகின்றது. முந்தின ச்லோகத்தால் பகவான் தன்னுடையதான எல்லாவற்றையும் கொடுத்து பக்தர்களைத் தனக்கு ஸமமாக்ச் செய்து கொள்ளுகிறபடியால் அவனிடத்தில் ஸௌசீல்யம் உண்டு என்பது சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தில், பக்தர்கள் எப்படி உபாஸிக்கிருர்களோ, அப்படி எல்லாம் தன்னைச் செய்துகொண்டு பகவான் அவர்களுடன் ஸம்ச்லேஷிக்கிருனுகையால் அவன் ஸுசீலன் என்று சொல்லப்படுகின்றது.

[ப - ரை] தஸ்து ததாஸ்து - அது அப்படி இருக்கட்டும் [அது ஸௌசீல்யத்தின் ஒரு ப்ரகாரம்; மற்றுமொரு ப்ரகாரமுண்டு; அதை அநுபவிப்போம்]. பவந்தம் - உன்னை, யாவாந் [இதி] - இவ்வளவு [ஜ்ஞாநாதிகளை உடையவன்] என்றும், யதாவிதகுண [இதி ச] இவ்விதங்களான குணங்களுடன் கூடினவனென்றும் [அநுஸந்தித்து], பஜதே - உபாஸிக்கிருனே, தாவாந் - அவ்வளவு ஜ்ஞாநாதிகளுடன் கூடினவனுகவும், ததாவிதகுண: - அவ்விதங்களான குணங்களுடன் கூடினவனுகவும் [தன்னைச் செய்து கொண்டு], தத்ருசீநவ்ருத்தி: - அந்த உபாஸகனுக்குப் பராதீந சேஷ்டிதத்தை உடையவனுக, தேந ஸமாநதர்மா - அவனுக்கு ஸமானமான தர்மங்களை உடையவனுய், இஹ - இவ்விடத்தில் [அதாவது, இந்த ஆச்ரயண தசையில்], ஸம்ச்லிஷ்யஸி - ஸம்ச்லேஷிக்கிருய். அஹோ - ஆச்சர்யம். கஸ்தவாயம் ஸ்வபாவ: - இது என்ன ஸ்வபாவ விசேஷம்? [அதாவது, இது வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் எட்டாததான பெருமையுடன் கூடியதன்றே?]

மோக்ஷம் அடைந்த பிறகு பகவதநுபவத்தில் எவ்வித குறைவுக்கும் இடமில்லை. அப்பொழுது நேரும் அநுபவம் பரிபூர்ணநுபவமே. ஆச்ரயண தசையிலோ வென்றல், பரிபூர்ணநுபவம் ஸாத்யமில்லையாதலால், உபாஸகனுடைய ருசிக்கும் சக்திக்கும் தகுந்தபடி அவன் பரிமிதமாகவே அநுபவிக்கப்படுகிறுன். அப்படித் தன்னைச் சிறுத்துக் கொண்டு நமக்கு அநுபவார்ஹமாகச் செய்து கொள்வது ஸௌசீல்யாதிசயத்தின் கார்யம் என்பது தாத்பர்யம். உபநிஷத்திற் சொல்லப்படும் வாக்யத்தின் தாத்

ஸம்ஸாரகாரணம் யதஸ்தி தஸ்ய பரம் து
ஸாந்தே ஸதா ஸமுதிதே ஸகலே விகாரே ।
ஹஸ்தே ஸ்வகீயே ஸதநம் த்வம் விஹாய
ஸீதாம்ஸ்வரம் பவதோ ஜயம் வதாமி ॥ 68

பர்யமும், மோக்ஷத்தில் அநுபவிக்கப்படும் அநுபவம் பரிபூர்ணமே என்பது தான். இவ்விடத்தில் அநுஸந்திக்கப்படும் குணங்களும் அவ்விடத்தில் அநுபவிக்கப்படுகின்றன என்பதே அதன் கருத்து என்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிருர்கள்.

67. இவ்வளவால் பகவானுடைய ஸ்வரூப குணவிபூதிகளை அநுபவித்து விட்டு, இனி அவனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும் அவனுடைய திவ்யாயுத திவ்ய பூஷணங்களையும் அநுபவிக்கப் புகுகிருர். "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" [ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் ஸத்யமாயும் ஜ்ஞாநமாயும் அநந்தமாயும் இருக்கும்] என்கிறபடி பகவான் கேவலம் ஜ்ஞாந ஸ்வரூபமாய் எவ்விடத்திலும் வ்யாபித்துநிற்கிருன் என்பது உண்மையாயிருக்கையிலும், அவன், தனது ஸங்கல்ப விசேஷத்தால் வைகுண்டம் என்று சொல்லப்படும் ஒரு அப்ராக்ருத ப்ரதேசத்தில், கணக்கற்ற அநர்க்கங்களான திவ்யாயுத திவ்ய பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்துடன், ஸ்ரீ பூமி நீளா ஸமேதனுய், நித்ய ஸூரிகள் முக்தர்கள் இவர்களுக்கு போக்யனுய் நித்யனுக எழுந்தருளி இருக்கிருன் என்று நமது சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அந்தத் திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனுன ஸ்ரீமந் நாராயணனே நமக்கெல்லாம் பரம ப்ராப்யனென்று நமது ஆழ்வார் ஆசார்யர்களெல்லாரும் நிர்வஹித்திருக்கிருர்கள். அந்த விக்ரஹ விசேஷாநுபவமே ஸ்வரூபாநுபவத்தைக் காட்டிலும் அதிக போக்யமென்பது அவர்களுடைய அநுபவம். அதில் தமக்குள்ள ருசி விசேஷத்தை வெளியிட்டுக்கொண்டு அந்தப் பலத்தைப் ப்ரார்த்திக்கிருர்.

[ப ரை] ஹே தேவ - ஹே வைகுண்ட நாதனே! நீலாஜ்நாத்ரி நிபம் - நீலாஞ்ஜநமயமான ஒரு பர்வதம் போலவும், உந்நஸம் - உயர்ந்த நாஸிகையை உடையவும், ஆயதாக்ஷம் - நீண்ட கண்களை உடையவும், ஆஜாநுலம்பிஜயிதாயதபாஹும் - ஜாநு பர்யந்தம் நீண்டும் ஜய சீலமாயுமுள்ள கைகளை உடையவும், ஆயதகர்ணபாசம் - நீண்ட ச்லாக்யங்களான

ஹ ‿ ஙிவிஹ ‿ ஒஊண ஜ்ரூஷ ஶீ தவிஒொகிெதந
ஊஜூஙிெதந ஐயமாராகஷரயா வ வாஶா ।
ஒூஊூகஷலிஶமெநந விகாஷி நா வ
ஷமஹாவயிஷ்யஷி கஜா ஊவவஂகஜெந ॥ 69

காதுகளை உடையவும், ஸ்ரீவத்ஸலக்ஷணஂ - ஸ்ரீ வத்ஸத்தை அடையாளமாக உடையவும், உஷாரஂஹீரநாஷிஂ-ஊர்ஜிதமாயும் பெரிதாயுமுள்ள நாபியை உடையவும், ஏராஷாஶஂ கூாஂ - இப்படிப்பட்ட திவ்ய மங்களை விக்ரஹ விஶிஷ்டனன உன்னை, ஶதஂ ஶாஷஃ - நூறு வர்ஷ காலம் [அதாவது, எப்பொழுதும்], வஶெஂ - பார்க்க விரும்புகிறேன்.

நீஹாஞநாஷிஂ ‿ நிஹஂ - ஸ்ரீ வைகுண்ட நாதன் காளமேகம் போல ச்யாமளமாயிருக்கும் திருமேனியை உடையவன் என்பது ப்ரஸித்தம். அஞ்ஜநம் [அதாவது, மை] என்று சொல்லியிருப்பதால், மை எப்படி தோஷங்களைப் போக்கடிக்கும் ஸ்வபாவத்துடன் கூடியதோ அப்படியே இவனுடைய விக்ரஹமும் அதை ஸேவிக்குமவர்களுக்கு ஸகல தோஷ நிவர்த்தகமாகும் என்பது த்யோதிப்பிக்கப் படுகின்றது.

ஆயத கணலிவாஶஂ - கண்களும் காதுகளும் நீண்டிருப்பது உத்தம லக்ஷணங்களுள் ஒன்று. இந்தப் பதத்தில் தென்படும் 'வாஶஂ' என்பது ப்ராசஸ்த்யத்தைக் குறிக்கும் ஒரு விகுதி. 'கணலிவாஶஂ' என்பதற்கு 'ப்ரஶஸ்தமான காது' என்பது பொருள். இம்மாதிரியே 'கெஶ-வாஶஂ' என்பது முதலான ப்ரயோகங்கள் உண்டு.

ஶாஷ்ஶ்தஂ வஶெஂ - எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். இந்த ப்ரார்த்தனை "ஷஜா வஶ்யஂதி ஷூரயஃ" [நித்ய ஸூரிகள் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்] என்னும் ச்ருதி வாக்யத்தை அநுஸரித்து செய்யப்படுகின்றது. ஒருவன் முக்தனாய் ஸ்ரீ வைகுண்டம் போனால், அவ்விடம் போன பிறகு அவன் செய்யும் கைங்கர்ய மெல்லாம் அந்தப் பகவானை எப்பொழுதும் பார்த்திருப்பதே. அவாப்த ஸமஸ்த காமனை அந்தப் பகவானுக்கு நம்மால் செய்யப்பட வேண்டியதாக ஒரு கைங்கர்யமும் இருக்குமோ? "நஂ ஊெதூவ வாதிநஃ" [நம: நம: என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்] என்றும், "ஊஶிஷ்டஂ தெ நஂ ஊக்திஂ விெயஂ" [முடிவிராத 'நம:' என்னும் உக்தியை நாம்

வஜ ‿ ாக்ஷஶயூஜஷஶொராஹஶவைக ‿
ஊதீஷயாகஜஶகளூககஜூதாக்ஷ ।
கூஹூாஜவஷயமஜஂ விஜஜீ ‿ ஹாஷி
ஜூலியொஷிஷெகூதிகஜா நஶிொரா ஊதீயஜ ॥ 70

சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்] என்றும் ச்ருதிகள் பகவதநுபவத்தை விவரிக்கின்றன.

68. பகவானுடைய ஸ்வரூபத்தை அநுபவிப்பதை விட்டு அவனுடைய விக்ரஹத்தை அநுபவிக்க இச்சிப்பானேன்? என்று ப்ரச்நம் செய்பவர்களுக்கு இந்த ச்லோகத்தால் ஸமாதாநம் சொல்லுகிறார். 'பகவதநுபவமெல்லாம் போக்யமே. ஆனால் எங்களுக்கு விக்ரஹாநுபவத்திலேயே விசேஷித்த ருசி இருக்கின்றது. ஸ்வரூபத்தை அநுபவிப்பவர்கள் அதை அநுபவிக்கட்டும்; நாங்கள் விக்ரஹத்தையே அநுபவிப்போம்' என்பது தான் ஸமாதாநம். 'வயஂ து' [நாங்களோ வென்றால்] என்பதால் இந்த வைலக்ஷண்யம் வெளியிடப்படுகின்றது.

[ப - ரை] வயஂ து - நாங்களோ வென்றால், [அதாவது, ஸ்வரூபம் குணம் முதலியவைகளை அநுபவிக்குமவர்களைக் காட்டிலும் வ்யாவ்ருத்தர்களாயிருக்கும் நாங்கள்], கஂஹொஹாக்ஷஂ - தாமரைப் பூப்போன்ற கண்களை உடையவும், காவிஜ நிஹாஷிவி ‿ யஂஜஂ - தாமரைப் பூவுக்கு ஸத்ருசமான சரண த்வந்த்வத்தை உடையவும், ஆதாஂ ‿ தாஊஷாஜ்ஞகாஹ ‿ காஷிஂ - கொஞ்சம் சிவந்த தாமரைப் பூப்போல மநோஜ்ஞமான கை நுனிகளின் காந்தியை உடையவும், ஹூஷாஊகஜ - வண்டு போல நீலமான குழல்களை உடையவும், ஹ ‿ ஊவிஹ ‿ ஐகாய காஷிஜ - வண்டின் விலாஸம் போன்ற விலாஸத்தை உடைய திருமேனி சோபையை உடையவும், வீதாஜ்ஷஂ - பீதமான வஸ்த்ரத்தை உடையவும், கஜொ வவஃ - இப்படிப்பட்ட விக்ரஹத்தை, ஷூவாஂ - ஸ்தோத்ரம் செய்ய விரும்புகிறோம்.

69. த்வரை தாங்கமாட்டாமல், 'எப்பொழுது அந்த அநுக்ரஹம் நமக்கு ப்ராப்தமாகும்?' என்று அலற்றுகிறார்.

[ப + ரை] ஹ ‿ ஙிவிஹ ‿ ஒஊண-புருவங்களின் விலாஸத்தாலும், ஜ்ரூஷஶீ தவிஒொகிெதந - ஸௌம்யமான க்ருபா கடாக்ஷத்தாலும், ஊஜூஙிெதந - மந்த முறுவலாலும், ஐயமாராகஷரயா வாஶா வ - மதுரங்களான

த்ரைவிக்ரம க்ரம க்ருதாக்ரமணம் த்ரிலோக்யா
முக்த்யம் ஸமுத்தமத்ருதோத்தம பக்திபாஜாம் ।
நித்யம் யதும் மம கதா ஹி மமோத்தமாங்கம்
அங்கீகரிஷ்யதி சிரம் தவ பாதபத்மம் ॥ 71

அக்ஷரங்களை உடைய ஸூக்தியாலும், ப்ரப்ரகஷ்டவிகாஸமேதந விகா- ஸிநா ப்ரஸாதஜேந வா - அதிசயிதமான ப்ரீதியை ஸூசிப்பிக்கும் மலர்ந்த திருமுக மண்டலத்தாலும், கதா ஸம்பாவயிஷ்யஸி - எப்பொழுது [என்னை] அநுக்ரஹிக்கப் போகிறாய் ?

70. ‘உன்னுடைய பாதார விந்தத்தை எப்பொழுது நான் சிரஸ்ஸி ஞல் வஹிக்கப் போகிறேன் ?’ என்று கதறுகிறார்.

“யாவத ஆரணள ஹ்ராதம: பாதரேவமுஜ்நாங்கிதள ।
ஶிரஸா யாரயிஷ்யாமி ந மே ஶாந்திர்பவிஷ்யதி ॥”

[எந்தக் கால பர்யந்தம் சக்ரவர்த்தி லக்ஷணங்களுடன் கூடிய ப்ராத்ரு பாதாரவிந்தங்களை நான் சிரஸ்ஸால் தரியாமல் இருக்கிறேனே, அந்தக் கால பர்யந்தம் எனக்கு ஶாந்தி என்பதே ஸம்பவிக்க மாட்டாது] என்று பரதாழ்வான் கதறினது போல இந்த ஆழ்வானும் கதறுகிறார்.

[ப - ரை] வஜ்ர - வஜ்ராயுதம், அங்குஶ - அங்குசாயுதம், த்வஜ - கொடி, ஸரோருஹ - தாமரைப்பூ, ஶங்க - சங்கம், சக்ர - சக்ரம், மத்ஸ்ய - மத்ஸ்யம், ஸுதாகலஶ - அம்ருத கலசம், கல்பக - கல்ப வ்ருக்ஷம், க்லுப்தாங்கம் - [ரேகா ரூபங்களான இவைகளால்] செய்யப்பட்ட அடையா ளங்களை உடைய, த்வத்பாதபத்மயுகளம்-உன்னுடைய தாமரைப்பூப்போன்ற சரண த்வந்தமானது, விஸ்ருமர்மஹோபி:-[தன்னிடமிருந்து] ப்ரவஹித்துக் கொண்டிருக்கும் ப்ரபைகளால், மதீயஶிர: - என்னுடைய சிரஸ்ஸை, கதாநு - எக்காலம், பூயம: - அதிமாத்ரம், அபிஷேக்ஷ்யதி - அபிஷேகம் செய்யப் போகின்றது ?

பகவானுடைய திருவடியில் வஜ்ராயுதம் முதலியவைகள் போன்ற ரேகைகள் இருக்கின்றன என்பது ப்ரஸித்தம். மத்ஸ்ய - இது, மத்ஸ்ய என்னும் சப்தத்திலிருந்து அடையப்பட்ட சப்தம். ‘விஸ்ருமர்மஹோபி:’ என்று பாதங்களின் ப்ரபையை ப்ரவஹிக்கும் ஜலம் போல பேசுகிற

உந்நித்ரபத்மஸ்தவ தத்ஸமோத பத்ம
ஶோபாவிதீர்ணமிகந்திதாயாணாம் ।

படியால், ‘அபிஷேக்ஷ்யதி’ [அபிஷேகம் செய்யப்போகின்றது] என்று சொல்வது உபபந்நமே. 70

71. ‘எந்தப் பாதாரவிந்தத்தின் ஸம்பர்க்கத்தை நான் அபேக்ஷிக் கிறேனோ, அது, முன் த்ரிவிக்ரமாவதார காலத்தில் இந்த மூன்று லோகங்களிலும் அவைகளிலுள்ள ஸகல சேதநாசேதந பதார்த்தங் களுக்கும் ஸம்பந்தம் கிடைக்கும்படி வைக்கப்படவில்லையோ ? அது, அநுத்தமமான பக்தியைச் செய்யுமவர்களுக்கு மாத்ரம் தகுந்ததாயினும், த்ரிவிக்ரமாவதாரத்திற் போல், அடியேன் மீதும் வைக்கப்படக் கூடாதோ? அது அடியேனுக்கு சாச்வதமாகக் கிடைக்குமோ?’ என்று ப்ரார்த் திக்கிறார்.

[ப - ரை] த்ரைவிக்ரம - த்ரிவிக்ரமாவதார ஸம்பந்தமான, க்ரம - பத விந்யாஸத்தால், க்ருதாக்ரமணம் - ஆக்ரமிக்கப்பட்ட, த்ரிலோகம்- மூன்று லோகங்களையு முடையதும், அநுத்தம - ஸர்வோத்க்ருஷ்டமான, பக்திபாஜாம் - பக்தியைச் செய்பவர்களுக்கு, உத்தமம் - ச்லாக்யமான, உத்தம்ஸம் - ஶிரோபூஷணமுமான, மம நித்யம் யதும் தவ பாதபத்மம் - என்னுடைய அழிவற்ற தநமாகிற உம்முடைய பாதாரவிந்தமானது, மமோத்தமாங்கம் என்னுடைய சிரஸ்ஸை, கதா ஹி சிரமங்கீகரிஷ்யதி - எப்பொழுது நிரந்தரமாக அங்கீகரிக்கப் போகின்றது ?

‘ஸர்வோத்தமமான பக்தியைச் செய்பவர்களுக்கு உத்தமமான ஶிரோபூஷணம்’ என்று சொல்வதால், ‘அதற்கு நான் எவ்விதத்தில் அர்ஹனாவேன்?’ என்னும் அதிசங்கையும், ‘த்ரிவிக்ரமாவதாரகாலத்தில் எல்லாருடைய மீதும் எவ்வித வாசியுமற வைக்கப்பட்ட’ என்பதால் ‘அதை நானும் ப்ரார்த்திக்கலாம்’ என்னும் ஸமாதானமும் த்யோதிப்பிக்கப் படுகின்றன. 71

72. இதில், பகவானுடைய கராவிந்தத்துடன் தமது சிரஸ்ஸின் ஸம்பந்தத்தை ப்ரார்த்திக்கிறார்.

[ப - ரை] உந்நித்ரபத்ம - மலர்ந்த இதழ்களை உடைய, பத்ம - தாமரைப்பூவுக்கு, ஸமோதம் - ஸத்ருசமும், பத்மஶோபாவிதீர்ண -

உத்தமாங்கே ஹஸ்தம் நவபல்லவ தல்லஜம் தே
ஸம்வேச்ய கதா க்ருதஸமீஹிதம் ஆதநோஷி மாம் ॥ 72
ஸ்ரீ: நிஸர்கநியதா த்வயி அங்க காந்தி:
நித்யம் தவாஸ்ரிதஸுகைவ ததா ஹ்யவாப்தா ।

உள் ப்ரதேசத்தில் அரவிந்த புஷ்பம் போன்ற ரேகையை உடையவும், ஸகலேந்த்ரிய ஹ்லாதநம் - ஸகல இந்த்ரியங்களுக்கும் ஆஹ்லாதத்தைக் கொடுக்கக்கூடியதுமான, தே நவபல்லவ தல்லஜம் - உன்னுடைய துளிர்போன்ற ச்ரேஷ்டமான கையை, உத்தமாங்கே ஸம்வேச்ய - என்னுடைய சிரஸ்ஸில் வைத்துக் கொண்டு, கதா - எக்காலம், மாம் - என்னை, க்ருதஸமீஹிதம் ஆதநோஷி - நிறைவேற்றப்பட்ட மநோரதத்தை உடையவனாகச் செய்யப் போகிறாய்?

ஸகோத்ரம் - ஸமாநமான கோத்ரத்தை [குலத்தை] உடைய. அதாவது, ஸத்ருசமான என்று சொன்னதாயிற்று.

ஸகலேந்த்ரிய ஹ்லாதநம் - பகவானுடைய திருக்கைகளில் ஸ்பர்சத்திற்கு அநுகுணமான மார்த்தவம் இருப்பதுடன், மற்றை இந்த்ரியங்களையும் த்ருப்தி செய்யக்கூடிய ஸௌகந்த்யம் முதலிய குண விசேஷங்களும் இருக்கிறபடியால், 'ஸகல இந்த்ரியங்களுக்கும் ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடிய' என்று சொல்லப் பட்டிருக்கின்றது.

'தல்லஜ' என்பதற்கு 'ச்ரேஷ்டமான' என்பது பொருள். 72

73. இது ப்ரயந்தம் திருமேனியின் சோபையை வர்ணித்துவிட்டு, இனி திவ்ய விபூஷணாதிகளின் சோபையைப்பற்றி வர்ணிக்க ஆரம்பிக்கிறார். பகவானுடைய விபூதியில் ஒவ்வொன்றும் யாவதாத்ம பாவியானபோகத்திற்குப் பர்யாப்தம் என்பது இந்த ச்லோகத்தால் சொல்லப்படுகின்றது.

[ப - ரை] த்வயி - உன்னிடத்தில், அங்க காந்தி:— அங்கங்களில் இருக்கும்படியான காந்தியானது, நிஸர்கநியதா [ஸதீ] - ஸ்வபாவத்தாலேயே நியதமான ஸம்பந்தத்துடன் கூடினதாக இருக்கின்றது. ஏகைவ - இது ஒன்றே, நித்யம் தவாஸ்ரித - உன்னுடைய போக்யதைக்கும் பர்யாப்தம்

எவ்விரகா லென்செய்து மைத்துனனை
மேலெழுப்ப வியலா தாழ்வான்
கவ்வைமிகக் கருத்தழிந்து கண்ணருவி
காயமெலா நனைப்ப மாழ்கி
யிவ்வினையே னென்செய்கே னென்றேழா
வினியுனையிங் கிகந்து போதல்
வவ்வுபொரு ணக்தொழிலுக் கூறுறுமே
யாமுய்யும் வகைவே றின்றே. 49

எனவிரங்க வெதிராச னெனுமவனு
மெழிற்கலியா வினிநீ வேறு
நினைவின்றி யென்சிரத்தைக் கொய்துகொடு
நீளரங்கஞ் செல்வா யென்னக்
கனலெரியுஞ் செவ்வேலைக் காதினுழைத்
தாலதுபோற் பதைத்துச் சோரும்
வனநாளுஞ் செவிகளைத்தன் வண்கரங்க
ளாற்புதைத்துப் பொருமு வானால். 50

உயிரனைய வுனையிழந்து முயிர்பிழைப்ப
தெங்ஙனநா னுறவின் மிக்காய்
செயிரறுநற் குணமணியாய்ப் பாகவத
கைங்கரியச் செல்வி யாகிக்
கயிரவமென் வாயினளாய்க் கன்னலினின்
குதலையளா யாண்டா ளென்னும்
பெயரினையு முடையவெழிற் பின்பிறந்தாள்
வைதவமும் பெறுத லென்னே. 51

இனியரங்கன் கைங்கரிய மேதக்கிப்
பொன்வடிவப் பாவை யேதுக்
குனையிழந்திங் கலமரவோ வரவணையான்
றிருவுள்ள முவந்த வாறென்
றினைவதுகண் டெதிராச னின்முகனு
யூக்கமுட னெழிற்கை கூப்பி
வினைவெருவும் பாகவத சேகரனே
பேதையினீ விம்ம லென்னே. 52

திருமாலி னருள்கொண்டன் றவன்கரத்துத்
திண்டனுவி னஞ்ச மாய்நீ
யிருமாவிம் மண்ணெழுந்து சேதனர்க
ளீடேற விலகா நின்றாய்
பெருமாளின் பணிதனக்கிப் பெருமுடைநாற்
றந்தனும்பு முடலம் விண்டு
வருமாவின் னரியபத நானணுகி
னீயதற்கு வருந்த லென்னே. 53

மின்னனைய நிலையில்லா மெய்யிருந்தென்
றெம்முன்னோர் மிழற்றக் கண்டு
நின்னனையா ரிதற்கழுங்க னெறிமுறையோ
சிவிமுதலோர் நிலமீ தன்றோ
வின்னனைய தந்தனுவை யிழந்தனரெ
சின்னெறியி லிணைமே லில்லாப்
பொன்னனைய திருவரங்கன் பொருட்டடியேன்
போக்குவதும் புதுமை யொன்றோ. 54

கங்குலினிக் கழிந்தது நீ கார்வண்ணற்
கர்ப்பிதமென் றெழுந்து தாழா
திங்கடியே னின்சிரத்தை யீர்ந்தெடுத்துத்
திருவரங்க மெழுந்து கோயி
லெங்குமெழில் குலவுவகை யிரும்பணிசெய்
தொருதிருவை குந்த மேறி
னங்குநின தடிபணிவேன் கடுகவினி
யறிகுதியென் றறைதல் செய்தான். 55

எம்பொருமான் றிருவுள்ள மிக்குளதா
லெழிற்கலிய னவதா ரஞ்செய்
திம்பருய வெழுந்தமையா லிதரகதி
யின்மையினு லிறுகி யுள்ளக்
தன்பெரிய கரவாளங் கையேந்தி
யதிராசர் தகுமுப் பாதத்
தம்பெருவி பூதியிறை நீயன்றோ
வெனக்கிளர்ந்தா வேசங் கொண்டு. 56

அவன் சிகையைப் பற்றிவலித் திடக்கைகொடு
பொன்னரங்க மமர்ந்த மாயா
விவன் றனுயிர்க் கடைக்கலநீ யென்றிறைஞ்சிக்
கந்தரத்தை யீர்ந்தா னங்கே
யிவர்தருமோ திமனெருத னுதியிமை
யவர்வியந்து விழைந்தெங்கேனு
மவிரசியி னஞ்சிரத்தை யளிப்பவனு
மறுப்பவனு முண்டோ வந்தோ. 57

நஞ்சுயிர்க்கும் வெம்பணியி னடித்தரிய
துயில்புரிவோற் கிதுவு மின்பம்
விஞ்சுமொரு விளையாட்டோ வெனவிரங்கி
யவர்ப்பழிச்ச மங்கை வேந்த
னஞ்சிரமு மெதிராச னுடகவிக்
கிரகமுங்கொண் டகன்றவ்வூரை
னெஞ்சுழல வத்தலையை நெறியருகோர்
புதரிடையின் மறைத்துச் சென்றான். 58

வேறு

இங்கிந்த வணமாக வெழில்சேர ரங்கத்திருங்கோயி லுட்
கொங்கம்பு யந்தங்கு திருமாது கொண்கன்மு கங்கண்ணுறா
நங்கண்வ ரும்மன்பி லக்தொண்டி ழைக்கச்சி ரங்கொய்தனன்
றங்கம்பு ரைதங்கை மணவாளன் றனைமங்கை தனகா வலன். 59

நின்னெஞ்ச நானென்று நீங்காது றும்பொன்ம லர்ந ரவே
மென்னெஞ்சென் றிதுகாறு நினைதந்தேன் வெளியாய தின்றே கடுங்
கன்னெஞ்ச னலையேனி யெனையன்று கருதாதி லங்கைக் கனே
பின்னஞ்செய் பிசிதாச ரிடைநீடி ருக்கப்பி ரிந்தார் வையோ. 60

என்றேசு ளித்தேற வில்லொத்த புருவத்தி னைமின் னிளங்
கன்றேர்ம திப்பொன்னு தற்கண்மு கங்கோடல் கண்டெம் பிரா
னன்றேந கைத்தென்ற னளினப்பெ ருங்கோயி னங்கா யுளங்
கன்றேல வன்றன்னை யுய்ந்திங்கு றக்காணு கென்றங் ஙனே. 61

கனுழன்ற னைக்கூவி யெதிராச னுய்யக்க ணத்தேயி ழைத்
துலையுந்த ணந்தந்த வுயர்தங்கை நாய்கற்கு றுந்தொண்ட னின்
னிலைகண்ட வன்கண்வி டுத்தேகெ னக்கண்ட நிமிடந்த னின்
மலையும்ப றிந்தோட விரைவிற்ப றந்தானம் மறைமெய் யனே. 62

போயவ்வி மானத்து முடிமூக்கினைக்கொண்டு போழ்ந்தங் குறுங்
காயந்தனைக்கொண்டு வந்தச்சி ரத்திற்க லந்தெம்பி ரான்
மாயன்ற னடியெண்ணி யிருநான்கெ ழுத்தாய மறையோத லும்
போயின்னு றக்கம்மெ ழுந்தன்மை போலங்கெ ழுந்தான வன். 63

தாள்வின்ற வன்றன்னை முதுகிற்கொ டேசென்று தன்மைத்து னன்
வாழுந்த லக்கண்வி டுத்தங்கி ருந்தேகி வருகா விரி
சூழும்ம ரங்கப்ப ரன்பாத மலர்கண்டு சொலினன்பி ழைத்
தேழுந்த னெதிராச னெதிர்கண்டு பரகால னிறுமாந் தரோ. 64

கோவென்று கதறிக்க ரங்கொண்ட ணைத்தென்கு ணக்குன்றமே
பாவம்ப ரித்துப்ப டுத்தேனு னைப்பங்க யத்தா ளிறை
யேவங்க டிந்துள்ள நின்னெண்ண ருஞ்செம்மை யிதயங் கொளா
வாவிங்கு மீளப்பி ழைத்தார வேயைய வருள்செய் தனன். 65

சாந்தீப னின்பிள்ளை தவவைதி கன்பிள்ளை தாமுய்ய முன்
னாந்தண்ண ருள்செய்த வடைவேயெ ழிற்கண்ண னவனுன் னையீங்
கீந்தானெ னத்துள்ள வெல்லோரு மானந்த நீர்வார வே
தாந்தாமெ னத்தாண்ட வஞ்செய்த தகவென்ன யாஞ்சொல் வதோ.

பரகால னெதிராசன் முதலாய வந்தப்ப ருந்திண் ணியர்
விரகால யன்மூன்று விழியோனு முதலாய வெவர்வந் தநம்
மொருகாரி யத்திற்கொ ருறுகண்வி ளைத்தாலு முவரேபுறந்
தருகாரி யஞ்செய்து தளராத ரங்கன்ப ணிகளாற்று வேம். 67

என்றங்கெ ழுந்தேத மிருதோள்பு டைத்தந்த விரவிற் பினே
சென்றந்த மில்லாச்செ ருக்கோடு கண்ணன்கு டியையண் மினர்
மின்றங்கு சூரன்கு ணக்குன்றின் மீதேறு மமையம் முறக்
கொன்றங்கு மாழ்வானும் பின்றங்கு வண்ணங்கு றித்தாற்றி னன். 68

வேறு

ஆடக விக்கிர கந்தனை யங்கோ ரின்னலி ருஞ்சேரு
நீடுவ யற்க ணகழ்ந்துபு தைத்தே நின்றிட வங்கதனை
மாடுக லப்பையி னேடுழ வந்த மன்னுப ணைக்குரியா
னுடிய டைந்தபி னென்புல மீது நாடியி டேலெனவே. 69

வந்தச துத்தனும் சிந்தை மயர்ந்தென் விந்தையி தென்றுணரா
வெந்தமு னோர்களே யிந்நி லத்தை யந்தம றும்பகலாய்த்
தந்தமு றைப்படி துய்த்திட நீயார் வந்துத டுத்தனையா
லிந்தவ ழக்கினை யிந்தவூ ரம்பலத் தின்னிடை வைத்துமென. 70

அப்பழ னத்தனு மாரவாரிக்க மெய்ப்பர காலனுமாங்
கெப்படி தன்னினு மிப்பகலேக லெற்குறு மென்று கொளா,
வப்படி யாகுக வென்றுழை யோரை யங்குற வைத்தவனோ
டொப்புற வப்பதி யேகிய வைக்கண் ணுற்றது செப்பினனால். 71

நன்னெறி துன்னிய நல்ல வகைக்க ணண்ணுறு மைவர்களும்
பன்னிய வன்னவர் செய்திய னைத்தும் பண்புற வாய்ந்துணிந்
தின்னல மன்னிய வெம்பர காலற் கிச்செறு வுள்ளதென
மன்னிய சத்திய மாகுக வென்றூர் மாயன ருந்திடவே. 72

துய்த்தலு மின்றது பத்திர மின்பு தொல்கரி யின்றதனு
லத்திரு மங்கைமன் சத்தியமாட வாங்கவர் சொற்றிடலும்
பத்தியின் விஞ்சிய வன்னவன் மாயன் பாதமலர் பரவா
வித்தம மாயிடு வெஞ்சப தத்தின் விம்மிதம் விம்மிதமே. 73

எம்மவர் கட்குமுன் வாமன னென்பா னின்னில மன்னவனே
செம்மையி னீட்டிய செம்மல வன்றன் கால்வழி வந்தவனு
னிம்மறை யுண்மையே யாகையி னிச்செய் யென்னது கேளிதுவென்
றம்மனு நூலவை யார்கள் வியக்க வங்ஙன றைந்தனனே. 74

கோட்டிய ரன்னது கேட்டது மங்கைக் கோன தெனப்புகலக்
கேட்டது பாதமெ ழுந்தவ னுசை கெட்டக மீளவுமம்
மோட்டிய ரூரிடை மன்னுமு ராரி யர்ச்சகன் மூலமதாய்
வாட்டறு தன்பிர சாதம வற்கங் கீயவ ழங்கினனால். 75

தன்பரி வாரமுந் தானும துண்டு தந்தவ தெம்பெருமா
னின்புறு மையிரு பாடல வற்கங் கின்னமு தென்னவிழைத்
தன்புறு சுற்றமொ டவ்விர வின்கண் ணப்பொ னெடுத்தகலா
மன்பெரு மண்ணி நதித்கட மீதே மற்றுந டந்தனனே. 76

வேறு

அத்தரங்கி னித்தடத் தாருமாயன் சன்னிதி
முற்றுமொவ்வோர் வைகலங் குற்றவன்றன் முளரிநேர்
சித்திரப்ப தந்தொழு தின்கவிகள் செய்துகொண்
டொத்தசேனை சூழ்வர வொழுகுகின்ற காலையில். 77

தாமரைத்த டங்கணன் றங்குமோர் தலந்திரு
நாமஞ்சங்க மபுரமென்று யாவருந விலுவா
ரேமமார வங்கொர்நாளி ராவிலுண்டெ ழுந்துதன்
னாமவேலர் தமைவிளித் திந்தவண்ண நவிலுவான். 78

இத்தடங்கொ டுந்தட மேந்துவில்லுங் கையுமாய்
வித்தகத்தி னொருவிறல் வீரன்முன்னர் விழிப்புடன்
பத்திரத்தி னேகுகென்ற றைந்தியாரும் பம்புறப்
புத்தவிக்ர கத்துடன் போயினான்வ ழிக்கொளா. 79

அந்தவேளை யத்தலத் தமருமாழி யங்கரன்
மைந்தமைந்த சூரனாய மன்னுகையுந் தனுவுமா
யிந்தமங்கை மன்னவற் கெய்தினான்வ ழித்துணை
தந்தையக்கு ளாவரே தங்கிரும் பகட்டினார். 80

குமுதவல்லி கொண்கனக் குனிசிலைக்க ரத்தனை
யமுதுகண்ட தெனவுளம் பொங்கியைய யார்கொனீ
யெமதருங்கு லத்திறை யென்னநிற்றி யென்னலு
முமதயானை மன்னைமுன் காத்தமாயன் மொழிதரும். 81

ஐயவித்த லத்தையான மர்ந்துகாவ லாற்றுவேன்
வையங்காத்த வன்னென வழங்குவார்க ளென்பெயர்
பொய்யிதென்றெ னப்பல புகன்றுகொண்டு போந்துமுன்
செய்யபானு வுதயம்பின் செய்ததும்ம றைந்தனன். 82

மாயன்மாய மானபின் மங்கைமன்னன் பாலகா
நீயெவண்ப டர்ந்தனைநி கழ்த்துகில்லை யொன்றுமென்
சேயவெய்ய வில்லியே வையங்காத்த செம்மலே
மாயமாய் மறைந்ததென் மாற்றமொன்ற ளிக்கலாய். 83

என்றுபன்மு றைவிளித் தெதிருமை கண்டுளந்
துன்றிமிக்க விம்மிதந் தோன்றிவந்த தூயவன்
கன்றுகொண்டு முன்விளங் கனியுகுத்த மாயனே
யின்றெமைப்பு ரந்திடற் கெய்தினானெ னக்கொளா. 84

கண்டுகன்ன வின்னமிழ் தொன்றுமாது ரியங்கலந்
துண்டுமுண்டு வருறு வோரீரைந்து பாடலங்
கண்டரும்ப ருகியா னந்தமாரு மாறுவாய்
விண்டுபாடி யெய்தினான் வீறரங்க மென்பவே.

திருவரங்க னடிமலர் தொழுதெழுந்து தீஞ்சுவை
விரவுபாட லாற்பல பரவல்செய்து விம்பம
துருகிவிற்ற வளவுறும்ப ணம்படைக்கு முரங்கொளாப்
புரையிகந்த சினகரம் பொலிவிழைக்க வடியிடா. 86

சாலிசாலை மானசஞ் சாலகோபு ராதிகண்
மேலுறும்வ ணம்வளர் தின்னவண்ண மேவவங்
காலையம்பு குந்துவை கறையிலாதி யடியவ
ரேனுமேக தேவனைக் காணுறுதி டிந்தரோ. 87

விண்மணீயின் வெயிலுறு விம்முபங்க யம்மெனக்
கண்மழுங்கி வாடுதுண் டத்துடன்க லங்குறுத்
திண்மைகொண்டொ ருவழி திரண்டுநன்கு ணர்ந்துபின்
விண்மிடைந்த பொன்விமா னம்பிளந்த விதங்கண்டார். 88

அடிபிடிக்கு மாற்றல்சா லாட்களைக்கொண் டங்கிருந்
தடுகளர்ப டர்ந்தமே லாறுகொண்டு சென்றிருங்
கடிமலர்த்த டம்பொழில் காவிரித்த டஞ்செழித்
திடுமெயில்க ளேழ்வளை திருவரங்க மெய்தினார். 89

எய்தியூகை யாலுணர்ந் தெழிற்கலிய னணுகுறு
மெய்திகழு மன்னவன் மெல்லடிச் சுவடுகண்
டைதிகழு மதுபிடித்த டைந்ததோடி யைந்ததால்
செய்தியுண்மை கண்டனர் சிந்தையையம் விண்டனர். 90

வேறு

மெல்ல மங்கையர் மன்னனை மேவிநீ
நல்லை நங்கன கத்தொளிற் தெய்வதத்
தொல்லை யாயப துமையைத் தோன்றுறு
தல்லெ டுத்திங்க ணுகினை யென்றலும். 91

கொண்டு கோபநீ ராருங்க டவுளார்
கண்ட வாயுக ழறுகின் றீர்துமை
மண்ட ருங்கிர கங்கண்ம ணந்தவோ
யண்டு பேயிற் பயித்திய முண்டதோ. 92

புந்தி போனப டிபுகல் கிற்கிலா
[illegible]ந்த மூர்முக மாயொன்று ணர்கிலா
இந்த வூரையி கந்துவி ரைந்துநீர்
வந்த வந்தவ ழிக்கொளு மென்றனன். 93

கலிய னேகொணர்ந் துள்ளது கண்டவர்
வலிமி டைந்துள மங்கையின் வள்ளலே
பொலியு மெங்கட வுட்குறு பொன்முடி
நிலய மங்குத கர்த்தனே நீயரோ. 94

ஊடி முந்தெம தொண்பொற்க டவுளை
நீடி ருக்கர நீகொண்ட டைந்தனை
தாடி ருச்சுவ டின்னது தானுணர்ந்
தாடு கின்றனங் காணுதி யையநீ. 95

உண்மை கண்டபி னென்றுமோ பொய்யெதிர்
ஒண்ம ணிச்சுடர் முன்னிரு ளோங்குமோ
தண்மை கொண்டெம தங்கப்ப கவனைத்
திண்மை கொண்டுத வென்றுதெ ரித்தனர். 96

கள்ள மின்னவர் கண்டனர் நாமினி
உள்ள தன்மையொ ளிக்குவ தொன்றிடா
துள்ளி வேறு விரகி வருக்குவ
மெள்ள வென்றுது ணிந்துமி ழற்றுமால். 97

நுந்த மந்தநுவலும்ப துமையான்
சந்த மாய்வி றன்னள வீகுவேன்
வந்து மேலைவ ருடம்வ ழங்குமி
னிந்த வோலையென் றீந்தன னென்றரோ. 98

தந்த பத்திரங் கொண்டவர் தாமுத
மந்த மற்றுத டைந்தகன் றேகலுஞ்
சந்த வங்குலி தன்னைய ரிந்துவைத்
தந்த விக்கிர கத்தைய ழித்தனன். 99

சிகரி யிஞ்சிமு தலறு செங்கொழி
னிகரி லாதுக லியனி கழ்த்திமேல்
புகரி லாதபொ ருள்கரத் தின்மையான்
மகரி லாதம னையென நின்றனன். 100

கோபி லின்பணி நன்கு குலவுற
வாய பின்ன ரஃதிழைத் தோரெலாஞ்
சேய யாமிது காறுஞ்செ யுந்தொழிற்
கேய கூலியிங் கீகென வேண்டினர். 101

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் புகழும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.
வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றும் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலைப்புக்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு ரூ. 5 4 0
இரண்டாந்தர பைண்டு ரூ. 4 4 0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,
11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ராசார ஸபை
(லிமிடெட்)

(ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 39, முத்தியாலு செட்டி தெரு, வெப்பேரி, சென்னை).

டைரேக்டர்கள்.

வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், ப்ரஸிடெண்டு.	டி. டி. ஸ்ரீநிவாஸாசாரியர், (அட்வொகேட்)
பி. ரங்கஸாமி ஐயங்கார், (ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்) ஜெனரல் ஸெக்ரிடரி.	என். டி. சாமண்ணு, (ஸொலிஸிடர்).
டி. ராஜகோபாலாசாரியர், (ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்) எக்ஸிக்யூடிவ் ஸெக்ரிடரி.	எம். ஸுதர்சன ஐயங்கார், (எம். டி. பிரதர்ஸ்).
எஸ். ஜகன்னாதாசாரியர் ௸	ஸி. வி. வெங்கடரமண ஐயங்கார், (கோயமுத்தூர்).
எம். ஸுதர்சன ஐயங்கார் டிரெஷரர்.	டி. ஈ. சடகோபாசாரியர், அட்வொகேட் திருப்பாபுலியூர்
	டி. ஆர். வி. சர்மா, ஸ்ரீரங்கம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை ப்ரசாரம் செய்யவும் ௸ ஸித்தாந்த க்ரந்தங்களை அச்சிட்டு ப்ரசுரம் செய்வதற்காகவும் முக்கியமாக இச்சபை ஏற்பட்டுள்ளது. தத்காலம் ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய க்ரந்தங்கள் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரத்திற் கெனவே சுமார் 25 வருஷ காலமாக நடைபெற்றுவரும் **வேதாந்த தீபிகை** யென்னும் மாதத் தமிழ் பத்ரிகையை இச்சபையார் ஏற்றுக்கொண்டு விஷயங்களை எல்லோரும் எளிதில் அறியக் கருதி இனிய தமிழ் நடையில் ப்ரசுரம் செய்து வருகிறார்கள்.

வருஷச் சந்தா. ரூ. 3—0—0 தனி ப்ரதி 0—4—0

ஸபையில் அங்கனத்தினர்களாகச் சேருகிறவர்கள் ஷேர் 1 க்கு ரூ. 50 செலுத்த வேண்டும். இதை சௌகரியமான தவணைகளிலும் செலுத்தலாம். அங்கத்தினர்களுக்கு ஸபையின் ப்ரசுரமான **ந்யாயஸித்தாஞ்ஜனமும்** இவ்வருஷத்திய தீபிகையும் விலை யன்னியில் கொடுக்கப்படும்.

ஸ்ரீ:

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

1. **ந்யாயஸித்தாஞ்ஜனம்**—(ஸ்ரீ வேதாந்த தேசிகன்) விலை ரூ. 5 0 0 (வ்யாக்யானத்துடன்) பண்டிதர்களுக்கும் வித்யார்திகளுக்கும் அறைவிலை).
2. **வேதார்த்த ஸங்க்ரஹம்**—(ஸ்ரீ பாஷ்யகாரர்) (ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் (விலை. ரூ. 3 0 0
3. ஸ்ரீ **பஞ்சஸ்தவம்** (ஸ்ரீஸ்துதி) ஸ்ரீ உப. வாஸுதேவாவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானத்துடன்) ரூ. 0 8 0
4. ஸ்ரீ **வேதாந்த தேசிகரின் தத்வடீகை** (ஸ்ரீ பாஷ்யத்திற்கு விரிவானவ்யாக்யானம்) அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளியாகும்.

हिंगु

காயம்

" हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध्मान शूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥ "

சுத்தமான பெருங்காயம் ஹ்ரு
தயத்திற்கு பலம் தரும்; காரமு
உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரு
களையும் வாத தோஷத்தையும் க
தோஷத்தையும் போக்கும்; மலப
தம் வயிற்று நோய் இவைகளையு
தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்
குணங்களைப் பெற்ற சிறந்த பெரு
காயம் **L. G.** குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகாரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

" अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
" अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः । "

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்ரீ:

[illegible]

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்கள்: { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு.24] தாது ௵—சித்திரை ௴ [ஸஞ்சிகை 11

விஷய ஸூசிகை.

1. ஸம்பாதகரின் குறிப்புகள் 540
2. ஸ்ரீ வேதாந்த தீபிகையும் பண்டித ஸமாஜங்களும் 547
[ஸ்ரீ. உ.வே. K. ஸுதர்சநாசார்யர்,]
3. வீர விவேகம் 550
[ஸ்ரீ. உ.வே. டி. ஸுந்த்ராசார்யர்]
4. நித்ரையின் தத்வம் 557
[வைத்திய ரத்ன-பண்டித ஸ்ரீ. உ.வே. எம். துரைஸ்வாமி ஐயங்கார்,]
5. நீத்தார் பெருமை 567
[ஸ்ரீ. உ.வே. ரெ. திருமலை ஐயங்கார்,]
6. ஸ்ரீமத் ராமாயணத்தில் 'இக்ஷ்வாகு குலதநம்' என்பதன் அர்த்தவிசாரம் 573
[ஸ்ரீ. உ.வே. சேட்லூர் துரைசாமி ஐயங்கார், சித்தூர்]
7. ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் 578
[ஸ்ரீ. உ.வே. எ. வீ. கோபாலாசார்யர்]
8. மீமாம்ஸா ஸங்க்ரஹம் 584
[திவான் பஹதூர் ஸ்ரீ. உ.வே. வி. கே. ராமாநுஜாசார்யர்.]
9. ஸத்வித்யை 25—32
[ஸ்ரீ. உ.வே. கபிஸ்தலம் மஹாமஹோபாத்யாய தேசிகாசார்ய ஸ்வாமி]
10. திவ்யஸூரி சரிதம் 225
[வங்கீபுரம் கோ. ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்]

[சந்தாதாரர்கள், சந்தாத் தொகையை, "ஜெனரல் கார்யதர்சி, 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை, 39, முத்தியாலு செட்டித்தெரு, 'வேப்பேரி, 'மதிராஸ்' என்னும் விலாஸத்திற்கும், வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தமான மற்றை கடிதங்களையும் "ஸம்பாதகர், வேதாந்த தீபிகை வாணி விலாஸ் போலீஸ் ராகவாசார்யர் தெரு, பார்க் டௌன் மதிராஸ்" அல்லது "ஸம்பாதகர், ராமஸ்வாமி தெரு, ஈஸ்டு மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

சென்னை-600 005.
60135

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்.

யொ௨ஞ: ஒ்ரவிஶூ ௨௨ வாவ௰ாம் ஒ்ரவஸாஷ்வாம்
ஸஂஜீவய நூவிஶுஸக்ஷியா: ஸ்ஷுயாஊா ।
சுநூாஂஶு ஹவதவாணருவணகவ ஶாதீது
ஒ்ராணாஸஜொ ஹமவதெ வாஶாஷாய தவெஷ ॥

சென்ற பவஷு ஆடி மாஸத்து ஸஞ்சிகையில், 'அத்வைத ஸித்தாந்த மானது, பர ப்ரஹ்மம் ஒன்றே உளது என்றும் அதைத் தவிர்த்து மற்றை ஒன்றும் இல்லை யென்றும் சொல்லுகிறபடியால், ஒரு சேதநனால் மற்றொரு சேதநனிடம் செய்யக்கூடிய தான ப்ரீதி விசேஷமாகிற பக்தி என்னும் மநோ பாவம் அந்த ஸித்தாந்தத்திற்கு உபபந்நமாக மாட்டாது' என்று ஒரு பெரிய பாச்சாத்ய வித்வானால் சொல்லப்பட்டிருந்த விஷயத்தை அநுவதித்து, நாம், அந்தப் பாச்சாத்ய வித்வாந் சொல்வது போலவே ஒரு அநுபபத்தி இருந்தபோதிலும் அநுஷ்டாநத்தில் அத்வைத மதத்தைத் தழுவி வர்த்திக்கும் ஜநங்களெல்லாரும் இதர மதஸ்தர்கள் போலவே பகவானிடம் பக்தியைப் பாராட்டி வருகிறபடியாலும் இதர மதஸ்தர்களுள் போல அத்வைத மதஸ்தர்களுள்ளும் அநேக பக்த சிரோமணிகள் பூர்வகாலத்தில் இருந்ததாகப் புராணாதிகளிலிருந்து வெளிப்படுகிறபடியாலும் அந்த மதத்திற்கு பக்தி என்பது ஒத்ததன்று என்று சொல்வது உசிதமாகமாட்டாது என்று விவரித்துவிட்டு, ஆனால் இந்த விவரணம் அந்தச் சங்கைக்கு ஒரு ப்ரகாரத்திலும் ஸமாதாநமாக மாட்டாதாகையால், அதற்குத் தகுந்த ஸமாதாநத்தை அந்த மதத்தைப்பற்றி நன்கு படித்திருக்கும் வித்வாங்களே வெளியிட வேண்டுமென்று அப்படிப்பட்ட வித்வாங்களை உத்தேசித்து ஒரு ப்ரார்த்தனையையும் செய்திருந்தோம். இரண்டொரு வித்வாங்கள் இதற்கு ஸமாதானம் கூறுவதாக முன் வந்து அது விஷயமாகச் சில வ்யாஸங்களை எழுதி அனுப்பினார்கள். அந்த வ்யாஸங்களெல்லாவற்றிலும், அத்வைதிகளெல்லோரும் பகவத் பக்தியைத் தீவ்ரமாகச் செய்து வருகிறவர்களே என்னும் அம்சமும் அந்தப் பக்தியை மூலமாக உடைய பகவத் ப்ரஸாதத்தாலேயே ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநம் ஜநிக்கின்றது என்பதே அந்த அத்வைதிகளின் கொள்கை என்னும் அம்சமும், இவை மாத்ரம் நிரூபிக்கப்பட்டிருந்தனவே தவிர, பக்தி என்பது பக

அத்வைத ஸித்தாந்தமும் பகவத் பக்தியும்.

வானைத் தவிர்த்த வேறொரு சேதநனை அபேக்ஷிக்கிறபடியால் அப்படிப்பட்ட சேதநாந்தரமே இல்லையென்று சொல்லும் அத்வைத ஸித்தாந்தத்தில் பக்திக்கு இடம் எவ்விதம் உண்டாகின்றது என்னும் சங்கைக்கு அந்த வ்யாஸங்கள் சரியான ஸமாதாந மொன்றையும் சொல்லவில்லை. ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநம் ஜநியாமலிருக்கும் தசையில் பல சேதநன்கள் உண்டு என்று அத்வைதிகள் ஒத்துக்கொள்ளுகிறபடியால், அப்பொழுது பக்திக்கு அவகாசம் ஏற்படுகின்றது என்பது அந்த வ்யாஸங்களை எழுதினவர்களின் அபிப்ராயமாக இருந்தபோதிலும், ப்ரஹ்மாத்வைதாநுபவம் ஜநியாமலிருக்குமவனுக்கும் அந்த அத்வைதமே வஸ்து ஸ்திதி என்னும் சாஸ்த்ர ஜந்ய ஜ்ஞாநம் இருக்குமாகையால் அது பக்தியைப் பாதிக்கமாட்டாதா என்னும் சங்கை ஸமாஹிதமாகாமலே நிற்கின்றது. நிற்க, பகவத் பக்தி காரணமாகவே பந்த நிவர்த்தக அத்வைத ஜ்ஞாநம் ஜநிக்கின்றதென்று சொன்னால், அந்தப் பக்தி ஸாதந பக்தி ஆகுமே தவிர்த்து ஸாத்ய பக்தி ஆகமாட்டாது. அப்பொழுது ஸாத்ய பக்தியையே விரும்பும் அத்வைத பக்தர்களின் நிலைமை நிரூபிதமாகாமலே நின்று விடுகின்றது. இதைப் பற்றி நமக்குத் தெளிவு இன்னுமும் ஏற்படவில்லை. அநுஷ்டாநத்தில் அத்வைதிகளிடம் பலமான பக்தி தென்படுகின்றது என்பதை நாம் நன்கு அறிவோம். அந்த அநுஷ்டாநம் அவர்களுடைய ஸித்தாந்தத்திற்கு எவ்விதம் ஒத்து வருகின்றது என்பது மாத்ரம் நமக்கு விளங்கவில்லை.

இந்தப் பக்தி விஷயமாக அத்வைத ஆசார்யர்களுக்குள் அபிப்ராய பேதமும் இருப்பதாக நாம் அறிகிறோம். ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ஆத்ம ஜ்ஞாநோத்பத்திக்கு மூலமாகச் சொல்லப்படும் ச்ரவணம், மநனம், நிதித்யாஸநம் ஆக இம்மூன்றையும் விசாரித்து வருமிடத்தில் சில ஆசார்யர்கள், மஹாவாக்யங்களைக் கேட்டவுடன் அந்த ச்ரவண மாத்ரத்தாலே ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநமானது, மநந நிதித்யாஸநங்களின்றிக்கே, ஜநித்து விடுகின்றதென்றும்; வேறு சிலர், ச்ரவணமொன்றே முக்யமானது மநந நிதித்யாஸநங்கள் அதற்கு அங்கங்களாக அபேக்ஷிதங்களென்றும்; மற்றும் சிலர், ச்ரவணம் மநநம் நிதித்யாஸநம் இவைகளுடன் ஸமாதி என்று மற்றொன்றும் முக்யமென்றும்; வேறு சிலர், நிதித்யாஸநம் முக்யமானாலும் அது விவேகத்தைக் குறிக்கின்றதே ஒழிய அது த்யாநத்தைக் குறிக்கவில்லையென்றும் இவ்வாறு பிந்ந பிந்நமாகவே தம்தம் அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கின்றார்கள். ஆதி சங்கராசார்யருடைய சிஷ்யர்களுள் ஒருவராகிய ஸுரேச்வரர் என்பவர், 'நைஷ்கர்ம்ய ஸித்தி' என்னும் தமது க்ரந்தத்தில், மநநம் நிதித்யாஸநம் இவை இரண்டும், மஹாவாக்யார்த்தத்தை அறிவதற்கு அசக்தர்களாக இருக்கும் மந்தமதிகளுக்கு மாத்ரம் அபேக்ஷிதங்களே தவிர்த்து மற்றவர்களுக்கு அவை அநாவச்யகங்களே என்றும், அப்படி அவை ஆவச்யகங்களாக இருப்பினும் அவை ச்ரவணம் என்பதில் அந்தர்பூதங்களே என்றும், அந்த நிதித்யாஸநம் என்பதும் அந்வய வ்யதிரேகங்களால் ஏற்படும் விவேகத்தைக் குறிக்கின்றதே தவிர்த்து அது த்யாநத்தைக் குறிக்கவில்லையென்றும் நிஷ்க்ருஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். இது அவருடைய ப்ருஹதாரண்யக பாஷ்ய வார்த்திகத்தி

லும் வெளியிடப்பட்டிருக்கின்றது. ப்ரஹ்ம வித்யாதிகாரிகளை அவர் பின்வருமாறு நாலு வகுப்பினர்களாகப் பிரித்திருப்பதும் இவருடைய அபிப்ராயம் இப்படிப்பட்டதே என்பதை நன்கு விளக்குகின்றது. மஹாவாக்யத்தை ஒரு தடவை கேட்டவுடன் அதன் அர்த்தம் முழுவதையும் அநுபவ பர்யந்தமாக அறிகிறவர்கள் முதல் வகுப்பினராவார்; அதை ஒருதடவை கேட்டவுடன் அறியாமல் திரும்பத் திரும்பக் கேட்டபிறகு அறிகிறவர்கள் இரண்டாவது வகுப்பினராவார்; சாஸ்த்ரங்களை குருமுகமாக அப்யஸித்து அதனால் ஏற்படும் ஜ்ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு அந்வய வ்யதிரேக ரூபமாகிற விசாரத்தைச் செய்து அதனால் ஆத்மாநாத்ம விவேகத்தை அடைந்து அதன்பிறகு மஹாவாக்யார்த்தத்தை அறிகிறவர்கள் மூன்றாவது வகுப்பினராவார்; இந்த அந்வய வ்யதிரேக விசாரத்தையும் தாமே செய்ய அசக்தர்களாய் அதைக் குருமுகமாகப் பலதடவைச் சொல்லக் கேட்டு அதன்பிறகு அந்த அர்த்தத்தை உணர்பவர்கள் நான்காவது வகுப்பினராவார். இம்மாதிரி ஒரு அதிகாரி விபாகம் செய்வதிலிருந்து, எவ்வித மநந நிதித்யாஸநங்களுமின்றிக்கே மஹாவாக்யத்தின் ஸக்ருத் ச்ரவணத்தால் மாத்ரம் ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநத்தைப் பெறுகிறவர்களும் சிலர் உளர் என்று அவர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார் என்பது வ்யக்தமாக ஏற்படுகின்றது. இந்த ஸுரேச்வரருக்குப் பிறகு வந்த 'ஸர்வஜ்ஞாத்ம முநி' என்பவர் தமது 'ஸங்க்ஷேப சாரீரகம்' என்னும் க்ரந்தத்திலும், 'ஶ்ரீஹர்ஷர்' என்பவர் தமது 'கண்டந கண்டகாத்யம்' என்னும் க்ரந்தத்திலும், 'ப்ரகாசாத்மா' என்பவர் தமது 'பஞ்ச பாதிகா விவரணம்' என்னும் க்ரந்தத்திலும், 'சித்ஸுகாசார்யர்' என்பவர் தமது 'தத்வ ப்ரதீபிகை' என்னும் க்ரந்தத்திலும், இந்த ஸுரேச்வர மதத்தையே த்ருடமாக விவரித்திருக்கிறார்கள். 'வித்யாரண்ய முநி' என்னும் ப்ரஸித்த ஆசார்யரும் தமது 'பஞ்சதசீ' 'ஜீவந்முக்தி விவேகம்' என்னும் க்ரந்தங்களில் ஸுரேச்வரருடைய மதத்தையே அநுஸரித்துப் பேசுவதாகத் தெரிய வருகின்றது; ஆனால், நிதித்யாஸநமானது கேவலம் விவேகத்தையே குறிக்கின்றது என்று சொல்லாமல், த்யாநத்தையும் ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநத்திற்கு ஒரு மார்க்காந்தரமாக இவர் ஒத்துக்கொண்டிருக்கிறார் என்பது ஒரு விசேஷம்.

ஸுரேச்வரர் காலத்திற்கு ஸ்வல்ப வர்ஷம் பின் வந்த 'வாசஸ்பதி மிச்ரர்' என்னும் ஆசார்யர், மஹாவாக்யங்களிலிருந்தே ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநம் ஜநிக்கின்றது என்பதை அங்கீகரிக்கையிலும், ஸுரேச்வரர் போல மநந நிதித்யாஸநங்களை அநாவச்யங்களென்று தள்ளிவிடாமல், ச்ரவணம் மநநம் நிதித்யாஸநம் இந்த மூன்றினுடைய பரிநிஷ்பத்தியாலேயே அந்த ஜ்ஞாநம் ஜநிக்கக்கூடுமென்று தமது 'பாமதி' என்னும் க்ரந்தத்தில் நிர்வஹித்திருக்கிறார் இவர், நிதித்யாஸநம் என்பது ஸ்ம்ருதி ஸந்ததி ரூபமான த்யாநத்தையே குறிக்கின்றதென்றும், அது கேவலம் அந்வய வ்யதிரேக விசாரத்தால் ஜநிக்கும் விவேகத்தைக் குறிக்கின்றது என்று சொல்வது சரியன்று என்றும் கண்டித்திருக்கிறார். ஸுரேச்வரர் போல இவரும் ஶ்ரீசங்கராசார்யருடைய ஸித்தாந்தத்தையே தழுவினவர். அப்படி இருக்கை

யிலும் அவர்களுக்குள் அவ்வளவு ஸமீப காலத்திலேயே அபிப்ராய பேதம் ஏற்பட்டதென்றால், ஶ்ரீ சங்கராசார்யருடைய க்ரந்தங்களில் இந்த விஷயம் இந்த இரண்டு வித அபிப்ராயங்களுக்கும் இடம் கொடுக்கும்படியாகவே பேசப்பட்டிருக்கின்றது என்றே நிச்சயித்தல் வேண்டும்.

'வேதாந்த ஸாரம்' என்னும் க்ரந்தத்தைச் செய்திருக்கும் 'ஸதாநந்த வ்யாஸர்' என்பவரும் ஒரு பெரிய ஆசார்யர். இவர் வாசஸ்பதி மிச்ரரைக் காட்டிலும் ஒருபடி அப்புறம் போய், மநநம் நிதித்யாஸநம் இவை இரண்டுகளுடன் கூட 'ஸமாதி' என்று மற்றொன்றும் அத்யாவச்யகமென்று அந்த க்ரத்தத்தில் வற்புறுத்தி இருக்கிறார். இவருக்கு முன்னிருந்த ஆசார்யர்களெல்லாரும் 'அஷ்டாங்கயோகம்' என்னும் யோக மார்க்கத்தை அநாதரித்தே இருந்தார்கள்; இவர் அம்மாதிரி அதை அநாதரியாமல் யோகமார்க்கத்தைப் பற்றி விஸ்தாரமாகப் பேசி அதன் கடைசி அங்கமாகிய ஸமாதியை ச்ரவணம் மநநம் நிதித்யாஸநம் இவைகளுடன் சேர்த்து அதுவும் ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநத்திற்கு ஆவசியகமென்று ஸ்தாபித்திருக்கிறார். வாசஸ்பதி மிச்ரர் பதஞ்ஜலியின் யோக ஸூத்ரத்தினுடைய பாஷ்யத்திற்கு வ்யாக்யாநமொன்று எழுதி இருக்கிறார் என்பது உண்மையே; ஆனால் அவர் பதஞ்ஜலியால் பேசப்பட்டுள்ள அஷ்டாங்க யோகத்தையாவது அதன் முக்ய அங்கமாகிற ஸமாதியையாவது ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநத்தின் உத்பாதநத்திற்கு அவச்யம் அபேக்ஷிதமாக ஓரிடத்திலும் சொல்லவில்லை. ஸதாநந்தர் அதை அவச்யம் அபேக்ஷிதமாக ஒத்துக்கொண்டிருக்கிறார் என்பது இவர்களுக்குள் தென்படும் விசேஷம்.

பதஞ்ஜலியின் யோக ஸூத்ரத்தை நமது ஆசார்யர்களெல்லாரும் அநாதரித்தே இருக்கிறார்கள். அப்படி அவர்கள் அநாதரித்ததன் காரணம் முழுவதும் அந்த யோக ஸூத்ரம் சிற்சில அம்சங்களில் வேத விருத்தங்களான ஸாங்க்யக் கொள்கைகளை அநுஸரித்துச் செல்லுகின்றது என்பதே. ஸமாதியையும் ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநோத்பத்திக்கு அவசியம் அபேக்ஷிதமென்று சொல்லும் ஸதாநந்தரும், வேதத்திற்கு அவிருத்தமான அம்சத்தில் மாத்ரம் பதஞ்ஜலி ஸூத்ரத்தை அங்கீகரித்திருக்கிறாரே தவிர, அதை ஸமக்ரமாக ஒத்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்வது ஸாத்யமில்லை. ஆதி ஶ்ரீ சங்கராசார்யரும் இந்த விஷயத்தைத் தமது பாஷ்யத்தில் ஸந்தேஹமற விளக்கியிருக்கிறார்.

"ஏதேந யோக: ப்ரத்யுக்த:" [II. 1. 3]

என்னும் ஸூத்ரத்தைப் பாஷித்து வருமிடத்தில் 'ஸாங்க்யர்களும் யோகமதஸ்தர்களும் ஆத்மைகத்வத்தை அவலம்பித்தவர்களல்லர்; அவர்கள் த்வைதிகள். ஆகையால் அவர்களாற் சொல்லப்பட்டுள்ள ஸாங்க்ய ஜ்ஞாநத்தாலாவது யோக மார்க்கத்தாலாவது நிச்ரேயஸம் அடையப்படமாட்டாது' என்று பாஷித்திருக்கிறார். இதிலிருந்து நிச்ரேயஸத்தை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய ச்ரௌதமான மார்க்கமே நமக்கு க்ராஹ்யம்

என்றும் ஸ்மார்த்தமான மார்க்கம் எல்லாம் வேதாவிருத்தமான அம்சத்தில் மாத்ரம் ப்ரமாணமாகக் கூடுமென்றும் ஸ்ரீ சங்கராசார்யர் அபிப்ராயப்பட்டிருப்பதாக ஏற்படுகின்ற தன்றோ? பதஞ்ஜலி த்வைதியாகையால் அவரால் சொல்லப்பட்டுள்ள யோகமார்க்கம் ச்ரௌதமன்று என்பதே ஸ்ரீ சங்கராசார்யருடைய அபிப்ராயம்.

ஸதாநந்தருக்குப் பிறகு 'தர்மராஜாத்வரீந்த்ரர்' என்னும் ஒரு ஆசார்யர் 'வேதாந்த பரிபாஷை' என்று க்ரந்த மொன்றைச் செய்திருக்கிறார். அந்த க்ரந்தத்தின் கடைசியான பரிச்சேதத்தில் அவர் ப்ரக்ருத விஷயத்தைப் பூர்ணமாக விசாரித்து, ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநோத்பத்திக்கு ச்ரவணம் மாத்ரம் அபர்யாப்தமென்றும், மநநம் நிதித்யாஸநம் இவைகளும் வேண்டுமென்றும், ஆனால் மநநமும் நிதித்யாஸநமும் ச்ரவணத்திற்கு அங்கமாக இருந்துகொண்டு அதை உபகரிக்கின்றனவென்றும் நிஷ்கர்ஷித்திருக்கிறார். ஸதாநந்தரால் சேர்க்கப்பட்டுள்ள 'ஸமாதி' என்னும் மற்றொரு அங்கம் வேண்டுமா என்பதைப் பற்றியாவது, ஸுரேச்வரரால் சொல்லப் பட்டிருக்கிற ப்ரகாரம் நிதித்யாஸநம் என்பது விவேகத்தை மாத்ரம் குறிக்கின்றதா அல்லது வாசஸ்பதி மிச்ரரால் விளக்கி இருக்கும் ப்ரகாரம் அது த்யாநத்தைக் குறிக்கின்றதா என்பதைப் பற்றியாவது இவர் அவ்விடத்தில் விசாரித்திருப்பதாகத் தெரியவில்லை.

இந்தத் தர்மராஜாத்வரீந்த்ரருக்கு ஸமகாலீநர் 'மதுஸூதந ஸரஸ்வதி' என்னும் ப்ரஸித்தரான ஆசார்யர். பகவத்கீதைக்கு 'கூடார்த்ததீபிகை' என்னும் ச்லாக்யமான வ்யாக்யாநத்தை எழுதினவர் இவரே. இவர் 'அத்வைத ஸித்தி' என்று வேறு ஒரு க்ரநதத்தையும் ஸ்ரீ சங்கராசார்யருடைய 'தசச்லோகி' என்பதற்கு 'ஸித்தாந்த பிந்து' என்று ஒரு வ்யாக்யாநத்தையும் எழுதி இருக்கிறார். இவர் பெரிய க்ருஷ்ண பக்தர். இவர் 'அத்வைத ஸித்தி' என்னும் க்ரந்தத்தில் மூன்றாவது பரிச்சேதத்தில், தர்மராஜாத்வரீந்த்ரர் போல, ச்ரவணமொன்றே அங்கி என்றும் மற்றை இரண்டும் அதற்கு அங்கங்களென்றும் சொல்லியிருக்கிறார். அப்படி இவை இரண்டும் அங்கங்களாக இருக்கையிலும், இவை ப்ரதாநங்களான அங்கங்களே என்பது அவருடைய அபிப்பிராயம். அவருடைய ப்ரக்ரியை பின்வருமாறு காணப்படுகின்றது. ஓரிடத்தில் அவர் ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை அபேக்ஷிக்குமவனுக்கு என்ன யோக்யதை வேண்டும் என்பதை விவரித்துவிட்டு, பிறகு, அந்த அதிகாரி ஒரு குருவைத் தேடி ஆச்ரயிக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு அவன் உத்தர மீமாம்ஸை முழுவதையும் அப்யஸித்து அதனால் ச்ரவண மநந நிதித்யாஸநங்களைச் செய்யவேண்டுமென்றும், இவைகளில் தேர்ச்சி அடைந்த பிறகே அவனுடைய மநஸ்ஸிலிருந்து காலுஷ்யமெல்லாம் விலகின்றதென்றும், அதற்குப் பிறகே மஹாவாக்ய ச்ரவணத்தால் ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநம் சரியானபடி ஜநிக்கின்றதென்றும் விவரித்திருக்கிறார். இதற்குப் பிறகும் சில கர்த்தவ்ய அம்சங்கள் இருப்பதாக அவர் சொல்வதிலிருந்து ஏற்படுகின்றது. இந்த ஜ்ஞாநம் ஜநித்த பிறகும் அவன்

யமநியமாதிகளின் அநுஷ்டாநத்தைச் செய்யவேண்டுமென்றும் அதனால் தாரணம், த்யாநம், ஸமாதி ஆகிற இவைகள் ஸம்பவிக்கின்றனவென்றும், அப்படி ஸம்பவிக்கும் ஸமாதி நிச்சலமாக வேண்டுமானால் அந்த அதிகாரி பகவானிடத்தில் பரமமான பக்தியைச் செய்தல் வேண்டுமென்றும், அதற்குப் பிறகே அந்தஃகரணத்தின் நாசமென்றும், அதன்பிறகு அவன் சரியான ஜீவந்முக்தனாகிறானென்றும் இம்மாதிரியெல்லாம் அவர் விவரித்திருக்கிறார். இதன் ஸூக்ஷ்மம் நமக்குச் சரியாக அவகாஹமாகவில்லையாதலால் இதைப்பற்றி விசாரிக்க நாம் அநர்ஹரென்றே இத்துடன் நிவ்ருத்தராகிறோம். ஆதி ஸ்ரீ சங்கராசார்யருக்குப் பிறகு வந்த அத்வைத ஆசார்யர்களுள் இவரே ஜ்ஞாநம் முதலியவைகளில் மிக ப்ரதாநர். கீழ்ச் சொல்லப்பட்டுள்ள க்ரந்தங்களைத் தவிர்த்து வேறு பல ப்ரௌட க்ரந்தங்களையும் இவர் செய்திருக்கிறார்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் என்பவர் ப்ரஸித்த அத்வைத ஆசார்யர்களுள் ஒருவர். அவர் ஸமீபித்த காலத்திலேயே இருந்தவரானதால் அவரை ஆதுநிகரென்றே சொல்லக்கூடும். அவர் பல க்ரந்தங்களைச் செய்திருக்கிறார். 'ஸித்தாந்த லேசம்' என்பது அவைகளுள் முதன்மை பெற்றது. அதில் அவர், தமக்கு முன்னிருந்த அத்வைத ஆசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள வேதாந்த நிஷ்கர்ஷங்களெல்லாவற்றையும் ஸங்க்ரஹித்து அவைகளைச் சர்ச்சை செய்து அவை விஷயமாகத் தமது நிஷ்கர்ஷத்தையும் வெளியிட்டிருக்கிறார். அதில், ஸாதந பரிச்சேதத்தில், அவர் ப்ரஹ்மாத்வைத ஜ்ஞாநத்திற்கு முக்யமான ஸாதநம் எது என்பதை விசாரிக்குமிடத்தில், சாந்தோக்ய உபநிஷத்தில் காணப்படும் 'தத்த்வமஸி' என்னும் மஹாவாக்யத்தின் ச்ரவணமே அந்த ஜ்ஞாநத்தை நன்கு ஸாதித்துக்கொடுக்குமென்றும், ஆனால் அந்த ச்ரவணமானது, மநநம் நிதித்யாஸநம் இவை இரண்டுகளாலும் உபகரிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும் நிஷ்கர்ஷித்திருக்கிறார்.

இந்த ஆசார்யர்களுடைய அபிப்ராயங்களெல்லாவற்றையும் பார்க்கும்பொழுது, மநநம் நிதித்யாஸநங்கள் அநாவச்யகங்களே என்னும் ஸுரேச்வர மதத்தைச் சிலர் மாத்ரம் ஆதரித்திருக்கிறார்கள் என்பதும், அத்வைத ஆசார்யர்களுள் பெரும்பான்மையோர், ச்ரவணமே அத்வைத ஜ்ஞாநத்திற்குக் காரணமானாலும் அந்த ச்ரவணமானது மநந நிதித்யாஸநங்களால் உபகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்னும் வாசஸ்பதி மிச்ர மதத்தையே அவலம்பித்திருக்கிறார்கள் என்பதும் நன்றாக விளங்கும். ஆனால், இவர்களாற் சொல்லப்படும் த்யாந ரூபமாகிற நிதித்யாஸநமானது ஸாதந பக்தியைக் குறிக்கின்றதே தவிர ஸாத்ய பக்தியைக் குறிக்கவில்லை என்றே சொல்லவேண்டும். மதுஸூதந ஸரஸ்வதி முதலிய சிலர், அத்வைத ஜ்ஞாநம் பிறந்த பிறகும் தாரணா த்யாந ஸமாதிகள் அநுஷ்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்பது உண்மையே. ஆனால் அந்த த்யாநமானது ஸாத்ய பக்தியைக் குறிக்கின்றது என்று சொல்வது ஸாத்யமில்லை. ஏனென்றால் அவர்கள், அந்த த்யாநத்தைப் பற்றிப் பேசுமிடங்களிலெல்

லாம் ஜ்ஞாநம் பிறந்த பிறகும் நம்மிடம் தங்கி நிற்கும் காமம் முதலிய வற்றை நசிப்பிப்பதற்கும் அந்தக்கரணத்தின் நாசத்திற்கும் ஸாதநமாகவே பேசி இருக்கிறார்கள். ஸாத்ய பக்தி என்பது, அதுவே பரம ப்ராப்ய மென்னும் அபிஸந்தியுடன் அநந்ய ப்ரயோஜநமாகச் செய்யப்படும் பக்தியை யன்றோ குறிக்கும்? அப்படிப்பட்ட பக்தி ஒன்று உண்டு என்பது இவர்க ளுடைய க்ரந்தங்களால் ஏற்படவில்லை. நிற்க, நாமே ப்ரஹ்மம் [அஹம் ப்ரஹ்மாஸ்மி] என்னும் அத்வைத ஜ்ஞாநம் பிறந்துவிட்டால், அதற்குப் பிறகும் ஒரு சேதநன் மற்றொரு சேதநனிடம் செய்யக்கூடிய பக்திக்கு அவகாசம் எப்படி ஸம்பவிக்கும்? இதுதான் நம்முடைய சங்கை. இதற்குத் தகுந்த ஸமாதாநத்தை நாம் அதை அறிந்தவர்களிட மிருந்து எதிர்பார்க்கிறோம்.

வைராக்ய பஞ்சகம்

இது, ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள க்ரந்தங்களுள் ஒன்று; ஐந்து ச்லோகங்களை அடக்கியுள்ளது; இப்பொழுது, ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் ஒரு உரை எழுதப்பெற்று 'ஸ்ரீ தேசிக ஸூக்தி ஜயத்வஜ மாலை' என்னும் மாஸப் பத்ரிகையில் வெளியிடப்பட் டிருக்கின்றது. இதில், அநேக விசேஷார்த்தங்கள் அதிக விரிவின்றித் தெளிவாக உணர்த்தப்பட்டிருப்பதை பார்த்து நாம் மிக்க ஆநந்தம் அடைகின்றோம். இதற்கு நிதர்சநமாக ஒரு விஷயத்தை உதாஹரிக்கலாம். "[illegible]" என்பதை ஸாதாரணமாக எல்லாரும் ஒரு ஸமஸ்தபதமாகவே க்ரஹிப்பார்கள். இவரோ '[illegible]' என்று மூன்று பதங்களாகப் பிரித்து விவரித்திருக்கிறார். இது மிகவும் ச்லாகிக்கத்தகுந்ததே. இந்த ச்லோகத்தில் அமைந்திருக்கும் ஸூக்தி ரீதியைப் பார்த்தால், '[illegible]' என்று பதம் பிரிப்பதே ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளமா இருத்தல் வேண்டுமென்று தோன்றுகின்றது. '[illegible]' என்னும் பதம் அதிகமா ப்ரயோகத்தில் காணப்படாவிடினும், நிகண்டுக்காரர்களால் அது ஒத்துக்கொள்ளப்பட டிருப்பதால், இப்படிப் பதச் சேதம் செய்வது க்லிஷ்டமோவென்று சங்கிக்கவும் இட இல்லை. இன்னும் இம்மாதிரி அநேக விசேஷங்களை நாம் இந்த உரையில் காண் றோம். ஸ்வாமி தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளெல்லாவற்றுக்கும் இம்மாதி ஸ்ரீ ஆசார்யர் அருமையான உரையை எழுதி வெளியிடப்போகிறார் என்பதைக் கேட் நாம் மிக்க ஆநந்தத்தை அடைகின்றோம்.

ஸ்ரீயை நம:

ஸ்ரீ வேதாந்த தீபிகையும் பண்டித ஸமாஜங்களும்

[ஸ்ரீ. உப. K. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.]

ஸ்ரீ வேதாந்த தீபிகையெனும் இம்மாதத் தமிழ்ப் பத்ரிகை, சென்ற இருபத்திரண்டு ஆண்டுகளாக ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர், ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர், ஸ்ரீ. உப. டி. டி. ரங்காசார்யர், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், ஸ்ரீ. உப. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் முதலிய சில ஜ்ஞாதாக்களான ஸ்வாமிகளால் அவ்வப்போது போஷிக்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் நடைபெற்று வந்ததென்பதை நமது தீபிகா நேயர்கள் நன்கறிவர். அந்நாட்களில் இப்பத்ரிகை பிறிதோர் உதவியின்றிச் சந்தா தாரர்களின் உதவி மாத்ரத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு, தன்னந் தனியான ஒருவரே ஏக நாயகமாய்ப் பத்ராதிபரா யிருக்க நிலவி வந்தது. அப்போது சிற்சில ஸமயங்களில் இப்பத்ரிகை போஷிப்பாரற்று உண வின்றி வருந்தியதுமுண்டு. கால சக்ரம் மாறிக்கொண்டே வருவதால், முன்போலன்றித் தற்காலம் இப்பத்ரிகை, தன் அத்ருஷ்ட வசத்தால், நன்கு நடத்தக்கூடிய திறனும் வன்மையும் வாய்ந்துள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரக ஸபையாரிடம் வளரப்பெற்றுச் செவ்வனே நடை பெற்று வருவதை நோக்க ஸந்தோஷம் உண்டாகிறது.

இப்பத்ரிகைக்கு இப்போது ஸம்பாதகர்களாக விளங்கிவரும் ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியும் மஹா ச்ரத்தாளுக்களாயிருந்து, தமது உடல் பொருள் ஆவிகளை அர்ப்பணம் செய்து, காலவிளம்பமில்லாமலும் பிழைகளில்லாமலும் மாதந் தோறும் தக்க காலத்தில் வெளிப்படுத்திவரும் க்ரமங்களும் யாவர் மனத் துக்கும் த்ருப்தியை விளைக்குமென்பது திண்ணம். இவ்விஷயத்தில் நாம் அவர்கட்கு க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் பண்ணவேண்டியது நமக்கு ஸ்வரூப மாகும். விசேஷமாய் ஸம்ப்ரதாய பரிசய மற்றோர்க்கு இது நன்கு பயன் படும் பொருட்டே முதன் முதல் இப்பத்ரிகை ஆரம்பிக்கப்பட்டு இது காறும் நிர்விக்நமாய் நடந்து வருகின்றது. பலரும் இதனைப் படித்துப் பயனடைய வேண்டுமென்னும் நன்னோக்கம் பற்றியே இதன் வருடச் சந்தா ரூ. 3—0—0 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இதை ஸ்ரீவைஷ்ணவ

ஸம்ப்ரதாயஸ்தர்கள் பெரிதும் பாராட்டி விசேஷமாய் ஆதரித்தால், பஹு பெயர்களுக்கு ஜ்ஞாந ஜநகமான இப்பத்ரிகை இன்னும் நன்றாக நடத்தப்படலாம்.

அன்றியும் : வடமொழி தென்மொழி யெனும் இரு மொழிகளிலும் வல்லுநரான நமது புலவோர், இப்பத்ரிகையை அபிமானித்து, மேன் மேலும் விஷயதாநம் செய்வார்களானால், இதனைப் படிக்கும் பாகவதர்கள் விஷயத்தில் அது அநுகூலமான கைங்கர்யமாகவும் இருக்கும். தமிழில் மாதந்தோறும் வெளியாகும் பல பத்ரிகைகள் போலன்றி, இது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கென்று ஏற்பட்டு, அரிய பெரிய விஷயங்களை, ஸம்ப்ரதாய விரோத மில்லாமல், வெள்ளிடை விலங்கல்போல் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய பத்ரிகை இத்தென்னிந்தியாவில் இதனைத் தவிர வேறொன்றும் இல்லையென்றே சொல்லலாம்.

" [illegible] "

" [illegible] "

என்கிறபடியே ஜ்ஞாந ஸம்பாதநத்தை உத்தேசித்து, உரிய காலங்களில் விஷயங்களை எளிதாய்த் தெரிந்துகொள்வதற்கு இப்பத்ரிகை நிரம்பவும் அநுகூலமாகும்.

இப்படிப்பட்ட பத்ரிகைக்குக் குறைந்த பக்ஷம் ஆயிரம் பெயரேனும் சந்தாதாரராகச் சேர்ந்தாலன்றி இது ஸுகரமாக நடைபெற மாட்டாதென்று ஸமீபத்தில் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். இதனை நம் நேயர்கள் நன்கறிவர். இது விஷயத்தில் நம்மவரில் ஐகமத்யம் (ஒற்றுமை) வேண்டும். 'எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்' என்பது மூதுரை. ஆகவே ஒற்றுமையென்பது வாழ்க்கைக்கு வேண்டியதோர் இன்றியமையாச் சிறந்த குணம் என்பது ஏற்படுகின்றதன்றோ? ஒற்றுமை என்னும் இவ்வரிய குணம் நமது தேசத்திலேயே குறைவு ; அதிலும் ப்ராஹ்மணர்களுள் அது இல்லையென்றே சொல்லிவிடலாம். இல்லாவிட்டால்,

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ "

[அடிமுதல் முடிவரையில் தோஷரஹிதமான இந்த நமது (ஸ்ரீவைஷ்ணவ) மதத்தில் சத்ரு நிரஸந விஷயமாக நாம் கோரத்தக்கது யாதொன்றுமில்லை.

(அதாவது : குற்றங்கள் இருந்தாலன்றோ அவற்றை எடுத்துக்காட்டும் சத்ருக்கள் ஏற்படவும், அவர்களின் நிரஸநத்தை நாம் கோரவும் அவகாசம் உண்டு? குற்றம் இல்லாமை பற்றி, சத்ருக்களும் இல்லாமையால் அவர்களுக் கெதிராக யாம் கோரத்தக்கது ஒன்றுமில்லை என்பது தாத்பர்யம்.) ஆனால், சாந்த குணமே நிரம்பப்பெற்று, யாவர்க்கும் ப்ரியமாக இருப்பவர்களுக்குள்ளும் பகைமையை உண்டுபண்ணவல்ல அஸூயை என்னும் குணமானது நம்மவர்களிடமிருந்து விலகக்கடவது. (அதாவது : அஸூயை என்னும் துர்க்குணம் நம்மை விட்டுத் தானாகவே விலகவேண்டுமே யன்றி, ப்ரக்ருதி ஸம்பந்தம் உள்ள வளவும் நாம் அதனை விலக்குவதென்பது மிக துஸ்ஸாத்யமாதலால் இவ்வாறு ப்ரார்த்தித்தபடி.)]

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருள இடமிருக்குமா? யாவரும் ஒற்றுமைப்பட்டுப் பொது நன்மையை விரும்பினால், அதற்காக வேண்டிய ஸர்வ யத்நங்களும் ஸ்வரஸமாகவே செய்யப்பட்டு நடக்கு மென்பதற்கு என்ன ஸந்தேஹம்? ஸர்வ ஜநங்களுக்கும் ஸாதாரணமான ஒரு பொது விஷயம் நம்முடைய தல்லாததுபோல் அதை ஒரு பேத புத்தியுடன் பார்த்தால் மாத்ரம் அதில் நமக்கு ப்ரவ்ருத்தி உண்டாகமாட்டாதே யொழிய, 'ஸர்வ ஜநங்களுக்கும் பொதுவான விஷயமா யிருப்பதால், நமக்கும் அது உரியதுதான்' என்று நாம் அதை நம்மதாக எண்ணும் பக்ஷத்தில் நமக்கு அது ஸஹஜமாய்த்தான் இருக்கும். ஆகவே, இத்தீபிகை ஸங்கோச மின்றிப் பரவும் விஷயத்தில் ஆண்-பெண், ப்ராம்மணர்-அப்ராம்மணர் என்ற வேற்றுமை யின்றி, யாவரும் அதன் அபிவ்ருத்தி நிமித்தம் அதனைத் தம்மதாகவே கொண்டு ஒத்துழைத்து, அதனை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரும்படி செய்வது யாவர்க்கும் கடமையாகும்.

ஆகவே, ஸகல சாஸ்த்ரார்த்த விஷயங்களையும் எளிதில் நிஷ்பக்ஷபாதமாக எடுத்துக்காட்டி ஜ்ஞாந ப்ரதாநம் செய்யும் இப்பத்ரிகைக்கு, இதனைக் கண்ணுறும் யாவரும் சந்தாதாரராகச் சேர்ந்து இப்பத்ரிகையை ஆதரிக்கவேண்டு மென்று யாவரையும் ஸவிநயம் ப்ரார்த்திக்கின்றேன்.

நிற்க : இத்தீபிகை முதன் முதல் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையாராலும், பின்னர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாராலும் ஆதரிக்கப்பட்டு நடந்தேறி வந்த காலங்களில், ஷெ ஸபாதிகாரிகள் வருடந்தோறும் ஒவ்வொரு திவ்ய தேசத்தில் அவ்வவ்வக்ரஹாரிகர்களின் ப்ரார்த்தநையின்பேரில் ஸ்ரீவைஷ்ணவ ஸமாஜம் ஒன்று ஏற்படுத்தி, தக்க பண்டிதர்களைக்கொண்டு பல உபந்யாஸங்கள் செய்வித்து, அவர்களுக்கு உசித

மான ஸம்பாவனைகளையும் செய்து, தீபிகைக்குச் சந்தாதாரர்களையும் சேர்த்து வந்தார்கள். அதனால் பகவத் ஸேவை, பாகவத ஸேவை, சாஸ்த்ரார்த்த விளக்கம், ஞானவ்ருத்தி, ஸௌஹார்த்தம், இவைகள் ஸ்ரீ வைஷ்ணவர்களுள் ஏற்பட்டுவந்தன. இப்பொழுதோ இம்மாதிரியான வ்யாபாரங்கள் சிறிதும் நடைபெறாமல் அடியோடு நின்றுவிட்டன. இது யாருடைய துரத்ருஷ்டமோ தெரியவில்லை. இனியேனும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரக ஸபையார் முன்போல் ப்ரதி வருஷமும் தகுந்த ஒவ்வோரிடத்தில் பண்டித ஸமாஜங்கள் ஏற்படுத்தி, அவர்கள் த்வாரா உபந்யாஸங்கள், வாக்யார்த்தங்கள், உபயபாஷைகளிலும் பரீக்ஷைகள் முதலியன செய்வித்து, உரிய ஸம்பாவனைகளையும் செய்து நம் பண்டிதர்களைக் கௌரவப்படுத்தித் தந்மூலமாய் நம் இராமாநுஜ ஸித்தாந்தத்தை த்ருடப்படுத்துமாறு செய்ய வேண்டுகிறேன்.

ஸ்ரீ:

வீர விவேகம்

[ஸ்ரீ. உப. டி. சுந்தராசார்யர், சீர்காழி]

பொதுவாக: யுத்தத்தில் ஸாஹஸச் செயல்களைச் செய்து முடிக்கும் உத்ஸாஹமும் ஸாமர்த்தியமும் உடையவர்களையே, நாம் வீரர்கள் அல்லது வீரரஸ ப்ரதானர்களெனக் கருதுகின்றோம். ஆனால், வீர சப்தமானது, விஜிகீஷு புருஷ விசேஷத்தில் மட்டில் ரூடமல்ல வென்பது பல ஆலங்காரிகர்களுடைய அபிப்பிராயம். உதாஹரணமாக: நாகாநந்த நாடகத்தில், நாயகனா யிருக்கப்பெற்ற ஜீமூதவாஹனனை எடுத்துக்கொள்வோம். அவன், துவக்கத்திலேயே, க்ரம ப்ராப்தமான ராஜ்யாதிகாரங்களை விட்டு, தாய் தந்தையர்களுக்குச் சுச்ரூஷை செய்வதில் அபிருசியுள்ளவனாய் அடவி சென்றானெனக் கூறப்படுகிறது. '**पित्रोर्विधातुं शुश्रूषां त्यक्त्वैश्वर्यं क्रमागतं । वनं याम्यहमद्यैव यथा जीमूतवाहनः ॥**' பிந்தி, இவன் ஸர்வ ஜீவராசிகளிடத்துமுள்ள தயாதிக்யத்தால், ஒரு பாம்பை உயிர்ப்பிக்கக் கருதி, தன் உயிரைக் கருடனுக்கு அத்யந்த உத்ஸாகத்துடன் அர்ப்பணம் செய்தானென வர்ணிக்கப்படுகிறது. இவன் செயலும் வீர ரஸத்தை அவலம்பித்துள்ள தென்றும், இவனைத் தீர சாந்த நாயகனாகக் கருதாமல், தீரோதாத்த நாயகனாகவே தீர்மானிக்கவேணு மென்றும், தசரூபக மென்னும் நாடக லக்ஷண க்ரந்தத்தில் ஸித்தாந்திக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஜீமூதவாஹனன் போலுள்ள நிர்ஜ்ஜிகீஷுக்கள் விஷயத்திலுங் கூட வீர சப்தம் ப்ரவர்த்திக்கக்கூடு மென்பது இங்கு ப்ரதிபாதிதமாகிறது.

இது இப்படி நிற்க: '**कविप्रथमपद्धति**' என்றுள்ள ஸ்ரீமத்ராமாயணத்தை உற்று நோக்கி இந்த வீரசப்தம் ஸ்ரீ வால்மீகி பகவானால் எவ்வாறு விளக்கப்பெற்றிருக்கிற தென்பதைச் சற்று விமர்சிப்போம்.

முதலில், இந்த சப்தம் ஸ்ரீ ராமன், ஸ்ரீபரதன், இவர்கள் விஷயத்தில் ஸம்க்ஷேப ராமாயணத்தில் பிரயோகிக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

" स जगाम वनं वीरः प्रतिज्ञामनुपालयन् ।
पितुर्वचननिर्देशात्कैकेय्याः प्रियकारणात् ॥
मृते तु तस्मिन् भरतो वसिष्ठप्रमुखैर्द्विजैः ॥
नियुज्यमानो राज्याय नैच्छद्राज्यं महाबलः ।
स जगाम वनं वीरो रामपादप्रसादकः ॥ "

ஸ்ரீ ராகவன் தன் பிதாவினுடைய ஸத்யத்தைக் காப்பாற்றவும், தன் மாற்றாந் தாயின் மனம் மகிழ்ச்சி பெறவும் வேண்டி வனம் சென்றபொழுதும், அச்செய்தியைப் பிந்தி கேள்வியுற்ற பரத நம்பி உள்ளம் நொந்துருகி ஸ்ரீவஸிஷ்டர் முதலியோர் சொல்லியும் கேளாது, தன் ராஜ்ய ப்ராப்தியை அதிக்ஷேபம் செய்து, தமையன் அடிவணங்கி அவரை அழைத்துவர வனம் சென்றபொழுதும், அவ்விருவர்களும் வீர சப்தத்திற்கு உரியதோர் பொருளை ஊட்டி வைத்தன ரென்பது இங்கு கருத்து. இவ்விதம் வீர சப்தத்தைப் பொருள் படுத்தியிருப்பது, அச்சொல்லின் இலக்கணத்தையும் அநுஸரிப்பதாகும். **वीर** சப்தம் **अज, गतिक्षेपणयोः** என்ற தாதுவிலிருந்து புறப்பட்டது. **अजेर्व्यघञपोः** (पा 2—4—56) என்னும் ஸூத்ரப்படி **अज** தாது, **रक्** என்னும் உணாதிப்ரத்யயத்துடன் கூடும்போது, **वी** என்னும் ஆதேசத்தை அடைந்து **वीरः** என்று ஆகிறது. ஸ்ரீ ஸஹஸ்ர நாம பாஷ்யத்தில் ஸ்ரீ பட்டர் நிர்வாகமும் இந்தப்படியே தான். இதை நாம் நிதானித்தோமானால், அநுஷ்டான விசேஷத்தால் ஸ்ரீ ராகவன் **गति** வீரனென்றும், பரத நம்பியோ **गति** வீரன் **क्षेपण** வீரன் இவ்விரண்டும் ஆகப் பெறுவான் என்றும் ஏற்படுகிறது.

ஸம்க்ஷேப ராமாயணம் கடந்து விஸ்தாரத்தில் ப்ரவேசிக்கும்போது, யார் விஷயத்தில் இந்த வீரசப்தம் முக்ய வ்ருத்தியை உடைத்தான தென்

பது மிகவும் கவனிக்கப்படவேண்டிய தொரு ரஸமான விஷயம். இங்கு அவதாரங்கள் ப்ரஸ்தாவிக்கப்படும்பொழுது '**सर्वलक्षणसंयुतं**' என்றும், '**सर्वैस्समुदितो गुणैः**' என்றும், ஸ்ரீ கௌஸல்யா - கைகேயி தேவிகள் பெற்ற புதல்வர்களை முறையே விசேஷித்து விட்டு,

"**अथ लक्ष्मणशत्रुघ्नौ सुमित्रा जनयत्सुतौ ।**
वीरौ सर्वास्त्रकुशलौ* विष्णोरर्धं समन्वितौ ॥"

என்று ஸ்ரீ ஸௌமித்ரா பிராட்டியின் திரு உதரத்தினின்றும் தோன்றிய குமாரர்களைக் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால், இந்தப் பிராட்டியே க்ஷத்ர குலாங்கநாபீப்ஸிதமான **वीरसूः** என்ற சப்தப் பேற்றிற் குரியவ ளென்பது த்வனிதமாகிறது. இக்குமாரர்களில் ஒருவரான ஸ்ரீ லக்ஷ்மணர் பகவத் சேஷத்வத்தையும், மற்றொருவரான ஸ்ரீ சத்ருக்னர் பாகவத சேஷத்வத்தையும், தங்கள் அநுஷ்டானாதிசயத்தால் ப்ரகாசிப் பித்தார்களென்பது நம் பூர்வாசார்யர்கள் ஸித்தாந்தம். ஆகவே, இந்தப் படி ப்ரகார த்வயத்தையுடைய சேஷத்வமே வீரத்வ மென்பதற்கு எல்லை நிலமென்பதை ஸ்ரீமத் ராமாயண ப்ரதிபாதிதமான **राजविद्या, राजगुह्यं** என்னலாம்.

பகவத் கைங்கர்ய ரூபமாயும், பாகவத கைங்கர்ய ரூபமாயுமுள்ள இந்த சேஷத்வத்தை அவலம்பமாகப் பெற்ற வீரத்தனமானது, விஜிகீஷு பூஷணமான சத்ரு நிரஸன ஸாமர்த்யத்திற்கு ஒரு குறைவுபாட்டையும் விளைவிக்காததன்றி, அதைக் கைகூட்டி வைப்பதற்கு இன்றியமையாத தென்பதை த்யோதிப்பிக்கவே '**वीरौ सर्वास्त्रकुशलौ**' என்று கவியால் சேர்த் துச் சொல்லப்பட்டது. இந்திரஜித்தை ஸ்ரீ லக்ஷ்மணரும், லவண னென் பவனை ஸ்ரீ சத்ருக்னரும் ஸம்ஹரித்தார்க ளென்பது ஸ்ரீ ராமாயண கதை. இந்திரஜித்தைக் கொல்வதற்கு வில்லில் அம்பு தொடுத்த பொழுது,

"**संधाय धनुषि श्रेष्ठे विकर्षन्निदमब्रवीत् ।**
लक्ष्मीवाँल्लक्ष्मणो वाक्यमर्थसाधकमात्मनः ॥
धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि ।
पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम् ॥"

---

* **विष्णोरर्धं समन्वितौ** என்பதற்கு, ஸ்வயம் பகவதம்ச பூதர்களானாலும் பகவத் பாகவத சேஷத்வத்தில் **परपुरुषार्थतया** அந்வய முள்ளவர்களென்று பொருள் கூறுவது உசிதமாகையால், இவ்வர்த்த விசேஷத்தையே நம் பூர்வாசார்யார்கள் மதம் அத்யந்தம் அநுஸரித்திருப்பதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வித அர்த்த ஸாதக மந்த்ரத்தை ஜபித்து ஸித்தி பெறுவது, பகவத் கைங்கர்ய லக்ஷ்மீ ஸம்பன்னரான இளைய பெருமாளை யொத்த சேஷவர்க்கத்துக்கே ஏற்கு மாகையாலும், சேஷி ஸ்வரூபத்தில் நிற்கும் பெருமாளுக்கு அநுபபன்னமாய் இருக்கப் பெறுவதாலும், அப்பெருமாளுக்கும் செய்வதற் கரியதோ வென சங்கிக் கக் கூடிய கார்யங்களைக்கூட ஸ்ரீலக்ஷ்மணாதிகள் ஸாதிக்க ஸமர்த்தகளா யிருப்பது பற்றி, அவர்களே வீரர்களென அழைக்கப்படுவதில் ஆக்ஷேபம் என்ன இருக்கிறது ?

லவண விஜயியான சத்ருக்னரோ, வஸிஷ்டர் தனக்கிட்ட பெயரா லேயே தன்னிடத்திலுள்ள வீரத்வ விசேஷத்தை அறிவிப்பாராவர். ஆனால் உத்தரகாண்டம் வரும் வரையில் நித்ய சத்ருக்களான காம க்ரோதாதி கள் ஜயமே இவருடைய சத்ருக்ன பாவத்தை அந்வர்த்த மாக்கிவந்தது. அவ்வித சத்ருஜயமும் ஸாமான்ய மன்று.

"**अन्यमिन्द्रं करिष्यामि लोको वास्यादनिन्द्रकः ।**"

என்று பிருது கூறின தபோ வீரரான விச்வாமித்ரரும் தவறிப் போனது இங்கு தான்.

"**अनित्या रिपवो बाह्याः विप्रकृष्टाश्च ते यतः ।**
ततो ह्याभ्यन्तरान्नित्यान् षट् पूर्वमजयद्रिपून् ॥"

என்று இந்த அரிஷட்வர்க்க ஜயத்தையே காளிதாஸரும் சிறப்பித்துக் கூறுகிறார். அத்துடன் நில்லாமல், ஸ்ரீ மாந்தாதா முதலியோரையும் ம்ருத்யு லோகத்திற்கு விருந்தினராக்கிய மதுபுத்ரனான லவணனைக் கொன்றதினாலும், இவருடைய சத்ருக்னபாவம் சரிதார்த்தத்வத்தை அடைந்து இவருடைய விஜிகீஷு வீரத்வாதிசயமும் வெளியாயிற்று. இதை ஸ்ரீ காளிதாஸர் வர்ணித்திருப்பது மிகவும் அழகானது :—

"**आदिदेशाथ शत्रुघ्नं तेषां क्षेमाय राघवः ।**
करिष्यन्निव नामास्य यथार्थमरिनिग्रहात् ॥

* * *

स हत्वा लवणं वीरः तदा मेने महौजसम् ।
भ्रातुः सोदर्यमात्मानमिन्द्रजिद्वधशोभिनः ॥"

ஸ்ரீ ராமாயணத்தில் இந்தக் கதையை ப்ரஸ்தாவிக்கும்போது, '**को हन्ता-लवणं वीरः**' என்று ஸ்ரீ ராகவன் கேட்டதற்கு ஸ்ரீ சத்ருக்னர்; தமக்கு அந்தக்

கைங்கர்யத்தைத் தந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க, **ஸ்ரீ** ராகவனும் அதற்கிணங்கி ஒரு திவ்ய சரத்தையும் ஸ்ரீசத்ருக்னருக்குக் கொடுத்துச் சொல்லுகிறார் :

"नायं मया शरः पूर्वं रावणस्य वधार्थिना ।
मुक्तः शत्रुघ्न भूतानां महांस्त्रासो भवेदिति ॥"

இங்கு சரத்தின் மஹிமாதிக்ய வர்ணனத்தால் ராவண-ராவணிகளையும் விடப் பாகவத கைங்கர்ய நிஷ்டரான ஸ்ரீ சத்ருக்னரால் நிரஸநம் செய்யப் படப் போகும் சத்ருவின் பலாதிக்யம் த்வனிதமாகிறது. **ஸ்ரீ** சத்ருக்னர் '**विष्णोस्तेजोमयं**' என்று சொல்லப்பெற்ற அந்தத் திவ்யசரத்தை ஸந்தானம் செய்யும்போது தேவதைகள் நடுநடுங்கி ப்ரம்மாவைச் சரணம் புக, அவரும் அவர்களை ஆச்வாஸப்படுத்தி :

"इतो गच्छत पश्यध्वं वध्यमानं महात्मना ।
रामानुजेन वीरेण लवणं राक्षसोत्तमम् ॥"

என்றார். இதனால் **महात्मन्** சப்தமும் **वीर** சப்தமும் **ஸ்ரீ** ராமனிடத்தில் வர்த்திக்கப் பெறுவதை விட, **ஸ்ரீ** ராமனுஜானுஜரான **ஸ்ரீ** சத்ருக்னரிடத்தில் வர்த்தித்தலே ஔசித்ய மென்பதும், அந்த சத்ருக்னரால் கொல்லப் பட்ட லவணனே ராக்ஷஸர்களுக்குள் துஸ்ஸாத்ய னென்பதும், ஆதியில் **ஸ்ரீ** ராமாயணத்தை ஆக்கும்படி அனுக்ரஹித்த தேவதையான ஹிரண்ய கர்ப்பரின் மதமெனத் தோன்றுகிறது.

சுருங்கச் சொல்லின், '**अजायमानो बहुधा विजायते; तस्य धीराः परिजानन्ति योनिम्**' என்றுள்ள ச்ருதி வாக்யப்படி, பகவதவதார ரஹஸ்யத்தை உள்ள படி ஸாக்ஷாத்கரித்து எவரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி உணர்த்தும் ஞான விசேஷம் எவ்வாறு **धिया रमन्त इति धीराः** என்னும் வ்யுத்பத்தி யுடைய தீரர்களின் தன்மைக்கு மஹோன்னத நிலையோ, அதே ப்ரகாரம் **वीर** சப்தத்திற்குப் பரம்பொருளாய் நிற்பது அந்தப் பகவதவதாரங்களில் சேஷ வ்ருத்தியைச் சிக்ஷிப்பிக்க வந்த ஸ்வரூப விசேஷமே யாகும். ராவணன், தான் கெட்டதும், உலகத்தைக் கெடுத்து வந்ததும், இந்த சேஷ தர்மத்தின் ஸ்வரூபத்தையும் ஸ்வாரஸ்யத்தையும் அறியாமலும், அதை அநுஷ்டிக்காமலும், ப்ரமத்தால் தன்னிடத்தில் ஸர்வ சேஷித்வத்தை ஆரோபித்துக்கொண்டு திரிந்ததனாலே தான். த்ரிமூர்த்திகளின் ஸ்வரூபங்களிலும் காணக்கிடைக்காத இவனுக்கு வாய்ந்த தசமுக விசேஷம்,

"पानमक्षा दिवास्वप्नः परिवादः स्त्रियो मदः ।
तौर्यत्रिकं वृथाट्या च कामजो दशको गणः ॥"

என்றுள்ள மநுஸ்ம்ருதிப்படி இவன் காமாத்மாவாய்க் கிடக்கப் பெற்றதையும்,

"उद्वेगजननं हिंसा सन्तापकरणं तथा ।
रुक्कृतिः शोणितकृतिः पैशून्यकरणं तथा ॥
हितस्यापि निषेधश्च मर्मोद्घाटनमेव च ।
सुखापहृतिः संरोधो वधो दशविधा च सा ॥"

என்றிருக்கும் வஹ்நி புராண வசனப்படி இவன் பாலுள்ள ஹிம்ஸாரஸ ப்ராதான்யத்தையுமே த்யோதிப்பதாயிற்று. இந்தப்படி சேஷித்வப் பேய் பிடித்தோர்கள் **ஸ்ரீ** பகவத் கீதையிலும் '**अनेकचित्तविभ्रान्ता मोहजालसमावृताः । प्रसक्ताः कामभोगेषु**' என்று இகழப்படுகிறார்கள். இவர்கள் பக்கலில் **वीर** சப்தம், அதன் தௌர்ப்பாக்யத்தாலன்றி ஒருபோதும் வர்த்திக்காது. இவர்கள் அசக்த ஸார்வபௌமர்களென **ஸ்ரீ** ஸீதா பிராட்டியே தெரிவிக்கிறாள் :

"अशक्तेन त्वया राक्षः कृतमेतदसाधु वै ।
* * * * * * *
शूरेण धनदभ्रात्रा बलैः समुदितेन च ।
अपोह्य रामं कस्माद्धि दारचौर्यं त्वया कृतम् ॥"

இது வரையில் வீர சப்தத்துக்குப் பரமாவலம்பமாய் நிற்பது சேஷ வ்ருத்தி என்றோமே, சேஷனென்றால் யாரென்பது இங்கு இன்னும் சிறிது விஸ்தரித்துக் கூறப்பட வேண்டிய விஷயம்.

"तस्य भार्यासु तिसृषु ह्री श्री कीर्त्युपमासु च ।
विष्णो पुत्रत्वमागच्छ कृत्वात्मानं चतुर्विधम् ॥"

என்றுள்ள **ஸ்ரீ** ராமாயண ச்லோக ஸ்வாரஸ்யத்தால், ஸௌமித்ரா பிராட்டியின் இரட்டைப் பிள்ளைகளான லக்ஷ்மண சத்ருக்னர்கள், **श्री** என்பதின் பரமார்த்த தத்வத்தை அவலம்பித்து, அதன் யதார்த்த ஸ்வரூபத்தை உலகத்தார் அறிந்து உஜ்ஜீவிப்பதற்காக ப்ராதுர்ப்பவித்தார்களென்பது ஏற்படுகிறது.

இவர்களைப் பிறப்பிலேயே '**वीरौ सर्वास्त्र कुशलौ**' என்று கவி விசேஷித்துச் சொன்னதை முன்னமேயே குறிப்பிட்டோம். **श्रीः** என்னும் தத்வத்திற்கும், **वीर** பதத்திற்கு ஆதார பூதமான சேஷ தர்மத்திற்கும் என்ன ஸம்பந்த மிருக்கக்கூடு மென்பது மட்டில் தான், இங்கு விசாரணீயமாய்

நிற்கும் அம்சம். **श्रीः** என்னும் சப்தம், **श्रिञ् सेवायां** என்று ஸேவார்த்தமுள்ள **श्रिञ्** தாதுவானது **क्विप्** என்னும் ப்ரத்யயத்தைத் தழுவும் பொழுது உண்டாகிறது. (पा—3-2-177, 178). இந்த **क्विप्** என்னும் ப்ரத்யயம் **आक्वेः तच्छील तद्धर्म तत् साधुकारिषु (पा 3—2—134)** என்னும் ஸூத்ரப்படி ஒன்றையே சீலமாகவும், கைப்பற்றிய தர்மமாகவும், ஒன்றைச் செய்வதிலேயே நைபுண்யம் வாய்ந்ததுமா யுள்ளதைக் குறிப்பிடுவதாகும். ஆகவே **श्रीः** என்பதால் ப்ரதிபாதிக்கப்பட்ட தத்வம், ஸேவை என்பதையே ஸர்வப் பிரகாரத்தாலும் ஒருவர் தமக்கு ஸ்வரூபமாகக் கொண்டிருப்பதைத் தெரிவிப்பதாகும். ஸேவை யென்பது பரார்த்தமாகும்போது மேன்மையையும், கேவலம் ஸ்வார்த்தமாகும்போது அத்யந்த நீசபாவத்தையு மடைகிறது. சேஷசப்த வாச்யர்களா யிருப்பவர்களும் பரார்த்தமாயுள்ள ஸேவாதிசயம் வாய்ந்தவரே தான். பர (**पर**) சப்தமானது அந்நியரையும் ஸர்வ சேஷியான ஸ்ரீமந் நாராயணனையும் தெரிவிக்கும். ஸ்ரீமந் நாராயணன் ஸர்வ பூதாத்மகராகையால் அவருக்குத் தாஸபூதர்களாய்ப் பணிவிடை செய்பவர்கள், அவர் தநுக்களாய் ஸத்தை பெற்றிருக்கும் ஸர்வ பூதங்களுக்கும் கைங்கரியம் செய்வதைப் பின்ன (**भिन्न**) விஷயமென்று கருத மாட்டார்கள். “**परगतातिशयाधानेच्छया उपादेयत्वमेव यस्य स्वरूपं, स शेषः ; परः शेषी ।**” என்று ஸ்வாமி வேதார்த்த ஸங்க்ரகத்தில் அருளிச்செய்த சேஷ-சேஷிகளின் லக்ஷணார்த்தத்தை ச்ருதப்ரகாசிகாசார்யர் விசாரிக்கும்போது: “**अस्यार्थ उच्यते । अन्यस्य प्रयोजनमेव यस्य परमप्रयोजनं स शेषः अन्यः शेषीति वाक्यार्थः**” என்றருளிச் செய்தது இங்கு நமக்கு பரம ப்ரமாணம். இவ்விதமாக **श्री** சப்த நிர்த்தேசத்தைப் பெற்ற தத்வத்தின் பரமார்த்த ஸ்வரூபம் பரஸேவாப்ரதானமான சேஷ தர்மத்தையே பின்பற்றுவதாகும். இந்த ஸ்ரீயை உபமானமாகக் கொண்ட தாயைக்குடல் விளக்கம் செய்த ஸ்ரீ லக்ஷ்மண சத்ருக்னர்கள், பகவத் ஸேவை-பாகவத ஸேவை, இவைகளின் வாயிலாக, ஸர்வபூத ஸேவா ரஹஸ்ய ஸாரத்தை உலகிற்கு ஊட்டி, வீர சப்தத்திற்குரிய பொருளையும் நமக்குணர்த்தினார்கள். ‘**नान्यः पन्था विद्यते अयनाय**’ என்பதுபோல் ஸ்ரீமந் நாராயணனுக்கும் அவர் அடியார்களுக்கும், ‘**विस्तारः सर्वं भूतस्य विष्णोः, सर्वमिदं जगत्**’ என்னும் ந்யாயப்படி அவருக்குச் சரீர பூதமான ஸர்வ ஜீவ ராசிகளுக்கும் சேஷபூதராய் இருப்பதைத் தவிர, ஒருவர் வீரராவதற்கு வேறு வழியில்லை என்பது உபதேச ஸாரம். இவ்வித வீரரே உலகெங்கும் இன்று முள்ள ராவண தத்வத்தை உந்மூலநம் செய்து, அதனால் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் ஸ்ரீ தத்வத்தின் யதார்த்த ஸ்வரூபத்தையும் விடுவிக்க ஸமர்த்தராவார்கள்.

ஸ்ரீ:

நித்திரையின் தத்துவம்

ஆஹ்நிக க்ருத்யங்களில் ஒன்றான ஆரோக்கிய முறை

[வைத்திய ரத்ன பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண, ஆயுர்வேதாசார்யர்]

நித்திரை பகவந்மாயை.

உலகில் உயிர்வாழும் பிராணிகள் யாவும் உடல் மறந்து அவ்வப்பொழுது ஆந்தரமும் பாஹ்யமுமான ஆயாஸங்களைத் தீர்த்துக்கொண்டு சுகம் பெற்று வாழவேண்டியே, ஸர்வேச்வரனான விஷ்ணுவே நித்திரையென்னும் மாயையைப் பிராணிகளிடம் பரவச் செய்திருப்பதாக “**निद्रां तु वैष्णवीं मायामुपदिशन्ति ; या स्वभावत एव सर्वप्राणिनोऽभिस्पृशति**” என்கிற ஸுச்ருத வாக்கியம் விளம்புகிறது. அவ்வாறு பிராணிகளிடம் பகவான் பரவச் செய்திருக்கும் மாயையாகிற நித்திரை ஒவ்வொரு ஜீவனுடைய உயிர்வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாத ஆரோக்கிய ஸாதநம் என்பதைப் பற்றியும், நித்திரை யென்னும் நிலைமை எத்தகையதென்பதைப்பற்றியும், நித்ய கர்மாநுஷ்டாந முறைகளில் நித்திரை நியதமும் நிகரற்றதுமான ஓர் அம்சம் என்பதைப்பற்றியும் விளக்குவதற்கே இந்த வியாஸம் இயற்றப்படுகிறது. ஆகவே ஆசாராநுஷ்டானங்கள் அநேகமாய் ஆரோக்கிய ஸாதநோபாயங்களாய் அமைந்து வந்தாலன்றி ஆத்மார்த்தத்திற்கு அநுகூலமாயிருக்கமாட்டாவென்னும் தத்வத்தை உணர்த்தும் விஷயங்களுள் இவ்வியாஸமும் ஒன்றாம்.

ஸ்ரீமந் நாராயணன் கூட நாநாவிதமான சராசரங்களின் ஸ்ருஷ்டி ஸ்தித்யாதி கார்ய நிர்வஹண பரிச்ரமங்களின் பரிஹாரத்திற்காக யோக நித்திரையில் ஆழ்ந்து, அவ்வானந்தத்தை அநுபவிப்பதாக ஐதிஹ்ய முண்டல்லவா? ஆகவே அகில ஜகத்காரணனான அவ்வீச்வரன் முதல் அற்ப க்ருமி-கீட மீறாகவுள்ள அனைவருக்கும் நித்திரை யென்பது நிவ்ருத்திக்கக் கூடாத நியதமான ஆரோக்கிய ஸாதநமாகும். நிகில பிராணிகளுக்கும் நித்தமும் இயற்கை நியமமாய் ஏற்படுவது இந் நிலைமை. நியமம் தவறாது தினந்தோறும் நித்திரை யுறுவதற்கு நிகரான ஆரோக்கியோபாயம் பிறிதொன்றில்லை. மேனியின் நோயற்ற வாழ்வுக்கு மாத்திரமல்ல, மதியும் மனமும் மாசற்றுத் தெளிவுற்றுத் தென்புறவும் தூக்கமே கருவியெனக் கற்றறிந்தோர் அனைவரும் கூறுவர்.

“ निद्रायत्तं सुखं दुःखं पुष्टिः कार्श्यं बलाबलम् ।
वृषता क्लीबता ज्ञानमज्ञानं जीवितं न च ॥ ”

என்கிறார் ஆசார்ய வாக்படர். இன்ப-துன்பங்களும், உடல் பருப்பதும் இளைப்பதும், வன்மையும் வலிவின்மையும், வலிய, ஆண்மையும் வீர்யமின்மையும், அறிவும் அஞ்ஞானமும், ஆயுளின் விருத்தியும் வீழ்ச்சியும் ஆக அனைத்தும் நித்திரையினால் நிகழ்பவையாம். நித்திரை யின்றி உலகில் எவனும் உள்ளக்களிப்புடன் நீரோகமாய் நீடூழி வாழ்வது அரிது.

நம் முன்னோரான முனிவர்கள் பகவானுடைய மாயை ஒருவாறு நித்திரையின் நிலைமையைப் பெற்றுப் பிராணிகளிடம் பரவுவதாகக் கூறி யிருப்பதுபோலவே, முற்காலத்திய கிரேக்கர்கள் கூட அமைதியாக அயர்ந்து நித்திரை யுறுவதற்கு மானிடத்தன்மையை மீறியதோர் சக்தி யுண்டென்றும், அதை நித்திரா தேவி யெனப்படுமாறு ஓர் தைவமாகக் கருதினார்கள் என்றும் தெரியவருகிறது. நித்திரை ஆரோக்கிய விஷயத்திலும் ஆத்யாத்மிக விஷயத்திலும் மேன்மை யுற்ற தென்கிற எண்ணம் அக்காலத்திய கீழ் நாட்டு மேல் நாட்டு அறிஞர்களுக்குள் இருந்து வந்ததை இக்காலத்திலும் நாம் உவந்தேற்க வேண்டி யிருக்கிறது. ஏனெனில்: பிரபஞ்சத்திற் பிறந்தது முதலாக இறக்கும் வரையிலும் ஆரோக்கியத்தைக் காக்கவும் அநாரோக்கியத்தைப் போக்கவும் சாரீர-மாநஸிக ஸங்கடங்களின் பரிஹாரத்தின் பொருட்டு என்றைக்கும் இன்றியமையாத மாயச்சக்தியாய் அமைந்திருப்பது நித்திரையே யல்லவோ?

நித்திரை என்பது யாது?

நித்திரையின் தத்துவத்தைப்பற்றிச் சாஸ்திரம் கூறுவது யாதென்பதைச் சிறிது விவரிப்போம். நித்திரையானது மாநஸிக குணங்களில் ஒன்றான தமஸ், சாரீர சக்திகளுள் ஒன்றான சிலேஷ்மம், ஆகிய இரண்டின் மேம்பாட்டால் உண்டாகும் நிலைமை. “ तमःकफाभ्यां निद्रास्यात् ” என்று சார்ங்கதரன் சுருங்கக் கூறுகிறார். இதையே ஸுச்ருதாதிகள் இன்னும் விவரித்து மொழிந்திருக்கின்றனர். அதாவது தமோ குணத்தைத் துணையாகக் கொண்டு கபதோஷம் உணர்ச்சி நரம்புகளினூடே செல்லும்போது சிரோமார்க்கத்தை மறைக்கவே நித்திரை யென்னும் நிலைமை ஏற்படுகின்றது. இவ்விஷயத்தை “ यदा चैतन्यवहाः सिराः प्रति तमोगुणसहितः कफः प्रयाति स तदा शिरो रुणद्धि, निद्रा च जायते ” என்கிற ஸுச்ருத-பாவமிச்ராதிகளின் வாக்யம் விளக்குகிறது. நித்திரை யுண்டாவதற்கான தத்துவத்தை ஹாரீதர் வேறுவகையில் விவரித்திருக்கிறார். ஸத்துவ குணத்தின் உத்ரேகத்தினால் நமக்கு ஜாகராவஸ்தை என்கிற விழித்திருக்கும் நிலைமையும், தமோகுணாதிக்யத்தினால் நித்ரையின் நிலைமையும் நிகழ்கின்றன; தமோ குணத்தினால் பெரிதும் வியாபிக்கப்படுங்கால் உடலை மறந்து நாம் மயக்க முறுகிறோம்; அப்பொழுது சரீரம் களைப்பாறக் கீழே சாய்கிறது; அந்நிலைமை நித்திரை யெனப்படுகிறது. நாசியின் மத்தியிலும், புருவங்களுக்கு இடையிலும் அந்தராத்மா அயர்ந்து நிற்கும்; மாநஸேந்த்ரியமும் அத்துடன் ஆங்கு லயித்திருக்கும்; மனிதர் உறங்கும்போதுள்ள இயற்கை நிலை இதுதான் என்பதை ஹாரீத ஸம்ஹிதை பின்வருமாறு சாரீர ஸ்தாநத்திற் பிரதிபாதிக்கின்றது.—

“ सत्त्वाधिक्ये जागरणं निद्रा नस्तामसेऽधिके ।
तमसा प्रावृतो देही भूम्ना वै शून्यताङ्गतः ॥
देहं विश्रमते यस्मात् ततो निद्रा प्रवर्तते ।
नासार्धे च भ्रुवोर्मध्ये स्थीयते चान्तरात्मना ॥
तेन चेतो भवेल्लीनं निद्राणेषु नृषु स्वयम् । ”

ஸுச்ருதர் மற்றோர் இடத்தில் இவ்விதமே ஸத்வகுணம் விழிப்புக்கும், தமோகுணம் நித்திரைக்கும் காரணமென்று கூறியபோதிலும், அவ்வப்பொழுது ஏற்படும் தேஹநிலைமையின் மாறுபாடுகளுக்கேற்ப நித்திரை இயற்கையையே பலமான காரணமாகக் கொண்டும் உண்டாகலாம் என்று வைகல்பிக வாதமும் செய்திருக்கிறார்:—

“ निद्राहेतुस्तमः सत्त्वं बोधने हेतुरुच्यते ।
स्वभाव एव वा हेतुर्गरीयान् परिकीर्तितः ॥ ” (सु. शा.)

விஷயதத்துவம் எவ்வாறு இருப்பினும், ஓடி யுழைத்து அலுப்படைந்த உடலும், விசார-விமர்சநாதிகளால் கிலேசப்பட்டுச் சோர்வடைந்த உள்ளமும், ஒருமிக்க ஓய்வுபெற்று ஆயாஸந்தீர அயர்ந்திருப்பது அவசியமாக நேரிடும்போது நியதமாக நித்திரையென்னும்—நிகில விஷயங்களிலிருந்தும் நிவ்ருத்திரூபமான—நிலைமை இயற்கையில் ஏற்படுகிறது.

நித்திரையி லுண்டாகும் பல்வேறு நிலைமைகள்.

நித்திரையின் நிலைமையை மூன்று நான்கு வகையாக வகுத்து வியவஹரிக்கலாம். இவற்றுள் (1) தாமஸ நித்திரை யென்பது. இந்த அவஸ்தை உண்மையில் முழு நித்திரையன்று. கண்விழித்திருக்கையிலேயே சிலருக்கு இது தோன்றுகிறது. தமோகுணம் மேலெழுந்து மனத்திலும் மற்ற இந்த்ரியங்களிலும் வியாபித்துவிட, அதனால் எல்லாப் புலன்களும் உணர்ச்சியற்றவை போலிருந்து தாத்காலிகமாக அயர்ந்துறங்

கும்; அப்பொழுது நித்திரையி லிருப்பதுபோல் அம்மனிதன் எதையும் உணரமாட்டான்; ஆனால் அவன் முற்றிலும் தூங்குபவனுமன்று; கண்விழித்திருந்தும் ஜாகராவஸ்தையிலும் இருப்பவனன்று; அவ்விதம் விஷயங்களைக் கவனிக்காது மனம் ஏதோ காரணத்தால் உறங்குவதுபோன்ற நிலைமை ஏற்பட்டால் அதையும் ஒருவகை நித்திரையாகவே சாஸ்திரஜ்ஞர் கருதுகின்றனர்.

"करणानां तु वैकल्ये तमसाभिप्रवर्धिते ।
अस्वपन्नपि भूतात्मा तमसा सुप्त उच्यते ॥" (सुश्रु. शारी.)

(2) முற் கூறிய நித்திரைக்கும் உண்மை நித்திரைக்கும் இடையில் ஆஸீநப்ரசலாயிதம் என்று மற்றொரு வகை நித்திரையுண்டு.

"आसीनप्रचलायितम्—उपविश्य निद्रावशात् दोलायमानत्वम्"

என்றால் உட்கார்ந்தவாறு உறங்கி யாடுவது. இதுவே **घूर्णनम्** (கூர்ணநம்) என்றும் கூறப்படும். இதுவும் ஒருவகை தாமஸ நித்ரை யென்றும், இதனால் தேஹத்திற்கு நன்மையுமில்லை தீமையுமில்லை யென்றும் கருதப்படுகிறது. (3) இரஜோகுணம் மேலிட்ட ஸ்திதியில் பிராணி உறங்கும்போது பலவித காட்சிகளைக் காண்பதாகவும் வெவ்வேறு இன்பதுன்பங்களை அனுபவிப்பதாகவும் உணர்ச்சி ஏற்படுகிறது. இதை **இராஜஸ நித்திரை** என்றும், **ஸ்வப்நாவஸ்தை** என்றும் வழங்குவோம். ஸ்வப்நம் என்பதைச் சாமான்யமாய் நித்திரைக்குப் பர்யாய பதமாக வழங்கியபோதிலும், கனவுகளுடன்கூடிய இராஜஸப் பிரதானமான நித்திரைக்கே முக்கிய ஸமஜ்ஞையாக அது கருதப்படுகிறது. நித்திரையின் இந்த மூன்றும் நிலைமையைப்பற்றிய தத்துவ விஷயத்தில் ஸூக்ஷ்ம மதிகளின் கொள்கைகளைப் படிப்பது ஸ்வாரஸ்யமா யிருக்கும். அவரவரது பழக்க வழக்கங்களுக்கும் மநோபாவங்களுக்கும் ஏற்றவாறு நித்திரையில் நாநாவிதமான கனவுகளைக் காண நேரிடுகிறது என்று சிலர் ஆபாத விமர்சமாக அபிப்பிராயம் கூறுவர். உண்மை அப்படியா யிருந்தால், நமது பழக்க வழக்கங்க ளில்லாத, மனதிற் சிறிதும் கருதாத, உலகத்தில் உற்று நோக்காத அநேகம் காட்சிகளையும் ஸுக-துக்காநுபவ பூர்வகமான காரியங்களையும் முறையே காண்பதாகவும் செய்வதாகவும் கனவுகளில் நாம் உணரும் அற்புதங்களைப்பற்றி ஹ்ருதயங்கமமாக யாது ஸமாதாநம் கூறக்கூடும்? ஜந்மாந்தரம் உண்டென்பதை ஊர்ஜிதம் செய்ய ஸ்வப்நாவஸ்தையையே நம்பக் கூடிய நிதர்சநமாகச் சாஸ்திரஜ்ஞர் நிரூபிக்கிறார்கள். முற்பிறப்பில் அனுபவித்த சுபாசுப விஷய விசேஷங்களைப் பௌதிக தேஹத்திற் புகுந்

துள்ள விபுவான ஜீவன் இரஜோகுணம் மனத்திற் பதியும்போதெல்லாம் ஸ்வப்நாவஸ்தையில் உணர்ந்து அனுபவிக்கிறான் என்று

"पूर्वदेहानुभूतांस्तु भूतात्मा स्वपतः प्रभुः ।
रजोयुक्तेन मनसा गृह्णात्यर्थान् शुभाशुभान् ॥"

என்கிற ச்லோகத்தினால் பிரதிபாதிக்கிறார் ஸுச்ருதர். கர்ப்பவாஸம் செய்யும் வரையிலும் பூர்வஜன்மங்களின் ஸம்பந்தமான அறிவு ஆத்மாவுக்கு உண்டென்றும், கர்ப்பாசயத்தை விட்டு வெளிப்பட்டதும் பௌதிக வாயுஸ்பர்சத்தினால் மதிமயங்கி மற்ற ஜந்மங்களை ஜீவன் மறந்து விடுகிறான் என்றும் பின்வருமாறு ஸ்ரீ விஷ்ணு புராணம் (6-ம் அம்சம் 5-ம் அத்.) கூறுகிறது:—

"निरुच्छ्वासः सचैतन्यः स्मरन् जन्मशतान्यपि ।
आस्ते गर्भेऽतिदुःखेन निजकर्मनिबन्धनः ॥
प्राजापत्येन वातेन पीड्यमानास्थिबन्धनः ।
अधोमुखो वै पात्येत प्रबलैः सूतिमारुतैः ॥
मूर्छामवाप्य महतीं संस्पृष्टो बाह्यवायुना ।
विज्ञानभ्रंशमाप्नोति यत् स्वप्नेष्वाप्नुयात् पुनः ॥"

இவ்வசநங்கள் கர்ப்ப ஸம்பந்தமான தத்துவத்தை அநுபவஜ்ஞாநத்திற்குச் சற்றும் ஏற்றக் குறைவின்றி விளக்குவதுடன், ஜந்மாந்தர வாஸனை பிராணிகளுக்கு முற்றிலும் அற்றுப் போவ தெப்படி என்பதையும், அது அப்பால் ஸ்வப்நாவஸ்தைகளில் மீண்டும் தோன்றுவதுண் டென்பதையும் ஸ்பஷ்டமாகக் கூறுகின்றன. நம்மாழ்வார் முதலிய முற்காலத்திய முனிவர்களைப் போன்ற மஹான்கள் *ஜாதிஸ்மரர்களா யிருந்ததாகத் தெரிய வருகிறது. இக்காலத்திலும் நாம் அத்தகைய அபூர்வ வியக்திகளைப் பற்றிய வியக்கத்தகும் விருத்தாந்தங்களைக் கேள்வியுறாமலில்லை. ஸமீபத்தில்

---

* ஜாதிஸ்மரர்கள்—பூர்வ ஜந்ம ஜ்ஞாநம் உள்ளவர்கள். சுத்த ஸத்வ குணமுள்ள மநோதர்மத்துடன் கூடி சாஸ்திராப்யாஸம் செய்து சிறந்த ஸம்ஸ்காரங்களைப் பெற்ற தேஹிகள் முற்பிறப்பு நினைவு பெற்று விளங்குவர். அவர்கள் "ஜாதிஸ்மரர்கள்" எனப்படுவர். "यदा तु तेनैव शुद्धेन मनसा संयुज्यते तदा जातेः अतिक्रान्तायाश्च स्मरति । स्मृतस्य ज्ञानस्य अनुवृत्तिं पुरस्कृत्य पुरुषो जातिस्मर इत्युच्यते"। चरक. शारी. अ. १ பாணகவியும் "जातिस्मरो मुनिरसि जात्या" என்கிறான்.

டில்லிமாநகரில் ஜாதி ஸ்ம்ருதியுடன் விளங்கும் விசித்திரமான மநோபாவங் கொண்ட சிறு கன்னிகையைப்பற்றிய செய்தி ஸகல ஸமாசாரப் பத்திரிகைகளிலும், சென்ற கார்த்திகை மாதத்திய தீபிகையிலும், பிரசுரமாயிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். அவ்வாறு முற்பிறப்புச் செய்திகள் முற்றிலும் ஸாத்விக மநோதர்மம் பொருந்தியவருக்கு உள்ளத்தில் இப்பிறப்பிலும் ஜாகராவஸ்தையில்கூடத் தொடர்ந்து பிரதிபலிக்கலாம் என்றால், போதிய ஸாத்விக ஸம்ஸ்காரங்களைப் பெறுதவருக்கு அந்தரங்கத்தில் அவ்விஷயங்கள் விளங்கத் தோன்ற வகையில்லாவிடினும், அந்தராத்மாவானது ஸ்வப்நாவஸ்தையில் இப்பௌதிக தேஹத்தை மறந்து காரண சரீரமான ஸூக்ஷ்ம சரீரத்தில் லயிக்கும்போது பூர்வ ஜந்மாவஸ்தைகளின் ஸ்மரணம் அல்லது வாஸனை யேற்பட்டு அவற்றைப் பற்றிய ஸுக துக்கானுபவ உணர்ச்சிகள் உண்டாகலா மல்லவா? ஸ்வப்நாவஸ்தையென்னும் இந்த நித்திரையின் நிலைமையைப்பற்றி விஸ்தரித்து எழுதப் புகுந்தால், அதற்கு இச்சிறு நிருபத்தில் இடம் போதாது. (4) நித்திரையின் மற்றோர் அவஸ்தை ஸுஷுப்தி என்பது. இது ஸாத்விக நித்திரை எனப்படும். “**सर्वस्य स्थूलसूक्ष्मोपाधेः कारणोपाधौ लीनत्वं सुषुप्तित्वम्**” என்பது வேதாந்திகளின் வியுத்பத்தி. இந்த நித்திராவஸ்தையை ஸத்வப் பிரதானமான அஜ்ஞாநம் என்றும் கூறுவர். இந்நிலைமைதான் மனம் உட்பட ஸகல கரணங்களின் விச்ராந்திக்கு இன்றியமையாத ஸாதநம் என்றும், இதில் கனவு முதலிய கலவரமேதும் ஏற்படுவதில்லை யென்றும், ஆகவே பிராணிகள் முற்றிலும் அமைதிபெற்றுச் சுகித்திருக்கவும் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்துகொள்ளவும் ஸுஷுப்தி யென்னும் ஸுக நித்திரைக்கு எதுவும் இணையாகா தென்றும் அனுபவமும் சாஸ்திரமும் ஒருங்கே நமக்கு அறிவிக்கின்றன. ஸுஷுப்திதான் ஸுநித்திரை யென்று மாண்டுக்யோபநிஷத் இவ்வாறு மொழிகிறது: “**यत्र सुप्तो न कंचन कामं कामयते न कंचन स्वप्नं पश्यति तत् सुषुप्तम्**” ஆகவே ஸுஷுப்தியென்னும் நிலைமைதான் நித்திராஸுகத்தின் பராகாஷ்டையாம்.

நித்திரைக்கான நியமங்கள்.

இனி நித்திரை செய்ய அனுஸரிக்க வேண்டிய நியமம் என்னவென்பதைச் சிறிது கூறுவோம். வைத்திய சாஸ்திரத்திற்கு வைதிக ஸம்பிரதாயம் வெகுவாய் வேறுபட்டதல்ல. வைத்தியக் கிரந்தங்களிற் கூறிய திநசர்யா முறைகளையும், வைதிகக் கிரந்தங்களிற் கூறியுள்ள ஆஹ்நிக முறைகளையும் ஆய்ந்தோய்ந்து கவனித்தால், முடிவில் தேஹாத்ம சுத்தி விஷயங்களில் இரண்டுக்கும் முரண்பாடு அரிதென்றே அறிய வேண்டி வரும். நமது ஆஹ்நிக ஸம்பிரதாயப்படியும், ஆயுர்வேத முறைப்படியும்,

சயனத்திற் படுத்துறங்க வேண்டிய காலம் இரவுதான். சில ரோகிகளுக்கும், உஷ்ணாதி காலங்களுக்கும் ஏற்றவாறு திவாஸ்வாபம் அல்லது பகல் நித்திரை விசேஷவிதியாக வைத்திய சாஸ்திரங்களிற் கூறப்படுகிறதாயினும், “**दिवास्वापं न कुर्वीत**” என்பது அனைவரும் அங்கீகரித்த பொது விதியாகும். ஆஹ்நிகத்தில் தின க்ருத்தியங்களில் கடைசியான அநுஷ்டாநம் ‘யோகம்’ என்பது. சயனித்து நித்திரை செய்வதை ‘யோகம்’ என்று ஸம்பிரதாயப்படி வழங்குகிறோம். அது போலவே வைத்திய ஸம்ஹிதாக் கிரந்தம் இயற்றிய ஹாரீதர் “**मासार्धं च भवोर्मध्ये स्थीयते चान्तरात्मनि । तेन चेतो भवेल्लीनं निद्राणेषु नृषु स्वयम्**” என்று நித்திராநிலைமையை உண்மை யோகமாகவே விளங்க விளம்பி யிருக்கிறார். மனதை இவ்வாறு கவலையற்றுத் தியாநத்தி லிருக்கச் செய்துகொண்டு, உயரமான பிரதேசங்களில் ஸௌகர்யமான சயனத்தில் கை-கால் முதலிய ஸகல அங்கங்களையும் சுத்தமாகச் செய்துகொண்டு படுத்து அமைதியாகத் தூங்குவது ஆரோக்கியத்திற்கு அவசியமான முறை என்று வைத்திய சாஸ்திரம் கூறுவது போலவே, வைதிக ஆஹ்நிகக் கிரந்தங்களும் பெரும்பாலும் அவ்விதமே நித்திரைக்கான நியமங்களை விதித்திருக்கின்றன. “**इन्द्रियवर्गविश्रान्तिनिमित्ततया निद्रामपि कैङ्कर्यत्वेन अनुसन्धाय, यागं करिष्य इति सङ्कल्प्य, खट्वापर्यङ्कादीनामुपरि शास्त्रीये शयने शुद्धसर्वाङ्गः, संशुद्धशुष्कपादः भगवन्तं ध्यायन् सुखेन शयीत**” என்பது ஸ்ரீ கோபால தேசிகரது ஆஹ்நிக வாக்கியம். படுத்துறங்கும்போது பாதங்கள் கூட மிகச் சுத்தமா யிருக்கவேண்டு மென்பதையும், ஆனால் நித்திரைக்குப் போகையில் அவை ஈரமாயிருந்தால் ஆரோக்கியக் குறைவுக்கு ஆஸ்பதமாகு மென்பதைக் கருதி ஈரமறத் துடைத்துக்கொண்டு படுக்க வேண்டியது அவசியமென்பதையும், “**संशुद्धशुष्कपादः**” என்பதால் வைதிகோத்தமர் வற்புறுத்திக் கூறியிருப்பது வைத்திய சாஸ்திரஜ்ஞர்களாலும் பாராட்டக் கூடிய விஷயமாம். அகாலத்திலும் அதிக நீண்ட நேரமும் நித்திரையுறக் கூடாது; அவசியமான வேளைகளில் போதியவளவு தூங்காமலிருப்பதும் தகாது; ஆரோக்கிய ஸுகத்தைச் சீருடன் காக்கவும், ஆயுள் அபிவிருத்திக்கு அனுகூலம் செய்யவும், அகால நித்திரைக்கு வசப்படாம லிருப்பதும், கால நித்திரையிற் கருத்து செலுத்துவதும் வைதிக-வைத்தியக தர்மங்களில் ஈடுபட்டவர்களால் ஒருங்கே ஒப்புக்கொள்ளப்பட்ட நன்னெறியாம்.

“**अकालेऽतिप्रसङ्गाच्च न च निद्रा निषेविता ।**
सुखायुषी पराकुर्यात् कालरात्रिरिवापरा ॥
तस्मात् जागृयाद्रात्रौ दिवास्वप्नं च वर्जयेत् ।
ज्ञात्वा दोषकरावेतौ बुधः स्वप्नं मितं चरेत्” ॥ (अष्टाङ्ग· सूत्र·)

72

ஆனால் சில விசேஷித்த ஸந்தர்ப்பங்களில் இவ்விதிக்கு விலக்கும் உண்டு. கிரீஷ்மம் என்கிற கோடைகாலம் தவிர்த்து மற்றைப் பருவங்களில் பகல் நித்திரை பொதுவாக நிஷித்தம். பாலர்கள், வயது முதிர்ந்தவர்கள், கடும் வேலை செய்து களைத்திருப்பவர், பல் வேறு பிணிகளால் வருந்துபவர் முதலானோர், பகலில் போதுமாறு நித்திரையுறுவது நிஷித்தமானதல்ல; அவர்களுக்கு அது அதிக அவசியமுமானது. இரவிற் கண்விழிப்பதும் பெரிதும் சுகவீனத்திற்குக் காரணமாகும். இரவிற் போதுமாறு தூங்காதவர் அதிற் பாதியளவு நேரமாவது பகலிற் படுத்துறங்குவது அவசியமாம். இவ்விதிகளுக்கு விரோதமாகப் பகலில் நித்திரையுறுவதும், இரவிற் கண் விழிப்பதும் அஸாத்மியானுஷ்ட்டானம் எனப்படும். (ஆரோக்யத்துக்கும் அப்யாஸத்திற்கும் அனுகூலமாயிருப்பது ஸாத்மியம்; அவற்றிற்கு எதிரிடையான அனுஷ்டானம் அஸாத்மியம்.) விமர்ச பூர்வமாக விஷயங்களை நிர்த்தாரணம் செய்து விதித்துள்ள முற்கூறிய முறைகளைச் சற்றும் தவறாது நித்திராவிஷயத்தில் கவனம் செலுத்துபவர் நோயற்றவராய், மனம் தெளிந்தவராய், பழுதடையாப் புலன்களைப் பெற்றவராய், பலத்திலும் நிறத்திலும் நிகரற்றவராய் நூறாண்டளவும் நீடூழிவாழ்வர் என்று ஸுச்ருதர் வெகு அழகாய் அநுபவ பூர்வகமாக வர்ணிக்கிறார். எந்தெந்த முகாந்தரங்களால் மனிதர் மனங்கலங்கி நித்திரையின்றியே ஸங்கடமுறுவர் என்பதையும், எத்தகைய மனிதர் அயர்ந்து தூங்கி நித்திராஸுகம் அனுபவிப்பர் என்பதையும் பற்றி அடியில்வரும் இரண்டு நீதிஸார ச்லோகங்கள் சிறிதும் பழுதின்றி மொழிகின்றன:

“कुतो निद्रा दरिद्रस्य परप्रेष्यकरस्य च ।
परनारीप्रसक्तस्य परद्रव्यहरस्य च ॥”

(இவை நித்திரை யின்மைக்குக் காரணங்கள்.)

“सुखं स्वपित्यनृणवान् व्याधिहीनश्च यो नरः ।
सावकाशेन यो भुङ्क्ते यस्तु दारैर्न शङ्कितः ॥”

(இவை ஸுக நித்திரைக்குக் காரணங்கள்.)

கவலையற்று நிர்வ்ருதி யடைந்திருத்தலும், மனதுக்கினிய விஷயங்களில் ஈடுபடுவதும், ப்ரஹ்மசர்ய விரதமும், சிற்றின்பத்திற் பற்றற்றிருப்பதும், மனக்களிப்பால் மகிழ்ந்திருத்தலும், இவை யாவும் ஏற்ற காலத்தில் மனிதனை நித்திராஸுகம் அனுபவிக்கச் செய்வதற்கு உற்ற முகாந்தரங்களாம்.

“मनोनुकूला विषयाः निर्वृतिः कृतकृत्यता ।
ब्रह्मचर्यरतिर्ग्राम्यसुखनिस्पृहचित्तता ॥
निद्रा तस्य हि तृप्तस्य स्वं कालं नातिवर्तते ।” (अष्टाङ्ग-सं.)

நித்திரையின் இன்றியமையாமை.

மிகக் கடுமையான சாரீர வேலைகளையாவது மானஸிக வேலைகளையாவது செய்துவிட்டு, உடல் அல்லது மனம் அல்லது இரண்டும் சோர்வடைந்திருக்கையில் படுத்துறங்கி யெழுந்தால், உடலும் உள்ளமும் புத்துயிர் பெற்றது போல் உணர்கிறோமல்லவா? நித்திரை யுறவேண்டிய அவசியத்தைப்பற்றி அநேகமாய் நாம் அறிந்திருந்தபோதிலும், அதை நியமந் தவறாது அநுஸரிக்கப் பெரும்பாலோர் அறியாமையாலோ அஸௌகர்யங்களாலோ கவனம் செலுத்துவதில்லை. நாம் தூங்கவேண்டிய வேளையையும், நிலைமையையும், அவசியத்தையும் காரியத்தில் நிறைவேற்றும்போது, நாம் அவ்வியற்கைக்கு எதிரிடையாக வலியக் கண்விழித்து வேலை செய்ய முயல்வது முறையல்ல. தேஹ மனோநிலைமைகள் சோர்ந்து அயர்வுறுகையில், உடல் தானாகவே தழைந்து சாய்ந்து விட நோக்கங்கொள்வது இயல்பு. கண் காது முதலிய இந்திரியங்கள் அததற்குரிய விஷயங்களை உள்ளவாறு உணரவியலாமற்போகவே கண்ணிமைகள் தாமே முடிக்கொள்ளும். மனமும் அந்தராத்மாவுடன் லயிப்பதைத் தவிர்த்து மற்றெதிலும் செல்லாது. எதையும் உணரவியலாது அமைதிபெறும் அந்நிலைமையில் நிலத்திற் சாய்ந்து அசைவற்றுத் தூங்குவது தேஹாரோக்கியத்திற்கும், மாசற்ற மதியுடன் தனக்கும் மற்றவருக்கும் உபயோகமான வகையில் உலகில் நீடித்து உயிர்வாழ்வதற்கும் இன்றியமையாத முறையாம்.

“व्यायाम इव विश्रान्तिः सुखाय सुतरां भवेत् ।
तथा सनिद्रा चानिद्रेत्यस्याश्च द्विविधा गतिः ॥”

என்கிற இராஜவல்லப ச்லோகம் இளைப்பாறுதலின் பெருமைக்குள்ள தத்துவத்தை இனிது விளக்குகின்றது. சரீரஸுகத்திற்கு வியாயாமம் என்னும் தேகப் பயிற்சி இன்றியமையாச் சாதனமென்று பிராசீன நவீன விவேகிகள் அனைவரும் நிச்சயித்திருக்கிறார்கள்; வியாயாமம் உடல் வன்மையுற எவ்வளவு முக்கியமோ அவ்வளவு ஆயாஸந்தீர அமர்ந்து அமைதியாயிருப்பதும் முக்கியமாகும். வியாயாமத்தினாலோ வேறு வேலை செய்வதாலோ களைத்திருக்கும்போது, அக்களை தீர உட்கார்ந்து அல்லது படுத்து பரிச்ரமத்துக்குப் பரிஹாரம் செய்துகொள்வது விச்ராந்தியாகும்; இவ்விதம் உறங்காமலே ஓரிடத்தில் அமைதியாகக் களைதீருவது “அநித்ரா விச்ராந்தி” எனப்படும். படுத்துறங்கி பரிச்ரமத்திற்கு விசேஷ பரிஹாரம் செய்துகொள்வது “ஸநித்ராவிச்ராந்தி” எனப்படுகிறது. பரிச்ரமத்தின் பரிமாணத்திற்குத் தகுந்தவாறு இவ்விருவித விச்சிராந்திகளில் ஒன்று

வியாயாமத்தைப் போலவே விசேஷாரோக்கியத்தை விளைவிக்கும் ஸாதனமென்பதைச் சாஸ்திரங்களும் அநுபவமும் ஒருங்கே அறிவிக்கின்றன.

முடிவுரை.

டாக்டர் இ. பி. புட் என்பவர் "ப்ரிவென்ஷன் ஆப் டிஸீஸ்" என்கிற புஸ்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்:—"ஒருவன் ஆயாஸப்படுவதற்குத் தகுந்தவளவு தினந்தோறும் நித்திரை செய்வதும் வேறு வகையில் இளைப்பாறுவதும் ஆரோக்கிய பரிபாலனத்துக்கு அத்யாவசியமானது. நியமந் தவறாது இளைப்பாறியும் நித்திரை செய்தும் வந்தால், மனிதர் 200-வருஷங்கள் கூட ஜீவித்திருக்கலாம். நீக்ரோ ஜாதியினர் நீண்டகாலம் ஜீவித்திருப்பதற்கு அவர்கள் உடல் தெரியாமல் நாள்தோறும் நீண்ட நேரம் நன்கு நித்திரையுறுவதே முக்கிய காரணமென்று நிச்சயிக்கப்படுகிறது. எவ்வப்பொழுது தேகம் களைத்து விடுகிறதோ, எவ்வெப்பொழுது கண் கலக்கமுற்றுச் சோர்வடைகிறதோ, அவ்வப் பொழுதெல்லாம் நன்றாகப் படுத்துறங்குவது அவசியமென்பது இயற்கை விதியாம்."

நியமம் தவறாது நித்திரை செய்வதாலாகும் ஆரோக்கிய மஹிமையைப்பற்றியும், மதியும் களங்கமற்று மேன்மையுறுவதைப் பற்றியும், ஆங்கில சாஸ்திரஜ்ஞரைப்போலவே அநாதியான ஆயுர்வேத சாஸ்திரமும் போற்றுவதைப் பல நூல்களிற் படிக்கலாம். "காலம் தவறாது நித்திரை செய்வதை நிராகரிக்காமல் நியமத்துடன் இருந்து வந்தால், தாதுக்களின் வைஷம்யம் நீங்கி அவற்றிற்குச் சமநிலைமை யுண்டாகும்; சோம்பல் விலகிச் சுருசுருப்பு ஏற்படும்; தேஹம் செழித்து ஒழுங்காகப் புஷ்டியடையும்; சரீரத்தின் நிறம் சிறப்புற்று மேனியின் காந்தி மேம்பாடடையும்; உடல் வன்மையுறும்; உள்ளம் தெளிந்து உத்ஸாஹ முண்டாம்; பசி தீபனமெடுத்துப் புசிக்கும் உணவு எளிதில் ஜீர்ணமாகும்." என்கிற இவ்வுண்மைகளை அடியில்வரும் ச்லோகம் மிகச் சுருங்கக் கூறுகிறது:—

"निद्रा तु सेविता काले धातुसाम्यमतन्द्रिताम् ।
पुष्टिवर्णबलोत्साहा नग्निदीप्तिं करोति हि ॥" (राजवल्लभ.)

அமர்ந்து நித்திரை செய்வதால் ஏற்படும் குணங்களைப்பற்றிய இச் சிறு பத்யம் நான் விரித்துரைத்த விஷயங்களனைவற்றுக்கும் சிறு ஸூத்திரம்போன்றது. நித்திரையென்பது நமது ஆரோக்கியாபிவ்ருத்திக்காகப் பகவானால் ஏவப்படும் மாயாரூபமான மா மஹிமை பெற்றதோர் நிலைமை. நிகரற்ற அச்சுகானுபவத்தை நித்தமும் நியமந் தவறாது பெறவும், அதற்கேற்படும் இடையூறுகளைத் தடுக்கவும் இக்கட்டுரையே ஏற்றதோர் கருவியாமென்பது அடியேனது கருத்து.

ஸ்ரீ:

நீத்தார் பெருமை

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி. ஸ்ரீ. உப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி,
திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

தீபிகை 24-வது ஸம்புடம் 8-வது சஞ்சிகையில் 'வான் சிறப்பு' என்ற மகுடமிட்ட கட்டுரையை வரைந்தனம். ஆங்கு மழை, அறம், பொருள், இன்பங்கள் நடை பெறுவதற்குத் துணைக் காரணமாதலை எடுத்துரைத்தோம். இவ்வற முதற்பொருள்களை உலகத்தார்க்கு உள்ளவாறு அறிவிப்பவர் முனிவர். இறைவனை மனனஞ் செய்பவர் முனிவரெனப்படுவர். முனிவரை நீத்தார் என்று கூறுவர். யான் எனது என்ற அகங்கார மமகாரங்களை முற்றத் துறந்தவரே நீத்தார். எனவே 'நீத்தார் பெருமை' என்றால் முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல் என்றாகும். இதனைச் சற்று விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கு.

குறளாசிரியர் ஒருபத்துப் பாக்களால் அவ்விஷயத்தைக் கூறியுள்ளார். அது அறத்துப்பால் பாயிரம் மூன்றாவது அதிகாரமாக அமைந்துள்ளது. முதல் மூன்று பாக்களால் நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையிலும் மிக்கதென்றும், அடுத்த நான்கு பாட்டால் பெருமைக்குக் காரணங்கள் ஐம்பொறி யடக்கலும் யோகாப்பியாசமும் தத்வஞானமும் ஆம் என்றும், மேல் இரண்டு பாக்களால் முனிவர் ஆணையும், கடைசிச் செய்யுளால் அவர்கள் உயிர்களிடத்துக் கருணையுடையார் என்பதும் கூறப்படுகின்றன. இதனை நன்கு ஆராய்வோம்.

துறந்தார் மகிமையே சிறப்புடைய பொருள்கள் பலவற்றுள்ளும் மேலானதென்பது நூல்களின் நிச்சயம். நான் என்பதாகிய அகங்காரத்தை அகப்பற்று என்றும், எனது என்பதாகிய மமகாரத்தைப் புறப்பற்று என்றும் தமிழில் விவகரிக்கப்படும். இவ்விரு பற்றுக்களையும் வெறுத்து விடுதலே அறிஞர் கடன். இவ்விரோதிகள் தொலையவேண்டுமாயின் முமுக்ஷுவாக வேண்டும். இதற்கு அடி, தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நிற்றல். தத்தம் வருணாச்சிரமத்துக்கு உரிய வொழுக்கங்களில் வழுவாது நடக்கப் புண்ணியம் வளர்ந்து, பாவம் குறைந்து, அறியாமை நீங்கி, நித்யாநித்ய விவேகம் தோன்றி, பிறவிக்குக் காரணமாகிய பொருள் இன்பங்களைத் தேடும் வீண் முயற்சிகளற்று, மோக்ஷத்திற்கு நிமித்த காரணமாகிய பக்தி பிரபத்தியோக முயற்சிகள் ஜனிக்கும். முற்றத் துறந்தவரது

பெருமை அளவிட முடியாது. துறந்தார் பெருமையை இவ்வளவென்று எண்ணிக் கையினாற் சொல்லி அறியப்புகுதல், இவ்வுலகத்தில் பிறந்து இறந்தவரை இத்தனை பேர்களென்று அறியப் புகுந்தாற்போலும். திகிரி யுருட்டி உலகம் முழுதும் ஆண்ட அரசர் முதலாயினோர் பெருமை ஒரு புறமிருக்க, பிறப்பு வீடு என்னும் இரண்டின் துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அப்பிறப்பை நீக்குதற்கு இப்பிறப்பின் கண்ணே துறவறத்தைக் கொண்டவரது மகிமையே உலகத்தில் உயர்ந்தது.

நீத்தார் பெருமைக்கு ஒரு உதாரணம் காண்போம். அயோத்யாதிபதி அரசர்க்கரசனான தசரதன் தனிச் செங்கோல் உலகு ஏழினுஞ் செல நின்றவன். மதி, அருள், அறன், அமைவு, மிடல், வீரம், ஈகை முதலிய எண்ணிலா அரச குணங்களும் நீதி நிலையும் நிரம்பியவன். யாருஞ் செய்யாத யாகங்களெல்லாம் இவன் செய்து மறந்தன. அன்பில் தாயையும், நலம் பயப்பில் தவத்தையும், முன்னின்று ஒரு செல்கதி உய்க்கு நீரால் சேயையும், நோய்க்கு மருந்தையும், நுணங்கு கேள்வி ஆயப்புகுங்கால் அறிவினையும் ஒத்திருப்பான். கரை செய்ய அரியதொரு ஆனந்தக் கடலில் மூழ்கியிருந்தான். சிந்தையால் நினையவும் அரிதானதும் சுவர்க்கம் வரையில் உயர்ந்ததுமான ஒரு புனை மணி மண்டபம் பொலிய எய்தினான் அரசர் தம் பெருமகன். சிங்காதனத்தில் விளங்கி வீற்றிருந்தான். பல் வேறு தேய மன்னரும் மந்திரி கணங்களும் புடைசூழ்ந்து நிற்கின்றனர். ஆங்கு தவத்தின் மிக்கவரும் முனிவருமான விசுவாமித்திரர் வருகின்றார். முனிவன் வந்து சேர்தலும் மார்பிலணிந்த அரதனமாலை ஆகாயத்தில் சஞ்சரிக்கிற சூரியன் அஞ்சும்படி ஒளிவிட, தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவனது வருகையை நோக்கின இந்திரன் போல, விரைவாய் எழுந்திருந்து முனிவனது திருவடியைச் சக்கரவர்த்தி வணங்கினான். அத்துடன் நிற்காது இரத்தின பசும் பொற்பீடம் இட்டு, அவ்வாசனத்தில் அம் முனிவனை அன்போடிருக்கச் செய்து, அவன் உபய பாதாரவிந்தங்களை மலர் கொண்டு அருச்சித்து, 'என் வினைத் தொடர் இன்றே அற்றுப் போயிற்று' என்று தொழுது சொன்னான் மன்னர் மன்னவன். இதனை மஹாகவியாகிய கம்ப நாட்டாழ்வார்:

“ வந்துமுனி யெய்துதலு மார்பிலணி யார
மந்தரத லத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணு
மிந்திரனெ னக்கடி தெழுந்தடி பணிந்தான்.”

“ பணிந்துமணி செற்றுபு குயிற்றியவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டதி லருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண ருச்சனைசெய் தின்றே
துணிந்ததென் வினைத்தொடர் பெனத்தொழுது சொன்னான் ”

என்று அந்தாதித் தொடையில் கூறினமை காண்க.

இங்ஙனம் முனிவர் பெருமை அடைவதற்குக் காரணங்கள் பல உள. அவற்றில் முதன்மையானது ஐம்பொறியடக்கல். அறிவினால் இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாவண்ணம் காப்பவன் மோக்ஷ நிலத்தில் முளைக்கும் ஓர் வித்து என்பர். இந்திரியங்கள் ஐந்து. இந்திரியத்தைப் பொறி என்பர். பொறிகளாவன: சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிராணம். இவை முறையே காது, உடம்பு, கண், நாக்கு, மூக்கு என வழங்குகின்றன. புலன்கள் விஷயங்கள். அவையாவன: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம். இவை ஒலி, ஊறு, உருவம், சுவை, நாற்றம் ஆகும்.

“ உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. ”

உரன் என்பது அறிவு. அறிவென்னும் அங்குசத்தினால் பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தத்தம் புலன்கள்மீது செல்லாமற் காப்பவன் எல்லா நிலங்களினும் மேலான தென்று சொல்லப்படுகிற மோக்ஷ நிலத்திற்கு ஓர் வித்தாகிறான். இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாவாறு தடுப்பவன் முத்தியடைதற்கு உரியவன். இவ்வுலகத்திற் பிறந்தும் இறந்தும் வரும் மனிதனல்லன்.

“ புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி
நலமந்த மில்லதோர் நாடு புகுவீர் ”

என்ற திருவாய்மொழி இங்கு அனுஸந்தேயம். புலப்படும் விஷயங்கள் ஐந்தினும் பொருந்தி, பொறிபோலே இவனை யகப்படுத்திக்கொள்ளும் ஐந்திந்திரியங்களின் வசத்தினின்றும் அகன்று, ஆநந்தம் அளவிறந்திருப்பதாய் அத்விதீயமான தேசத்திலே போய்ப் புக வேண்டியிருப்பீர் என்பது பிரதி பதார்த்தம். இதற்கு ஈடு பின்வருமாறு :—

புலன் இத்யாதி—புலனைந்து என்கிறது விஷயங்களையாய், அவற்றிலே ப்ரவணமாகக் கடவவான பொறியைந்து உண்டு : ஶ்ரோத்ராதிகள் ; அவற்றுக்கு வஶ்யராகை தவிர்ந்து. சில பதார்த்தங்களை வரை நாற்றத்தைக் காட்டி முடிக்குமாப் போலே, ஶப்தாதிகளிலே மூட்டி நசிப்பிக்கையாலே, இந்திரியங்களைப் ‘ பொறி ’ என்கிறது. இத்தால் பரிச்சிந்ந வஸ்துக்ராஹகமான இந்த்ரிய வஶ்யராகை தவிர்ந்து ; (நலம் இத்யாதி) நன்மைக்கு முடி

வின்றிக்கே யிருக்கிற நாட்டிலே புகவேண்டி யிருப்பீர்! 'ஸ்வவிநாஶங் காண்மோக்ஷம்' என்கை யன்றிக்கே, ஆப்த தமரான இவர் நன்மைக்கு முடிவில்லாத தொரு தேச விஶேஷ முண்டாக அருளிச்செய்து வைத்தாரிறே. (புகுவீர்)—இப்பேற்றுக்கு இசைவே அதிகாரம் என்கிறார்."

"கைம்மாதுன்பம் கடிந்தபிரானே" என்றவிடத்து, "ஆனையும் தன்னளவிலேயிறே நோவுபடுவது. துதிக்கை முழுத்தின ஆபத்திறே; அப்படி உமக்கு ஆபத்து உண்டோ? என்ன; அங்கு முதலையொன்று, எனக்கு முதலை ஐந்து; அங்கு ஆயிரம் தேவ ஸம்வத்ஸரம், இங்கு அநாதிகாலம்; அங்கு ஒரு சிறு குழி; இங்குப் பிறவி யென்னும் பெருங்கடல்; அதுக்கு ஶரீரநாசம், எனக்கு ஆத்ம நாசம்; ஆனையின் காலையாயிற்று முதலை பற்றிற்று, இங்கு என்னுடைய நெஞ்சையாயிற்று அருவித் தின்றிடுகிறது' என்பனவும் நோக்குக.

ஐந்தவித்தான் ஆற்றல் மிக வலியது. அதனை ஒரு திருஷ்டாந்தத்தாற் கூறுகிறார் குறளாசிரியர்.

"ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி."

இதற்குப் பரிமேலழகர்:

"புலன்களிற் செல்கின்ற அவை யைந்தனையும் அடக்கினனது வலிக்கு அகன்ற வானத்துள்ளா ரிறைவனாகிய இந்திரனே அமையுஞ் சான்று—

ஐந்து மென்னும் முற்றும்மையும் ஆற்றற்கென்னு நான்கனுருபுஞ் செய்யுள் விகாரத்தாற் றொக்கன. தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவன தாற்ற லுணர்த்தின னாகலின் 'இந்திரனே சாலுங் கரி' என்றார்" என உரை வகுத்துள்ளார்.

அவ்வியம் அவித்த சிந்தை முனிவன் கௌதமரிஷி. அவர் தரும பத்தினி அகலிகை. இவள்மேல் காதல் கொண்டான் குலிசத்து அண்ணலான தேவேந்திரன். அகலிகையின் நயன வேலும், மன்மத சரமும் பாய்தலால் வருத்தம் நீங்கிப் பிழைக்கும் வழிதேடி உழல்கின்ற இந்திரன் ஒரு தினம் தானடைந்த காம மயக்கத்தால் மதிகெட்டு மாமுனிக்குப் பிரியும் சமயம் உண்டாக்கிப் பொய் இல்லா உள்ளத்தோனான மஹரிஷியின் வடிவையே கொண்டு அகலிகையினிடம் சென்றான். அவளுடன் காமமாகிய புதிய மணமான இனிமை மிகுந்த தேனைச் சமமாக அனுபவித்தான். அகலிகை 'இவன் தன் கணவனல்லன்' என்று அறிந்தாள். அறிந்த பின்னரும் 'அது தக்கதன்று' என்ன உணர்ந்து அச்செய்கையை ஒழிக்காமல் தாமதித்திருந்தாள். முடுகி வந்தான் முனிவனும். நிரந்தரம் உலகில்

நிற்கும் பெரும்பழி பூண்டாள் நின்றாள். புரந்தரன் நடுங்கி ஆங்கோர் பூசையாய்ப் போகலுற்றான். அப்போது

"தீவிழி சிந்த நோக்கிச் செய்ததை யுணர்ந்து செய்ய
தூயவ னவனை நின்கைச் சுடுசா மனைய சொல்லால்
ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி யுனக்குண் டாகென்
றேயின னவையெ லாம்வந் தியைந்தன விமைப்பின் முன்னம்."

அந்த இந்திரனைக் கண்ட அமரர்கள் பிரமனை முன்னிட்டுக்கொண்டு வந்து கோதமரிஷியை வேண்ட, அவர் அவற்றை நீக்கிச் சிறந்த ஆயிரங் கண்களாகச் செய்யக்கண்ட தேவர்கள் தம்தமது உலகம் புக்கார். அதுமுதல் இந்திரனுக்கு ஸஹஸ்ராக்ஷன் என்ற பெயர் வந்தது. கௌதமர் சாபத்தை இந்திரன் ஏற்கவேண்டி நேரிட்ட காரணம், முனிவன் ஐந்தாசைகளையும் ஒழித்ததும் இந்திரன் ஒழியாது நின்றதுமேதான். மேலும்:

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்"

என்றதால் நீத்தார் பெருமைக்கு மற்றொரு ஹேது சொல்லப்படுகிறது. அதுதான் செயற்கரிய செய்கை. மனம் வேண்டியவாறே அதனைப் பொறி வழிகளாற் புலன்களிற் செலுத்தலும், விரும்புதலும், கோபித்தலும் முதலியன செயற்கெளிய செயல்கள். செயற்கரியவாவன: இயமம் நியமம் முதலான எண்வகை யோக வுறுப்புக்கள். இந்த யோகத்திற்குரிய எண்வகை அங்கங்களாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பன. கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் பொருள் விழையாமை, இந்திரிய நிக்ரஹம் என்ற ஐந்தும் இயமம். தவம், சௌசம், தத்துவநூலாராய்ச்சி, பெற்றது கொண்டு மகிழ்தல், தெய்வ வழிபாடு என்னும் ஐந்தும் நியமம். பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சுவத்திகம் என்ற ஐந்தும் ஆசனம். ரேசக பூரக கும்பகம் செய்தல் பிராணாயாமம். விஷயங்களில் செல்லாவண்ணம் சகல இந்திரியங்களையும் உள்நோக்கி யிருத்தலே பிரத்தியாகாரம். தைலதாரை போன்று இடைவிடாது அந்தக்கரணம் ஒருவகைப்பட் டிருத்தல் தாரணை. கடவுளிடத்துச் செல்லும் அந்தக்கரணத்தின் பிரவாகம் தியானம். அந்தக்கரணம் ஒரு முகமாய்ப் பரிணமித்தல் சமாதி.

தவிர: நீத்தார் பெருமைக்கு மற்றொரு ஹேது தத்துவ வுணர்வு. இதனை,

" சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரி வான்கட்டே யுலகு "

என்ற குறளால் அறியலாகும். இதன் உரை விரிக்கிற் பெருகும். உலகமானது தத்வக் கூட்டங்களை ஆராய்ந்தறிபவனது அறிவினிடத்தது என்பது இதன் கருத்து.

பயன் நிறைந்த சொல்லையுடைய முனிவரது மகிமையை நில வுலகத்தில் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே பிரத்தியக்ஷமாகக் காட்டும். மறைமொழி—மந்திரம். புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடர்.

" நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப "

என்பது தொல்காப்பியம். ஆவதற்கும் அழிவதற்கும் அவர் ஏவ நிற்கும் விதி. கௌசிக ராஜனுக்கு வசிட்டராலும், இரிசிக புத்திரனுக்கு விசுவாமித்திரராலும், முறையும் கேடும் பெருக்கமும் உண்டானது அம்முனிவரின் சாபானுக்ரஹங்களால் தான். இந்திரன் சகல சம்பத்தும் இழந்தமைக்குக் காரணம் கசட்டுறு முனியின் சாபமே. வசிட்டனும் விசுவாமித்திரனும் திரிசங்குவை முறையே நீசனாகவும் விண்ணுலகில் ,ஒருவனாகவும் செய்தமையும் காண்க.

துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடியினிடத்து ஏறி நிற்பவர் முனிவர். அவரது வெகுளி தானுள்ளவளவு க்ஷணகாலமேயாயினும் கோபிக்கப் பட்டவரால் தடுத்தல் அரிது. எனவே அன்னார் ஆணை கடத்தற் கரியது. இதனாலும் அவர் பெருமை எய்துகின்றனர்.

இங்ஙனம் ஆணையுடையராயினும் அந்தணர் என்று சொல்லப்படுவோர் உயிர்களிடத்துக் கருணை யுடையவரே.

" அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான் "

முனிவரா லுணர்த்தப்பட்ட ஸ்மிருதி இதிஹாஸ புராண ஆகமங்களிற் கண்டபடி நாம் அநுஷ்டித்து வந்தால் நலம் பெறலாம். அவர்களிடம் நாம் நன்றி பாராட்டுதல் என்பது அவர்களால் கூறப்படும் விதி விலக்குகளின்படி தீவினை விலக்கி நல்வினையைச் செய்வதுதான். மனுதர்ம சாஸ்திரம் ஆறுவது அத்யாயத்தில், பிரமசாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்

தன், சந்யாசி என்னும் நால்வருக்கும் சந்தோஷம் தமக்கொருவன் அபகாரஞ் செய்தாலும் தாம் பிரதியபகாரஞ் செய்யாமை, மநோநிக்கிரகம், அநியாயமாய்ப் பொருள் தேடாமை, நல்லொழுக்கம், இந்திரிய நிக்கிரகம், சாஸ்திர ஞானம், பிரஹ்ம ஜ்ஞானம், உண்மை, கோபமில்லாமை என்னும் இப்பத்தும் பொதுவான தருமங்ளென்று கூறிப் பின்பு, இப்பத்துவகைபான தருமங்களையும் எவர்களறிந்து அந்தப்படி நடக்கிறார்களோ அவர்கள் மேலான மோக்ஷத்தை யடைகிறார்களென்று கூறியதும், இங்கு அறியத்தக்கதாம்.

" பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை ".

" நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும் ".

ஸ்ரீ:

ஸ்ரீமத் ராமாயணத்தில் 'இக்ஷ்வாகு குலதநம்' என்பதன் அர்த்தவிசாரம்

[ஸ்ரீ. உ.ப. சேட்டலூர் துரைசாமி ஐயங்கார், சித்தூர்]

" இக்ஷ்வாகு குலதநம் ராஜா லங்காம் ப்ராப்ய விபீஷண: । "

என்பது ஸ்ரீமத் வால்மீகி ராமாயண ச்லோகம். இங்கு 'குலதநம்' என்பது ஸ்ரீரங்கநாதன் என்று நம் பூர்வாசார்யர்களால் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 'குலதநம்' என்பது லங்கா ராஜ்யத்தைக் குறிக்கும் என்பது சிலருடைய அபிப்ராயம். அது அவ்வளவு யுக்தமாக மாட்டாது. ஏனெனில்: ஏற்கெனவே இரண்டு தடவை ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனால் லங்காராஜ்ய பட்டாபிஷேகம் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. அது எப்பொழுதென்றால்: யுத்தத்திற்கு முன் ஒருதரமும், யுத்தத்திற்குப் பின் ஒருதரமு மாகும். ஆகையால் மீண்டும் 'இக்ஷ்வாகு குலதநம்' என்று சொல்ல ப்ரமேயமில்லை. மேலும் ஸுக்ரீவன் முதலான எல்லோருக்கும் 'யதார்ஹம் வ பூஜிதா:' என்கிறபடி, தக்க பஹுமானங்கள் ஸ்ரீராமபிரானால் கொடுக்கப்பட்டதாகச் சொல்லியிருப்பதாலும், ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குத் தனியாக வேறொன்றும் சொல்லப்படா

மையாலும், 'ஆர்ய குலதநம்' என்பது, 'இக்ஷ்வாகு குலதநம்' தான் என்றும், அந்தக் குலதநமானது 'ஸ்ரீரங்கநாதன்' தான் என்றும் நம் பூர்வாசார்யர்களால் ஸித்தாந்தம் செய்யப்பட்டது. இதுவே ஸமீசீநமானது.

இந்த இடத்தில் சில அம்சங்கள் விசாரிக்கப்பட வேண்டியவை. அவையாவன:—

1. இக்ஷ்வாகு நாள் முதல், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய பட்டாபிஷேகம் வரையில், அந்த வம்சத்தில் ஆராதிக்கப்பட்டு வந்த ஸ்ரீரங்கநாதனை ஸ்ரீராமபிரான் அந்த ஸமயம் அந்யாக்ராந்தம் செய்வதற்குக் காரணமென்ன?

2. ஸ்ரீராமபிரான் அந்யாக்ராந்தம் செய்ய உத்தேசித்தாலும், அவர் பிறகு பதினாயிரம் வர்ஷம் அயோத்யா ராஜ்ய பரிபாலநம் பண்ணிக்கொண்டு இந்த லீலா விபூதியில் எழுந்தருளியிருக்கவேணுமாயிருக்க, பட்டாபிஷேக ஸமயத்தில் பெரிய பெருமாளை அந்யாக்ராந்தம் செய்வதற்குக் காரணமென்ன?

3. அப்படி அந்யாக்ராந்தம் செய்யவேணுமென்றால்,

"ந ஸர்வே ப்ராதரஸ்தாத பவந்தி பரதோபமா: ।
மத்விதா வா பிது: புத்ரா: ஸுஹ்ருதோ வா பவத்விதா: ॥"

என்று பகவானான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனால் அநுக்ரஹிக்கப்பட்டு அவனுக்குப் பரம மித்ரனான ஸுக்ரீவன்தானே குலதநத்துக்குத் தாநார்ஹன்?

4. ப்ரதமத்திலே ஸமுத்ரலங்கநம் செய்து அங்குளீயத்தைப் பிராட்டியாரிடம் சேர்த்து, பிராட்டியினால் கொடுக்கப்பட்ட சூடாமணியை ஸ்ரீராமபிரானிடம் ஸமர்ப்பித்து, அநேக அதிமாநுஷ கைங்கர்யங்களைச் செய்த சிறிய திருவடியன்றோ குலதநத்துக்குத் தாநார்ஹன்?

வஸ்து ஸ்திதி இவ்வாறிருக்க, ராக்ஷஸ ராஜனான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸர்வோத்க்ருஷ்டமான தாநம் செய்த காரணமென்ன? இந்த விசாரம் பண்டிதர்கள் யாவராலும் விமர்சநம் செய்யப்படவேண்டுமென்பது அடியேனுடைய ப்ரார்த்தனை. இவ்விஷயத்தில் அடியேனுக்கு உதித்த சில ஸமாதாநங்களையும் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். அவையாவன:—

1. ஸ்ரீராமபிரான் தனக்குப் பிறகு இக்ஷ்வாகு குலம் க்ஷீணித்துவிடுமென்று அறிந்து, கல்பாந்தம் வரையிலும் ஸ்ரீ ரங்கநாதனுடைய திருவாராதநம் அவிச்சிந்நமாய்ச் செய்யப்பட்டு, அதனால் முமுக்ஷுக்கள் உஜ்ஜீவிக்கவேணுமென்பது ஸ்ரீராமனுடைய திருவுள்ளம்; ஸ்ரீ ரங்கநாதனுக்கும் அதே திருவுள்ளம்தான். ஆகையால்தான் ஸ்ரீராமன் தனது பட்டாபிஷேக மஹோத்ஸவ காலத்திலேயே பெரிய பெருமாளுக்குத் தாநம் செய்த காரணம்.

2. ஸ்ரீராமன் இந்நிலவுலகில் எழுந்தருளியிருக்கப்போகிற பதினாயிர வருஷ காலத்தில், தன்னால் தாநம் செய்யப்பட்ட ஸ்ரீ ரங்கநாதனுக்கு, எப்படி அவிச்சிந்நமாய் ஆராதநம் நடக்கிறதென்று தன்னுடைய விபவ தசையிலேயே தான் கடாக்ஷிக்கவேணுமென்று திருவுள்ளங்கொண்டு, ஸ்ரீராமன் தனது பட்டாபிஷேக ஸமயத்தில் தாநம் செய்திருக்கக்கூடும்.

3. ஸுக்ரீவன் மோக்ஷபர்யந்தம் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதியில் ப்ரபத்யநுஷ்டாநம் செய்து ப்ரபந்நனானான். ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் பூலோகத்தில் எழுந்தருளியிருக்கும் பர்யந்தம் தானும் பூலோகத்தில் இருந்து ஸ்ரீராமகைங்கர்யம் செய்யவேணுமென்றும், ஸ்ரீராமன் தன்னுடைய அவதாரத்தை உபஸம்ஹாரம் செய்து தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும்போது தனக்கும் ஸ்ரீ வைகுண்ட ப்ராப்தி வேணுமென்றும் ப்ரார்த்தித்த மஹாநுபாவன் வாநரமுதலிகளுள் ஸுக்ரீவன் ஒருவனே. இவ்விஷயத்தைப் பின்வரும் ச்லோகங்களால் அறியலாம்.

"ஸ த்ருஷ்ட்வைநம் ததா ராமம் ஸுக்ரீவோ வாக்யகோவித: ।
ப்ரணம்ய விதிவத்ராமம் விஜ்ஞாபயிதுமுத்யத: ॥"

"அபிஷிச்யாங்கதம் வீரமாகதோ(அ)ஸ்மி நரேச்வர ।
தவாநுகமநே ராஜந் வித்தி மாம் க்ருதநிச்சயம் ॥"

"தஸ்ய தத்வசநம் ச்ருத்வா ராமோ ரமயதாம் வர: ।
வாநரேந்த்ரமுவாசேதம் ஸௌஹ்ருதம் தஸ்யாநுசிந்தயந் ॥"

"ஸகே ச்ருணுஷ்வ ஸுக்ரீவ ந த்வயாஹம் விநாக்ருத: ।
கச்சேயம் தேவலோகம் வா பரமம் வா பதம் மஹத் ॥"

[உத்தர ஸ்ரீமத் ராமாயணம், 108-வது ஸர்க். ச்லோ. 23—26]

இங்கு 'அபிஷிச்யாங்கதம் வீரம்' என்று ஸுக்ரீவன் விண்ணப்பம் செய்ய, 'ஏன் அப்படிச் செய்தாய்?' என்று ஸ்ரீராமன் அவனைக் கேட்கவில்லை. ஆகையால் ஸுக்ரீவன் செய்த இந்த ப்ரார்த்தனை ஸ்ரீராமனால்

அங்கீகரிக்கப்பட்டதென்பது ஸுஸ்பஷ்டம். ஆகையால்தான் ஸுக்ரீவனிடம் குலதநத்தை ஸ்ரீராமன் கொடுக்காம லிருந்துவிட்டார்.

4. சிறிய திருவடி பூலோகத்தில் சிரஞ்சீவியாயிருந்து ஏகாங்கியாய்த் தபோ நிஷ்டையில் ஸ்ரீராமஸேவை செய்ய அபீஷ்டம் கொண்டவர்; ஆகையால்தான் சிறிய திருவடியினிடம் ரங்கநாதனைக் கொடுக்கவில்லை. சிறிய திருவடிக்கு ஸ்ரீராமபிரான் நியமநம்:

"ஜீவிதே க்ருத பு³த்³தி⁴ஸ்த்வம் மா ப்ரதிஜ்ஞாம் வ்ருதா² க்ருதா²: |
மத்கதா²: ப்ரசரிஷ்யந்தி யாவல்லோகே ஹரீஶ்வர |
தாவத்³ரமஸ்வ ஸுப்ரீதோ மச்சா²ஸநமநுபாலயந் ||"

என்பது.

5. ஸ்ரீ விபீஷணாழ்வான் ஏற்கெனவே ப்ரஹ்மாவிடம் அம்ருதத்வ வரத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீராமனிடம் லங்காராஜ்யத்தையும் ஸம்பாதித்துக்கொண்ட பரம பக்தன்; அவரிடம் ஸ்ரீரங்கநாதனை எழுந்தருளப் பண்ணினால் பெருமாளுடைய திருவாராதநம் அவிச்சிந்நமாய் நடக்கும் என்று திருவுள்ளம் பற்றியே, ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குக் குலதநத்தைத் தாநம் செய்திருக்கலாம். பகவானான ஸ்ரீ ராமன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும்போது ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு.

"ஆராத⁴ய ஜக³ந்நாத²மிக்ஷ்வாகுகுலதை³வதம் |
ஆராத⁴நீயமநிஶம் தே³வைரபி ஸவாஸவை: ||"

என்று நியமித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்குச் சொல்லிய இக்ஷ்வாகு குல தைவமாகிய ஜகந்நாதனே ஸ்ரீரங்கநாதன் என்பது விஸ்பஷ்டம். இவ்விடத்தில் ஸ்ரீ விபீஷணாழ்வானுக்குச் செய்யப்பட்ட நியமநம் என்னவென்றால்: "ஸாக்ஷாத் ஜகந்நாதனை அர்ச்சா ரூபத்தில் ஆராதித்து இக்ஷ்வாகுகுலம் எப்போதும் க்ஷேமத்தை அடைந்திருந்தது. இந்த்ராதி தேவர்கள் எல்லாரும் ஸ்ரீஜகந்நாதனைப் பரத்வத்தில் ஆராதித்து க்ஷேமத்தை அடைந்துவருகிறார்கள். விபீஷணனான நீயும் ஜகந்நாதனுடைய விபவமான என்னிடம் பக்தி பண்ணி க்ஷேமமாக இருந்துவருகிறாய். உன்னுடைய முன்னோர்களான ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷர்களும், உன் ப்ராதாக்களான ராவண கும்பகர்ணர்களும் உன்னுடைய கூடஸ்தர்களான் மற்றும் சில ராக்ஷஸர்களும் ஸ்ரீ ஜகந்நாதனிடம் த்வேஷம்கொண்டு நாசமடைந்தார்கள். நீயும் அவர்களுடைய மார்க்கத்தை அவலம்பிக்காமல், எப்போதும் ஸர்வ ரக்ஷகனான ஸ்ரீ ஜகந்நாதனையே ஆராதித்துக்கொண்டு ஸர்வைஸ்வர்யத்தையும் பெற்று வாழ்வாய்" என்பதேயாகும்.

[இந்த விஷயத்தில் சிலருக்கு, "அந்தக் காலத்தில் பகவானுக்கு அர்ச்சா ரூபம் உண்டா? விக்ரஹாராதநம் உண்டா?" என்ற சில ஸந்தேஹங்கள் உண்டாகக்கூடும். பர வ்யூஹ விபவ ஹார்த்த அர்ச்சா என்னும் ஐந்து ரூபங்களும் அநாதிஸித்தம் என்பதே அடியேனுடைய அபிப்ராயம். ஸ்ரீமத் ராமாயணத்தில் இதற்கு ஆதாரமாகச் சில ப்ரமாணங்கள் உண்டு. அவை வருமாறு:—

"தே³வாயதந சைத்யேஷு ஸாந்நப⁴க்ஷா: ஸத³க்ஷிணா: |"

"தத்ர தாம் ஶ்ரவணேநைவ தாம் க்ஷபாமவஸந்ந்ருப: |
வாஸ்யதாம் தே³வதாகா³ரே ஶுபே⁴ ஆயதநே ஶ்ரிய: ||
ப்ராணாயாமேந ஸம்ப்ராப்தம் த்⁴யாயந் நாராயணம் ஜநார்த³நம் ||"
"இக்ஷ்வாகவஸ்து ராஜாந: ஸர்வேயோ ஹ்யாஹிதா |
தே³வாகா³ரே ந்ருபாகா³ரே த்³விஜவேஶ்மஸு சைவ ஹி ||"

இப்ரமாணங்களால் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுக்கு முன்பேயே தேவாலயங்கள் இருந்தனவாக ஏற்படுகிறது.]

இன்னும் ஒரு விசாரத்துக்கு அவகாசமுண்டு. அதாவது:—

ஸ்ரீராமன் விபீஷணாழ்வானுக்கு ஸ்ரீரங்கநாதனை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்த காலத்தில் அந்த ரங்கநாதன் இப்போது பக்தர்களுக்கு ஸேவை ஸாதிக்கும் த்ருவ பேரமா? (சயனித்திருக்கும் நிலையா) உத்ஸவ பேரமாகிய நின்ற திருக்கோலத்திலிருக்கும் ஸ்ரீரங்கநாதனா? அல்லது நமக்கு அத்ருச்யமாக எழுந்தருளியிருந்து இந்த இரண்டு மூர்த்திகளாய் ஸேவை ஸாதிக்கும் ஒரு மூர்த்தியா? அல்லது, "குட திசை முடியை வைத்துக் குண திசை பாதம் நீட்டி, வட திசை பின்பு காட்டித் தென்றிசை யிலங்கை நோக்கி" என்னும் தொண்டரடிப் பொடிகளின் அருளிச் செயலின்படி த்ருவ பேரத்திலேயே ஒரு ஸாளக்ராமமா? அல்லது மாகத மாணிக்ய வைடூர்யாதி திவ்யமங்கள விக்ரஹமாக எழுந்தருளியிருக்கும் ஒரு மூர்த்தி விசேஷமா யிருக்கலாமா? என்பது. ஸ்ரீ ராம பக்த சிரோமணியான துளஸீதாஸர் தம்முடைய ராமாயணத்தில் ஸாளக்ராம ரூபமான ஸ்ரீ ரங்கநாத மூர்த்தியைத் தங்களுடைய குலதநமாக ஸ்ரீ ராமன் விபீஷணாழ்வானுக்குக் கொடுத்தார் என்று கூறுகிறார். அந்த மாதிரியும் இருக்கலாம். அவருடைய அபிப்ராயத்துக்கும் நமது பூர்வாசார்யர்களுடைய ஸித்தாந்தத்துக்கும் யாதொரு விரோதமும் இல்லை. ஆகையால், "இக்ஷ்வாகுகுலதநம் ராஜா" என்பதற்கு, 'ஸ்ரீ ரங்க

நாதன்' என்பதுதான் அர்த்தம். இப்படியே தான் ஸ்ரீ பட்டருடைய அநுஸந்தாநமும் இருக்கிறது. அடியேனுடைய இந்த அபிப்ராயத்தை ஸ்ரீமத் ராமாயண கதா ப்ரவசநம் செய்யும் சில பண்டிதர்களிடம் விண்ணப்பம் செய்து, அது அவர்களால் ஆமோதிக்கப்பட்டுள்ளபடியால், தாஸனுடைய அபிப்ராயம் அஸம்ப்ரதாய மன்று என்றும் அநுபபந்நம் அன்று என்றும் நம்பி இவ்யாஸத்தை வெளியிட்டேன். பெரியோர்கள் தமது திருவுள்ளத்தை வெளியிடுக.

ஸ்ரீ

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர், M.A., B.L., அட்வொகேட், திருச்சி]

மத்யே விரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார:
தத்ஸாம்யதஸ் தவ ந தேவதயா குதஸ்த்வம் ।
இச்சாவசேந பவதோ ஹி கரீச மத்ஸ்ய
தாத்ருக்வத: கிமுத வாஸ்தவத: ப்ரபந்ந: ॥

[பதவுரை] கரீச - ஆனைமலை அதிபதியே!, விரிஞ்சகிரிசயோ: - ப்ரஹ்மா சிவன் இவர்களுடைய, மத்யே - நடுவில், விஹிதாவதார: - அவதாரத்தைச் செய்த நீர், தத்ஸமதயா - அவரோடு ஸமாநமாக, வ்யா-கணிதோ - எண்ணப்படுகிறீர். தத்விதம் - இப்படி நீர் நினைக்கப்படுவதென்பது, ந சித்ரம் - ஓர் ஆச்சர்யமல்ல; யத: - ஏனென்றால், இச்சாவசேந - உம்முடைய இச்சாவசத்தால், மத்ஸ்யாதி ஸரீரிணம் ஸ்வாம் - மத்ஸ்யம், கூர்மம், ஏனம் முதலிய சரீரங்களோடு கூடிய, ஸ்வாம் - உம்மை, தாத்ருக்வத - அந்தந்த மீன், ஆமை, ஏனம் முதலியனவாகவே, வாஸ்தவ லோக: இந்த மேல் பார்வை ஸ்வபாவமான உலகம், பார்ப்பது லோகம், பச்யதி - பார்க்கிறது.

அந்தந்த ச்லோகத்தில் ஸம்புத்தியைக் கவனிக்க வேணும். முன் ச்லோகத்தில் வரதவென்று கூப்பிட்டார். நீர் ப்ரஹ்ம சிவாதிகளுக்கு வரங் கொடுக்கும் தாதா. கொடுப்பவரும் வாங்குகிறவரும் ஒன்றே யென்று தாதாத்ம்யத்தைக் கொள்ளுவரோ என்று அங்கே வேடிக்கை. இங்கே ஆதாரங்களைப் பேசுகையில் 'கரீச!' என்கிறார். ஒரு யானை

அறிந்து நேரிற் காணப்பெற்ற பரத்வத்தை இவ்வுலகம் அறியவில்லையே யென்பது இங்கே கருத்து. ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியும் வ்யாபாரமும் ப்ரஹ்மாவுக் குள்ளன. ஜகத்தை லயம் செய்யும் சக்தியும் வ்யாபாரமும் சிவனுக்கு உள்ளன. ஜந்ம காரணத்வமும் ப்ரளய காரணத்வமும் தனித் தனியே ப்ரஹ்ம லக்ஷண மாகு மென்பர். இந்த ப்ரஹ்ம லக்ஷணங்கள் இவர்களுக்குப் பொருந்துவதால் இவர்களும் விஷ்ணுவைப் போல் ப்ரஹ்மமாய் இருக்கட்டுமே. இவர்கள் விஷ்ணுவைப் போல் பரப்ரஹ்மத்தின் ஸாக்ஷத் அவதாரமாயிருக்கலாகாதோ?

பெருமாள் மத்ஸ்யம் கூர்மம் முதலிய சரீரங்களை க்ரஹித்து ஸாக்ஷாத்தாக அவதரிப்பது போல், ப்ரஹ்மா சிவ வேஷங்களைத் தரித்துத் தாமே நேரில் அவரித்ததாகச் சொன்னாலென்ன? மத்ஸ்யாத்யவதார சரீரங்களில் பகவானைத் தவிர வேறு ஜீவர் ஒருவரும் உள்ளே இல்லையே. இப்படியே தான் ஸர்வார்த்தஸித்தியில் பூர்வ பக்ஷம் செய்ததை முன்பே காட்டினோம்.

மத்யே விரிஞ்சகிரிசயோ:—விரிஞ்ச ரென்னும் ப்ரஹ்மாவுக்கும் சிவனுக்கும் நடுவே. முன் ச்லோகத்தில், 'அங்குஷ்டமாத்ரமான பரம புருஷன் 'மத்யே ஹ்ருதி'—ஹ்ருதயத்தின் மத்தியில் எழுந்தருளியிருக்கிறார்' என்று கடவல்லி ஓதியபடி, வரதன் அந்தர்யாமியாக ப்ரஹ்ம சிவாதிகளான ஸகல ஜீவராசிகளுக்குள்ளும் அநுப்ரவேசித்திருக்கும் அந்தர்யாம்யவதாரம் கூறப்பட்டது. இங்கே ப்ரஹ்மம் சிவர்கள் மத்தியில் விஷ்ணுவாக அவதரிப்பதை ஸாதிக்கிறார். 'கரீச!' என்று அர்ச்சாவதாரத்தையும் ஸாதிக்கிறார். 'மத்யே திஷ்டதி ஆத்மநி' என்பர். ஆத்மா என்னும் சப்தமும் ஒருவாறு மத்யத்தைச் சொல்லும். 'ப்ரஹ்மேசமத்ய கணநா' என்று தொடங்கி அதிமாநுஷஸ்தவத்தில் ஆழ்வான், அவதாரங்களில் ஆழ்ந்து அநுபவித்த ச்லோகத்தில் உள்ள 'மத்ய' பதத்தை இங்கே ப்ரயோகிக்கிறார். 'ப்ரஹ்மா ஈச்வரன் இவர்கள் நடுவேயும், 12-ஸூர்யர்களுக்குள்ளும் நீர் கணக் கெண்ணப்படுவதும், அதிதிக்குப் பிள்ளையானதால் இந்த்ரன் தம்பியான உபேந்த்ரனாக ஆவிர்ப்பாவமும், இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களில் ஒருவராயும், யதுவம்சத்தரசரில் ஒருவராயும், பிறப்பும் நிகருமில்லாத பரஞ்சுடரான உமக்குப் புகழ்ச்சியைக் கொடுப்பதே' என்று அங்கே ஆழ்வான் அநுபவம். 'ஆதித்யாநாமஹம் விஷ்ணு:' என்றபடி மற்றப் பதினொரு ஸூர்யர்களோடு தாமும் ஒரு ஸூர்யனானதலால் எப்படி அவர்களோடு ஐக்யமாவது ஸாம்யமாவது வராதோ, எப்படி இக்ஷ்வாகு யது குலங்களில் ஒரு அரசராய் அவதரித்ததனால் மநுஷ்யரான மற்ற அரசரோடு எப்படி ஸாம்யம் வராதோ, அப்படியே த்ரிமூர்த்திகளில் ஒருவராய் நீர் அவதரித்தாலும் மற்ற இருவர்களோடு ஸாம்யமாவது ஐக்ய

மாவது வராது என்று ஆழ்வான் திருவுள்ளம் பற்றின யுக்தியை அந்த ஸ்லோகத்தை ஜ்ஞாபகப்படுத்துவதால் ஸ்வாமி இங்கே ஸூசிக்கிறார்.

'ப்ரவிஶ்ய க்ருதேஹ்யாஹரிঃ' என்றும்,

'ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் ।
ஸஞ்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்தநঃ ॥'

என்றும், ஸ்ருஷ்டி ப்ரகரணத்தில் விஷ்ணு புராணாரம்பத்தில் இரண்டாவது அத்யாயத்தி லுள்ளதை ஸர்வார்த்தஸித்தியில் ஸித்தாந்தத்துக்கு ப்ரகரணமாக ஸாதித்தார். அந்த வசநத்துக்கு அடுத்தாற்போல் அந்த அத்யாயத்தின் முடிவில்,

'ப்ரஹ்மாத்யவஸ்தாபிரஶேஷமூர்த்திர்
விஷ்ணுர் வரிஷ்டோ வரதோ வரேண்யঃ'

என்றுளது. அந்த வசநத்தையும் இங்கே நினைத்துக் காரண வசநங்களை வரதனிடம் ஸமந்வயம் செய்கிறாரென்பதை ரஸிகர் அறியவேணும்.

விஹிதாவதாரঃ—தம்முடைய அவதாரத்தைத் தாமே விதாநம் செய்தார். இவர் பிறப்பு பிறரால் விதாநம் செய்யப்படவில்லை. மற்ற மூர்த்திகள் அப்படி அல்லர். பரப்ரஹ்மமாகிய இவரால் அவர்கள் அவதாரங்கள் விஹிதங்கள். இராமாவதாரம் இவர் இச்சா வசத்தால் (ஈப்ஸிதேந) விஹிதம்.

ஸஹதேவஸிதைவதயா—அவர்களுக்குத் துல்யமாக (அவர்களோடு ஒன்றாக) நீர் நினைக்கப்பட்டீர்; நீர் கணக்கெண்ணப்பட்டீர். இரண்டாவது பொருள், ஆழ்வான் ப்ரயோகித்த 'கணநா' சப்தத்தோடு அழகாகப் பொருந்தும். இரண்டு பொருள்களும் பொருந்திய சப்தத்தை இங்கே ஸ்வாமி ப்ரயோகித்தார். ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவாக விபரீதமாக அந்யதா க்யாதியால் தோன்றுவதையும் இங்கே இந்தப் பதத்தால் வேடிக்கையாக ஸூசிக்கிறார். அமத்ய ப்ராய ந்யாயமும் இங்கே ஸூசிக்கப்படுகிறது.

'யத்ப்ரத்யேநைவ தத்தாத்ருஶமவகம்யதே'

என்று அந்த ந்யாயம் பாமதியில் பேசப்பட்டது. மூவரும் ஓரேமாதிரியானவராய் இருக்கவேணும். அவர்களும் ஈச்வரரானால் இவரும் ஈச்வரராகட்டும்; அவர்கள் ஜீவரானால் இவரும் ஜீவராக வேணும். ஆகம வசநங்களால் இவர்மட்டும் ஸாக்ஷாத் ஈச்வரனென்று ஸித்திக்கையில், அதற்கு விரோதமாக இந்த ந்யாயம் செல்லாதென்று ஸமாதாநம்.

மேலும் இந்த ந்யாயம் இதைப்போன்ற ஆதித்யர்கள் விஷயத்தில் தவறிப் போவதால், இந்த விஷயத்தில் இது சிதிலித மாகிறது.

தத்ரம் நசித்ரம்—இப்படி ஒன்றாகவும் ஸமமாகவும் நினைப்பது ஓர் ஆச்சர்யமல்ல. இந்த அவதார விஷயத்தில் இதனிலும் ஆச்சர்யமான ப்ராந்திகள் உண்டு. அவற்றை உத்தரார்த்தத்தில் காட்டுகிறார்.

யத—ஏனென்றால். பின்னே சொல்லுவது முன்சொன்னதை ஸமர்த்திப்பதற்கு ஹேது.

ஈப்ஸிதேந—ஸங்கல்ப வசத்தால்; இச்சாவசத்தால். இன்னாருடைய இச்சையாலென்று குறிப்பிடவில்லை. உம்முடைய ஸங்கல்பத்தால்; இச்சையால்; உம்முடைய அடியார் இச்சையால். தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவத்தைத்தான் உகந்தாலும். கீதா சாஸ்த்ரத்திலும், 'ஆத்மமாயயா' என்பதற்கு 'ஜ்ஞாநிநாமேவேப்ஸிதம்' என்றதை அநுஸரித்து, 'ஜ்ஞாநியாகிய தமர் இச்சையால்' என்றும் சொல்லலாம். பெருமாள் வார்த்தைக்கு 'ஈப்ஸிதம்' என்கிற க்ருஷ்ண மதத்தைக்கொண்டு பொருள் சொல்வது உசிதம். ஸ்வேச்சையால்,

'மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யந்மாம் பஶ்யஸி நாரத ।
ஸர்வபூதகுணைர் யுக்தம் நைவம் மாம் ஜ்ஞாதுமர்ஹஸி ॥'

என்பது கண்ணன் வார்த்தை. அங்கே மாயா சப்தத்துக்கு ஆச்சர்யமென்றும் பொருள் கொள்ளலாம். பூதமய மல்லாவிட்டாலும், அப்ராக்ருதமாயிருந்தாலும், பூதமயம் போலும், ப்ராக்ருதம் போலும் காணப்படுவது ஆச்சர்ய ஸ்ருஷ்டியே. ப்ரஹ்ம ஸ்துதியில் கண்ணனுடைய திருமேனியை 'ஸ்வேச்சாமயஸ்ய ந து பூதமயஸ்ய' என்று ப்ரஹ்மா வர்ணித்ததை முன்பே உதாஹரித்திருக்கிறோம். அதையும் இங்கே நினைக்கிறோம். 'ஈப்ஸிதேந' என்பதை முன்பாதியில் 'அவதாரத்தைச் செய்து' என்பதோடும் அந்வயித்துக் கொள்ளலாம்.

மீநாதிஶரீரிணம்—மீனும் ஆமையும் ஏனமுமான சரீரங்களோடு கூடிய. இந்த சரீரங்களோடு அவதாரம் பண்ணினவரை,

'கமடகிடிமுகைঃ பத்மநாபோ நிகாமைঃ ஸ்வாகாரைঃ ஸ்வப்ரபுத்வம்
ப்ரதயதி'

என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் 'ஆமை வராகம் மீன் ஹம்ஸம் முதலிய ப்ரகாரங்களான ஆகாரங்களால் தம்முடைய ப்ரஹ்ம தமத்வதை த்ருடிகாரம் செய்கிறார்' என்று அழகாகப் பிகுவாக ஸாதித்தார். 'எங்கின்ற

யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா' என்ற அனுபவத்தை அங்கேயும் காட்டினார். சரீரி என்னும் பதத்தால், 'நம்மைப்போல் ஒரு மத்ஸ்யாதி ஜாதியான தேஹி' என்ற நினைப்புக்கு இடமிருப்பதை ஸூசிக்கிறார். சரீரி என்பதால், சரீர சரீரி பாவத்தால் ஸமாதாநத்தை ஸூசிக்கிறார். முன் ச்லோகத்தால், 'உம் அநுப்ரவேசத்தால்' என்பதால் ஸமாதாந ஹேது ஸூசிதமாகிறது. தத்வமுக்தா கலாபத்தில் அந்தர்யந்தா நாராயணனென்று ச்ருதி ஓதியது. காரணம்தான் அந்தராத்மா. எங்கே இந்த்ரன் சிவன் முதலிய தேவதைகள் நிஸ்ஸம்சயமான ஸ்பஷ்ட அடையாளங்கள் உண்டோ, அங்கே அந்தந்த தேவதா சரீரகனை பரமாத்மாவைக் கொள்ளவேணுமென்று ஸாதித்தார்.

ஸ்வாம—ப்ரஹ்மாதி தேவர்களுக்கு வரம் கொடுத்து அதை நிறைவேற்ற வரதனை நீர் அவதரிக்கிறீர்.

தாநேவ பஶ்யந்தி-அந்தந்த மீன் ஆமை முதலியவைகளென்றே பார்க்கிறார்கள். உம்மை மீனென்றும் ஆமையென்றும் பார்க்கிறார்கள். இங்கே 'என்று' என்பதைக் காட்டக் கூடிய 'இதி' என்பதையும் ப்ரயோகிக்கவில்லை. 'ஏவ' என்று மட்டும் ப்ரயோகித்தார். 'இதி' என்றால் பேதம் தோன்றிவிடும். தாதாத்ம்ய புத்தியைக் காட்டுவதில் நோக்கு. மீனும் ஆமையுமாய் நினைப்பவர், ப்ரஹ்மாவும் சிவனுமாக நினைப்பது ஆச்சர்யமல்லவே. இங்கே கைமுத்யத்தில் நோக்கு. 'சித்ரம்' என்னும் பதத்திற்கு அடுத்தாற்போல் மாயா சப்தத்தை வைத்திருப்பதால், 'சித்ரம் ஆச்சர்யம்' என்கிற பொருளும் ஸ்வாமிக்குப் புத்திஸ்தம் என்பதைக் காட்டும். மாயா சப்தம் 'சித்ரம் ஆச்சர்யம்' என்பது ஸாராவளி.

ஜநலோக:—இந்த ஜனம் (ஜனங்கள்). லோகம் வேதமென்று இரண்டு பிரிவுகள் உண்டு. இங்கே முடிவில் லோகத்தைப் பேசிவிட்டு, அடுத்த ச்லோகத்தில் இதே விஷயத்தில் வேதங்களைப்பற்றிப் பேசப்போகிறார் என்கிற ஸ்வாரஸ்யத்தையும் கவனிக்க வேணும். விஷ்ணு புராணம் முதல் அம்சம் 2, 3, 4—அத்யாயங்கள் இங்கே ஸ்வாமி நெஞ்சில் உள்ளன. நாலாவது அத்யாயத்தில்,

'உத்திஷ்டமாநம் தமஜம் வராஹம் மஹாமுநீ: ।
வேதயஜ்ஞமயம் ரூபம் ஸநந்தநமுகா: ஸ்துதா ॥
ஸ்துத: ஸ்துத்யாத்மா ஸர்வாத்மா ...
ஜநலோகக3தை: ஸித்தை: ஸநகாத்3யை: ...

என்று படிக்கப்பட்டுள்ளது. ஜநலோகத்திலுள்ள ஸநகாதி ஸித்தர்கள் வேத யஜ்ஞ மயமாக வராக ரூபத்தைப் பகவத் ரூபமாக ஸேவித்துத் துதித்தார்கள். இந்த லோகம் (ஜனங்கள்) வராஹமாகவே பார்க்கிறது என்று காட்டுவதில் நோக்கு.

ஜநலோக:—இந்த லோகம். ஜநலோகத்தி லுள்ளவரைப்போல் அல்ல என்று தாத்பர்யம். உதாஹரித்த விஷ்ணு புராண வசநத்திலுள்ள ஆத்மா ஸர்வாத்மா என்கிற சப்தங்கள் அடுத்த ச்லோகத்தில் 'ஸ்துதா ஸர்வாத்மா ...' என்று அநுஸரிக்கப்படுகின்றன. இந்த லோகம் பார்க்கிறது என்றதால் லோக த்ருஷ்டியைக் காட்டுகிறார். லோக த்ருஷ்டி சாஸ்த்ர த்ருஷ்டி என்று இரண்டுண்டு. லோக த்ருஷ்டியை நம்பக்கூடாதென்பதை விளக்குவதற்காக, எப்படி மீன் ஆமை ஏன சரீரியாயிருப்பவரை மீன் ஆமை ஏனம் என்று பார்ப்பது தப்பாகிறதோ, அப்படியே ப்ரஹ்ம சிவாதி உடல்களோடு கூடிய பரம உயிரை ப்ரஹ்ம சிவாதிகளாய் நினைப்பது தப்பாகும். லோக த்ருஷ்டி இந்த அவதார விஷயத்தில் தத்வத்தைக் கண்டுபிடிக்க உபயோகப்படாதென்பதை விளக்குகிறார். சாஸ்த்ர த்ருஷ்டியைத் தான் நம்பவேணும். அதை அடுத்த ச்லோகம் முதல் பேசப்போகிறார்.

'ஶாஸ்த்ரத்3ருஷ்ட்யா தூபதே3ஶோ வாமதே3வவத்'

என்கிற ஸூத்ரத்தை இங்கே ஸூசிக்கிறார். அங்கே வாமதேவர் ருத்ரர். 'அவர் உள்ளிலிருந்து உள்ளே புகுந்தார்' 'ஸோऽந்தராதந்தரம் ப்ராவிஶத்' என்கிற ச்ருதியை இங்கு நினைக்கவேணும்.

பிழைத் திருத்தம்.

ஸஞ்சிகை 10, பக்கம் 521-வரி 6, "கடலன்ன காமமுழந்து....." என்பதற்கு பதிலாக

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன் மேற்
பொற்புடை நெறிமை யின்மையான"

என்றும், வரி 28, "மன்னும் வடமொழியே வேண்டினோம்" என்பதற்கு பதிலாக,

"மன்னும் வடநெறியே வேண்டினோம்"

என்றும் படிக்கவும்.

ஸ்ரீ :

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜசார்யர்.]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நாலாவது பாதம்

245. மந்திரங்களில் ஊஹத்துக்கு உதாஹரணம் காட்டப்பட்டது. ஸம்ஸ்கார ஊஹத்துக்கு உதாரணம் சொல்லவேண்டியது.

அக்னிஷ்டோமத்தின் அங்கமான ப்ராயணீயேஷ்டி விஷயத்தில் "ஆதித்ய: ப்ராயணீய: பயஸி சரு:" என்று ஒரு வாக்யம். அதன் பொருள் : ப்ராயணீயேஷ்டியில் அதிதிதேவதையின் ஹவிஸு பாலில் பாகம் பண்ணப்பட்ட ஹவிஸு என்பது. இங்கே பாலுக்கு ப்ரக்ருதியான தர்சபூர்ணமாஸ இஷ்டியில் சொல்லப்படும் தர்மங்களைச் செய்கிறதா என்பது ஸந்தேஹம். அதற்காக விசாரிக்க வேண்டியது—சருவுக்கு ஸமமாகத் தேவதைக்குக் கொடுப்பதான த்ரவ்யமாகப் பால் விதிக்கப்படுகிறதா? அல்லது சருவைப் பாகம் பண்ணுவதற்காக ப்ரணீதாவின் வேலையைச் செய்வதற்காக விதிக்கப்படுகிறதா என்று. முதல் பக்ஷத்தில் தேவதைக்குக் கொடுப்பதின் தர்மங்கள் - புரசங்கிளையைக் கொண்டு வருவது முதலானவைகள் - உண்டு; இரண்டாவது பக்ஷத்தில் ப்ரணீதாவின் தர்மங்கள்.

பூர்வபக்ஷம்—சருவுக்கும் பாலுக்கும் இரண்டுக்கும் தேவதையின் ஸம்பந்த மிருக்கிறது. இரண்டும் ஒரே விதமாய் தேவதைக்குக் கொடுக்க வேண்டியவைகள். சருவுக்குத் தேவதையின் ஸம்பந்தத்தையும், பாலுக்கு சருவின் ஸம்பந்தத்தையும் விதிப்பதானால், வாக்யபேத முண்டாகும்; இரண்டு விஷயங்களை விதிப்பதால். இரண்டு த்ரவ்யத்துக்கும் தேவதையின் ஸம்பந்தத்தைச் சொல்லுவதானால், ஒரே விஷயம் விதிக்கப்படும். ஆகையால் பயஸி என்கிற சொல்லில் ப்ரக்ருதிக்குத் தேவதையுடன் ஸம்பந்தம். ஏழாவது விபக்தியின் பொருள் சருவும் பாலும் சேர்ந்து பாகம் பண்ணப்படுவதால் ஏற்படும் சேர்க்கையை அநுவாதம் பண்ணுகிறது.

ஸித்தாந்தம்—"ஆதித்ய: சரு:" என்று த்ரவ்ய தேவதையின் ஸம்பந்தத்தை விதிப்பதால் வாக்யபேத மில்லை. முதலாவது விபக்தியாலே சொல்லப்பட்ட சரு ஹவிஸு. ஏழாவது விபக்தியால் சொல்லப்பட்ட பால் சருவுக்கு ஆதாரமாயிருந்து அத்துடன் சேருகிறது. வாக்யபேத

மில்லாதபடியால், ஏழாவது விபக்தியைச் சொல்லுவதில் கருத்தில்லையென்றும், அது அநுவாதம் என்றும் சொல்லி, சருவும் பாலும் ஸமம் என்று ஒப்புக்கொள்ளுவது சரியன்று. ஆகையால் பாலுக்கு ஏற்பட்ட தர்மங்களில்லை. (அதி. 10. சாஸ். 640.)

246. இன்னுமொரு உதாரணம்—அக்னிஷ்டோமத்தில் "பயஸா மைத்ராவருணம் ஸ்ரீணாதி" என்று ஒரு வாக்ய மிருக்கிறது. அதின் பொருள்—மைத்ராவருணம் என்கிற ஸோமரஸ க்ரஹத்தில் பாலைக் கலக்கிறான் என்பது. இப்படிக் கலப்பது எதற்காக? ஸோமத்துடன் ஹோமம் செய்வதற்காகவா? அல்லது ஸோமத்துக்கு ஸம்ஸ்காரம் செய்வதற்காகவா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—ஹோமம் செய்வதற்காகத்தான். ஆகையால் ஸோமத்துக்கு விலைக்கு வாங்குவது முதலான என்ன தர்மங்கள் உண்டோ, அவைகள் எல்லாம் பாலுக்கு முண்டு.

ஸித்தாந்தம்—கலப்பது ஸம்ஸ்காரமாக. "மைத்ராவருணம்" என்கிற சொல்லில் இரண்டாவது விபக்தியால் ஸோமம் முக்யமானது என்றும், "பயஸா" என்கிற சொல்லில் த்ருதீயா விபக்தியாலே பால் அதற்காக என்றும் தெரிகிறது. ஆகையால் பாலால் ஸோமத்துக்கு ஸம்ஸ்காரம் செய்யப்படுகிறது. ஸம்ஸ்காரம் செய்யும் வஸ்துவை ஹோமம் செய்வதில்லாமையால் ஹோமம் செய்யப்படும் ஸோமத்தின் தர்மம் இதற்கில்லை. (அதி-13)

நான்காவது பாதம் முற்றிற்று.

பத்தாவது அத்யாயம்

முதல் பாதம்.

247. இந்த அத்யாயத்தில் பாதம் என்பது. விசாரிக்கப்படுகிறது. அதிதேசத்தால் விக்ருதிகளில் வரும் அங்கங்களைத் தள்ளிவிட வேண்டியதாயிருக்கும். இப்படித் தள்ளிவிடுவதை பாதம் என்று சொல்லுகிறது. இது மூன்று வழியாய் ஏற்படும்.

248. பாதத்துக்கு முதலாவது காரணம் அங்கம் செய்யு முபகாரமில்லாமை. உதாரணம்—விக்ருதியான காம்யேஷ்டி விஷயத்தில் ஒரு வாக்யம்—"ப்ராஜாபத்யம் க்ருதே சரும் நிர்வபேத் சதக்ருஷ்ணலம் ஆயுஷ்காம:" என்று. இதன் பொருள்—ஆயுளை ஆசைப்படுகிறவன் பிரஜாபதி தேவதைக்கு நூறு க்ருஷ்ணலம் என்பதை நெய்யில் சருவாகச் செய்து

கொடுப்பதற்காக நிர்வாபம் செய்யவேண்டியது—என்பது. க்ருஷ்ணலம என்பது தங்கத் துண்டு. இந்த இஷ்டியை அக்னிதேவதையின் புரோடாச யாகத்தைப்போல் செய்யவேண்டியதாகையால், அவஹநநம் என்கிற அங்கம் அதிதேசத்தால் வருகிறது. அதைச் செய்யவேண்டியதா? இல்லையா? என்று ஸந்தேஹம். உமியைப் போக்குவது அவஹநநம் செய்யுமுபகாரம்; அதில்லாமையால் அந்த அங்கமில்லை.

பூர்வபக்ஷம்—உபகாரமில்லாமல் போனாலும், அவஹநநத்தைச் செய்யவேண்டியதுதான். "நெய்யில் சருவாக" என்று சொல்லியிருப்பதால், பாகம் (சமைப்பது) ஏற்படுகிறது. பாகத்தாலே அரிசியை மலரும்படி செய்யவேண்டும்; இந்த உபகாரமில்லாமல் போனாலும், பாகம் செய்கிறது என்கிற அங்கமுண்டு. அதுபோல அவஹநநத்தையும் செய்யவேண்டியதுதான்.

ஸித்தாந்தம்—பாகமானது "ஶ்ருதே சரு:" என்று ப்ரத்யக்ஷமாயிருக்கும் ச்ருதியாலே ஒப்புக்கொள்ளவேண்டும். அவஹநந விஷயத்தில் இப்படி ச்ருதியில்லை. ஆகையால் அவஹநநமில்லை. அது பாதிக்கப்படுகிறது. (அதி-1-வர்ணகம்-2)

249. இன்னுமோர் உதாரணம்—"ஆக்³நாவைஷ்ணவமேகாத³ஶகபாலம் நிர்வபேத்³ த³ர்ஶபூர்ணமாஸாவாரப்ஸ்யமான:" என்று ஒரு விதிவாக்ய மிருக்கிறது. அதின் பொருள்—தர்சபூர்ணமாஸங்களை ஆரம்பிக்கப் போகிறவன் அக்நாவிஷ்ணுதேவதைக்குப் பதினொரு கபால புரோடாசத்துக்காக நிர்வாபம் செய்யவேண்டும் என்பது. இந்த இஷ்டியானது தர்சபூர்ணமாஸங்களை ஆரம்பிக்கும் யஜமாநனுக்கு ஸம்ஸ்காரம். ஸோம யாகத்துக்கு அங்கமாகச் செய்யப்படும் தீக்ஷணீயேஷ்டியில் விதிக்கப்பட்ட இஷ்டி அங்கமாக வருமா? வராதா? என்று ஸந்தேஹம். அது தர்சபூர்ணமாஸங்களுக்கும் அங்கம். தீக்ஷணீயேஷ்டியை அவைகளைப் போல் செய்யவேண்டியதாகையால் விதிக்கப்பட்ட இஷ்டி அதிலும் அங்கமாகலாமே?

பூர்வபக்ஷம்—ப்ரயாஜங்கள் போல அதிதேசத்தால் வருவதாலும், அதை விடுவதற்குக் காரணமில்லாமையாலும் அதைச் செய்யவேண்டியதுதான்.

ஸித்தாந்தம்—விதிக்கப்பட்ட இஷ்டியில் யாருக்கு ஸம்ஸ்காரம் என்று கேட்போம். ஸோம யாகத்தை ஆரம்பிக்கிறவனுக்கு என்று சொல்லுகிறீரோ; ஸோமயாகம் தர்சபூர்ணமாஸ இஷ்டிகளின் விக்ருதியன்று. ஆகையால் அதிதேசத்தால் ஆரம்பணீயேஷ்டி அங்கமாக வராது. தீக்ஷணீ

யேஷ்டியை ஆரம்பிக்கிறவனுக்கு ஸம்ஸ்காரம் என்று சொல்லுகிறீரோ, அதற்குத் தனியாக ஆரம்பமில்லை. யஜமானன் அங்கங்களுடன் கூடின ஸோமயாகத்தை ஆரம்பிக்கிறான். ஸோமயாகத்துடன் தீக்ஷணீயேஷ்டியும் வருகிறது. அதற்குத் தனியாய் ஆரம்பமில்லை. ஆகையால் ஆரம்பம் என்னும் உபகாரமில்லாமையால் அதைச் செய்யவேண்டிய ஆரம்பணீயேஷ்டியுமில்லை. (அதி-2)

முதல்பாதம் முற்றிற்று.

இரண்டாவது பாதம்.

250. முதல் பாதத்தில் உபகாரம் என்னும் த்வாரம் (வழி) இல்லாமையால், அது வழியாய் வரவேண்டிய அங்கங்கள் பாதிக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. இந்தப் பாதத்தில் சொன்ன நியாயத்துக்குச் சில அபவாதங்கள் (விலக்குகள்) சொல்லப்படுகின்றன. முதல் முதல் கீழே சொல்லிய நியாயத்துக்கு இன்னுமோருதாரணம்—(248)வது பாராவில் சொல்லப்பட்ட கிருஷ்ணல சரு யாகமே உதாரணம். இதில் ஹோமம் செய்யும் போது, உபஸ்தரணமும், அபிகாரணமும் செய்யவேண்டியாதா என்று ஸந்தேகம். பதில்:-பாக விஷயத்தில் போல நேராக விதியில்லை, அநுமாநத்தாலே ப்ரகிருதி யாகத்திலிருந்து அங்கங்களைத் தேடும்போது, த்ருஷ்டமான (நேராகப் பார்க்கக்கூடிய) பிரயோஜநத்தையே பார்க்கவேண்டும். ப்ரகிருதியான அக்னி தேவதையின் யாகத்தில் உபஸ்தரணத்தினுடையவும், அபிகாரணத்தினுடையவும் ப்ரயோஜநம் த்ருஷ்டம், அவைகளைச் செய்யாவிட்டால் புரோடாசத்தின் ஸூக்ஷ்மமான பாகங்கள் ஜுஹூவில் ஒட்டிகொள்ளலாம். இது இல்லாமலிருப்பதற்காக அவைகள் செய்யப்படுகின்றன. கிருஷ்ணலம் விஷயத்தில் இது நேராது. அதைத் தடுப்பதும் என்னுமுபகாரமில்லை. ஆகையால் உபஸ்தரணமும், அபிகாரணமும், பாதிக்கப்படுகின்றன. (அதி-2)

சாஸ்த்ர தீபிகைப்படி பூர்வபக்ஷம்—இரண்டையும் செய்யவேண்டும் என்பது.

கேள்வி: "யது³பஸ்த்ருணாதி அபி⁴கா⁴ரயதி ஸ்வத³யத்யேவைனாம் கரோதி" என்று ஒரு வாக்ய மிருக்கிறது. இதன் பொருள்: உபஸ்தரணமும் அபிகாரணமும் செய்வதால், அந்த ஆஹுதியை அமிருதம்போல ருசியுள்ளதாய்ச் செய்கிறான் என்பது. இதனால் அவைகளைச் செய்வதினால் ஹவிஸ்ஸுக்கு ருசியை உண்டுபண்ணவேண்டும். இது க்ருஷ்ணலம் விஷயத்தில் உண்டாகாது. ஆகையால் தேடும் உபகாரமில்லாமையால் இரண்டு வியாபாரங்களும் பாதிக்கப்படவில்லையா என்பது. பதில்–

இது அர்த்தவாதம். சதுரவதாநத்துக்காக (நாலு தடவை யெடுப்பதற்காக) அவைகளைச் செய்யவேண்டும்.

3. மறுகேள்வி :—இன்னொரு வாக்ய மிருக்கிறது "ஸக்ருதி ஸக்ருதி க்ருஷ்ணாநி ஸவக்ருதி சதுரவத்தி ஸ்யாதிதி" என்று இதின் பொருள் : சதுரவதாநம் கிடைப்பதற்காக க்ருஷ்ணலங்களை நாலு நாலாக அவதாநம் செய்யவேண்டும் என்பது. இப்படி சதுரவதாநம் கிடைப்பதால் உபஸ்தரணமும், அபிகாரணமும் வேண்டியதில்லையே என்பது. பதில்—இந்த வாக்யமும் அர்த்தவாதம். ஆகையால் நீர் எண்ணுகிறபடி நாலு தடவை யெடுப்பதினால் சதுரவதாநம் கிடைக்காது. எப்படி அர்த்தவாதம் என்றால் சொல்லுகிறேன். நீர் சொன்னபடி க்ருஷ்ணலத்தை நாலு தடவை எடுப்பதினால் சதுரவதாநம் கிடைப்பதானால், ஹவிஸை இரண்டுதடவை யெடுத்துகொள்ளவேண்டும் என்கிற சாஸ்த்ரம் போய்விடும். ஒரே தடவை அதை யெடுத்துகொள்வதாலும் சதுரவதாநம் கிடைக்கும். மேலும், நாலு நாலாக என்பதும் கிடைக்காது. நாலு என்கிற ஸங்கியையையும் வீப்ஸையையும் விதிக்கவேண்டும். அப்போது வாக்யபேதம் என்னும் குற்றமுண்டாகும். ஆகையால் சொன்ன வாக்யம் அர்த்தவாதம்.

4. மறுபடியும் கேள்வி :—ஹவிஸ்ஸை இரண்டு தடவை எடுப்பது என்கிற சாஸ்த்ரம் எப்படிப் போய்விடும்; ப்ரக்ருதியிலிருந்து அதிதேசத்தால் அது வருமே என்று. பதில்—சதுரவதாநம் கிடைப்பதற்காக வன்றோ ஹவிஸை இரண்டு தடவை யெடுப்பது. உபஸ்தரணமும் அபிகாரணமும் சேர்ந்து நாலு அவதாநமாகும். இது வேறு விதமாய் கிடைக்குமானால் உபஸ்தரணமும், அபிகாரணமும் எப்படிப் போய்விடுகின்றனவோ, அப்படியே இரண்டு அவதாந சாஸ்த்ரமும் போய்விடலாமே. ஆகையால் உபஸ்தரணமும் அபிகாரணமும் வேண்டியதே ; அவைகளை விடக்கூடாது.

ஸித்தாந்தம் கீழ் சொன்னபடியே. அதன் மேல் பூர்வபக்ஷம் சொன்னவன் கேட்கிறான் : நீர் த்ருஷ்ட ப்ரயோஜநமில்லையென்கிறீரே "சதுரவத்தம் ஜுஹோதி' என்று ஒரு வாக்ய மிருக்கிறதே. சதுரவதாநம் கிடைப்பதும் த்ருஷ்டமான ப்ரயோஜநம் தானே என்று. பதில்—அது ப்ரயோஜநமன்று "சவத்தம் ஜுஹோதி" என்பதுதான் விதிக்கப்படுகிறது. "சது:" என்கிற சொல் ஹவிஸை யிரண்டு தடவை யெடுத்துகொள்ளுவது, உபஸ்தரணமும், அபிகாரணமும் செய்கிறது என்கிற சாஸ்திரத்தால் கிடைத்ததை அநுவாதம் செய்கிறது. அது விதிக்கப்படவில்லை. (சா. 660)

251. வாஜபேயம் என்கிற ஸோமயாகத்தில் ஸப்ததசசராவமான சரு விதிக்கப்படுகிறது. "ஸப்ததசசராவ:" என்பது பதினேழு வாணாய்

கொண்ட தான்யம். இதைச் சருவாகச் செய்யவேண்டும். இது விக்ருதி இஷ்டி. ப்ரக்ருதியில் 'சதுரோ முஷ்டீந் நிர்வபதி' என்று முஷ்டி (பிடி)யும், அந்த முஷ்டி நாலு என்றும் விதிக்கப்படுகிறது. நாலு பிடிகள் எடுத்தால், பதினேழு வாணாய்கள் நிரம்பாது. ஆகையால் நாலு என்கிற ஸங்கியையை விட்டுவிடுகிறதா ? அல்லது பிடி என்பதையா ? அல்லது இரண்டையுமா ? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம் : இரண்டையும் விடக்கூடாது. ஒன்றை விடுவதால் வாணாய்கள் நிறையா என்பதற்குப் பரிஹாரம் ஏற்படும். ஆகையால் ஒன்றை மாத்திரம் விடுகிறது. விது எதுவென்றால் ஸங்கியையை விடவேண்டும். ஸங்கியை முஷ்டியின் தர்மம். முஷ்டியை விட்டால் தர்மத்துக்கு ஆதார மில்லாமையால் அதுவு மிருக்காது. ஸங்கியை போனால் முஷ்டி யிருக்கும்.

ஸித்தாந்தம் : "சதுர:" என்கிற ஸங்கியைக்கு முஷ்டியோடு ஸம்பந்தமில்லை. 'சதுர:' என்பதில் ப்ரத்யயம் இரண்டாவது விபக்தி. அது ஒரு கிரியையின் கர்மத்தைச் சொல்லுகிறது. அதற்கு 'நிர்வபதி' என்கிற கிரியையோடு நேராக ஸம்பந்தம். ஆகையால் ஸங்கியை முஷ்டியின் தர்மமன்று. நாலை யெடுக்கிறது என்று முதலில் ஏற்படுகிறது. அந்த நாலு எது என்று கேட்கும்போது நாலு முஷ்டிகள் என்று பின்னாலே ஏற்படுகிறது. அப்போது ஸங்கியை முஷ்டிக்கு விசேஷணமாகிறது. முஷ்டிக்கும் ஸங்கியைக்கும் கிரியையோடு ஸம்பந்தம் ஸமாநம். ஆனாலும் ஸங்கியை முதலில் சொல்லப்படுவதால் ப்ரபலம். முஷ்டி பின்னாலே சொல்லப்படுவதால் துர்பலம். அதுதான் பாதிக்கப்படுகிறது. இரண்டையும் விடக்கூடாது என்று பூர்வபக்ஷத்தில் சொல்லப்பட்டது. இதை யொப்புக்கொள்ளாமல் ஒருவன் கேட்கிறான். சராவம் என்பதாலே முஷ்டியும் பதினேழு (ஸப்ததச) என்பதால் நாலு என்பதும் பாதிக்கப்படவில்லையா என்று. பதில்—இல்லை. வாக்யங்களுக்கு விஷயம் வேறு. சராவத்துக்கும் பதினேழு என்கிற ஸங்கியைக்கும் யாகத்துடன் ஸம்பந்தம். முஷ்டிக்கும் நாலு என்கிற ஸங்கியைக்கும் நிர்வாபத்துடன். அவன் கேட்கிறான் : அப்படியானால் பாதம் என்கிற பேச்சு எப்படி வந்தது ?—என்று. பதில் : பாத மில்லாவிட்டால் சொன்ன வேலையைச் செய்ய முடியாது. நாலு பிடிகள் எடுத்தால், எப்படிப் பதினேழு வாணாய்கள் நிரம்பும். (அதி-28)

இரண்டாவது பாதம் முற்றிற்று.

மூன்றாவது பாதம்.

252. முதலிரண்டு பாதங்களில் அங்கங்கள் செய்யு முபகார மில்லாமையால் அவைகள் பாதிக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. இந்தப் பாதத்தில் ப்ரக்ருதியில் சொல்லப்பட்ட வேலையையே விக்ருதியில் விதிக்கப்பட்டதும். செய்யுமானால் ப்ரக்ருதியின் அங்கம் பாதிக்கப்படும் என்று காட்டப்படுகிறது.

253. அக்னீஷோமீயபசு யாகத்தில் பதினொரு ப்ரயாஜங்கள் விதிக்கப்படுகின்றன. இப்படி ஸங்கியையோடுகூடிய ப்ரயாஜங்களை விதிப்பதினாலே அங்கங்களை அறிவதற்காக ப்ரக்ருதியைத் தேடவேண்டியதில்லையா? என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம் : தேடவேண்டியதில்லை. ப்ரயாஜங்களை யிங்கே ப்ரத்யக்ஷமாய் விதிப்பதால், இதைக்கொண்டே அங்கங்கள் ஏற்படுவதால், ப்ரக்ருதியின் அங்கங்களைத் தேட வேண்டியதில்லை.

ஸித்தாந்தம் : விக்ருதி யாகமானது அங்கங்களைத் தேடுகிறது. எதைக்கொண்டு அதற்கு த்ருப்தி உண்டாகலாம்—ப்ரகிருதியிலிருந்து அங்கங்களை அதிதேசத்தாலே கொண்டுவருகிறதா ? அல்லது விதிக்கப்படும் அங்கங்களே போதுமா ? ப்ரக்ருதியில் இன்ன அங்கங்கள் வேண்டியதென்றும். அவைகள் இன்ன உபகாரம் செய்கின்றன என்றும் ஏற்பட்டிருக்கிறது, ஆகையால் அதிலிருந்தே அங்கங்களைக்கொண்டு வருவது நியாயம். அதிதேசத்தாலே ஏற்படும் ப்ரயாஜங்களை அநுவாதம் செய்து ஸங்கியையான குணம் மாத்ரம் விதிக்கப்படுகிறது. இப்படிக் கொள்ளுவதில் லாகவமிருக்கிறது. குணத்தோடுகூடிய அங்கத்தை விதிப்பது என்றால் கௌரவம். (அதி-1)

மூன்றாவது பாதம் முற்றிற்று.

நாலாவது பாதம்.

254. முன் பாதத்தில் விக்ருதி யாகங்களில் விதிக்கப்பட்டது ப்ரக்ருதி யாகத்திலிருந்து அதிதேசத்தால் வருவதைப் பாதிப்பதற்கு உதாரணம் சொல்லப்பட்டது. இந்தப் பாதத்தில் விக்ருதி யாகத்தில் விதிக்கப்பட்டதையும் ப்ரகிருதி யாகத்திலிருந்து அதிதேசத்தால் வருவதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

நக்ஷத்ரேஷ்டியில் உபஹோமங்களுக்கு மந்திரங்கள் படிக்கப்படுகின்றன. ப்ரக்ருதியான தர்சபூர்ணமாஸேஷ்டிகளில் நாரிஷ்டஹோமங்கள்

மூக்யமான யாகங்களுக்கு மேலே செய்யப்படுகின்றன. இங்கே ஸந்தேஹம்: உபஹோமங்கள் நாரிஷ்டஹோமங்களைப் பாதிக்கின்றனவா என்று.

பூர்வபக்ஷம்—பாதிக்கின்றன. ஏனென்றால், அவைகள் ஒரே வேலையைச் செய்கின்றன. உபஹோமங்கள் என்ன வேலையைச் செய்கிறது என்று வேலையைத் தேடுகின்றன. அவைகள் ஹோமமாயிருப்பதால் நாரிஷ்டஹோமங்கள் செய்யும் வேலை நினைவுக்கு வருகிறது. அந்த வேலையைச் செய்வதற்காக உபஹோமங்கள் விதிக்கப்படுகின்றன. விக்ருதியில் விதிக்கப்பட்ட உபஹோமங்களாலே அந்த வேலை செய்யப்படுவதாலே அந்த வேலையைச் செய்யும் நாரிஷ்டஹோமங்கள் திரும்பிப் போய்விடுகின்றன.

ஸித்தாந்தம்—ஹோமமாயிருப்பது எல்லா ஹோமங்களுக்கும் பொதுவானது. ஆதலால் நாரிஷ்டஹோமங்கள் செய்யும் வேலையின் நினைவு அதினால் வரமுடியாது. இரண்டு விதமான ஹோமங்களும் மூக்யமான யாகங்களுக்கு அடுத்த மேலே செய்யப்படுவதாலே, இடத்தாலே ஒற்றுமையிருக்கிறது. அதனால் நாரிஷ்டஹோமங்களின் வேலை நினைவுக்கு வரலாமே—என்றால், பார்வண ஹோமத்துக்கும் இந்த ஒற்றுமை யிருக்கிறது. அதனாலும் ப்ரயோஜநமில்லை. செய்யப்படும் வேலை த்ருஷ்டமானால் (பார்க்கக் கூடியதானால்) இரண்டும் ஒரு வேலையைச் செய்கின்றன என்று சொல்லலாம். வேலையோ அத்ருஷ்டார்த்தம். ஆகையால் இரண்டு விதமான ஹோமங்களையும் விக்ருதியில் விதிக்கப்பட்டவைகளையும் ப்ரக்ருதியிலிருந்து அதிதேசத்தால் வருகிறவைகளையும் சேர்த்துச் செய்ய வேண்டும்.

2. ஒரு கேள்வி: விக்ருதியில் ப்ரத்யக்ஷமாய் விதிக்கப்பட்ட உபஹோமங்களாலே யாகத்தை எப்படிச் செய்கிறது என்கிற தேட்டம் தீர்ந்துவிடுகிறபடியால், ப்ரகிருதியிலிருந்து ஒன்றையும் தேடுகிறதில்லை. ஆகையால் நாரிஷ்ட ஹோமங்களை ஏன் செய்யவேண்டும் என்று. பதில்:-நக்ஷத்ரேஷ்டியில் த்ரவ்யங்களையும் தேவதைகளையும் சொல்லியிருந்தாலும் அவைகளுக்கு வேண்டிய ஸம்ஸ்காரங்களைச் சொல்லவில்லை. மேலும் உபஹோமங்களை விதிக்கும் காலத்தில் அவைகள் என்ன விதமாய் உபகாரம் செய்யும் என்று ஏற்படவில்லை. ஸோம யாகத்துக்கு அபிஷவம் உடனேயே உபகாரம் பண்ணுவதுபோல் உபஹோமங்கள் உபகாரம் செய்கிறதில்லை. ஆகையால் அவைகளாலே நக்ஷத்ரேஷ்டியின் தேட்டம் தீராது. ஆகையால் அது ப்ரக்ருதியிலிருந்து அங்கங்களை அதிதேசத்தாலே கொண்டுவருகிறது. இதனால் அதன் தேட்டம் தீர்ந்தாலும் விதிக்கப்பட்ட உபஹோமங்கள் ஒரு ப்ரயோஜனத்தைத் தேடுவதால் அதைப் பிடித்

துக்கொண்டு ஸந்நிதியென்கிற ப்ரமாணத்தாலே அவைகளைத் தனக்கு அங்கமாகச் செய்துகொள்ளுகிறது. (அதி-1; சா. 696,697.)

255. இது வரையில் விக்ருதியில் விதிக்கப்பட்ட அங்கமும் ப்ராக்ருதியிலிருந்து அதிதேசத்தால் வரும் அங்கமும் ஒரே வேலையைச் செய்யுமானல் ப்ரக்ருதியின் அங்கம் பாதிக்கப்படுகிறது என்றும், வேலைகள் வேருக இருந்தால் அவைக ளிரண்டையும் சேர்த்துச் செய்யவேண்டியது என்றும் சொல்லப்பட்டன. மேலே வேறு விதமான இரண்டு வாதங்கள் விசாரிக்கப்படுகின்றன.

முதலாவது : [illegible]. நிகமங்களில் தேவதையைச் சொல்லும்போது, விதி வாக்யத்தில் சொன்ன சொல்லையே சொல்லவேண்டும். அதே அர்த்தமுள்ள மற்ற சொற்கள் பாதிக்கப்படுகின்றன. நிகமம் என்ருல், [illegible] என்பது முதலான தேவதையைச் சொல்லும் வாக்யங்கள். அக்னிக்கு அநேகம் பெயர்களுண்டு:—அக்னி, பாவகன், சுசி என்று. விதி வாக்யத்தில் அக்னி என்கிற சொல் இருக்கிறது. ஆனாலும் எந்தச் சொல்லைக்கொண்டும் அவனைச் சொல்லலாமா ? அல்லது அக்னி என்பதைக் கொண்டு தானு என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம் : சொல்லின் ப்ரயோஜநம் ஓர் அர்த்தத்தைத் தெரியப்படுத்துவது. அந்த வேலையை அதே அர்த்தமுள்ள எந்தச் சொல்லும் செய்யும். என் என்ருல் சொற்களுக்கு எழுத்துக்கள் பேத மிருந்தாலும், அர்த்தத்தில் பேதமில்லை. ஆகையால் எந்தச் சொல்லாலும் தேவதையைச் சொல்லலாம்.

ஸித்தாந்தம் : இது கூடாது. எந்த இடத்தில் அர்த்தத்தைக் கொண்டே ஒரு வேலை செய்யப்படுகிறதோ ; அங்கே சொல்லின் ப்ரயோஜநம் அர்த்தத்தைத் தெரிவிப்பது. எந்த இடத்தில் ஒரு குறித்த சொல்லினலேயே வேலை ஆகவேண்டியதோ, அங்கே அந்த வேலையின் ஸம்பந்தமிருப்பதற்காக அந்தச் சொல்லாலே சொல்லவேண்டியது. விதியில்லாமல் யாகத்துக்கும் தேவதைக்கும் ஸம்பந்த முண்டாகாது. இப்படி விதி உண்டாகும் ஸம்பந்தம் விதியிலிருக்கும் சொல்லால் தான் ஏற்படுகிறது. ஆகையால் விதியிலிருக்கும் சொல்லுக்கு வேலையின் ஸம்பந்த மிருக்கிறது. ஆகையாலே தான் "தேவதை யாகத்தைச் செய்வித்தது", "தேவதைக்கு இந்த ஹவிஸ் கொடுக்கப்பட்டது", "தேவதையின் உயர்வின் பின் நானும் உயர்வை யடைகிறேன்" என்கிற வாக்கியங்களில் தவாமல் விதி வாக்யத்திலிருக்கும் தேவதையின் பெயர் சொல்லப்படுகிறது. எப்படி

யென்ருல் "[illegible]" "[illegible]", "[illegible]", "[illegible]" "[illegible]" "[illegible]" என்று சொல்லப்படுகின்றன. உலகத்திலும் இதைப் பார்க்கலாம். ஒருவனுக்கு அதிக கௌரவம் உண்டுபண்ண ராஜாவின் சபையில் அவனை ஆசார்யன் என்றும், உபாத்யாயன் என்றும் சொல்லுகிருர்கள். தாயார், தகப்பன்; அம்மான் முதலானவர்களை இந்த ஸம்பந்தத்தை காண்பிக்கும் சொற்களைக்கொண்டு கூப்பிடுகிருர்கள். இதனல் என்ன ஸந்தோஷ முண்டாகிறதோ, அந்த ஸந்தோஷம் அவர்கள் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடுவதால் உண்டாகாது. ஸந்தோஷ மில்லாமை மாத்ரமன்று, அவர்கள் கோபித்தும் கொள்வார்கள். அப்படியே இங்கேயும்.

சாஸ்த்ர தீபிகைப்படி ஸித்தாந்தம் :—விதிவாக்யமானது அர்த்தத்தைத்தான் சொல்லுகிறது. அதைச் சொல்லி நிற்காமல் தேவதையின் பெயரைச் சொல்லும்படி விதிக்கிறது. எந்தச் சொல்லைச் சொல்லுகிறது என்ருல் விதிவாக்யத்திலிருக்கும் சொல்லானது கிட்ட இருக்கிறது. அதை விட்டு விட்டு வேறு சொல்லைத் தேடுவதற்கு நியாயமில்லை. ஆகையால் விதிவாக்யத்திலிருக்கும் சொல்லையே சொல்லவேண்டும்.

விதிவாக்யமானது சொல்லைச் சொல்லும்படி ஒருவனைக் கட்டாயம் ஏவவேண்டும். சொல்லின் அர்த்தத்தை தேவதை யென்று முதலில் விதித்துச் சொல்லைச் சொல்லவேண்டும் என்று பிறகு விதிப்பானேன் ? முதலிலேயே சொல்லானது வாக்யத்தின் அர்த்தத்தில் ஸம்பந்தப்பட்டதாக விதிக்கப்படுகிறது. இதனலே சொல்லின் அர்த்தம் தேவதையாகிறது. அதை வாக்யம் அநுவாதம் பண்ணுகிறது. எந்தச் சொல்லைச் சொல்லி ஹவிஸ் கொடுக்கப்படுகிறதோ, அந்தச் சொல்லின் அர்த்தம் தேவதை. ஆகையால் சொல்லைச் சொல்லி, அதையே விதிப்பதனலே, அதே அர்த்தமுள்ள வேறுசொற்களைச் சொல்லலாமா ? என்பதற்கு இடமேயில்லை. (சா. 707).

ஸ்ரீ:

க்ரந்த விமர்சம்

ஸ்ரீ பாஷ்யம்:—பகவத் ராமாநுஜ முநிகளால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள இந்த க்ரந்தம் இப்பொழுது அந்யாத்ருசமான ஒரு ப்ரகாரத்துடன் அச்சுப் பதிப்பிக்கப் பெற்று வருகின்றது. இதன் முதல் இரண்டு ஸஞ்சிகைகளை நாம் வரப்பெற்றோம். மதிராஸ் பச்சையப்பன் காலேஜ் ஸம்ஸ்க்ருத ப்ரவசந கர்த்தாவாகிற பண்டித ஸ்ரீ. உப. வி. அநந்தாசார்ய ஸ்வாமியும் கவர்ண்மெண்ட் ஓரியண்டல் புஸ்தகசாலை ப்ரதாந பண்டிதரான ஸ்ரீ. உப. வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியும் இதன் ப்ரவர்த்தகர்கள். இதன் விசேஷித்த ப்ரகாரம் என்னவென்றால், இதற்குமுன் அச்சில் ப்ரசுரிக்கப்பட்டுள்ள வ்யாக்யாநங்களுடன்கூட, இதுபர்யந்தம் அச்சுப் பதிப்பிக்கப்படாமல் கேவலம் தால பத்ரங்களில் மாத்ரம் எழுதப்பட்டிருந்த மற்றும் சில சிறந்த வ்யாக்யாநங்களுடனும் இது வெளியிடப்பட்டு வருகின்றது என்பதுதான். இன்னும் ஸ்வல்ப காலம் இந்த வ்யாக்யாநங்களை ஒருவரும் வெளியிட ப்ரயத்நப்படாமல் இருக்கும் பக்ஷத்தில், இவைகளுக்கு ஆத்யந்திக லோபம் நேர்ந்துவிடும் என்பதில் ஆக்ஷேபமில்லை. அப்படிப்பட்ட லோபம் வராமல் இவைகளை ஸம்ரக்ஷிக்க முயலும் இந்த உபகாரகர்களிடம் நாம் மிகவும் நன்றி அறிவுள்ளவர்களாக இருக்கின்றோம். இவர்களுடைய ப்ரயத்நம் சீக்கிரத்திலேயே ஸபலமாக முடிவு பெறவேண்டும் என்பதே நம்முடைய ஹார்த்தமான ப்ரார்த்தனை

‘ஸ்ரீ பாஷ்யம்’ என்பது எளிதில் எல்லாராலும் படித்து உள்ளபடி அறியப்படக்கூடிய க்ரந்தமன்று. அதில் மறைந்து கிடக்கும் அர்த்த விசேஷங்களெல்லாம் நமது ஆசார்யர்களால் எழுதப்பெற்றுள்ள வ்யாக்யாநங்களைக் கொண்டே அறியப்படத்தக்கவை. ஸ்ரீ பாஷ்யத்திற்கு, “ச்ருத ப்ரகாசிகை” என்றும், “ச்ருத தீபிகை” என்றும் ஸ்ரீ ஸுதர்சந பட்டாரகரால் எழுதப்பட்டிருக்கும் இரண்டுரைகளும், “முனி பாவ ப்ரகாசிகை” என்று ஸ்ரீ ரங்கராமாநுஜ ஸ்வாமியால் எழுதப்பட்டுள்ள ஒரு உரையும், “நய ப்ரகாசிகை” என்று ஸ்ரீ மேகநாதாரி என்பவரால் எழுதப்பட்டுள்ள ஒரு உரையும், “தத்வடீகை” என்று ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஒரு உரையும், ஆக ஐந்து உரைகள் உண்டு. இவைகளைத் தவிர்த்து, ஒவ்வொரு அதிகரணத்திலும் விசாரிக்கப்பட்டுள்ள விஷயங்களைப் பத்யரூபமாக ஸங்க்ரஹித்து, ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் “அதிகரண ஸாராவளி” என்னும் ஒரு க்ரந்தத்தை அநுக்ரஹித்திருக்கிறார். ஸ்ரீ வரதநாராயண பட்டர் என்னும் மற்றுமொரு ஆசார்யர், “ந்யாயஸுதர்சநம்” என்று ஸூத்ரத்திற்கே ஒரு வ்யாக்யாநத்தைச் செய்திருக்கிறார். அது பெரும்பாலும் ஸ்ரீ பாஷ்யத்தையே அநுஸரித்து எழுதப்பட்டிருப்பதால், அதை ஸ்ரீ பாஷ்யத்தின் வ்யாக்யாநங்களுடன் சேர்ப்பதற்கு ந்யாயமுண்டு. மூல பாவ ப்ரகாசிகை என்னும் ஸ்ரீ பாஷ்ய வ்யாக்யாநத்தை எழுதின ஸ்ரீ ரங்கராமாநுஜ ஸ்வாமி, ‘பாவ ப்ரகாசிகை’ என்று ஸ்ரீ ஸுதர்சந பட்டாரகருடைய ச்ருத ப்ரகாசிகைக்கு ஒரு வ்யாக்யாநத்தையும்

எழுதி இருக்கிறார். அந்த ஸ்வாமியே “விஷய வாக்ய தீபிகை” என்று, ஸ்ரீ பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டுள்ள உபநிஷத் வாக்யங்களுக்கு, ஸ்ரீ பாஷ்யத்தை அநுஸரித்து ஒரு உரையும் எழுதி இருக்கிறார். ஆக ஸ்ரீ பாஷ்ய ஸம்பந்தங்களாகப் பத்து வ்யாக்யாநங்கள் இருக்கின்றன. இவைகளுள் தத்வடீகை என்னும் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய வ்யாக்யாநத்தைத் தவிர்த்து மற்றை ஒன்பது க்ரந்தங்களும் பூர்ணமாகவே இப்பொழுது அகப்படுகின்றன; தத்வடீகை மாத்ரம் பூர்ணமாக அகப்படவில்லை. இவைகளுள் ச்ருத ப்ரதீபிகை, நய ப்ரகாசிகை, ந்யாய ஸுதர்சநம், மூல பாவ ப்ரகாசிகை ஆக இந்த நாலு க்ரந்தங்களும் இது பர்யந்தம் ஒரு லிபியிலும் அச்சுப் பதிப்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இப்பொழுது இந்தப் பத்து வ்யாக்யாநங்களுடனும் ஸ்ரீ பாஷ்யம் நன்கு பரிசோதிக்கப்பெற்று அச்சுப் பதிப்பிக்கப்படுகின்றது என்பது மிகவும் ஸந்தோஷகரமான கார்யம். இந்தக் கைங்கர்யத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் பெரியோர்கள் விஷயத்தில் நாம் மிகவும் நன்றியறிவு உள்ளவர்களாக இருக்கிறோம்.

இது, மாஸ ஸஞ்சிகையாக வெளியிடப்படுகின்றது. 50 அல்லது 60 ஸஞ்சிகைகளில் இது பூர்த்தி பெறலாம்; அதாவது எவ்வித விளம்பமும் இராமல் ப்ரதி மாஸமும் ஸஞ்சிகைகள் வெளிவரும் பக்ஷத்தில் சற்றேறக்குறைய ஐந்து வருஷ காலத்தில் இது முடிவு பெறுமென்று சொல்லக்கூடும். இந்த ப்ரயத்நத்தை ஸ்ரீ சரண்யன் எவ்வித விக்நமுமின்றிக்கே தலைக் கட்டிவைக்க வேண்டுமென்பதே நமது ப்ரார்த்தனை. இந்த ஸஞ்சிகைகள் கிடைக்குமிடம்:—“ஸ்ரீ. உப. ஏ. ஆர். கிருஷ்ணமாசாரியர் மதிராஸ் ஸம்ஸ்க்ருத புஸ்தகசாலை, கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம், மதிராஸ்.” ஒவ்வொரு ஸஞ்சிகையின் விலை அணா 8.

ஸ்ரீ:

ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபா, திருநாராயணபுரம்

முப்பத்தைந்தாவது வார்ஷிக மஹாநாடு

ஷை ஸபையின் முப்பத்தைந்தாவது வார்ஷிக மஹாநாடு வழக்கம்போல் மேல்கோட்டையில் ஸ்ரீ திருநாராயணன் திருவடிவாரத்தில் சென்ற ஏப்ரல் மீ, 26உ யன்று மாலை 3-30 மணிக்கு நடைபெற்றது. பூர்வோத்தர மீமாம்ஸா பூஷண வித்யாநிதி ஸ்ரீ. உப. தேவசிகாமணி ராமாநுஜாசார்ய ஸ்வாமி அக்ராஸநம் வஹித்தார். மேல்கோட்டை ஸம்ஸ்க்ருத கலாசாலை ப்ரின்ஸிபால் மஹா வித்வான் ஸ்ரீ. உப. T. A. எம்பெருமானார் ஸ்வாமி முதலிய பண்டித சிகாமணிகளும், மற்றும் பல பெரிய உத்யோகஸ்தர்களும், ப்ரபுக்களும் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

கௌரவ கார்யதர்சி ராவ்பஹதூர் ஸ்ரீமான் R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி அறிக்கைப் பத்ரம் படிக்க, பின்னர் வழக்கம்போல் ஷை கார்ய தர்சி, கலாசாலை ப்ரின்ஸிபால், இவர்களது மேற்பார்வையில் சென்ற ஏப்ரல் மீ, 22உ முதல் 26உ வரை மேல்கோட்டையில் 4 தினங்களாக ஷை ஸபையாரால் நடத்தப்பெற்ற பரீக்ஷைகளில் தேறியவர்களுக்கு அக்ராஸநாதிபதி அவர்கள் பரிசுகள் வழங்கினர். மேல்கோட்டை, மைஸூர், ஸ்ரீரங்கப்பட்டணம், நஞ்சங்கோடு, சாந்திக்ராமம், மல்லேசுரம், ஸ்ரீபெரும்பூதூர், காரப்பங்காடு, காஞ்சீபுரம் முதலிய பல இடங்களிலிருந்து பரீக்ஷை கொடுக்கவந்திருந்த 67 பேர்களும் பரீக்ஷிக்கப்பெற்று 61 பேர்கள் தேறினர். சிலர் வேதாந்தம் வேதம் திவ்யப்ரபந்தம் முதலியவற்றில் முதல் வகுப்பிலும், மற்றும் சிலர் மத்திம வகுப்பிலும், ஏனையோர் கடை வகுப்பிலும் தேறினர். ஷை ஸபையாரால் ஒன்று மல்லேசுரத்திலும், மற்றொன்று சாந்திக்ராமத்திலுமாக இரண்டு பாடசாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

5 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் மதிப்புள்ள பல பரிசுகளும் விசேஷ ஸம்மானங்களும் சேர்ந்து மொத்த பரிசுத் தொகை ரூ. 148. திவான்பஹதூர் ஸ்ரீமான் M. O. பார்த்தஸாரதி ஐயங்கார் தர்மநிதியின் ட்ரஸ்டிகள் இவ்வருஷம், ஒவ்வொன்றும் 30 ரூ. மதிப்புள்ள இரண்டு உத்தம ஸம்மாநத்துக்காக ரூ. 60 அனுப்பினர். ஸ்ரீமான் திருமலாசார்யர் பரிசு ரூ. 25 திவ்யப்ரபந்த வகுப்பில் தேறியவர்க்கு அளிக்கப்பட்டது. ஸ்ரீமான் K. V. தேசிகாசாரியர் பரிசு ரூ. 20-ம், ஸ்ரீமான் கடாம்பி ஸ்ரீநிவாஸாசாரியர் பரிசு ரூ. 25-ம், முறையே வேதாந்தத்திலும் வேதத்திலும் முதன்மையாகத் தேறினவர்க்கு வழங்கப்பட்டன. ஸ்ரீமான் L. C. ஸுந்தரவரதாசார்யர் பரிசு ரூ. 5-ம், ஸ்ரீமதி பண்டிதை A. ஸுந்தரம்மா பரிசு ரூ. 5-ம், முறையே கடைவகுப்பில் முதன்மையாகத் தேறினவர்க்குக் கொடுக்கப்பட்டன. மொத்தம் ரூ. 135 ஷை ஸபைப் பரீக்ஷைகளுக்காக மாணவர்களைப் பயில்வித்த ஐந்து உபாத்யாயர்க்கும், ஒரு பாடசாலைக்கும் ஸம்மாநமாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

ஸ்ரீ பரகால ஸ்வாமியும், மைஸூர் மஹாராஜா அவர்களும், மைஸூர் முஜரை இலாகாவும், சென்னையிலுள்ள ஸ்ரீமதி மண்டயம் அலமேலம்மா தர்மநிதி ட்ரஸ்டியும் வழக்கம்போல் நன்கொடை அளித்தனர். இது தவிர, அக்ராஸநரும் பல ப்ரபுக்களும் புத்தகமும் பொருளும் வழங்கினர்.

பரிசளிப்பு முடிவுபெற்றதும், ஸ்ரீமத் ராமாநுஜனது திவ்ய சரித்திரத்தைப்பற்றி வித்வான் ஆத்மகூர் ஸ்ரீமான் தீக்ஷாசார்யர் அவர்களாலும், அக்ராஸநாதிபதி அவர்களாலும் உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. வந்தநோபசார வாழ்த்துரைகளுடன் சுமார் 5-30 மணிக்கு நிகழ்ச்சிமுறை முடிவுபெற்றது.

மல்லேசுரம் }
28—4—36 }

நரஸிம்மாசார்யர்
கௌரவ கார்யதர்சி.

சுபமஸ்து ஷஷ்டிஃ கண்டஃ

யதக்நே ரோஹிதம் ரூபம் தேஜஸஸ்தத்ரூபம் யச்சுக்லம் ததபாம் யத்க்ருஷ்ணம் ததந்நஸ்யாபாகாதக்நேரக்நித்வம் வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் த்ரீணி ரூபாணீத்யேவ ஸத்யம்.

யதாதித்யஸ்ய ரோஹிதம் ரூபம் தேஜஸஸ்தத்ரூபம் யச்சுக்லம் ததபாம் யத்க்ருஷ்ணம் ததந்நஸ்யாபாகாதாதித்யாதாதித்யத்வம்

நான்காவது கண்டம்.

கீழ்க்கண்டத்தில் பரதேவதை, தேஜஸ் ஜலம் ப்ருதிவி என்கிற மூன்று மஹாபூதங்களை ஸ்ருஷ்டித்து, அவைகளில் ஒவ்வொன்றையும் மற்ற இரண்டு பூதங்களின் நான்காவது பாகங்களோடு சேர்க்கையாகிற த்ரிவ்ருத்கரணத்தைச் செய்து, த்ரிவ்ருத்க்ருதமான அந்த பூதங்களைக்கொண்டு தேவ மநுஷ்யாதி ரூபங்களையும் நாமங்களையும் ஸ்ருஷ்டித்தது. 'ஒவ்வொரு பூதமும் த்ரிவ்ருத்க்ருதமா யிருக்கையை உதாஹரணத்தால் காட்டுகிறேன் கேள்' என்று பிதா புத்ரனைக் குறித்துச் சொன்னர். இந்த கண்டத்தால் முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்டதாகச் சொன்ன தேஜஸ் என்கிற மகா பூதத்தினுடைய த்ரிவ்ருத்கரண ப்ரகாரத்தை அக்நி முதலான தைஜஸ பதார்த்தங்களில் காட்டுகிறார்.

யதக்நே—ந்நஸ்ய—அக்நியினுடைய சிவப்பான அம்சம் தேஜஸ்ஸின் அம்சம்; வெளுப்பான அம்சம் ஜலத்தின் அம்சம்; கறுப்பான அம்சம் ப்ருதிவியின் அம்சம்; என்று இவ்வாக்யத்தின் அர்த்தம். அக்நியில் சிவப்பு வெளுப்பு கறுப்பு ஆகிய மூன்று ரூபங்கள் தென்படுகின்றன. அவைகளில் சிவப்பாய்த் தென்படுவது த்ரிவ்ருத்கரணம் செய்யப்படாத தேஜஸ்ஸினுடைய அம்சம்; வெளுப்பாய்த் தென்படுவது த்ரிவ்ருத்கரணம் செய்யப்படாத ஜலத்தின் அம்சம். கறுப்பாய்த் தென்படுவது த்ரிவ்ருத்கரணம் செய்யப்படாத ப்ருதிவியின் அம்சம். மஹாபூதங்களில் தேஜஸ் சிவந்தது. ஜலம் வெளுப்பானது. ப்ருதிவி கறுப்பானது. ஒன்றுடனொன்று கலந்த இந்த மூன்றினுடைய ஸமுதாயம் அக்நியாக ஆனபடியால், அதில் மூன்று அம்சம் தென்படுகிறது என்று தாத்பர்யம். இப்படி தேஜோ ஜல ப்ருதிவிகள் மூன்றும் சேர்ந்து அந்த ஸமுதாயம் அக்நியா யிருக்கிறது

𑌵𑌾𑌚𑌾𑌰𑌮𑍍𑌭𑌣𑌂 𑌵𑌿𑌕𑌾𑌰𑍋 𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑌂 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑍀𑌤𑍍𑌯𑍇𑌵 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍.

𑌯𑌦𑌗𑍍𑌨𑍇 𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌰𑍂𑌪𑌂............𑌯𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌤𑌦𑌨𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑌾𑌗𑌾𑌦𑌗𑍍𑌨𑍇𑌰𑌗𑍍𑌨𑌿𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾𑌚𑌾𑌰𑌮𑍍𑌭...𑌸𑌤𑍍𑌯𑌂 । 𑌯𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌤𑍇𑌜𑌸𑌸𑍍𑌤......𑌤𑌦𑌨𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑌾𑌗𑌾𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾𑌚𑌾...𑌸𑌤𑍍𑌯𑌮𑍍.

𑌏𑌤𑌦𑍍𑌧 𑌸𑍍𑌮 𑌵𑍈 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸 𑌆𑌹𑍁𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌮𑌹𑌾𑌶𑌾𑌲𑌾 𑌮𑌹𑌾𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌾 𑌨 𑌨𑍋𑌽𑌦𑍍𑌯 𑌕𑌶𑍍𑌚𑌨𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑌮𑌤𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑍁𑌦𑌾𑌹𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍀𑌤𑌿 𑌹𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍁𑌃.

என்று தன் ஸித்தாந்த மானஸத்கார்ய வாதத்தைச் சொல்லி அஸத்ய கார்ய வாதத்தைக் கண்டிக்கிறார். (𑌅𑌪𑌾𑌗𑌾𑌦𑌗𑍍𑌨𑍇𑌰𑌗𑍍𑌨𑌿𑌤𑍍𑌵𑌂) மூன்றும் சேர்ந்து அக்நியா யிருக்கிறபடியால் அஸத்கார்யவாதிகள் இம்மூன்றைக் காட்டிலும் வேறாக ஒப்புக்கொள்ளும் அக்நியினின்றும் அக்நித்வம் போய் விட்டது. இம்மூன்றைக் காட்டிலும் வேறுபட்டதான அக்நி என்னும் கார்யம் கிடையாது என்று தாத்பர்யம். இதனால் காரணங்களே அவஸ் தாந்தரத்தை யடைந்து கார்யமாக ஆகின்றன. ஆகையால் காரணத்தைக் காட்டிலும் கார்யம் வேறு என்னும் அஸத்கார்யவாதம் கண்டிக்கப்பட்ட தாகிறது.

இப்படி தேஜோ ஜல ப்ருதிவிகள் கலப்பினால் அக்நித்வாவஸ்தையை அடைந்திருக்கின்றனவென்பதை உபபாதிக்கிறார். (𑌵𑌾𑌚𑌾𑌰𑌂.....𑌸𑌤𑍍𑌯𑌂) 'அக்நியால் பாகம் பண்ணு ; அக்நியில் ஹோமம் செய்' இவை முதலான லௌகிகவைதிக வ்யவஹாரங்களும் பாக ஹோமாதி கார்யங்களும் நடப்ப தற்காக தேஜோ ஜல ப்ருதிவிகளால் அக்ந்யவஸ்தையாகிற விகாரமும் அக்நி யென்கிற பெயரும் அடையப்படுகிறது. இந்த வ்யவஹாரங்கள் நடப்பதற் காக ப்ரஹ்மம் மூன்றையும் த்ரிவ்ருத்கரணம் செய்தது என்று தாத்பர்யம். இந்த அக்நியென்பது தேஜோ ஜல ப்ருதிவிகளாகிற இம்மூன்று தான் என்கிற வசநமே யதார்த்தம். இம்மூன்றைக்காட்டிலும் அக்நி யென்கிற கார்யம் வேறு என்கிற வசநம் அயதார்த்தம் என்று தாத்பர்யம். மேல் '𑌯𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯' இத்யாதி வாக்யங்களுக்கும் அர்த்தங்களும் தாத்பர் யங்களும் கண்டுகொள்வது. (𑌏𑌤𑌦𑍍𑌧 𑌸𑍍𑌮 𑌵𑍈—𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍀𑌤𑌿) 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍—

𑌯𑌦𑍁 𑌰𑍋𑌹𑌿𑌤𑌮𑌿𑌵𑌾𑌭𑍂𑌦𑌿𑌤𑌿 𑌤𑍇𑌜𑌸𑌸𑍍𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍁𑌃 । 𑌯𑌦𑍁 𑌶𑍁𑌕𑍍𑌲𑌮𑌿𑌵𑌾𑌭𑍂𑌦𑌿𑌤𑍍𑌯𑌪𑌾𑌂 𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍁𑌃 । 𑌯𑌦𑍁 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌿𑌵𑌾𑌭𑍂𑌦𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍁𑌃 ॥

𑌯𑌦𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌿𑌵𑌾𑌭𑍂𑌦𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌸𑌾𑌮𑍇𑌵 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌸 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍁𑌃 ॥

கார்யம் காரணத்தைக்காட்டிலும் வேறன்று என்னும் அம்சத்தை அறிந்த வர்களாய், பெரிய க்ருஹஸ்தர்களாயும் ஸர்வ வேதங்களேயும் அறிந்த முன் னோர்கள் பின்வருமாறு சொன்னார்கள். இந்த தேஜோ ஜல ப்ருதிவிகளே அறிந்த நமக்குத் தெரியாததான தொரு வஸ்துவை ஒருவரும் சொல்லப் போவதில்லை என்று (𑌹𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌦𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍁𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌸𑌮𑌾𑌸 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿-𑌦𑌾𑌂𑌚𑌕𑍍𑌰𑍁𑌃) அந்தப் பெரியோர்கள் தேஜோ ஜலப்ருதிவிகளால் சிவந்ததைத் தேஜஸ்ஸின் அம்சமென்றும் வெண்மையானதை ஜலத்தின் அம்சமென் றும் கறுப்பானதை ப்ருதிவியின் அம்சமென்றும் எது நமக்குத் தென் படாததோ அவைகளெல்லாம் இந்த தேஜோ ஜல ப்ருதிவிகளுடைய ஸமு தாயம் என்றும் அறிந்தார்கள்.

முன்னோர்கள் தேஜஸ் ஜலம் ப்ருதிவி இம்மூன்றைக்கொண்டு ஒவ் வொரு வஸ்துவிலும் சிவந்த அம்சம் தேஜஸ் என்றும், வெளுத்த அம் சம் ஜலமென்றும், கறுத்த அம்சம் ப்ருதிவி யென்றும், இந்த மூன்று அம் சங்களும் அக்நியிற்போலே வேறுவேறாகத் தென்படாத இதர வஸ்துக்க ளும் இம்மூன்றின் ஸமுதாயம் என்றும் அறிந்தபடியால் நமக்குத் தெரி யாததான வஸ்துவை ஒருவரும் சொல்லமுடியாதென்று சொன்னார்கள் என்று தாத்பர்யம்.

தேஜோ ஜல ப்ருதிவிகளாகிற இம்மூன்று மஹாபூதங்களே த்ரிவ்ருத் கரணம் செய்து, அவைகளேக்கொண்டு தேவ மநுஷ்யாதி ரூபங்கள் ஸ்ருஷ் டிக்கப்பட்டிருக்கின்றனவென்பதை அக்நி ஆதித்யாதி த்ருஷ்டாந்தங்களேக் கொண்டு காட்டி(னார்). இவ்வளவால் ப்ரபஞ்சத்துக்கு ப்ரஹ்ம கார்ய த்வத்தை நிரூபித்தார். இப்போது சேதநனுக்கு ஸ்வரூபத்தில் விகார மில்லேயாகையால் அசேதநத்துக்குப்போல் சேதநனுக்கு ஸ்வரூபத்தால் ப்ரஹ்ம கார்யத்வம் இல்லே. தன் சரீரத்தின் வழியாகவே ப்ரஹ்ம கார் யத்வம் என்னும் அபிப்ராயத்தைக்கொண்டு சேதநனுடைய சரீரத்துக்கு

யயா து வலு ஸொஜெ்யாஹிஸெ் தெவதாঃ வாறூஷம் ஹாவு த்ரிவுத்ரிவுதெகெகா ஹவதி தடு விஜாநீஹீதி ।

ஐதி ஊாதொமெூ வதுறும்ঃ வணுঃ.

சுமவம்வஃ வணுঃ

அநுஜிதம்தூயா வியீயதெ தவூ யஷவிஷெயா து ஷதூரீஷம் ஹவதி யொஃயூஸவஷநாம்ஷம் யொணீஷவநநঃ.

ப்ரஹ்ம கார்யமான தேஜோ ஜல ப்ருதிவிகளாகிற மூன்று மஹா பூதங்களின் கார்யத்வத்தை நிரூபிக்கத் தொடங்குகிறார்.

(யயா து வலு... ..விஜாநீஹீதி) இந்த தேஜோஜலப்ருதிவிகளாகிற த்ரிவ்ருத்க்ருதமான மூன்று மஹாபூதங்களும் சேதநனுடைய சரீரத்தை யடைந்து, ஒவ்வொரு பூதமும் மூன்று மூன்று ப்ரகாரமாக ஆகிற ரீதியைச் சொல்லுகிறேன். அதை யென்னிடமிருந்து தெரிந்துகொள்.

சாந்தோக்யம் நான்காவது கண்டம் முற்றிற்று.

ஐந்தாவது கண்டம்.

சேதநனால் புஜிக்கப்படும் ப்ருதிவீ விகாரமான வஸ்துக்கள் (அந்நசாகாதிகள்) ஜாடராக்நியினால் பக்வமாய் மூன்று ப்ரகாரமாகச் செய்யப்படுகின்றன. அந்த ஆஹாரத்தின் ஸ்தூலமான அம்சம் புரீஷமாயும், மத்யமமான (நடுத்தரமான) அம்சம் மாம்ஸமாயும், ஸூக்ஷ்மமான அம்சம் மனஇந்திரியத்துக்கு வ்ருத்தியைச் செய்கிறதாயும் ஆகிறது. பாநம் பண்ணப்பட்ட ஜலமானது மூன்று ப்ரகாரமாய்ச் செய்யப்படுகிறது. அதின் ஸ்தூலாம்சம் மூத்ரமாயும், நடுத்தரமான அம்சம் ரக்தமாகவும், ஸூக்ஷ்மாம்சம் ப்ராணனுக்கு வ்ருத்திகரமாயும் ஆகிறது. புஜிக்கப்பட்ட நெய், எண்ணெய் முதலிய தைஜஸ வஸ்துக்கள் மூன்றுவிதமாய்ச் செய்யப்படுகின்றன. அவற்றின் ஸ்தூலாம்சம் அஸ்தியாயும், மத்யமமான அம்சம் மஜ்ஜையாயும், ஸூக்ஷ்மமான அம்சம் வாகிந்த்ரியத்துக்குப் புஷ்டிகரமாயும் ஆகிறது. அந்நமயஹி ஸொம்ய ......வாகிதி-சேதநனுடைய மன இந்த்ரிய

ஆபঃ பீதாஸ்த்ரேதா வியீயந்தெ தாஸாம் யஸ்ஸவிஷ்டொ யா தூஷந்தம் ஹவதி யொ மத்யமஸ்தல்லொஹிதம் யொஃணிஷ்ஷஸ ப்ராணঃ ।

தெஜொஃஶிதம் த்ரேதா வியயதெ தஸ்ய யஸ்ஸவிஷ்டொ யா தூஸ்ஸஸ்தி ஹவதி யொ மத்யமஸ்ஸ மஜ்ஜா யொணிஷ்ஷஸா வாக் ,

அந்நமயஹி ஸொம்ய மந ஆபொமயঃ ப்ராணஸ்தெஜொமயீவாகிதி ஹூய ஏவ மா ஹகவாந் விஜ்ஞாபயத்விதி ததாஸொம்யெதி ஹொவாச

ஐதி வம்சஃ வணுঃ

மானது சேதநன் புஜிக்கும் பார்த்திவமான ஆஹாரத்தால் புஷ்டியடைந்து ஸ்வகார்யத்தில் சக்தமாகிறது. ப்ராணமானது சேதநனால் பாநம் பண்ணப்படும் ஜலத்தால் புஷ்டியடைந்து, தன் கார்யத்தில் சக்தமாகிறது. வாகிந்த்ரியமானது சேதநனால் புஜிக்கப்படும் நெய் முதலிய தைஜஸ பதார்த்தங்களால் புஷ்டியை யடைந்து, தன் கார்யத்தில் சக்தமாகிறது. இவ்வளவால் மலமூத்ராஸ்திமயமாயும், மாம்ஸ ரக்த மஜ்ஜா மயமாயும் மந: ப்ராண வாகிந்த்ரியங்களுடைய புஷ்டியோடும் கூடின சேதநனுடைய சரீரத்தில் புரீஷ மாம்ஸங்களும், மநஸ்ஸுக்குப் புஷ்டிகரமான ஒரு பூதத்தின் அம்சமும் இம் மூன்றும் ப்ருதிவியின் கார்யம். மூத்ரமும், ரக்தமும், ப்ராணத்துக்குப் புஷ்டிகரமான பூதாம்சமும், இம்மூன்றும் ஜலத்தின் கார்யங்கள். அஸ்தி, மஜ்ஜை வாகிந்த்ரியத்துக்கு புஷ்டிகரமான பூதாம்சம் இவை மூன்றும் தேஜஸ்ஸின் கார்யம். ஆக சேதநனுடைய மாம்ஸாஸ்த்யாதி மயமான சரீரம் பூதத்ரய கார்யம். இப்படி பூதத்ரய கார்யமான சரீரத்தின் வழியாகச் சேதநனுக்குக் கார்யத்வம் நிரூபிக்கப்பட்டதாகிறது. சரீரத்துக்குப் பூதத்ரய கார்யத்வம் சொன்னதற்கு இதுவே ப்ரயோஜநம். அந்நம் முதலியவற்றின் ஸூக்ஷ்மாம்சங்களின் முன் சொன்னபடியே வெளிக்கிளம்புவதினால் த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு தெரியப்படுத்தவேணும் என்னும் அபிப்ராயத்தால் சிஷ்யன் கேட்கிறார். ஹூய ஏவ மா ஹகவாந் விஜ்ஞாபயத்விதி ததாஸொம்யேதி ஹொவாச—ஆசார்யன் த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு இந்த விஷயத்தை உபபாதிக்கிறேன் கேள் என்று சொல்லுகிறார்.

ஐந்தாவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌷𑌷𑍍𑌠𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃

𑌦𑌧𑍍𑌨𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌥𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑍋𑌽𑌣𑌿𑌮𑌾 𑌸 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌃 𑌸𑌮𑍁𑌦𑍀𑌷𑌤𑌿 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 ।

𑌏𑌵𑌮𑍇𑌵 𑌖𑌲𑍁 𑌸𑍋𑌮𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑍋𑌽𑌣𑌿𑌮𑌾 𑌸 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌃 𑌸𑌮𑍁𑌦𑍀𑌷𑌤𑌿 𑌤𑌨𑍍𑌮𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿 ।

𑌅𑌪𑌾𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌪𑍀𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌽𑌣𑌿𑌮𑌾 𑌸 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌃 𑌸𑌮𑍁𑌦𑍀𑌷𑌤𑌿 𑌸 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌭𑌵𑌤𑌿 ।

𑌤𑍇𑌜𑌸𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑍋𑌽𑌣𑌿𑌮𑌾 𑌸 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌃 𑌸𑌮𑍁𑌦𑍀𑌷𑌤𑌿 𑌸𑌾 𑌵𑌾𑌗𑍍𑌭𑌵𑌤𑌿 ।

𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌨 𑌆𑌪𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑍀 𑌵𑌾𑌗𑌿𑌤𑌿 । 𑌭𑍂𑌯 𑌏𑌵 𑌮𑌾 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑌤𑍍𑌵𑌿𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌤𑌿 𑌹𑍋𑌵𑌾𑌚 ।

𑌇𑌤𑌿 𑌷𑌷𑍍𑌠𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃

ஆறாவது கண்டம்.

(𑌦𑌧𑍍𑌨𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯......𑌸𑌰𑍍𑌪𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿) தயிரைக் கடைந்தால் அதின் ஸூக்ஷ்மாம்சம் வெளிக்கிளம்பி நெய்யாவதுபோல், சேதநனால் புஜிக்கப்படும் அந்நம் ஜாடராக்நியால் பசநம் பண்ணப்படும்போது அதின் ஸூக்ஷ்மாம்சம் வெளிக்கிளம்பி மந இந்த்ரியத்தோடு கலந்து அதற்குப் புஷ்டிகரமாகிறது.

இப்படி ஜலத்தின் ஸூக்ஷ்மாம்சமும், தைஜஸமான நெய் முதலான பதார்த்தங்களின் ஸூக்ஷ்மாம்சமும் வெளிக்கிளம்பி, முறையே ப்ராணத்தோடும் வாகிந்திரயத்தோடும் சேர்ந்து முறையே ப்ராணத்துக்கும் வாகிந்த்ரியத்துக்கும் புஷ்டிகரமாகிறது. அந்நத்தின் ஸூக்ஷ்மாம்சத்தால் மநஸ்ஸுக்குப் புஷ்டியுண்டாகும் ப்ரகாரத்தை நிரூபிக்கவேண்டுமென்று சிஷ்யன் கேட்க ஆசார்யன் அப்படியே யென்று சொன்னார்.

ஆறாவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃

𑌷𑍋𑌡𑌶𑌕𑌲𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌾𑌹𑌾𑌨𑌿 𑌮𑌾𑌶𑍀𑌃 𑌕𑌾𑌮𑌮𑌪𑌃 𑌪𑌿𑌬𑌾𑌪𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌨𑌪𑌿𑌬𑌤𑍋 𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌤𑍍𑌸𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 ॥

𑌸 𑌹 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌾𑌹𑌾𑌨𑌿 𑌨𑌾𑌶𑌾𑌥 𑌹𑍈𑌨𑌮𑍁𑌪𑌸𑌸𑌾𑌦 𑌕𑌿𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 𑌭𑍋 𑌇𑌤𑍍𑌯𑍃𑌚𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑍀𑌤𑌿 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌨 𑌵𑍈 𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍋 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌯𑌥𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑍈𑌕𑍋𑌽𑌙𑍍𑌗𑌾𑌰𑌃 𑌖𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑌰𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍇𑌨 𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌬𑌹𑍁 𑌦𑌹𑍇𑌦𑍇𑌵𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌤𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌨𑌾𑌂 𑌕𑌲𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌾 𑌕𑌲𑌾𑌤𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌯𑍈𑌤𑌰𑍍𑌹𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌨𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌯𑌶𑌾𑌨 𑌅𑌥 𑌮𑍇 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌯𑌸𑍀𑌤𑌿 ॥

ஏழாவது கண்டம்.

புருஷனுடைய மநஸ்ஸு பதினாறு அம்சமுள்ளது. நீ பதினைந்து நாள் போஜநம் செய்யாமல் இரு. யதேச்சமாய் ஜலத்தைப் பாநம் பண்ணு. ஜலத்தினால் புஷ்டியை யடைந்த ப்ராணமானது நாசத்தை யடையப் போகிறதில்லை என்று பிதா சொல்ல, புத்ரன் 15 நாள் புஜியாமல் இருந்து, பதினாறாவது நாள் பிதாவிடம் வந்து, நான் என்ன சொல்லவேண்டுமென்று கேட்டார். ரிக் யஜுஸ் ஸாமங்களைச் சொல்லென்று பிதா சொல்ல, புத்ரன் எனக்கு வேதங்கள் ஒன்றும் நினைவுக்கு வரவில்லை யென்று சொன்னார். அந்தப் புத்ரனைப் பார்த்துப் பிதா மறுபடியும், பெரியதான அக்நியினுடைய ஒரு பொறி மாத்ரம் அவசிஷ்டமாயிருந்தால், அந்தப் பொறிமாத்திரம் ரொம்பவும் தஹிக்கமாட்டாததுபோல், உன் மநஸ்ஸின் பதினாறு அம்சங்களில் பதினைந்து அம்சங்கள் போய் ஓர் அம்சம் மாத்ரம் மிகுந்திருக்கிறபடியால் உனக்கு வேதங்கள் நினைவுக்கு வரவில்லை. புஜித்துவிட்டு வா. பிறகு நான் கேட்டது உனக்கு நினைவுக்கு வரும் என்று சொன்னார். பிறகு புஜித்துவிட்டு வந்த புத்ரனைப் பிதா சிலவற்றை (வேத பாகங்களை) கேட்க, புத்ரன் அவற்றுக்கெல்லாம் பதில் சொன்னார். பின்னும் பிதா புத்ரனைப் பார்த்து, அக்நியின் ஒரு பொறி மாத்ரம் மிகுந்திருந்தால் அதை

𑌸 𑌹𑌾𑌶𑍍𑌯𑌾𑌥 𑌹𑍈𑌨𑌮𑍁𑌪𑌸𑌸𑌾𑌦 𑌤𑌂 𑌹 𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌹 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍇𑌦𑍇 𑌤𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚 ॥

𑌯𑌥𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌹𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌾𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑍈𑌕𑌮𑌙𑍍𑌗𑌾𑌰𑌂 𑌖𑌦𑍍𑌯𑍋𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌤𑌂 𑌤𑍃𑌣𑍈𑌰𑍁𑌪𑌸𑌮𑌾𑌧𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌵𑌲𑌯𑍇𑌤𑍍𑌤𑍇𑌨 𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌬𑌹𑍁 𑌦𑌹𑍇𑌤𑍍 ॥

𑌏𑌵𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌤𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌨𑌾𑌂 𑌕𑌲𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌾 𑌕𑌲𑌾𑌤𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌭𑍂𑌤𑍍𑌸𑌾𑌨𑍍𑌨𑍇𑌨𑍋𑌪𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌵𑌾𑌲𑍀𑌤𑍍𑌤𑌯𑍈𑌤𑌰𑍍𑌹𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌯𑌨𑍍𑌨𑌮𑌯𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌨 𑌆𑌪𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑍀 𑌵𑌾𑌗𑌿𑌤𑌿 𑌤𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌯 𑌵𑌿𑌜𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌤𑌿 𑌵𑌿𑌜𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌤𑌿.

𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃

உலர்ந்த த்ருணங்களினால் ஜ்வலிக்கப் பண்ணினால் அது பெரிய அக்நியாய் எப்படி ரொம்பவும் தஹிக்குமோ, அப்படியே உன் மநஸ்ஸின் பதினாறு கலைகளில் மிகுந்திருந்த ஒரு கலையானது அந்நத்தால் புஷ்டியடைந்து வேதங்களையெல்லாம் நினைத்தது. ஆகையால் மநஸ்ஸு அந்நத்தாலும், ப்ராணன் ஜலத்தாலும், வாக்கு தேஜஸ்ஸினாலும் புஷ்டியடைகிறது என்று சொன்னார். (𑌤𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌯 𑌵𑌿𑌜𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌤𑌿—𑌵𑌿𑌜𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌤𑌿) (𑌉𑌤) 𑌤𑌮𑌾𑌦𑍇𑌶𑌮𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌃’ என்று தொடங்கி பிதா சொன்ன அர்த்தங்களை (ப்ரஹ்மம் ஒன்றே ப்ரபஞ்சத்துக்கு உபாதாந காரணமாயும் நிமித்த காரணமாயும் கார்யமான ப்ரபஞ்சத்தோடு அபிந்நமாயும் இருக்கிறது என்றிவை முதலான) பிதாவின் உபதேசத்தால் நன்றாக அறிந்தார். பிதா தன் உபதேசத்தால் புத்திரன் நன்றாக அறிந்ததைப்பற்றி ஸந்தோஷத்தைக் காட்டுகிறது ‘ஹா’ என்பது.

ஏழாவது கண்டம் முற்றிற்று.

சிந்தை தேறியச் செல்வனு நந்திமக்
கந்த மில்பொரு ளோவல தற்பமோ
வெந்த வூதிய மீதுமெ னவ்வவர்
முந்து சொன்ன தருள்கென மொய்ம்பனும். 102

வம்மின் பொன்னி நதிக்கு வடகரை
செம்மி னத்திரு வெள்ளறை சேர்ந்துநந்
தம்ம னப்படி தந்திடு நும்மெனப்
பொம்மெ னப்புறப் பட்டனர் பொங்கியே. 103

அந்த யாணர னைவரை யும்விரைந்
துந்து மம்பியி னேற்றியொ ழுகுறுஞ்
சந்த மாநதி யேகுஞ்ச மயமவ்
விந்தை வெள்ளத் திடைகவிழ்த் தானரோ. 104

நாவி கர்க்கு நவின்றதின் முன்னரே
மேவி வேறவர் தந்ததின் மீண்டுடன்
தூவி யன்னமு றங்கிருந் தண்பணைக்
காவி வாவிய ரங்கங் கலந்தனன். 105

மீண்டி டாத கதியை மிடைந்தவச்
சேண்ட யங்குமெ யிற்பணி செய்தவ
ராண்ட பெண்டிர்கண் மக்க ளனைவரும்
மாண்ட தம்மவர் மாயம றிந்தரோ. 106

வாய டித்து வயிறு மதுக்குருப்
பேய டிக்கண் விழுந்துமப் புங்கவ
னீய டித்தெமர் நீணதி வீழ்த்தினை
யேய டித்திடெ மையுமென் றேங்கினர். 107

கண்டு காமருங் காமுறுங் காளையம்
மிண்டு செய்யு மிடுக்கரைத் தேற்றிநங்
கொண்ட கொண்கரை நாலைக் கொணர்வனீ
ரண்டு நுங்கம் மகமென விட்டனன். 108

விட்ட ரங்கன் விரைமலர்த் தாளினைத்
தெட்டெ ழுத்தைப் பலவுரு வேற்றியிக்
கட்ட மென்னைக் கலக்கியிட் டாங்கவை
வட்ட மேயிய வர்த்தருள் செய்குவாய். 109

வீட ணற்கு விழுத்திரு தந்தவெம்
மாட ராவணை யாயென வேத்தவத்
தோட லர்த்தொடைத் தோன்றல் கனவிடை
யேட விழ்துள வன்னிதி யம்புவான். 110

வேறு

எம்பக லுணர்ந்து சீவ ரெழிற்பத மேறும் வண்ண
மம்புவி யெழுந்த சீரா யழுங்கலை யவர்வந் தன்பால்
வெம்பிடின் விடிய வன்னோர் விழுகதி யமுதினுடி
நம்பெரு நிலயந் தன்னுட் பிரணவத் தருகி னண்ணி. 111

துஞ்சிய தமரி னுமந் தூய்மையின் விளிக்கும் வண்ண
மஞ்சலை யறைதி யென்ன வாங்கருந் துயில்வின் டாழ்வான்
பஞ்சவர் மயிலுக் காடை பாரமின் றருளுங் கண்ணன்
மஞ்சுள வருளை யெண்ணி மனமகிழ்ந் திருந்தா னன்றே. 112

புலரியி லெழுந்தப் போன தொழிலரின் றமர்கள் போந்தெந்
தலைவரைத் தருதி யென்னக் கலியனுந் தனைவி னீவி
ருலைவரும் பொன்னித் தெண்ணீ ருவப்பொடு படிந்து தூய்மை
நிலவுற வம்மி னெம்பா னிகழ்த்துது மெனமற் றுங்கே. 113

சொல்லிய வண்ண மன்னோர் தூயநீர் தோய்ந்து மீள
மல்லடு புயத்து மங்கை மன்னவ னவர்க்கொண் டேகி
யெல்லெறி ப்ரணவத் தெம்ம ரங்கனின் விமான மெய்தி
வல்லைநும் மிறந்தோர் நாமம் வாய்விடுத் தழைமி னென்றான். 114

என்னலு மிருகை கூப்பி விளித்திட விறந்தோ ரெல்லாம்
மின்னிய விமான மீதே தென்புலத் தவராய்த் தோன்றித்
துன்னிய தமரைக் கூவித் தொல்லைநல் வினைமுன் செய்த
தின்னெறி லரங்கத் தம்மா னிரும்பத மிணைத்த தெம்மை. 115

இத்திருக் கலிய னுலெம் மிருவினை யகன்று மீளா
முத்தியின் பருந்து கின்றோ நீருமிம் முனிவன் பாதம்
பத்தியிற் பணிந்து வாழ்ந்து மிறுதியிற் பரந்தா மன்றன்
சத்திய வுலகஞ் சார்ந்தே யவணமை யடைதி ரென்றார். 116

ஈங்கவர் தெருள முன்ன ரிசைத்துடன் மறைய வின்னு
ரோங்கிய வுவகை விம்மி தங்களுக் குறையு ளாகிப்
பாங்கினிற் பரகா லன்றன் பதமலர்க் கடியாராகித்
தாங்கின ரரிய வின்பந் தழைப்புறச் செழித்தார் மன்னோ. 117

ஆண்டொன்று கழிந்த பின்ன ரறவன்ற னடியார் போந்து
காண்டிடக் கலியன் புத்தன் கடைவிர லதுவொன் றீய
மூண்டிடு சினத்தி னன்னோர் சென்னியின் முன்ன ரேகி
நாண்டுறந் ததுவுஞ் சீட்டும் வைத்தனர் நவின்று ரெல்லாம். 118

புலிக்கொடி யிறைவன் பொங்கிக் கலியனை விளித்து நீமுன்
னளித்திடு முறியின் வண்ண மளித்திடற் கென்ன வென்னக்
கலக்குறு கருத்தி னுய்நீ கண்டிறந் தமர்ந்து நோக்கின்
புலப்படு மதன்ற னுண்மை யென்றனன் புகழின் மிக்கான். 119

கொற்றவன் சிறிது சீட்டைக் குறித்துநோக் கினனு யந்தக்
கற்றவன் கருத்தைக் கண்டு முறுவலித் தையகாணீ
யெற்றிருங் கடவு ளால யத்திடை யிலகுந் தெய்வக்
குற்றவிம் பத்தைப் போழ்த னூனெறிக் குறுவ தொன்றோ. 120

எற்குமிப் புவிக்கு மாகா திஃதெனக் கலிய னைய
நிற்குள நெறியின் ஞான நேர்படு மெனது கேண்மோ
பொற்புறு மறைநெ றிக்குப் புறம்பினர் வழுத்துந் தெய்வ
விக்ரக மதனை வீட்டி னூறெவ ருழையு மின்றால். 121

எனமணிப் பணியன் மற்று மிலக்குமிக் கிறைவ னேயவ்
வனந்தலோ சனனாய் வந்திங் கவதரித் துளதி னந்தக்
கனகவிம் பத்தைப் போழ்ந்தால் கலைக்கடல் கடந்த நீயவ்
வனகனுஞ் சுளித்து நின்னை யருள்கெட வகற்று மன்னோ. 122

தெரிந்தவ ரிழைக்குந் தீமை திண்ணிதென் றுரைப்ப ரென்ற
முருந்துறழ் முறுவ வல்லி வல்லியின் கொண்கன் முன்னி
யிரிந்திட விகலோ ரேந்து மில்கயிற் கரத்தா யெள்ளிற்
பரந்தமர் தைலம் போலும் பரந்தாம னெங்கு முள்ளான். 123

அவனல துலகி லொன்று மசைதலின் றுயிர்த்த லின்றாற்
புவனமூன் றொடுங்க வாட்டு முப்புரத் தவுணர் புந்தி
கவிழ்தர வவனே யந்தக் கடவுளா யுதித்தா னேனுந்
திவளொளி யறிவி னூரத் தேவனை வணங்கல் செய்யார். 124

இன்னுமொன் றியம்பக் கோடி யெம்பிரான் வசன மைய
மின்னுநன் மறையின் மாறுஞ் சமயங்கள் மேவு மென்னை
யன்னையை யிருது காலத் தப்புறத் தகற்று மைந்த
னென்னவாங் கிகந்து வேத நெறியின் றொழுகற் பாலார். 125

எள்ளியில் வுரையைத் தேவ தாந்தர மிறைஞ்சு மாந்தர்
தள்ளிய வெனதின் னுணை யகந்தனைத் தாங்கிப் பூதி
யுள்ளுறைந் திடுவ ரென்றே யுரைத்தன னருளிக் கண்டாய்
வள்ளலே யெனவே மற்றுங் கிளர்ந்தனன் வழங்க லுற்றான். 126

பொழிதரு முகில்போ லார்த்துப் புத்தர்வாய் புதைப்பப் பொங்கி
யிழிபுறச் சமய மெல்லாம் பாதல மழுந்த வெங்குந்
தொழுமலர்க் கணையான் றந்தை கொள்கையே கொழுக்க லாத
மழைசுகம் பெருகப் பெய்தான் மன்னன்னைக் குளித்தல் செய்தான் 127

ஆயிரம் பரம பாக வதர்தின மருந்த வூட்டுஞ்
சேயனே செங்கண் மாலுங் கலியனென் றிசைக்கப் பெற்ற
தூயநின் னருளி னாலே தொல்வினைத் தொடரும் விண்டேன்
போயதென் னைய மைய பொருந்தினேன் வாய்மை யின்றே. 128

உட்பகை யுடனே மற்றைப் புறப்பகை யிரண்டு மோடுந்
திட்பமார்ந் துளதி னன்றே தெரிக்குவர் தெளிந்தோர் நின்னைக்
கட்கினி துடைய காட்சிப் பரகால னென்றே யெங்கும்
புட்பக மனையா யென்று போற்றினன் புலவு வேலான். 129

காடமுற் றிருந்து பாயுங் களிறுகண் முதல பல்ல
வரிசைக ளளித்துப் போகி வருகென வழியும் விட்டான்
றிரடன மனைத்துங் கொண்டு திருமங்கை மன்னன் பின்னர்க்
கருடவா கனன ரங்கன் கழலிணை வணங்கி மாதோ. 130

ஓங்கார விமானத் தூடே யுரகபோ கணையை யென்று
நீங்காத நிமல னந்த நியமன மியைந்து தன்பாற்
பாங்காய பரிவா ரங்கள் புடைவரப் படர்ந்தான் செய்ய
தேங்காயின் பொழில்கள் சூழுந் திருவாலி நகரை நாடி. 131

வேறு

பனிமலையு யிர்த்தவெழிற் பைங்கிளி யளித்த
தனியமத ருந்துதிரு ஞானமுனி தானுங்
குனிசிலைவ யக்கலியன் கொற்றவனை வைக்கண்
ணினிமைபெறு வாதவமர் புத்தருட னேன்றே. 132

வென்றவரை வேந்தனுத வின்பரிச டைந்த
நன்றினைய நிந்தவனை நண்ணியெதிர் காணப்
பொன்றருமின் சாலிவினை பொங்குவயற் காழி
யென்றதிரு வூரினிலி ருந்துபுறப் பட்டான். 133

காகளமு தற்கருவி காதினைநி ரப்ப
வேகுவழி தன்னிடையெ திர்ப்படுமி டுக்கண்
பாகுநிகர் நாலுகவிப் பாசிதனைக் காணு
வேகமுறு தன்னுரகம் விட்டருகு சென்றான். 134

ஈருததி யென்னவிரு வோருமெதிர் பேசு
சீரதொரு வர்க்கொருவர் செவ்விதின் வினவ
நீரத்த தும்புகலி யன்வசன நேர்ந்தே
யாரெதிரி வற்கெனவ வன்முதம டைந்தே. 135

கன்னலடு வெம்புகையுங் காசினியி னும்பர்
மன்னுமக விந்தனமு மாகமெழ நாளும்
பன்னவரு கார்ப்பருவ மென்னவரும் பண்பா
ரென்னகர நீவருக வென்றுபரிந் தழைத்தான். 136

காவலனி லாநகருங் கஞ்சமறு கயமும்
பாவலரி லாவவையும் பன்னியிலா மனையும்
பூவைவணன் பொற்பமருங் கோயிலிலா வூரு
மோவலுறு மென்னுமுல கம்முறையி னோர்ந்தே. 137

காழிநக ருங்கடல்வ ணன்சினக ரம்விண்
டேழிலதி னங்குவர யானுளமு மொல்லேன்
வாழிதிரு ஞானவென வன்கலியன் மற்றும்
வீழமன மொன்றவுனி கேளெனமி ழற்றும். 138

ஐயமுனர் தாசரதி யரக்கர்குலம் வீயத்
துய்யவன வேட்டமொடு துன்றினனவ் வூரின்
மெய்திகழ்கா ழிச்சிராம விண்ணகர மென்று
செய்யவொரு செந்தலமுண் டாகையின தன்சார். 139

அங்குமது கைடபரை யன்றடுமு ராரி
தங்குமெழி லாலயமுந் தங்கியது முன்னம்
பொங்குமறை யின்புறம தத்தரது போழ்ந்து
மங்கநில மட்டமுற மாடினர்செ ருக்கின். 140

அன்றுமுத லவ்வரியின் விக்கிரக மந்த
நன்றுவளர் பூசனைந டத்துமர புள்ளா
ரொன்றியம னைக்குளுற வைத்துநவை யொன்றுந்
துன்றுதலி லாவகைபு ரந்துதொழு கிற்பார். 141

ஆதலினத் திருப்பதியும் விண்டுபதி யாமால்
போதுகெனப் புண்ணியனும் பொங்கிமனம் போகித்
தீதகல வெண்ணெயுணுந் தேவனடி மேலங்
கோதினனோ ரின்பதிக மொன்றுமறை யென்ன. 142

அப்பதியு றைந்தபல சைவர்திரண் டாங்கே
யொப்பறுமெ ழிற்கலிய னோடுசெய வாதந்
திப்பியக வித்திருஞா னன்றனிடஞ் செப்ப
விப்பெரிய னொருகுறளா யென்றுகவி பாடி. 143

வேறு.

நாட னொலி நண்ணலர் தீய மருண்மாரி
நாடுங் கொங்கு மலரக் குழலியர் நல்வேளா
பாடுங் கொற்ற வேற்பர காலன் கலியன்சீர்
சூடும் மங்கை வேந்திவன் சொன்ன தமிழென்றே. 144

வீறு ருந்தன் சீருறு நாம விதமெல்லாங்
கூறு நின்றக் கொற்ற மிடைந்த கவிதன்னை
யாறே வெல்ல வன்னவ னின்னோ னருள்வாய்நின்
றாறு நின்ற வொண்மொழி யென்னு மமுதுண்டே. 145

பாற்கட றுஞ்சும் பண்ணவன் றுளே பரவும்நீ
நாற்கவி யேயிந் நானிலமீது விருதெல்லா
மேற்குறி னக்கென் றிவ்வண மேத்தியி வன்மீதோர்
மாற்கவி பாட மற்றவ ரெல்லா மகிழ்ந்திட்டார். 146

தன்பான் மிக்க தண்மன முள்ள தழைகொண்ட
பொன்பாய் கங்கைப் பூஞ்சடை யான்ற னடியாரை
யன்பாய் நோக்கி யாடுது மீங்கொண் றதுகேண்மி
னின்பா நீவிர் விண்டமுக் காறென் றிசைக்கிற்பான். 147

ஊரு மோங்கும் புகழு மோங்கு முலகோங்குந்
தார கன்னிவ் வெண்ணெ யருந்துந் தாடாள
னுருங் கோயி லும்பெரு கச்செய் தவற்கென்றுஞ்
சீருங் குன்று தெய்துசி றப்புஞ் செயுமென்றான். 148

ஆங்கே யந்தச் சைவரெ லோரு மதுகொண்டே
யோங்குங் கோபு ரத்தொடு சால முயர்கூடந்
தாங்கும் விமா னத்துட னெல்லாந் தயங்கச்செம்
பாங்கிற் செய்தோர் பைம்பொ னிலயந் தனிலம்மா. 149

தன்கா னீரா னைம்முகன் வேணி தழைத்தோங்க
மின்கார் வண்ணன் றன்னை யதற்குண் மிளரச்செய்
தின்கா லத்திற் கேற்றசி றப்போ வெவையுந்தா
னன்கா யாற்றிப் போந்தன ரென்ப நவையின்றே. 150

சம்பந் தன்பின் னுள்ளமு வந்தே சவிசேரு
மம்பொற் பிச்ச மாதிய யாவு மயல்சூழ
வெம்பப் பேணார் வீறுறு மங்கை மனனேகப்
பம்பும் பல்ல சீர்க ளிழைத்துச் செலவிட்டான். 151

ஊதக் காள மாதிக டன்பே ருயர்வெல்லாம்
போதப் பாடி யன்பர்கள் போகிச் சிவிகைக்குள்
வேதக் கோனு ரின்றிரு வாலி மிடைந்தந்த
நாதற் காணு நல்லடி போற்றி யருணண்ணி. 152

சென்றத் தேய நின்றுத னேயத் திருமங்கை
துன்றத் தேவி கண்டுகு ருக்கண் டுணைமீதே
யொன்றப் புல்ல வுள்ளமு வந்தா னவள்பூரித்
தின்றக் கண்ண னேவலின் வண்ண நிறைவுற்றேன். 153

மாயன் பாத மன்னிய வன்பீ டுலகெங்கும்
பாயின் பாரப் பண்ணுமு னக்கென் றனையந்தச்
சேயன் விண்ணி னின்றிழி யென்னச் செலவிட்டா
னேயன் னீயென் றன்னதி னிங்கே நினக்கானேன். 154

எண்ணும் வண்ண மன்றிலங் கைக்கண் ணெரியேறப்
பண்ணும் வேத நாயகற் குற்ற பணியாவுந்
திண்ணங் கொள்ளச் செய்தனை யென்று தெரித்தந்தத்
தண்ணந் தாரா னேடென் றந்தைப் பதிபுக்கான். 155

புக்கங் கேதன் பொன்புரை நாய்கன் புகழ்முற்றும்
மிக்கங் கோதித் தந்தையுந் தானு மிளிர்மங்கைக்
காக்குங் காவ லன்னெதிர் வந்த வுயரல்லி
நிற்குங் கும்பர்க் குள்ளிழிந் திட்டா னிகரற்றான். 156

மற்றும் பொன்வி மானமதூடே குருவோடும்
பற்றுந் தேவப் பண்புரு வத்தம் பாநின்றே
கொற்றங் கொள்ளுங் கொண்கனை நோக்கித் திருவுள்ளஞ்
சற்றுந் தாழா னதயவ ரங்கத் தனைநண்ணி.

ஆடுஞ் செங்கே ழம்பண நாக வணைமாலின்
வீடுங் கொள்வாய் மற்றவன் மிக்க வருண்மேவி
நீடும் விண்ணு டேகுவ லென்று நிகழ்த்திப்பின்
போடும் மூர்த்தி போடும றைந்தா னுயர்வானில். 158

பேணூர் காலன் விம்மித மெய்திப் பிணையன்னண்
மாணூர் தேவ மங்கையென் றன்னு ளுடனடி
வீணு மார்வ வேரைய ரிந்தே மகிழ்விற்பின்
பேணூர் பொன்னி சூழும ரங்க மிணைந்திட்டான். 159

அங்குப் பெம்மா னம்மரங் கத்தா னடிதம்மிற்
தங்கப் பாரம் வைத்தரு வைகுந் தமதன்கட்
பொங்கிக் கண்ணன் பூம்பணி யென்றும் புனைந்தார
விங்கிப் பொன்ன ருச்சையி னென்று மிலகிற்க. 160

ஏரா ருள்ளத் தெண்ணியொ ரர்ச்சை யிடையேதன்
சீரார் சத்தி முற்றுமி ருத்தித் திருமார்பன்
னேரா ருங்க டைக்கணுநேட கமுமார்ந்தே
காரார் காவா ரின்குறுங் குடியிற் கழுமுற்றான். 161

நம்புந் தாளை யாவரு நாளுஞ் சுகநண்ணும்
நம்பியின் பாதந் தன்னை நாடி யவணுழ்வான்
நம்ப னுதி தேவரு நாடாத் திருநாடே
நம்பி யோக நண்ணுச மாதி தனிலார்ந்தான். 162

20-வது சருக்கம்

ஸ்ரீமந் நாதமுனிகள் வைபவம்

மனித னென்ன மனைவியைத் தேடியும்
பினதி மன்னன் பிழைகண் டெரித்துமென்
றுனது தெய்வ வொருமையைக் காட்டிய
வனக னேயடி யேந்தமை யாளுவாய். 1

காரு ணுங்கா விரிக்கரைக் கண்ணெழில்
வீர நாரா யணபுர மென்றொரு
சீரு றணந்தணச் சேரியொன் றுண்டதை
யாருங் கானத் தகமெனச் சாற்றுவார். 2

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கோண்டாடும்

சார்ங்கதா ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன வைத்தியக் கிரந்தம்.
வைத்தியரத்னம்

பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றும் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஔஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள் (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாவிதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்ர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலையங்கங்களோடு அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள் ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,
11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசுவாச முள்ளோர்க்கன்று சாஸ்திரமே ப்ரமாண மென்கிறார் கீதாசார்யன். "**तस्माच्छास्त्रं प्रमाणं ते**" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படர் கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृ
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையு மளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல் பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை '**परिधारणं**' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்பளனேட், மதருஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd. Madras.

SRI VEDANTA DIPIKA

24] **JUNE 1936** [Part

Editors: S. VASUDEVACHARIAR
V. V. SRINIVASA AIYANGAR

ஸ்ரீ
வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்
ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை

9 - JAN 19
MADRAS

தாது வரு — வைகாசி மீ

பத்ராதிபர்கள்:

ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,
39, MUTHIYALU CHETTY ST., VEPERY, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ராசார ஸபை
(லிமிடெட்)

(ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 39, முத்தியாலு செட்டி தெரு, வெப்பேரி, சென்னை).

டைரேக்டர்கள்.

வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், ப்ரஸிடெண்டு.	டி. டி. ஸ்ரீநிவாஸாசாரியர், (அட்வொகேட்)
பி. ரங்கஸாமி ஐயங்கார், (ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்) ஜெனரல் ஸெக்ரிடரி.	என். டி. சாமண்ணு, (ஸொலிஸிடர்).
டி. ராஜகோபாலாசாரியர், (ரிடையர்ட் ஸப் ஜட்ஜ்) எக்ஸிக்யூடிவ் ஸெக்ரிடரி.	ஸி. வி. வெங்கடரமண ஐயங்கார், (கோயமுத்தூர்).
எஸ். ஜகன்னாதாசாரியர் ஷை	டி. ஈ. சடகோபாசாரியர், அட்வொகேட் திருப்பாபுலியூர்
எம். ஸுதர்சன ஐயங்கார் டிரெஷரர்.	டி. ஆர். வி. சர்மா, ஸ்ரீரங்கம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை ப்ரசாரம் செய்யவும் ஷை ஸித்தாந்த க்ரந்தங்களை அச்சிட்டு ப்ரசுரம் செய்வதற்காகவும் முக்கியமாக இச்சபை ஏற்பட்டுள்ளது. தத்காலம் ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய க்ரந்தங்கள் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரத்திற் கெனவே சுமார் 25 வருஷ காலமாக நடைபெற்றுவரும் வேதாந்த தீபிகை யென்னும் மாதத் தமிழ் பத்ரிகையை இச்சபையார் ஏற்றுக்கொண்டு விஷயங்களை எல்லோரும் எளிதில் அறியக் கருதி இனிய தமிழ் நடையில் ப்ரசுரம் செய்து வருகிறார்கள்.

வருஷச் சந்தா. ரூ. 3—0—0 தனி ப்ரதி 0—4—0

ஸபையில் அங்கத்தினர்களாகச் சேருகிறவர்கள் ஷேர் 1 க்கு ரூ. 50 செலுத்த வேண்டும். இதை சௌகரியமான தவணைகளிலும் செலுத்தலாம். அங்கத்தினர்களுக்கு ஸபையின் ப்ரசுரமான ந்யாயஸித்தாஞ்ஜனமும் இவ்வருஷத்திய தீபிகையும் விலை யன்னியில் கொடுக்கப்படும்.

ஸபை ஆபீசில் கிடைக்கக்கூடிய புத்தகங்கள்

1. ந்யாயஸித்தாஞ்ஜனம்—(ஸ்ரீ வேதாந்த தேசிகன்) விலை ரூ. 5 0 0 (வ்யாக்யானத்துடன்) பண்டிதர்களுக்கும் வித்யார்திகளுக்கும் அரைவிலை).
2. வேதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ பாஷ்யகாரர்) (ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யரின் தமிழ் உரையுடன் (விலை. ரூ. 3 0 0
3. ஸ்ரீ பஞ்சஸ்தவம் (ஸ்ரீஸ்துதி) ஸ்ரீ உப. வாஸுதேவாசார்யன் பிள்ளையின் வ்யாக்யானத்துடன்) ரூ. 0 8 0
4. ஸ்ரீ வேதாந்த தேசிகரின் தத்வடீகை (ஸ்ரீ பாஷ்யத்திற்கு விரிவான வ்யாக்யானம்) அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளியாகும்.

हिंगु

காயம்

" हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
विबन्धाध்मान शूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥ "

சுத்தமான பெருங்காயம் ஜீரண சக்திக்கு பலம் தரும்; காரமும் உத்ஸாஹமுமளிப்பது; வயிற்று க்ரிமிகளையும் வாத தோஷத்தையும் கப தோஷத்தையும் போக்கும்; மலபந்தம் வயிற்று நோய் இவைகளையும் தீர்க்கும்.

இவ்விதம் சாஸ்திரத்திலுள்ள குணங்களைப் பெற்ற சிறந்த பெருங்காயம் L. G. குறி உள்ளதுதான்—

லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

अमृतांजनम्

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகாரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

“अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।”
“अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।”

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் டிபோ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்ரீ:
ஸ்ரீமதே நம:
த்ரய்யந்தகுரவே நம:
[illegible]

வேதாந்த தீபிகை

OFFICE OF THE REGISTRAR
9-JAN 1937
MADRAS

பத்ராதிபர்கள்: { ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஸம்பு. 24] தாது ஞூ—வைகாசி மீ [ஸஞ்சிகை 12

விஷய ஸூசிகை.

1. ஸம்பாதகரின் குறிப்புகள் 598
2. க்ரந்த விமர்சம் 602
3. இதிஹாஸ புராணங்களில் ஸ்த்ரீ சூத்ரர்களின் அதிகாரம் 605
[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி]
4. பிள்ளை யந்தாதி 614
[ஸ்ரீ உப. லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்யர்]
5. சாரீரகமீமாம்ஸை 619
[ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம். ஸ்ரீ. உப. அண்ணங்கராசாரியர்.]
6. ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் 626
[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]
7. ஸம்வர்க்கவித்யோபாக்யாநத்தில் சில அபூர்வரஸங்கள், 637
[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்.]
8. மீமாம்ஸா ஸங்க்ரஹம் 647
[திவான் பஹதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]
9. வேத வைபவம் 6?6
[வித்வான் ஸ்ரீ உப. ஸ்ரீ நிவாஸதாதாசார்யர், திருவாதி]
10. திவ்யஸூரி சரிதம் 233
[வங்கீபுரம் கோ. ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்]

[சந்தாதாரர்கள், சந்தாத் தொகையை, “ஜெனரல் கார்யதர்சி, ‘ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை, 39, முத்தியாலு செட்டித்தெரு, ‘வேப்பேரி, ‘மதிராஸ்’ என்னும் விலாஸத்திற்கும், வ்யாஸம் எழுதுபவர்கள் வ்யாஸங்களையும் அவை ஸம்பந்தங்களான மற்றை கடிதங்களையும் “ஸம்பாதகர், வேதாந்த தீபிகை வாணி விலாஸ் போலீஸ் ராகவாசார்யர் தெரு, பார்க் டௌன் மதிராஸ்” அல்லது “ஸம்பாதகர், ராமஸ்வாமி தெரு, ஈஸ்டு மாம்பலம், தியாகராயநகர், மதிராஸ்” என்னும் விலாஸத்திற்கும் அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.]

...கப்பக ... சென்னை-600 008

ஸ்ரீ :

ஸ்ரியை நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்.

யொ௨ஜ: ப்ரவிஶ்ய ௨௨ வாஅஜாம் ப்ரவஸ்த்வாம்
ஸஂஜீவயத்யவியுஶக்தியாஶ: ஷ்யாஜந ।
சஜ்ஞாஂஶ்ச ஹவஸ்தவாணஶ்ரவணசவ்யாதீநு
ப்ராணாஜஜொ ஹமவதெ வாஶாஷாய தஸ்மை ॥

மஹாராஷ்ட்ர தேசத்திலுள்ள ‘பூனு’ என்னும் நகரத்தில், ஸ்வல்ப காலத்திற்கு முன் பாலகங்காதர திலகர் என்னும் ஒரு பெரியவர் இருந்தார் என்பது நமது ஸுஹ்ருத்துக்களெல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவர் காலம் சென்று இப்பொழுது பதினாறு வர்ஷங்கள் ஆகின்றன. அக்காலத்தில் நமது தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர்களுள் இவர் மிகவும் ப்ரதாநர். ராஜ்ய தந்த்ர விஷயங்களின் ந்யாயாபந்யாயங்களை நிஷ்கபடமாகவும் நிர்ப்பயமாகவும் பல ஜநங்கள் அறியும்படி இவர் பஹுவாக விசாரம் செய்து வந்தபடியால், ராஜாங்கத்தாருடைய அப்ரீதிக்கு இவர் பாத்ரமாகி இரண்டு மூன்று ஸமயங்களில் காராக்ருஹவாஸமும் இவருக்கு ஸம்பவித்தது. மதம் ஸம்பந்தப்பட்ட பர்யந்தம், இவரை வைதிக மார்க்கத்தில் விச்வாஸமுள்ளவரென்றே சொல்லலாம். இவருக்கு ஸம்ஸ்க்ருதத்தில் உசிதமான ஜ்ஞாநமுண்டு; தைவ பக்தியுமுண்டு. வேதாந்த விஷயங்களைக் குரு முகமாகப் படிக்காவிடினும், வைதிக ஸந்ததியில் ஜநித்தவரானதாலும் வேதாந்த க்ரந்தங்களைச் சிற்சில பண்டிதர்களின் ஸஹாயத்தைக்கொண்டு ஒருவாறு பரிசீலநம் செய்தவரானதாலும், உபநிஷத்துக்கள் ப்ரஹ்மஸூத்ரம் பகவத் கீதை முதலிய க்ரந்தங்கள் சொல்லும் அர்த்த விசேஷங்களின் பரிசயம் இவருக்கு வாய்த்திருந்தது. அந்த ஜ்ஞாநத்தை ஆதாரமாகக்கொண்டு இவர், இங்க்லீஷ் பாஷையிலும் மஹாராஷ்ட்ர பாஷையிலும், நமது முன்னோர்கள் விஷயமாகவும் நமது சாஸ்த்ரங்கள் விஷயமாகவும் சில க்ரந்தங்களை எழுதி இருக்கிறார். அவைகளுள் “கீதா ரஹஸ்யம்” என்பது ஒன்று. அது, பூர்வம் மஹாராஷ்ட்ர பாஷையில் எழுதப்பெற்று இப்பொழுது இங்க்லீஷ் பாஷையில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றது. ஹிந்தி குஜராத்தி பெங்காலி கன்னடம் ஆந்த்ரம் தமிழ் முதலிய பாஷைகளிலும்

“கீதா ரஹஸ்யம்-”

இது மொழிபெயர்க்கப்பெற்று அநேக ஆயிரக் கணக்காகப் புஸ்தகங்கள் விற்பனையாகி இருக்கின்றன. ஆகையால் பஹு பெயர்கள் இதைப் படித்திருப்பார்களென்று நாம் நினைக்கின்றோம். இப்பொழுது இது இங்க்லீஷிலும் மொழி பெயர்க்கப்பெற்று வெளி வந்திருக்கிறபடியால் மேல் நாட்டார்களும் இதைப் படிப்பதற்கு ஒரு அவகாசமுண்டு. வேறு மார்க்கமாக நமது மதக் கொள்கைகளை அறிந்து கொள்ளாதவர்கள் இதைப் படித்தார்களே யானால், அவர்கள் இவரால் இந்த க்ரந்தத்திற் சொல்லப் பட்டிருப்பதே கீதையின் உண்மையான தாத்பர்யமென்று நினைத்துப் போவார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை.

இந்த க்ரந்தத்தில் இவர் முக்கியமாகச் சொல்வது என்னவென்றால், ‘கீதையில் கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தி யோகம் ஆக இம்மூன்று யோகங்களும் ப்ரஸ்தாவிக்கப் பட்டிருக்கின்றன என்பது உண்மையேயாயினும், இவைகளுள் கர்ம யோகத்திற்கே ப்ராதாந்யம் கொடுக்கப்பட்டிருக்கின்றது; அதை வற்புறுத்தும் பொருட்டே இந்தக் கீதா சாஸ்த்ரம் அவதரிக்கப் பெற்றது; மற்றை இரண்டும் இதற்கு ஸஹகாரியாக மாத்ரம் பேசப்பட்டிருக்கின்றன’ என்பது தான். இவர் பாலராயிருக்கும்பொழுது பல பெரியோர்கள் தமது க்ருஹத்திற்கு வந்து தமது பிதாவுடன் வேதாந்த விசாரம் செய்து கொண்டிருந்ததைத் தாம் ச்ரத்தையுடன் கேட்டு வந்ததாகவும், அப்படிக் கேட்டதிலிருந்து நமது மதம் ஸர்வஸங்க பரித்யாகத்தையே பரமஹிதமாகப் போதிக்கின்றதென்று தாம் அறிந்ததாகவும், அந்தக் காலம் முதல் தமக்கு அது விஷயமாக ஒரு சிந்தை ஜநித்து நமது சாஸ்த்ரம் அவ்விதம் போதிக்கின்றது என்று சொல்வது உண்மை தானு வென்பதைத் தீர விளங்க விசாரித்தல் வேண்டுமென்று தீவ்ரமான ஒரு அபிநிவேசம் உண்டாகவே தாம் பகவத் கீதையைப் படிக்க ஆரம்பித்து அதைப் பல முறை படிக்க, ‘அப்பெரியோர்களின் வார்த்தை உண்மை யன்று; ஸர்வ ஸங்கத்தையும் செய்துகொண்டு நம்மைச் சுற்றியுள்ள பூத வர்க்கங்களுக்கு நன்மையைச் செய்ய நாம் ப்ரவர்த்திப்பதே பரமஹிதம் என்பதுதான் நமது சாஸ்த்ரங்களில் உபதேசிக்கப் பட்டிருக்கின்றது’ என்னும் ஜ்ஞாநம் தமக்கு ப்ரகாசித்ததாகவும், இவ்வாறு இவர் இந்த க்ரந்தத்தின் முகவுரையில் விளக்கி இருக்கிறார். பகவத் கீதைக்குப் பாஷ்யங்களைச் செய்திருக்கும் நமது பூர்வாசார்யர்கள் வேறு விதமாகத் தாத்பர்ய விவரணம் செய்திருக்கிறார்களே என்றால், அவர்களெல்லாரும் தமது மநஸ்ஸில் ஏற்கெனவே குடிகொண்டிருந்த ஒரு ஆக்ரஹத்துடன் இந்தக் கீதையைப் படிக்க ப்ரயத்நப்பட்டவர்களாதலால் அவர்கள் கீதையின் ரஹஸ்யத்தை உள்ளபடி அறிவதற்கு அசக்தர்களாகி, அதன் தாத்பர்யத்தை மாறுபாடாக விவரித்துவிட்டார்களாம்.

தாத்பர்ய நிர்ணயத்திற்கு லிங்கமாகக் கூறப்படும் ஆறு அடையாளங்களும் தம்மாற் செய்யப்படும் விவரணத்திற்கே ஒத்திருக்கின்றனவாம்; நமது ஆசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள விவரணங்களுக்கு அந்த லிங்கங்களெல்லாம் பாதகங்களாகின்றனவாம். இம்மாதிரியான உத்கோஷங்களை இந்த க்ரந்தத்தில் பல விடங்களில் காணலாம்.

'நிஷ்காமமான வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநத்தால் மநஸ்ஸிலுள்ள காலுஷ்யங்கள் நிவ்ருத்தங்களாகி சாஸ்த்ர ஜந்ய ஆத்மஜ்ஞாநம் த்ருடப் படுகிறதென்றும் அப்படி த்ருடப்பட்ட ஜ்ஞாநத்தை ஆதாரமாகக்கொண்டு ஆத்ம த்யாநம் செய்து வந்தால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஸம்பவிக்கிற தென்றும், அப்படி ஜ்ஞாநயோகத்தை அநுஷ்டிப்பதாலோ அல்லது கர்ம யோகத்தின் தீவ்ரமான அநுஷ்டாநத்தாலேயோ பகவானிடத்தில் பக்தி ஜநித்து, அந்தப் பக்தியை இடை விடாமல் பாவித்து அதனாலேயே ஒரு வன் அம்ருதத்வத்தை அடைகிறானென்று சொல்வதெல்லாம் கீதை யைச் சரியானபடி அறியாதவர்களின் வார்த்தை' என்பதே இவருடைய கக்ஷி. ஆத்ம ஜ்ஞாநமும் பகவத் பக்தியும் கர்மத்திற்கு உபகாரகங்களாக இருந்துகொண்டு, ஸாக்ஷாத் கர்மத்தாலேயே முமுக்ஷு மோக்ஷத்தை அடைகிறான் என்று சொல்வதே கீதையின் வாக்யத்திற்குப் பொருந்து மாம். கர்மாநுஷ்டாநமே ஸாக்ஷாத் மோக்ஷஸாதநமென்பது தான் கீதை யின் ரஹஸ்யமாம்.

'எல்லாரும் அவசியம் கர்மங்களை அநுஷ்டித்துக்கொண்டே வரவேண் டும் என்னும் அம்சம் ஸம்பந்தப்பட்ட வரையில் நமக்கும் இவருக்கும் எவ் வித விப்ரதிபத்தியுமில்லை. சரீர மிருக்கும் பர்யந்தம் மோக்ஷத்தையோ இதர பலங்களையோ விரும்புமவர்களெல்லாரும் தம் தமக்குரிய கர்மங்களைச் செய்து வரவேண்டுமென்றே கீதா சாஸ்த்ரம் போதிக்கின்றது. ஆனால், அந்தக் கர்மம் ஸாக்ஷாத்தாகவே மோக்ஷத்தை ஸாதித்துக் கொடுக்கும் என்று நிர்ணயிப்பதற்கு அந்தச் சாஸ்த்ரம் கொஞ்ச மேனும் இடம் கொடுக்கமாட்டாது. உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலிய லிங்கங்களெல் லாம், பக்தி ஒன்றே அம்ருதத்வத்திற்கு ஸாக்ஷாத் உபாயமாகுமென்றும் கர்மம் ஜ்ஞாநம் இவை அந்தப் பக்தியின் உத்பத்திக்கும் அபிவ்ருத்திக்கும் ப்ரதிஷ்டைக்கும் காரணங்களென்றும் இம்மாதிரியான நிர்ணயத்தையே வெளியிடுகின்றன. திலகர் இந்த லிங்கங்களின் ஸ்வரூபத்தைச் சரிவர அறி யாமலே தாத்பர்ய நிர்ணத்தில் தவறிவிட்டார் என்பது அவருடைய க்ரந்தத் தைப் படிக்குமவர்களுக்கு வ்யக்தமாகும். இதைப் பற்றி விஸ்தாரமாக அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

பகவத்கீதையைப் படிப்பதற்கு அதிகாரி அநதிகாரி என்னும் விபாகமே

இக்காலத்தில் குலைந்து விட்டது. ஆசார்ய முகமாக அதன் அர்த்தத்தை க்ரஹித்தல் வேண்டும் என்னும் நியமும் அழிந்து போய்விட்டது. ஸ்வல்ப காலம் முன் மஹம்மதியர் ஒருவர் ஒரு பெரிய ஸதஸ்ஸில் கீதையைப்பற்றி உபந்யஸித்தார். வர்ணாச்ரம தர்மங்களைக் கொஞ்சமேனும் ஆதரியாமல் மனம் போன போக்கெல்லாம் நடந்து வரும் நாஸ்திகர்களும் கீதையைப் படித்து அதில் தமது நடவடிக்கைக்கு அநுகூலங்களான உபதேசங்களே செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். எல்லாரும் உப தேஷ்டாக்களாக இருக்கும் இந்நாளில்

"கிம் கிம் ந ஸம்ஹாவ்யதே।"

* * * *

மாம்பலம் அத்வைத ஸபை.

சென்ற ஏப்ரல் மாதம் 26௳ ஸ்ரீசங்கர ஜயந்தி மஹோத்சவ திநத்தில் சென்னையைச் சேர்ந்தப் புது மாம்பலத்தில் ஒரு அத்வைத ஸபை ஏற்படுத் தப்பட்டதென்றும், அந்த ஸபையின் ஆதரவின் கீழ் அத்வைத வித்யா பண்டிதர்களைக் கொண்டு அத்வைத ஸித்தாந்த ஸம்பந்தமாக மாதம் ஒன்றுக்கு இரண்டு உபந்யாஸங்கள் வீதம் ஒவ்வொரு வருஷத்திலும் இருபத்திநாலு உபந்யாஸங்கள் செய்வித்தல் வேண்டுமென்று அப்பொழுது அங்கு ஸந்நிஹிதர்களாயிருந்த பெரியோர்களால் நிர்ணயமொன்று செய் யப்பட்டதென்றும் நாம் கேட்டு மிகவும் ஆநந்திக்கிறோம். இக்காலத்தில் ஒரு வித மரியாதைக்கும் கட்டுப்படாமல் எல்லாரும் உபநிஷதர்த்தங்களை யும் ப்ரஹ்ம ஸூத்ரம் பகவத்கீதை முதலிய க்ரந்தங்களின் தாத்பர்யங் களையும் தம் தமக்குத் தோன்றியபடி விவரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள் இவ்விதம் உபதேசிப்பதனால் மஹா ஜநங்களுடைய மநத்தில் நமது மதத்தைப்பற்றி பெரியதொரு குழப்பமே ஏற்பட்டுவிட்டது. இந்தக் குழப்பத்தைத் தெளிவிக்க வேண்டுமானால், நமது ஆசார்யர்களுடைய பாஷ் யாதிகளை குருமுகமாகத் தெளியக் கேட்டுள்ள பண்டிதர்களெல்லாரும் அந்த ஆசார்யர்களின் நிர்ணயங்களை உள்ளபடி மஹா ஜநங்களுக்குப் போதிக்க பிரயத்நப்பட வேண்டும். இது ஒன்றே அந்தக் குழப்பத்தை நிவ்ருத்தி செய்யும். இது காரணமாக, இந்த அத்வைத ஸபையை ஏற்படுத் தின பெரியோர்களுடைய முயற்சியை நாம் மிகவும் ச்லாகிக்கின்றோம்.

இந்த அத்வைத ஸபை ப்ரவ்ருத்திப்பது போல நமது விசிஷ்டாத்வைத ஸபையும் ஒரு ப்ரவ்ருத்தி விசேஷத்தைச்செய்ய முயலவேண்டும் என்பதே நமது மனோரதம். ஆனால் இவர்கள் பரஸ்பரம் தூஷணத்தில் ப்ரவ்ருத்தி யாமல் இருப்பார்களோ என்னும் பீதி நமக்கு அந்தரங்கத்தில் உண்டு. இவர்கள்,

"न तेंबा मध्यमा तात गर्हितव्या कथंचन ।
तामेवेक्ष्वाकुनाथस्य भरतस्य कथां कुरु ॥"

என்கிற ரீதியில் தம் தம் ஆசார்யர்களுடைய கதைகளையே விவரித்துக் கொண்டு மற்றவர்களுடைய நிந்தையில் ப்ரவர்த்தியாமல் ஶாந்தமான மநஸ்ஸுடன் உபந்யாஸாதிகளைச் செய்துவந்தார்களேயானல் ஜகத்திற்குப் பெரியதொரு உபகாரம் செய்யப்பட்டதாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை.

க்ரந்த விமசம்

1. அதிகரண ஸாராவளி: இது, ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனுல் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள க்ரந்தங்களுள் ஒன்று. ஸ்ரீ பாஷ்யத்தின் அதிகரணங்களில் விசாரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் ஸங்க்ரஹமாக இதிற் சொல்லப் பட்டிருக்கின்றன. ஆனுல் இந்த க்ரந்தம் ஸ்ரக்தரை என்னும் ஜாதியைச் சேர்ந்த பெரிய ச்லோகங்களால் அமைக்கப்பெற்றிருக்கிறபடியால் இதன் பொருள்கள் ஸுலபமாக எல்லாராலும் அறியக் கூடியதன்று. திருக்குடந்தை ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர் என்னும் ஸ்வாமி, இதற்கு எளிதான தமிழ் நடையில் பொழிப்புரை எழுதி அந்த உரையுடன் இதை இப்பொழுது வெளியிட்டிருக்கிறுர். இதில் ஒவ்வொரு அதிகரணத்தின் ஆரம்பத்திலும் ப்ரஹ்ம ஸூத்ரங்களின் பொருளும் விஷய வாக்யங்களும், அந்தந்த அதிகரணத்தின் முடிவில் சிற்சில விசேஷக் குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதல் அத்யாயம் முதல் பாதத்தை அடக்கியுள்ள முதல் ஸஞ்சிகை இப்பொழுது வெளி வந்திருக்கின்றது. இன்னும் இம்மாதிரி ஐந்து ஸஞ்சிகைகளுடன் இந்த க்ரந்தம் முடிவு பெறலாம்.

ஸ்ரீ ஆசார்யருடைய மற்றை உரைகள் போல இந்த உரையும் மிகவும் ப்ரசஸ்தவ்யமே. முகவுரையில் ஸ்வாமி அநுக்ரஹித்திருக்கும் ப்ரகாரம், ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவித்தவர்களுக்கும் அதை ஸேவியாதவர்களுக்கும் இந்த உரை மிகவும் உபகாரகமா யிருக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை. இந்த ஸஞ்சிகையின் க்ரயம் ரூ 1-0-0. இது கிடைக்குமிடம் :—S. ராஜகோபாலன், 54, பெரிய தெரு, கும்பகோணம்.

2. ஆர்யா ஸப்தசதீ :—இது எழுநூற்றிப் பதினைந்து ச்லோகங்களை

அடக்கியுள்ள ஒரு க்ரந்த விசேஷம். இதன் விஷயம் நமது ஆசார்ய ச்ரேஷ்டராகிய ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனுடைய சரித்ரம். இதன் கர்த்தா, மன்ஞர்குடி என்று வ்யவஹரிக்கப்படும் சம்பகாரண்ய க்ஷேத்ரத்தில் பஹுப்ரஸித்தியுடன் வஸித்து வந்த ஒரு ஸ்ரீ வைஷ்ணவ வித்வத் குலத்தில் ஜநித்த ஸ்ரீ கோபாலாசார்யர் என்னும் பெயருள்ள ஒரு மஹாகவி. இவர் 29 வர்ஷங்களுக்கு முன் தமக்கு 27-வது வயது நடந்துகொண்டிருக்கையிலேயே பரமபதித்து விட்டார். சிறு வயது முதலாகவே இவர் சிறந்த கவந சக்தியை உடையவர். சாஸ்த்ராப்யாஸம் செய்வதற்கு முன்னதாகவே இவர் ரஸவத்தான பல ச்லோகங்கள் செய்து வந்ததை நாம் அறிவோம். புத்தி முதிர்ந்த பிறகு இவருடைய கவிதைக்கு ஒரு பரிபாக விசேஷம் ஏற்பட்டு அது மிகவும் ரஸவத்தாகப் பரிணமித்தது. அந்த ரஸவத்தையை இந்த ஆர்யா ஸப்த சதியில் எல்லாரும் அநுபவிக்கலாம். மஹா மஹோபாத்யாய பண்டிதராஜ அபிநவ பட்டபாண ஸ்ரீ. உப. ஸ்ரீவத்ஸ சக்ரவர்த்தி க்ருஷ்ணமாசார்யஸ்வாமி இதற்கு எழுதி இருக்கும் உபோத்காதத்தில் இவரைப் பற்றி மிகப் புகழ்ந்திருக்கிறுர். அந்தப் புகழ்ச்சி முழுவதும் பூதார்த்த வ்யாஹ்ருதி என்றே நாம் சொல்வோம். ஸகல குணங்களுடனும் இந்த க்ரந்தம் சோபிக்கின்றது என்பதில் எவ்வித ஆக்ஷேபமுமில்லை. சிறந்த இந்த க்ரந்தத்தை லுப்தமாகப் போய்விடாமல், புஸ்தக ரூபமாக, எல்லாருக்கும் லப்யமாகும்படி ப்ரசுரம் செய்த மஹாங்கள் விஷயத்தில், நாம் மிக்க க்ருதஜ்ஞதை உள்ளவர்களாக இருக்கிறேம். இது நன்றுகப், பரிசோதிக்கப் பெற்று நாகர லிபியில் அச்சுப் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது. இதன் க்ரயம் அணு 12. இது கிடைக்குமிடம் "ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர் பி. ஏ., பி. எல். பப்ளிக் ப்ராஸிக்யூடர், புதுக்கோட்டை."

3. அத்யமே ச்லோகார்த்த தத்வ ப்ரதிஷ்டை:— இதுவும் இதனுடைய அனுபந்தமொன்றும் ஸ்ரீராமாயணத்தில் தென்படும் ஒரு ச்லோகத்தின் உண்மையான அர்த்தத்தை நிர்ணயிக்கும் பொருட்டு காஞ்சீபுரம் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்ட க்ரந்தம். இந்த ச்லோகத்தின் வ்யாக்யாநத்தில் சிலர் வ்யுத்க்ரமாந்வயம் செய்து அர்த்தத்தை விவரித்திருக்கிறுர்கள். அப்படி வ்யுத்க்ரமாந்வயம் செய்வது ஸ்ரீ வால்மீகியின் ஹ்ருதயமாகமாட்டாது என்பதும் அது ச்லோகத்தின் ரஸத்தைக் குறைத்து விடுகின்றது என்பதும் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் வாதம். பதங்கள் இருக்கிறபடி அந்வயிப்பதில் எவ்வித தோஷமும் இல்லை என்பதையும் அவர் பலவத்தாக உபபாதித்திருக்கிறுர். இது மாத்ரமன்று. திருவாய் மொழியில் "யானெட்டி யென்னுள்" என்னும் பாசுரத்தின் ஈட்டில் இந்த ச்லோகம் விவரிக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது

ப்ரசாரத்தில் இருக்கும் ஈட்டு க்ரந்தங்களில் காணப்படும் பங்க்தியைப் பார்த்தால் ஈட்டுக்காரர் வ்யுத்க்ரமாந்வயத்தையே ஆதரிப்பதாக ஏற்படுகின்றது. இந்தப் பங்க்தி அபபாடமென்றும், ஸ்வல்ப அக்ஷர வ்யத்யாஸத்தால் இந்த அபபாடம் ப்ரசாரத்தில் வந்துவிட்டதென்றும், இதன் சுத்தமான பாடம் வேறு விதமாக இருத்தல் வேண்டுமென்றும் ஸ்ரீ ஆசார்யர் வாதிக்கிறார். இந்த வாதத்தில் பலிஷ்டங்களான உபபத்திகள் பல இருப்பினும் அநேக பண்டிதர்கள் இதை ஆமோதிக்கவில்லை. அப்படி அவர்கள் ஆமோதியாமல் இருப்பது ப்ராமாணிகமா அன்றா வென்பதை எல்லாரும் தாமே அறிந்து கொள்ளக்கூடுமாகையால் நாம் அந்த ச்லோகத்தையும் அதற்கு இரு கக்ஷிக்காரர்கள் சொல்லும் அர்த்தங்களையும் மாத்ரம் இவ்விடத்தில் எழுதுகின்றோம்.

> **“अद्य मे मरणं वाथ तरणं सागरस्य वा ।**
> **इति रामो मतिं कृत्वा महाबाहुर्महोदधिम् ।**
> **अधिशिश्ये स विधिवत् प्रयतो नियतो मुनिः ॥**

என்பது வாக்யம். வ்யுத்க்ரமாந்வயம் செய்பவர்கள் ‘**अद्य मे तरणं वा, सागरस्य मरणं वा**’ என்று அந்வயித்து ‘இப்பொழுது நான் ஸமுத்ரத்தைக் கடப்பேன் இல்லாவிட்டால் அதை முடிப்பேன்’ என்று அர்த்தம் சொல்லுகிறார்கள். ஸ்ரீ ஆசார்யரோ ‘**अद्य मे मरणं वा, सागरस्यतरणं वा**’ என்று பங்க்தி இருக்கிறபடியே அந்வயித்து, ‘இப்பொழுது நான் முடிவேன், இல்லாவிட்டால் ஸமுத்ரத்தைக் கடப்பேன்’ அதாவது ‘ஸமுத்ரத்தைக் கடப்பேன் அது தவறினால் நான் முடிவேன்’ என்று அர்த்தம் சொல்லுகிறார். இவைகளுள் எந்த அர்த்தம் ஸ்வரஸம் என்பதை அபிஜ்ஞர்கள் அறிவார்கள். இதன் க்ரயம் அணா 4. இது கிடைக்குமிடம் “ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர், சின்ன காஞ்சீ.”

ஸ்ரீ:

இதிஹாஸ புராணங்களில் ஸ்த்ரீ சூத்ரர்களின் அதிகாரம்

[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி]

ஸ்ரீ வேதாந்த தீபிகையின் சென்ற புரட்டாசி மாதத்திய ஸஞ்சிகையில் ‘வித்யா விஷயத்தில் ஸ்த்ரீகளின் அதிகாரம்’ என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீ. உ. வே. வித்வான் அநந்தாசார்ய ஸ்வாமி ஒரு வ்யாஸத்தை வெளியிட்டருளி, அதில் இதிஹாஸ புராணங்களைப் படிப்பதில் ஸ்த்ரீ சூத்ரர்களுக்குப் பூர்ணமான அதிகாரம் சாஸ்த்ர ஸித்தமாயிருப்பதாக ஸாதித்தார். அதன் மேல் சென்ற மார்கழி மாதத்திய ஸஞ்சிகையில் ‘இதிஹாஸ புராணங்களில் ஸ்த்ரீ சூத்ரர்களின் அதிகாரம்’ என்ற பெயருடன் நாம் ஒரு உபந்யாஸத்தை வெளியிட்டு, ஸ்ரீ அநந்தாசார்யரின் கொள்கையை மறுத்து, ‘ப்ராசீநர்களான ஸ்ரீ சங்கரர் ஸ்ரீ ராமாநுஜர் ஸ்ரீ வேதாந்த தேசிகன் முதலானோர்களின் அபிப்ராயப்படி ஸ்த்ரீ சூத்ரர்கள் பாப க்ஷயத்திற்காக இதிஹாஸ புராணங்களை அதிகாரம் பெற்றவர்கள் மூலம் காதால் கேட்கலாமே யல்லது நேரில் படிக்க அதிகாரமில்லை’ யென்று’ வெளியிட்டிருக்கிறோம். மறுபடி இந்தப் பங்குனி மாதத்திய ஸஞ்சிகையில் ஸ்ரீ. உ. வே. வித்வான் அநந்தாசார்ய ஸ்வாமி, நம்முடைய உபந்யாஸத்தில் கண்ட விஷயங்கள் யாவும் சாஸ்த்ரங்களைச் செவ்வனே ஆராய்ந்து சொல்லப்பட்டவை யென்றும், அவை வித்வான்களால் ஒத்துக்கொள்ளக்கூடியவை தான் என்று உறுதியாய்ச் சொல்லக்கூடு மென்றும் ஆரம்பத்தில் எடுத்து எழுதி, ‘ஆனால் சாஸ்த்ர வசநங்களைக் கையாண்டிருக்கும் வழியைப் பற்றி மாத்ரம் கொஞ்சம் விசாரிக்கவேண்டி யிருக்கிறது’ என்று சில விஷயங்களை எடுத்து விசாரித்து, முடிவில் முன் தாம் தீர்மானித்த ரீதியிலேயே ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு இதிஹாஸ புராணங்களைப் படிப்பதில் பூர்ணமாய் அதிகாரம் உண்டென்றே தீர்மானித்திருக்கிறார்.

அதில் வசநங்களைக் கையாண்ட முறையில், நம்மிடத்தில் சில குறைகளிருப்பனவாக அவரது அபிப்ராயம். அவற்றை விசதப்படுத்தும்பொழுது ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி, நம்முடைய உபந்யாஸம் அவருடைய வ்யாஸத்தின் மேல் கண்டந ரூபமாக ஏற்பட்டதாகு மென்பதைக் கிஞ்சித்தும் எடுத்துக் காட்டாமல், ஸ்வதந்த்ரமாக ஒரு உபந்யாஸம் நாம் வெளியிட்டது

போலவும், அதில் வசநங்களைக் கையாண்ட முறை தமக்கு த்ருப்தியளிக்கவில்லை யென்றும் தோன்றும்படி எழுதியிருக்கிறார். வாஸ்தவத்தில் அவ்வுபந்யாஸம் இவருடைய வ்யாஸத்திலிருக்கும் குறைகளை யெடுத்துக் காட்ட ஏற்பட்டதேயொழிய வேறில்லை. அம்முறையில் எவ்வித வசநங்களை எவ்விதம் எடுத்து விசாரித்துப் பரிஹரிக்க வேண்டுமோ, அவைகளை அவ்விதம் எடுத்து விசாரித்துப் பரிஹாரம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸ்வாமியின் ஸித்தாந்தத்திற்கு ஸாதகமாக எடுத்த யுக்திகள் யாவற்றையும் முதலில் வரிசையாய்க் கணக்கிட்டு அநுவதித்து, பின் ஒவ்வொன்றிற்கும் பரிஹாரம் காட்டப்பட்டு, அவைகளில் ஒரு யுக்தியேனும் அவருடைய ஸித்தாந்தத்திற்கு ஸாதகமாயில்லையென்றும் எடுத்து நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றையாவது எடுத்து, "இதற்குச் சொன்ன பரிஹார யுக்தி அநுபபந்நமானதால் முதலில் நாம் சொன்னதே ஸித்தாந்தமாகும்" என்று ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி தம் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்துக் கொள்ள முன்வராமல், அவைகளில் ஒன்றான அக்ஷராப்யாஸத்தைப் பற்றி நாம் விசாரித்த வகையில் சில குறைகளிருப்பனவாக எடுத்துக் காட்டுகிறார். அக்குறையும் நிர்த்தாரிதமாக நாம் தீர்மானிக்க முன்வரவில்லை யென்பதேயாகும். மறுப்பாக எழுதிய உபந்யாஸத்தில் முதலில் எந்த யுக்திகள் எவ்விதம் கையாளப்பட்டனவோ, அவை அவ்விதத்தாலல்லவோ பரிஹரிக்கப்பட வேண்டியவை? அப்படிக்கில்லாமல் ஸ்வதந்த்ரமாக எழுதிய வ்யாஸத்தில் போல் மறுப்பாக எழுதப்பட்டவற்றிலும் அவைகளைப் பூர்ணமாக விசாரிக்கவேண்டிய அவசிய முண்டோ? ஒருவர் தமக்கு ஸாதகமாக எடுத்த வழி 'அவ்விதத்தில் அது அவருக்கு ஸாதகமாகாது' என்பது மாத்ரமேயன்றோ அதைத் தூஷிக்க வந்தவர் சொல்லவேண்டியது அவச்யம்.

இந்த அக்ஷராப்யாஸம் லௌகிகமா, வைதிகமா, நித்யமா, நைமித்திகமா, காம்யமா, என்று ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி ஆரம்பத்திலேயே விசாரித்து, 'மற்ற விகல்பங்களைக் கழித்து, லௌகிகம் என்னு மம்சத்தை மட்டும் அங்கீகரித்து, இதில் அதிகாரி இன்னார்தானென்று சொல்லாததால் எல்லோரும் அதிகாரிகளே' என்று ஸாதித்திருக்கிறார். இதற்குப் பதிலுரைக்குங் காலத்தில், இது லௌகிகமாகில் இதைச் சாஸ்த்ரம் விதிப்பது அநாவச்யமாகும். ஏதாவதொரு அம்சத்தில் நியமத்தை விதிக்கச் சாஸ்த்ரம் முன்வந்ததெனில், அப்பொழுது இது அதன்மூலம் அத்ருஷ்டார்த்தமாய் முடியும். அவ் வத்ருஷ்டத்திற்கோ எங்காவது வைதிக கர்மங்களில்தான் உபயோகம் சொல்லவேண்டும் என்ற அபிப்ராயத்துடன், இது வைதிகமாயிருந்தாலும் அல்லது ஸ்ரீ. அநந்தாசார்ய ஸ்வாமி சொல்லுகிறபடி லௌகிகமாயிருந்தாலும் அந்த ஸ்வாமியின் ஸித்தாந்தத்திற்கு ஒரு

படியாலும் அநுகூலமாக மாட்டாதென்பதை நம்முடைய மறுப்பில் விவரித்து, 'இவ் வக்ஷராப்யாஸம் வைதிகமா யிருந்தால் (ஸம்ஸ்கார கர்மமாயிருந்தாலும் அல்லது அத்ருஷ்டார்த்தமாயிருந்தாலும்) யாருக்கு எதில் அதிகாரம் சாஸ்த்ரமூலம் ஏற்பட்டிருக்கிறதோ அவைகளை அவர்கள் படிப்பதற்காக ஏற்பட்ட கர்மாவாகுமேயல்லது, இல்லாத அதிகாரத்தை அவர்களுக்குக் கல்பித்துக் கொடுக்க இதற்கு ஸாமர்த்யம் ஏற்படமாட்டாது. 'அதிகார மில்லாதவர்களுக்கும் இதுவே அதிகாரத்தைக் கல்பித்துக் கொடுக்கு மென்னும் பக்ஷத்தில், சூத்ரர்களுக்கு வேதாத்யயநத்திலும் அதிகாரத்தைக் கல்பிக்கத் தடையிராமல் போகும்' என்றிவை முதலான எத்தனை விதமான அதிப்ரஸங்கம் நேரக்கூடுமோ அவைக ளெல்லாவற்றையும் எடுத்து எழுதி விசாரித்துப் பரிஹரித்திருக்க, அவற்றில் ஒன்றிற்காவது பதிலுரைக்காமல் மறுபடியும் முன் சொன்னதையே சொல்வதில் என்ன ப்ரயோஜநம்? இது வேதாத்யயநத்திற்கு அங்கமா அல்லது லௌகிக பாஷையைப் படிப்பதற்காக ஏற்பட்டதா என்ற விசாரம் இங்கு அநாவச்யமான தென்றும் முன் ஸஞ்சிகையிலேயே குறிப்பிட்டுள்ளோம், இரு விதத்திலும் ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமியின் கக்ஷிக்கு லாபமில்லை யென்பதையும் காட்டியிருக்கிறோம், இது வைதிக பாஷாத்யயநத்திற்காக ஏற்பட்டதெனில் இவர் கக்ஷிக்கு அடியோடு ப்ரஸக்தியில்லையென்றும், லௌகிக பாஷாத்யயநத்திற்கெனில் லௌகிக பாஷையைப் படிக்க மாத்ரம் உபயோகப்படு மாதலால் ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள் வேதோபப்ரும்ஹணங்களாகையால் வைதிகங்களானபடியால் அவைகளில் நிஷித்தமானவர்களுக்கு அதிகாரத்தை இதுவே கல்பித்துத் தர எவ்வாறு சக்தியுள்ளதாகுமென்றும் சொல்லி, மேல் வாஸ்தவத்தில் இதுவுமொரு ஸம்ஸ்காரத்தில் சேர்ந்து வைதிகமெனவே சொல்லவேண்டும் என்றும், ஸாங்கமான வேதமொன்றையே வித்யையெனச் சொல்வது உசிதமானதால் அவ்வித்யாதிகாரம் பெற்ற த்ரைவர்ணிகர்களுக்கே அதிலு மதிகார மென்றும், இதற்கிணங்கவே நாளதுவரை சிஷ்ட கோஷ்டியில் இந்த அக்ஷராப்யாஸம் த்ரைவர்ணிகர்களிடத்திலேயே இருக்கிறதென்றும் இவ்வளவு விஸ்தாரமாக நிரூபித்திருக்க 'ஏன் இப்படி தாமரை யிலையில் தண்ணீர்போல் நிலையற்றிருக்கவேண்டும்' என்று பரிஹாஸம் செய்கிறார். நாம் வாத சைலியில் ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அக்ஷராப்யாஸத்தி லதிகார முண்டானாலும் அது லௌகிகப் படிப்புக்கே உபயோகப்படுமாதலால் ப்ரக்ருதோபயோகம் ஒன்றுமில்லை யென்று முதலில் சொல்லி, உண்மையில் த்விஜர்களுக்கே அது ஏற்பட்டதென்றும், த்ரைவர்ணிகர்களிடத்திலேயே அது அநுஷ்டாநத்திலிருந்து வருகிறதென்றும் சொல்லியிருக்க, இதில் ஏதோ முன்பின் விரோதம் அல்லது நிச்சயமில்லாமை முதலியவைகளை எவ்வாறு ஊஹிக்க முயன்றாரோ நாமறியோம்.

த்³விதீயஜந்மந꞉ பூர்வமாரபே⁴தாக்ஷராந் ஸுதீ⁴꞉ ।
[illegible] வாரணாஶாஶவ꞉ ஶிஶூந் ॥
(அத்⁴யா. 6. ஶ்லோ. 2.)

என்ற காலப்ரகாசிகை முதலிய க்ரந்தங்களின் வாக்யங்களால் ஸ்பஷ்டமாக இரண்டாவது ஜந்மமான காய்த்ரி உபதேசத்திற்கு முன் அக்ஷராப்யாஸம் செய்ய வேண்டுமென்றிருப்பதால், காயத்ரிக்கு அதிகாரமுள்ள த்விஜர்களுக்கே தான் அக்ஷராப்யாஸத்திலும் அதிகாரம் என்பதை நாமினி அதிகம் விவரித்து எழுதுவது அநாவசியகமாகும்.

ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய ப்ராசீநர்களின் வழியில் நின்று விஷயத்தை நாம் எடுத்துரைத்திருக்க, நாம் நிரூபித்த வழி அவ்வளவு த்ருப்திகரமாகத் தோன்றவில்லையானால் அவ்வழியைத் தாம் தூஷித்து வேறு வழி கல்பித்து, அவ்வழியால் ஸ்ரீ பாஷ்யகாராதிகளின் கொள்கையை ஸ்தாபிக்க வேண்டியதே ஸ்ரீமான் அநந்தாசாரியருக்கும் அவசியமானது. அப்படியிருக்க, ப்ராசீநர்களின் க்ரந்தங்களுக்கு விருத்தமான ஸித்தாந்தத்தை இவர் அங்கீகரித்திருப்பது மிகவும் வருந்தக்கூடியதா யிருக்கிறது.

'ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அக்ஷராப்யாஸ மில்லையானால், அவர்கள் கடிதம் எழுதல் வாசித்தல் கடன் பத்ரங்களில் கையெழுத்திடுதல் முதலியன ஒன்றும் செய்யக் கூடாதல்லவா' என்கிறார். இதன் கருத்து நமக்கு விளங்கவில்லை. இவர் அக்ஷராப்யாஸம் என்பதால் லௌகிகமாக அக்ஷரசிக்ஷை செய்வித்தலை மாத்ரம் நினைக்கிறார் போலும். நாம் த்விஜர்களுக்குத் தான் உண்டென்ற அக்ஷராப்யாஸம் த்ருஷ்டாத்ருஷ்டோபய ரூபமான வேதாத்யயநோபகாரகமான அக்ஷரசிக்ஷை. கேவலம் லௌகிகமான அக்ஷரசிக்ஷையை நாம் ஒருபோதும் ஒருவருக்கும் மறுக்கவேயில்லை. ஆசண்டாளம் இந்த சிக்ஷை செய்துகொண்டு வ்யவஹாரம் நடத்திவருவதையும் நாம் மறந்து கூறுவதாக நினைத்தால் அதற்கு என்ன பதில் சொல்ல வியலும்? பாஹ்யர்கள் உட்படச் செய்துவரும் அக்ஷரசிக்ஷையைவிட, சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டும் பகவதாராதந மெனவும் நினைத்துச் செய்யப்படும் த்ரைவர்ணிகர்களிடத்தில் அநுஷ்டாநத்திலிருந்தும் வருகிற அக்ஷராப்யாஸம் என்ற கர்ம விசேஷம் வேறு அல்லவா? இப்படிப்பட்ட வைதிகமான அக்ஷராப்யாஸ மில்லையேல் அவர்களுக்குப் படிப்பே இல்லாமற் போய்விடுமா? வைதிக ஸம்ஸ்காரமில்லை யென்றால் லௌகிகமான படிப்பு ஏற்படமாட்டாதா? கர்ப்பாதாநம் என்கிற வைதிக ஸம்ஸ்காரத்தைச் செய்யாதவர்களுக்குப் புத்ரோத்பத்தியே ஏற்படமாட்டாதென்று சொல்லலாகுமோ?

த்ரைவர்ணிகர்களுக் குரிய கர்மங்களின் நடுவிலிருக்கும் அக்ஷராப்யாஸமும் அவர்களுக்கே யாகும் என்றால், 'ஸத்யம் வத' முதலிய வாக்யத்தால் போதிக்கப்படும் ஸத்யவசநாதிகளும் மற்றவர்களுக்கு இல்லாமற் போக வேண்டிவரும் என்ற அதிப்ரஸங்கமும் கார்யகரமானதல்ல. அங்கு வேதாத்யயநம் செய்து முடித்த மாணவகனுக்கு ஆசார்யன் உபதேசிக்க வேண்டிய பல தர்மங்களை 'ஸத்யம் வத' என்று தொடங்கி 'ஏவமுபாஸிதவ்யம்' என்றிறுதியாக எடுத்து அநுவதித்து, அத்தர்மங்களை 'இந்த மாணவகனுக்கு உபதேசிக்கவேண்டுமென்று, 'வேத³மநூச்யாசார்யோ'ந்தேவாஸிநமநுஶாஸ்தி' என்று விதித்திருக்கிறது. அத்தர்மங்கள் இங்குக் கேவலம் அநுவதிக்கப்படுகின்றன. அவைகள் ப்ரதாநமாக விதிக்கப்பட்ட விடங்களைப் பராமர்சித்தால் அவை யாருக்கு எதற்காக ஏற்பட்டவை என்பது நன்கு விசதமாகும். அவைகளில் சில ஸாமாந்ய தர்மங்களாகவும் மற்றும் சில விசேஷ தர்மங்களாகவும் இருக்கின்றன. ஆகையால் தான் 'ஸ்வாத்⁴யாயப்ரவசநாப்⁴யாம் ந ப்ரமதி³தவ்யம்' என்றதில், ஒன்று த்ரைவர்ணிகளுக்கேயாகவும் மற்றொன்று ப்ராஹ்மணர்களுக்கே யாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது.

மேற்கொண்டு ஸ்ரீ அநந்தாசார்யர், சதுர்த்த வர்ணத்தாருக்குப் புராணோக்தமான மந்த்ரங்களைக்கொண்டு செய்யத் தகுந்த கர்மங்கள் பல உண்டென்று எடுத்துக் காட்டி, அவ்வளவால் புராணோக்த மந்த்ரங்களை அவர்கள் உச்சரித்துக் கர்மங்களைச் செய்யலாமானால் மற்றப் புராண பாகங்களை மட்டும் அவர்கள் படிக்கலாகாதா என்கிறார். அவ்வசநங்கள் அவர்களுக்கு அவைகளில் அதிகாரத்தைப் போதித்து அவ்வளவிலேயே உபக்ஷீணங்களாகையாலே சாஸ்த்ர நிஷித்தமான மற்றப் பாகங்களிலும் அதிகாரத்தைக் கல்பித்துக்கொடுக்கச் சக்தியுள்ளவைகளாக எவ்வாறாகும்? ஒரு வசநம் ஒரு அம்சத்தை மட்டும் போதிக்க ஸமர்த்தமாகுமேயல்லது, இரண்டம்சங்களைப் போதிக்கமாட்டாது. அப்போது 'வாக்யபேதம்' என்ற தோஷமுண்டாகும் என்பது சாஸ்த்ரஜ்ஞர்களின் கொள்கை. அப்படி நிஷித்தமானவற்றையும் கல்பிக்க முன் வந்தால், ப்ராஹ்மண ஸ்த்ரீகளுக்குச் சிற்சில வைதிக கர்மங்களில் 'பத்நீஸம்யாஜம்' என்ற மந்த்ரம் முதலியவற்றை உச்சரிக்க அதிகார மிருப்பதைக்கொண்டு, மற்ற வேத பாகங்களிலும் அவர்களுக்கு அதிகாரம் ஏற்பட வேண்டிவரும். அது ஸ்ரீமான் அநந்தாசார்ய ஸ்வாமிக்கு ஸம்மதமாக விராதே.

தவிர, முதல் ஸஞ்சிகையில் ஒருவித வித்யாஸமு மில்லாமல் எல்லா ஸ்த்ரீ சூத்ரர்களுக்கும் புராணாதிகளில் படிக்க அதிகாரம் உண்டென்று

பொதுவில் எழுதி, இப்பொழுது எக்காரணத்தாலோ அதை விட்டு விட்டுப் 'பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்ற ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு' என்று மாற்றிக்கொண்டு, ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தால் இவ்விசேஷம் ஸித்திப்பதாயும், ஸ்த்ரீ சூத்ரர்கள் இதிஹாஸ புராணங்களைத் தொடக்கூடாதென்று ஒரு வசநம் நிஷேதித்திருப்பதையும், மற்றொரு சாஸ்த்ர வசநம் வைஷ்ணவ ஸ்த்ரீ சூத்ரர்கள்பகவந் மந்த்ரங்களைக்கொண்டு தீக்ஷித்துப் பகவதாராதநாதிகளைச் செய்யலாமென்று விதித்திருப்பதையும் கண்டு, இவ்விரு வசநங்களையும் ஸமரஸப்படுத்துவதற்கு ஸாமாந்ய விசேஷ ந்யாயம் தவிர வேறு எந்த ந்யாயம் உபயோகப்படுமென்றும் அந்த ஸ்வாமி ஸாதிக்கிறார். இங்கு சற்று கவனிக்கவேண்டும். ஸாமாந்ய விசேஷ ந்யாயமாவது—எந்தவிடத்தில் பொதுவான விதியால் ஒரு அம்சம் விதிக்கப்பட, அது இன்னதென்று குறிப்பாகத் தெரியாதவரையில் அதை அநுஷ்டிப்பது அஸாத்யமாகுமானது பற்றி அதன் விரிவு அபேக்ஷிதமானபோது விசேஷ சாஸ்த்ரத்தால் அது இன்னதாகுமெனப் போதிக்கப்பட்டு முன் ஸாமாந்யமாகச் சொல்லப்பட்டது இந்த விசேஷந்தான் என்று நிச்சயித்து எடுக்கொள்ளலாகும். உதாஹரணம்: 'பஶுநா யஜேத' என்று பொதுவில் பசுவைக்கொண்டு யாகம் செய்வதென்றால் நால்கால் ப்ராணிகள் எல்லாம் பசுவாகையால் எந்தப் பசுவைக்கொண்டு யாகம் செய்வது என்று திகைக்கவேண்டியபோது, அந்த ப்ரகரணத்திலிருக்கும் ஒரு மந்த்ரத்தில் 'ச்சாகஸ்ய' (ச்சாக: = ஆடு.) என்று இருப்பதால் அப்பசு ஆடாகும் என்ற நிர்ணயம் பிறக்கின்றது. இந்த விசேஷ நிர்ணயம் பிறக்காதவரை அது அநுஷ்டாநோபயோகியாக ஆகவில்லை. இந்த நிர்த்தாரணம் பிறந்ததும் இரண்டும் ஒரே விஷயமாய்கொண்டு கார்யோபயோகியாகின்றது. இந்த ந்யாயத்தின் ஸ்வரூபம் இவ்வாறிருக்க, இந்த ந்யாயம் ப்ரக்ருதத்தில் உபயோகமாவது எப்படியோ தெரியவில்லை. இங்கு எது ஸாமாந்யம்? எது விசேஷம்? விசேஷத்தில் ஸாமாந்ய தர்ம மிருக்கவேண்டும். ஸாமாந்ய சப்தத்தால் பொதுவில் அந்த விசேஷ வஸ்துவும் குறிப்பிடப்பட் டிருக்கவேண்டும். பசுத்வம் என்ற ஸாமாந்ய தர்மம் ஆட்டிலு முண்டு. ஆடும் பசுதான் என்ற பொதுவான சப்தத்தால் குறிப்பிடப் படலாம். ப்ரக்ருதத்தில் ஸ்த்ரீ சூத்ரர்கள் வித்யா ஸ்தாநங்களை தொடக்கூடாது என்பது ஸாமாந்ய சாஸ்த்ரமென்றும், புராணோக்த மந்த்ரங்களை (அஷ்டாக்ஷராதிகளைக்) கொண்டு வைஷ்ணவஸ்த்ரீ சூத்ரர்கள் பகவதாராதநம் பண்ணலாமென்றது விசேஷ சாஸ்த்ரம் என்றும் அந்த ஸ்வாமி எழுதியிருக்கிறார். இந்த ஸாமாந்ய சாஸ்த்ர மென வெடுத்தவற்றில் என்ன ஸந்தேகம் வந்து அதை அநுஷ்டிக்கத் தடையேற்பட்டது. 'ஸாமாந்யவிதிரஸ்பஷ்டஸ்ஸம்ஹ்ரியேத விஶேஷத:' என்றல்லவோ மீமாம்ஸ

களின் வழி. எல்லா ஸ்த்ரீ சூத்ரர்களும் இந்த நிஷேதத்தையும் அநுஷ்டிக்கலாம். வைஷ்ணவ ஸ்த்ரீ சூத்ரர்கள் தீக்ஷிதர்களாகிப் பகவதாராதநம் செய்யலாம். இதற்கு விரோதம் எங்கிருந்து வந்தது? பொதுவில் நிஷேத ஸ்தலத்தில் ஸாமாந்ய விசேஷ ந்யாயத்திற்கு ப்ரவ்ருத்தியேயில்லை யென்பதே மீமாம்ஸகர் பலரின் கொள்கை. அப்படிக்கில்லாமல் நிஷேத ஸ்தலத்திலும் ஸாமாந்யத்திற்கு விசேஷத்தில் பர்யவஸாந முண்டாகலாமெனில் 'ந ஹிம்ஸ்யாத்' என்கிற ஸாமாந்ய நிஷேதத்திற்கு 'ந ப்ராஹ்மணம் ஹந்யாத்' என்ற விசேஷத்தில் பர்யவஸாநம் வரவேண்டி ஏற்படுமாகையால் இது முற்றிலும் அநுபபந்நம். இந்த அநுபபத்தியை ஏதாகிலு மொருவிதம் பரிஹரித்துக்கொண்டு, நிஷேத ஸ்தலத்திலும் ஸாமாந்ய விசேஷ ந்யாய ப்ரவ்ருத்தி உண்டென்று சொல்வதாயிருந்தாலும், எந்த விடத்தில் ஸாமாந்ய சாஸ்த்ரம் மற்றொன்றோடு விரோதித்து அவ்விரோதத்தைப் போக்க உத்ஸர்க்காபவாத ந்யாயம் வரவேண்டியிருக்கிறதோ அவ்விடத்தில் அதன் பின் இந்த ந்யாயத்திற்கு மிடமுண்டென்பதே ஸித்தாந்தமாகும். ப்ரக்ருத்திலோ யாதொரு விரோதமுமில்லாதிருக்க, இவ்விருவிதமான ந்யாயங்களுக்கும் ப்ரஸக்தியேயில்லை. இவ்விரண்டிற்கும் விஷயம் ஒன்றாயிருந்தாலல்லவோ விரோதத்திற்கு ப்ரஸக்தி. இப்படியிருக்க, ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத இரண்டு ஸ்தலங்களை எடுத்து, இங்கு ஸாமாந்ய விசேஷ ந்யாயம் ப்ரவ்ருத்திக்கிறதாகத் தீர்மானித்து எழுதிவிட்டால், முற்றிலும் மீமாம்ஸா ந்யாயத்தில் பரிசயமில்லாதவர்கள் மிகவும் ஏமாந்து போகவேண்டி வருவதுடன், கொஞ்சம் ம்ருதுவான ப்ரஜ்ஞையுள்ளவர்களுக்கு ஸ்ரீ வேதாந்த தேசிகாதிகளிடத்தில் நம்பிக்கையும் குறைய இடமுண்டாகிவிடு மன்றோ?

வேதாதிகாரிகளுக்கு வேதோபப்ரஹ்மணங்களான ஸ்ம்ருதி புராணாதிகளில் அதிகாரமில்லையெனில், வேதார்த்தத்தை விசதீகாரம் செய்கின்ற திவ்ய ப்ரபந்தங்களிலும் இந்த ந்யாயம் வந்துசேர்ந்து, திவ்ய ப்ரபந்தத்திலும் அவர்களுக்கு அதிகாரமில்லாமல் போகுமென்று மேற்கொண்டு ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி ஸாதித்திருக்கிறார். ஸ்ரீ தேசிகாதிகள் ஸ்பஷ்டமாகப் புராணாதிகளில் அவர்களுக்கு அதிகாரமில்லையென்று வெகு ஸ்தலங்களில் ஸாதித்துவிட்டு, திவ்ய ப்ரபந்தத்தில் மட்டும் அவர்களுக்கு அதிகாரமுண்டென்றார்கள். இதை நிர்வஹிக்கவேண்டிய பரம் நமக்கு மாத்ரமல்ல. ஆஸ்திகாக்ரேஸரரான ஸ்ரீமான் அநந்தாசார்ய ஸ்வாமி உள்பட ஸ்ரீ தேசிகன் திருவடிக ளானவர்கள் எல்லோருக்கும் பொதுவானதுதான். ஆயினும் நாம் பெரியோர்களிடம் கேட்டறிந்தவற்றை இங்குக் குறிப்பிடுகிறோம். வித்யா ஸ்தாநங்களில் நான்கு வேதங்கள் ப்ரதாநங்கள். மற்றைப் பத்தும் ஏதோ ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொன்றும் வேதத்திற்கு உப

ப்ரஹ்மணம் செய்து வேத வாக்யங்களின் அர்த்தத்தை விசதமாக்க உபாயமாகின்றன வென்றும் ஸ்வதந்த்ரமாக இவைகளுக்கு உபயோகமில்லையென்றும்,

"இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் ।
பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி ॥
ப்ராயேண பூர்வபாகார்த்த பூரணம் யச்சாஸ்த்ரத: ।
இதிஹாஸ புராணாப்யாம் வேதார்த்த: ப்ரகாச்யதே ॥"

என்றிவை முதலிய ப்ரமாணங்களை நன்கு பராமர்சித்து, ஸ்ரீ பாஷ்யத்தில் அபசூத்ராதிகரணத்தில், 'இதிஹாஸபுராணே கவி வேதோப-ப்ரும்ஹணம் கர்வந்தீ வேத உபாஸநாவநீநீதயது: நவ்ரா தர்கா ந்ரூண' என்று ஸ்பஷ்டமாய் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. திவ்ய ப்ரபந்தமோ வெனில்: வேதோபப்ரஹ்மணஞ் செய்து வேத வாக்யங்களின் அர்த்தத்தை விசதப்படுத்த, மட்டுமாக ஏற்பட்டதாகாமல், வேதார்த்தத்தின் ஸாரதமாம்சத்தைச் சுருங்க வேதாநதிகாரிகள் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டே பரம க்ருபையுடன் மஹநீயர்களால் அருளிச் செய்யப்பட்டதாகையால் திவ்யப்ரபந்தத்தில் வேதாநதிகாரிகளுக்கு அதிகாரமில்லாமல் போகவேண்டி வருமென்பது தர்மிக்ராஹக ப்ரமாண விருத்தமாகையால் காலாத்யயா பதிஷ்டமாயிற்று. ஆகையால் திவ்ய ப்ரபந்தத்தில் எல்லோருக்கும் அதிகார மிருக்க குறையில்லை.

வித்யா ஸ்தாநங்களில் ஒன்றான ந்யாய சாஸ்த்ரத்தில ஸ்திரீசூத்ரர்களுக்கு அதிகாரமில்லையென்று ந்யாய பரிசுத்தியில் விசிஷ்யநிர்தேசித்திருப்பதால், ந்யாய சாஸ்த்ரத்தில் அவர்களுக்கு அதிகார முண்டென்றும் அது அவர்களுக்கு ஜீவநோபாயம் என்றும் இதரர்கள் சொல்வதாக ஸ்ரீமான் அநந்தாசார்ரர் எழுதியிருப்பது வித்யாஸ்தாநங்களில் சேராதந்யாய சாஸ்த்ர விஷயமெனக் கொள்ளவேண்டும்.

ஸூதபௌராணிகருடைய சரித்ரத்தை நன்கு கவனிக்குங்கால், அவ்விஷயம், நம் முன்னோர்கள் ஆதரித்த இந்த ஸித்தாந்தத்திற்கு எவ்விதத்திலும் பாதகமாட்டாது என்பது நன்கு விளங்கும். இதன் விஸ்தரம் அடுத்த ஸஞ்சிகையில் காண்க.

ஸ்ரீமான் அநந்தாசார்யர் இதில் தமக்கு யாதொரு ஆக்ரஹமுமில்லையென்றும், சாஸ்த்ரங்கள் காட்டும் வழியைப் பின்பற்ற ஸித்தமாயிருப்பதாயும் ஸாதிப்பது மிகவும் உண்மையானது. நம் ஸம்ப்ரதாயத்தில் சிறந்த வித்வானும் ஆஸ்திகாக்ரேஸரராயும் இருக்கும் ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி எழுதியதிலிருந்து, இதுதான் ஸாம்ப்ரதாயிகமான அர்த்தமோ வென்று ஜனங்கள் ப்ரமிக்கலாகாதென்றே இதை இவ்வளவு விஸ்தரமாக எழுத நேர்ந்ததற்கு அந்த ஸ்வாமி நம்மை க்ஷமிக்கும்படி ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

தூப்புல் நயனாசார்யர் அருளிச்செய்த

*பிள்ளை யந்தாதி

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

சீரார் தூப்புற் பிள்ளையந்தாதியென்னும் செ(மூ)ந்தமிழால்
நேராக வேதாந்ததேசிகர் தாளிணைக்கீழ் மொழிந்தான்
ஏரார் மறைப்பொருளெல்லா மெடுத்திவ் வுலகுய்யவே
சீராகிய வரதாரியன் பாதம் துணைநமக்கே.

பொதுவாக இவ்வுலகில் எந்த ஸித்தாந்தத்திலும், ஆசார்யர்களையும், விசேஷித்துத் தான் அப்யஸிக்கவோ விவரிக்கவோ ஆரம்பிக்கும் ப்ரபந்தம், செய்தவரையும் வணங்கவேண்டு மென்பதும் வணங்கி வருவதும் சாஸ்த்ரங்களிலும் உலக அநுபவத்திலும் ப்ரஸித்தமாகவே இருக்கிறது. நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திலோ முக்கியமாக வேதாந்தம் முதலிய ஸம்ப்ரதாய க்ரந்தங்களை அப்யஸிக்கும்போது அவர்கள் விஷயமான வணக்கங்களை ச்லோகத்தினாலும் பாட்டு முதலியவைகளாலும் நாம் செய்து வருகிறோம். அந்த ச்லோகமும் பாட்டுக்களும் 'தனியன்' என்று வழங்கப்பட்டு வருகிறது.

அவைகளில் சில அவர்களுடைய குண விசேஷங்களையும், சில அவர்கள் செய்த ப்ரபந்தத்தின் ஏற்றத்தையும், மற்றும் சில அவர்களின் சிஷ்யர்களின் ஏற்றத்தையும், இவைகளை யதாபிலஷிதம் சேர்த்தும், குறிப்பிட்டு அமைக்கப்பட்டதாயிருக்கும். இவைகளை "கவேர்ப்ராஹ்யம்" என்று தொடங்கி அருளிச் செய்யப்பட்ட தனியன்களில் வ்யக்தமாய்க் காணலாம். அப்படிச் செய்யப்பட்ட தனியன்களில் ஒருவருக்கே ஒன்றுக்கு மேற்பட்ட தனியன்கள் இருக்குமானால், அவைகள் அநேகமாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஸமயத்தில் அநுஸந்திக்கத்தக்கது என்ற வ்ய

*[இது யுவ ஹூ புரட்டாசி மாஸத்தில் திருக்குடந்தையில் ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஸபையில் தேவனார்விளாகம் ஸ்ரீ. உ. வே. லக்ஷ்மீநரஸிம்மாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.]

வஸ்தை உள்ளனவாகவே இருக்கும். அந்த வ்யவஸ்தைக்குக் காரணமும் அநேகமாக அந்தத் தனியனில் குறிப்பிடப்பட்ட அர்த்த விசேஷமே.

ஸ்ரீ தேசிகன் திருக்குமாரர் விஷயமான இந்தத் தனியனும் பிள்ளையந்தாதியை அநுஸந்திக்கும்போது அநுஸந்திக்க வேண்டியதாக வ்யவஸ்திதமாயிருக்கிறது. இது, பிள்ளையந்தாதி என்ற ப்ரபந்தம் செய்தருளினவரான வரதாசாரியர் என்று திருநாமம் பூண்ட ஆசார்யரின் குணங்களையும், ப்ரபந்தத்திற்கு விஷயமான விலக்ஷண வஸ்துவின் ஏற்றத்தால் கிடைக்கக்கூடிய ப்ரபந்தத்தின் ஏற்றத்தோடு வாசிகமாகச் சில ஏற்றத்தையும் வெளியிடுகிறதாக அமையப் பெற்றிருக்கிறது. ஒரு க்ரந்தம் செய்தருளினவர் விஷயமான தனியனை, அந்த க்ரந்தம் அப்யஸிக்கு முன் அநுஸந்திப்பதனால், அத்ருஷ்ட ரூபமான ப்ரயோஜநம் ஏற்படுவது தவிர, த்ருஷ்ட ரூபமான ப்ரயோஜநமும் நேரிடுகிறது. வக்த்ரு வைலக்ஷண்யம் ப்ரபந்த வைலக்ஷண்யம் முதலியன தெரிந்தால், அதை அப்யஸிக்க ப்ரவ்ருத்தி எளிதில் அனைவர்க்கும் ஏற்படும்.

இந்தத் தனியனில் விஷய வைலக்ஷண்யம், "சீரார் தூப்புல்பிள்ளை" "வேதாந்த தேசிகர்" என்கிற பதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வக்த்ரு வைலக்ஷண்யம், "சீராகிய வரதாரியன்" என்றதனால் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் ப்ரபந்த வைலக்ஷண்யம் கொஞ்சம் விரிவாகவே சொல்லப்பட்டிருக்கிறது. "ஏரார் மறைப்பொருளெல்லாம் எடுத்து இவ்வுலகுய்யவே நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ்" என்று இதனால் ப்ரபந்தத்திற்கு ஏற்படும் ஏற்றத்தை அடியேனுடைய அறிவுக்கு எட்டிய மட்டில் அடியேன் க்ரஹித்தவாறு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

இப்பிரபந்தம் எதற்காகச் செய்தருளினார் என்று வினவப்படலாம். அதன் பலமும், இரு மொழியிலும் நிகரற்ற பாண்டியத்யம் இருக்கச் செய்தேயும் இதைத் தமிழில் அருளிச்செய்ததற்குள்ள விசேஷ காரணமும், "உலகுய்யவே" "செ(மு)ந் தமிழால்" என்ற பதங்களில் காட்டப்பட்டிருக்கின்றன. "[illegible]" என்று இருப்பதால், அனைவரும் எளிதில் குரு நாமத்தை உச்சரிக்க வேணும். அதில் வைதிக மந்த்ர ஜபங்களில் மந்த்ரார்த்தத்தைத் தனியாக அநுஸந்தித்துக்கொண்டு மந்த்ரஜபம் செய்யவேண்டியிருக்கிறது. அவ்வித க்லேசமில்லாமல் குருநாமத்தைச் சொல்லும்போதே அதில் அநுஸந்திக்க வேண்டிய அர்த்த விசேஷங்களையும், அத்துடன் குருநாமத்தையும் அமைத்து உலகுய்யவே செய்யப்பட்டிருக்கிறது. இதுவே ப்ரபந்தத்தின் இறுதியில் "தினந்தோறு மாதரித்தோது மன்பர்" என்று காட்டப்பட்டது. வடமொழியில் செய்யப்பட்டால் தமிழுலகுக்கு ஸுலபமாக உஜ்ஜீவிக்கும் வழி ஏற்படாது; தவிர, ஸதா ஜபம் செய்யும்படி அவ்வளவு அழகாயும் அமையாது. ஏனெனில், தமிழில்தான் அந்தாதி என்ற ப்ரபந்தம் ப்ரஸித்தமாய் விளங்கி வருகிறது. அந்தாதியென்பது, முன் பாட்டின் அந்தமே பின் பாட்டின் ஆரம்பமாக வைத்துச் செய்யப்படும் ப்ரபந்தம். இப்படிச் செய்வதால் இதை ஓதுகிறவர்களுக்கு அடுத்த பாட்டின் ஆரம்பத்தைத் தனியாக அடி வரவினால் தெரிந்துகொண்டு சொல்லாமல், சொன்ன பாட்டே சொல்லப்போகிற பாட்டின் அடியையும் நினைப்பூட்டிவிடும். ஆசார்ய விஷயத்தில் செய்யப்படும் தமிழ் ப்ரபந்தங்கள் எல்லாம் அந்தாதியாகவே இருக்கின்றன. கண்ணிநுண் சிறுத்தாம்பு, இராமாநுச நூற்றந்தாதி, சடகோபரந்தாதி, பிள்ளையந்தாதி, ஆதிவண் சடகோபரந்தாதி என்பன இதற்கு உதாரணங்கள். அப்படியிருப்பதால், அந்த ப்ரபந்தங்களை அநுஸந்திக்கப் புக்கால், மேல் பாட்டுக்கள் நினைக்கப்பட்டு, ஓயாமல் அநாயாஸேந சொல்லிக்கொண்டேயிருக்க ஸௌகரியமுண்டு. (இயற்பாவில் அதிகம் நெட்டுரு இல்லாதவர்கள், இயற்பா ஸேவிக்கப் புக்கால், எல்லாத் திருவந்தாதியிலும் இழுக்கப்படுவதற்கு அது அந்தாதியில் அமைந்ததுவும் ஒரு காரணம்.) ஆகவே அந்தாதி அமைப்பினால் இடைவிடாமல் அந்த ப்ரபந்தத்தை அநாயாஸேந எல்லாரும் அநுஸந்திக்க முடியுமென்பதையும், அப்படி அமைப்பது தமிழிலேயாகையால் தமிழ் அழகியது என்பது "உலகுய்யவே" "செந்தமிழால்" என்று காட்டப்பட்டது.

இப்பிரபந்தம் இருபது பாசுரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்புள்ள அந்தாதிகள் பத்துப் பாசுரமாகவோ அல்லது சற்றேறக்குறைய நூறு பாசுரங்களாகவோ அமைந்திருக்க, அப்படிகளில் ஒன்றும் தழுவப்படாமல் இருபது பாசுரங்களாக அமைந்த காரணம் காட்டப்படுகிறது "ஏரார் மறைப்பொருளெல்லா மெடுத்து" என்று. அதாவது: சீர்மையால் பூர்ணமான வேதப் பொருள்களை எடுத்து அமைக்கப்பட்டது; ஆனபடியால் வேத விசாரமான மீமாம்ஸா சாஸ்த்ரத்தின் கணக்கிலே இதுவும் அமைக்கப்பட்டது. அது இருபது அத்யாயம்; இதுவும் இருபது பாசுரம். ஆனால் மறைப்பொருள் என்று ஈச்வர பக்தியையும் குரு பக்தியையும் எடுத்து, அவைகள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன வென்று சொல்வதைவிட, இந்த மாதிரி எண்ணிக்கையைக் கொண்டு "மறைப்பொருள் எல்லாம் எடுத்து" என்பதை நிர்வஹிப்பது எங்ஙனே பொருந்தும்? ஸாதாரணமாக எண்ணிக்கைகளைக்கொண்டு நிர்வஹிப்பது

எங்கும் ஸம்பவிக்கலாம் என்று வரும் சங்கைகள் அந்தந்த அத்யாயத்தின் ப்ரதாநார்த்தங்களுக்கும் அதற்கநுகுணமாக அந்தந்தப் பாட்டின் தாத்பர்யார்த்தங்களுக்கும் உள்ள ஒற்றுமையைக் கூர்ந்து கவனித்தால் நன்கு பரிஹ்ருதமாகும்.

ஒரு ப்ரபந்தம் அருளிச்செய்தவருக்கு, பிற்பட்டவர்களால் ஊஹிக்கப்படும் ஹாவ விசேஷம் இருந்திருக்குமா இருந்திருக்கமாட்டாதா என்று ஸம்சயப்பட்டால், அது அவர்களுடைய உக்திகளுக்கோ ஸம்ப்ரதாய ப்ரதாநார்த்தங்களுக்கோ விரோதிக்காம லிருந்திருக்குமாகில், அந்த மாதிரி ஹாவ வர்ணநம் பண்ணுவதை மஹான்கள் மறுதளிக்கமாட்டார்கள். தவிர: பெரியோர்கள் காட்டியிருக்கிற வழியைப் பின்பற்றி அந்த மாதிரியிலேயே ஹாவ வர்ணநம் பண்ணுவதை மிகவும் உகப்பர்கள்.

"அருளினன் அவ்வருமறையின் பொருள்", "அருள் கொண்டாயிர மின்தமிழ் பாடினன்" என்பதைத் திருவுள்ளம் பற்றி நான்கு வேதமும் வேதார்த்த விசார ரூபமான மீமாம்ஸா சாஸ்த்ரமும் ஆழ்வார் அருளிச் செயலில் அடங்கியிருப்பதாகக் காட்டுகிற,

"ஶூஉள ஶாரீரகாயௌ கூ.ஶஹ விஶஉம் விஂஶதிவௌகீ ஸாஹ.ா
ஸஂக்ஷெவொZஸள விஹாஹம் வுஶய திவஃஸாம் ஹாஈ வாமொவவஜூ ।
ஸூஹ்ரூதா நாஉஜம் ஸகுஉநாஹதம் ஸாஉஶாவாஸஹஸ.ஂ
ஸஂவுக்ஷ்ஂ ஸாஹிபெயெயௌஜாஈவி உஶகெஹௌாத்யவௌா
ஈஹெஸு ॥"

என்கிற ச்லோகத்தில் காட்டப்பட்டிருக்கிற வழிப்படி, இப்பிரபந்தம் ("ஸாஹ.ா—விஂஶதிஃ") அந்தாதி ப்ரபந்தமானபடியால் ஆரம்பப் பாட்டைச் சொல்லி நிறுத்த வேண்டியிருப்பதால், மறுபடி முதல் பாட்டோடு சேர்ந்த இந்த 'விஂஶதிஃ' சாரீரகார்த்த க்ரமத்தை விசதமாகச் சொல்லுகிறது. ஆழ்வார் ப்ரபந்த விஷயமாக ஸ்ரீ தேசிகன் இந்த ச்லோகத்தை அருளிச்செய்திருந்தும், அந்த ப்ரபந்தத்தில் ஒரு பாகத்தைப் பிரித்துச் சாரீரகார்த்த க்ரமத்தை விசதமாகச் சொல்லுவதாக நிர்வஹிப்பதைக் காட்டிலும், ஸ்வரஸமாக இப்பிரபந்தம் முழுவதும் அந்த க்ரமத்தைப் பின்பற்றுகிறது என்று சொல்ல முடிகிறது என்பதைக் கணிசிக்கிறது போலும். "நேராக" என்ற பதம். மீமாம்ஸையானது த்ரிகாண்டியாக இருப்பதுபோல் இதுவும் காண்டத்ரயாத்மகம். முதல் 12-பாட்டுகள் கர்மகாண்ட க்ரமத்தையும், 13 முதல் 16 வரையில் தேவதா

காண்ட க்ரமத்தையும், 17 முதல் 20 வரையில் ப்ரஹ்ம காண்ட க்ரமத்தையும் காட்டுகின்றன.

அவைகளில் ஸுஸ்பஷ்டமாக அந்தந்த அத்யாயங்களின் அர்த்தங்களை ஸூசிப்பிக்கிற பாட்டுகளை ஸ்தாலீபுலாக ந்யாயமாகப் பார்க்கலாம்.

முதலில்: கர்ம காண்டத்தில் ப்ரமாணுத்யாயத்தின் தாத்பர்யத்தைக் காட்டுகிறது முதல் பாசுரம். ப்ரமாணுத்யாயத்தில் தர்மத்தில் ப்ரமாணம் இன்னதெனச் சொல்லப்பட்டது. அந்தமாதிரி நம் ஸம்ப்ரதாயத்திற்கும் ப்ராமாணிகத்வத்தைக் காட்டவேண்டி நம் ஸம்ப்ரதாய ப்ரதாந ப்ரவர்த்தகர்களைக் குறிப்பிட்டுக்கொண்டு, ப்ரதாநார்த்தமான குரு பஜநத்தைக் காட்டுகிறது. 'மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன்' என்பதால் 'கஉவ்யாஜ்ஂ' 'ஸஹ யஉௌ உஶீஂ' என்று சொல்லப்பட்ட ஸ்ரீயஃபதி ஸ்ரீமாஈ ப்ரதாந ப்ரவர்த்தகனாகவும், பிறகு ப்ரபந்ந ஜநஸந்தாந கூடஸ்தர் என்றும் "நஃ குலபதிஃ" என்றும் சொல்லப்படுகிறவராயும், பெருமாளுக்குப் பிறகு க்ரந்தமுகேந உபகாரம் செய்தவராயும், ஆகையினாலேயே "யஸ்யஸாஈஸ்வதஸெ.ாதஃ" என்று நிரூபிக்கப்பட்டவருமான மாறனையும், பிறகு பரமத நிரஸந பூர்வகமாக ஸ்வமத ஸ்தாபநம் செய்தவரும், அதனால் "ஶாயா தாயாஶதா நாஂ..." என்றும், "யதீஶ்வஈஸாஸ்வதீ ஸுஈஹிதாஶயா நாஂ" என்றும் கொண்டாடப்பட்டவருமான எம்பெருமானாரும், பிறகு 'வெங்கடேஶாவதாரொயஂ' இத்யாதிகளால் புகழப்பட்ட ஸ்ரீ தேசிகனும், நம் ஸம்ப்ரதாயார்த்தங்களுக்கு ப்ரமாதாக்களாக அமைந்தார்கள் என்பதும், அவர்கள் தங்களை அடிபணிந்தவர்களுக்கு க்யாதி லாப பூஜா நிரபேக்ஷமாகக் கேவலம் அருளாலேயே ஸம்ப்ரதாயார்த்தங்களை அன்றீந்த கன்றுக்குச் சுரக்கும் சுரபிகள் போல் சுரந்தார்கள் என்பதும் தோற்ற அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஆக: இதனால் முதல் அத்யாயத்தில் காட்டப்பட்ட தர்ம ப்ரமாண ரூபமான அர்த்தத்தை நம் ஸம்ப்ரதாயார்த்தங்களுக்கு ப்ரமாணங்களைக் காட்டும் க்ரமத்தில் ப்ரமாதாக்களை இட்டு நிரூபிக்கப்பட்டு, முதல் அத்யாயத்தில் சொல்லப்பட்ட அர்த்தம் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மேல் 5-வது பாசுரம், கர்ம காண்டம் ஐந்தாவது அத்யாயார்த்தத்தைக் காட்டுகிறது. ஐந்தாவது அத்யாயத்தில் க்ரமம் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கும் "அன்றிவ்வுலகினை யாக்கி, (பிறகு) அறம்பொருள் நூல் விரித்து, (அதற்குப் பிறகு) தண்ணீள்புகழ் வேங்கடமாமலைமேவி, பின்னும் வென்றிப்புகழ் திருவேங்கட நாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்து"—என்று ஒருவித க்ரமம் அருளப்பட்டிருக்கிறது. ஸம்ப்ரதா

யார்த்தத்தையே இவர் ப்ரதாநமாகத் தர்ம ஸ்தாநத்தில் வைத்துப் பேசுகிற படியால் அதற்கு ஏற்றவாறு ஒரு க்ரமம் ஸூசிப்பிக்கப்பட்டது.

மேல் 13-வது பாட்டில் 'செம்பொன் மேனிமாருத' என்றும், 16-வது பாட்டிலும் "விளக்காகி......மார்பன்" என்று தேவதா காண்டத்துக்கு விஷயமான தேவதையின் ஸூசநமும் செய்து, "காவலனெங்கள் கிடாம்பிக் குலபதி" என்ற பாட்டில் ப்ரஹ்ம காண்டத்தின் முதல் அத்யாயத்தில் சொல்லப்பட்ட காரணத்வத்தை "காவலன்" என்ற சொல்லால் ஸூசிப்பித்து, முதல் மூன்று அடிகளால் "ஐ. ஹூ நாவுயெ ஶுவ—ஹி உநவியெஷூநத தடுராவஜெஸாக" என்று இவர் தாமே அருளிச்செய்ததை இவர் விஷயத்திலேயே ஸமந்வயம் செய்துகாட்டினார். அதற்கடுத்த பாசுரத்தில் இரண்டாவது அத்யாயார்த்தமான அபாத்யத்வம், "வரு கவிதார்க்கிக சிங்கமே வாதியர் வாழ்வறுத்தாய்" என்றதாலும், மூன்றாவது அத்யாயார்த்தமான உபாயத்வமும், அதற்கு மேல் சரணவரணார்ஹமான "துணையடி" என்ற பதத்தினால் ப்ரபத்தியும் ஸூசிப்பிக்கப்பட்டு, சுபாச்ரயமான திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு வாழி பாடுவதால் பக்தியும் ஸூசிப்பிக்கப்பட்டு ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. மேல் இறுதிப் பாசுரத்தால் பலம் சொல்லப்படுகிறது. அதுவும் "யஜெவெஷவுரணெதநெநஹுஃ தவெஹூஷ கூதூவிவுரணெத தநமெஹூாழ" "தவிநூஷைவாவரெ" என்னும் ரீதியில் சொல்லப்படுகிறது. 'முடியிடை நேர்படும் தூப்புலம்மான் பதமாமலரே' என்று "தவுாஊரம்வஜ உயம" என்று த்யாந விஷயமான பலம் இங்கு ஸ்ரீ தேசிகன் திருவடிகளாகி இங்கேயே ஸம்பவிக்குமென்று அருளிச்செய்தாராயிற்று. "நேர்படும்" என்று உத்தராவதி ரஹிதமாக நேர்பட்டுக்கொண்டேயிருக்கும் என்பதால், கடைசி ஸூத்ரத்தின் அர்த்தமும் ஸூசிப்பிக்கப்பட்டது. இவ் விதமாகவே இன்னும் ஆழ்ந்து ஆலோசிக்குமிடத்து, ஒவ்வொரு பாதத்தின் அர்த்தமும் ஒவ்வொரு அடியிலும், இடையே எல்லா அத்யாயங்களின் அர்த்தங்களும் எல்லாப் பாட்டுகளிலும் நிச்சயமாய்க் காணலாம். அதற்குரிய ஸந்தர்ப்பங்களில் அடியேனுடைய அறிவுக்கெட்டிய மட்டில் ஒவ்வொன்றாய் எடுத்து விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே 'அருமறையின் பொருள் ஆயிரமிந்தமிழ்' என்ற விடத்து ஸ்ரீ தேசிகன் "கூஊளஶாரீரகாயஹ்கூ ஓம" என்ற ச்லோகத்தால் நிர்வஹித்தபடி, அதே ச்லோகத்தைக்கொண்டு அவர் விஷயத்திலேயே ஏற்பட்ட இப்பிரபந்தத்திலும் நிர்வஹிக்கலாம். "கூஊள...ஶாரு.ா—" என்பது தான் கீழே காட்டப்பட்டது. ஶம்க்ஷெவொஶெள...வஹு" ஸாக்ரமான இப்பிரபந்தம் ஏக விம்சதி காதா ரூபமானபடியாலே ருக்சாகா ஸாம்யத்தைப் பெற்றது. பாட்டானபடியாலே அதற்கேற்ற ராக தாளங்களோடு பாடப்பட்டால் ஸாமசாகா ஸஹஸ்ரத்தையும் ஒத்திருக்கும். தசகம் இரண்டால் சுக்ல கிருஷ்ண பேதத்தால் இரண்டு வகைப்பட்டதாக ப்ரஸித்தமான யஜுர் வேதத்தின் ஸாம்யமும் சொல்லப்படலாம். "ஶாஹியெ ஏயெ கூஶஹெகஃ" என்ற பஹுவசநங்களை ஸப்தம்யேக வசநாந்தங்களாக விபரிணமம் செய்தோ அபிதேய பஹுத்வத்தை விவக்ஷிக்கிறது என்று கொண்டோ நிர்வஹிக்கலாம். "ஶாதூயவஹாரவெஶஶ" என்பது ஸ்பஷ்டம்.

'ஏரார் மறைப் பொருளெல்லா மெடுத்து நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ் மொழியப்பட்டது' இந்த ப்ரபந்தம் என்று ப்ரபந்தத்தின் வைலக்ஷண்யம் இந்தத் தனியனால் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ தேசிகன் "கூஊளஶாரீரகாயஹ் கூஓம" என்று காட்டிய வகையிலேயே 'ஏரார் மறைப்பொருளெல்லா மெடுத்து நேராக அவர் தாளிணைக் கீழ் மொழிந்தான்' என்று ஒருவித வியப்பும் தோன்ற வக்த்ரு வைலக்ஷண்யமும் காட்டப்பட்டது. இப்படியே சில தேசிக ஸ்ரீ ஸூக்திகள் தேசிகன் விஷயமாகவும், தேசிகன் பிரபந்த விஷயமாகவும் யோஜனை செய்ய ஒற்றுமை உள்ளதாகவே யிருக்கின்றன. இதைப் பிறகு நேர்ந்த ஸமயங்களில் விரிவாக விமர்சிப்போம்.

ஸ்ரீ:

சாரீரகமீமாம்ஸையில் நான்காவது அத்யாயம்—முதல் பாதம்.

[ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம். ஸ்ரீ. உ.ப. அண்ணங்கராசாரியர்.]

ப்ரஹ்மஸூத்ரத்தில் சதுர்த்தாத்யாய ப்ரதம பாதத்தில் பதினொரு அதிகரணங்கள் உள்ளன. அவற்றின் ப்ரமேயம் ஸ்ரீ பாஷ்யத்தை யடியொற்றிச் சுருக்கமாக எழுதப்படுகின்றது.

இதில் முதலது ஆவ்ருத்த்யதிகரணம். சாஸ்த்ரங்களில் ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதநமாக விதிக்கப்பட்டுள்ள ப்ரஹ்மவித்யை [அதாவது ப்ரஹ்மோபாஸநம்] ஒரு தடவை அநுஷ்டிக்கப்பட்டால் போதுமா? அல்லது அநேக ஆவ்ருத்தி அநுஷ்டிக்கப் படவேண்டுமோ? என்பது சங்கை.

"ब्रह्मविदाप्नोति परम्" "ब्रह्म वेद ब्रह्मैव भवति"

இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களில் ப்ரஹ்ம ப்ராப்தி ஸாதநமாக ப்ரஹ்மவேதநம் மாத்ரம் விதிக்கப்பட்டுளதே யன்றி, அது அஸக்ருத் அநுஷ்டிக்கப்பட வேணுமென்று ஒரு ப்ரமாணத்தினாலும் ப்ரதிபந்நமாக வில்லை. 'நெல் குத்தவேணும்' என்று சொன்னால் அரிசி ஆகிறவரையில் குத்த வேணுமென்று சொன்னதாக ஏற்படுவதும் அப்படியே அநுஷ்டாந மிருப்பதும் போல இங்குக் கொள்வதற் கிடமில்லை. அது த்ருஷ்டபலம்; இதுவோ அத்ருஷ்ட பலம். நெல் குத்துவதற்குப் பலனாகிய அரிசி ப்ரத்யக்ஷமாகக் காணப்படுவது போல் வித்யைக்குப் பலனாகிய ப்ரஹ்மப்ராப்தி ப்ரத்யக்ஷமாகக் காணப்படாமையினால், 'பலன் கை புகுமளவும் உபாஸநத்தை ஆவ்ருத்தி செய்துகொண்டே போகவேணும்' என்று அந்த த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு சொல்ல முடியாதே. ஸ்வர்க்கலோக ப்ராப்திக்கு ஸாதநமாக விதிக்கப்பட் டிருக்கின்ற ஜ்யோதிஷ்டோமம் முதலிய கர்மாக்களும், வேதாந்தங்களில் விதிக்கப்பட்டுள்ள உபாஸநமும், பரம புருஷனை ஆராதிக்கின்ற க்ரியா விசேஷங்களே யாகும். ஆராதிக்கப்பட்ட பரம புருஷன் பக்கலில் அவரவர்கள் கோலின பலன்களுக்கு ப்ராப்தி யுண்டாகின்றதென்று "फलमत उपपत्तेः" (3—2—37) என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்திலேயே கூறப்பட்டுளது. ஆதலால் ஜ்யோதிஷ்டோமம் முதலிய கர்மாக்கள் எப்படி அஸக்ருத் அல்லாமல் ஸக்ருத் அநுஷ்டிக்கப் படுகின்றனவோ, அப்படியே உபாஸநமும் ஸக்ருத் அநுஷ்டிதமானால் போதும்; அவ்வளவோடு சாஸ்த்ரார்த்த நிர்வஹணம் ஆகக் குறையில்லையே—என்பது பூர்வ பக்ஷம்.

இதன் மேல் ஸித்தாந்தம். सू० 'आवृत्तिरसकृदुपदेशात् ॥'

ப்ரஹ்ம ப்ராப்தி ஸாதநத்திற்கு ஸக்ருத் அநுஷ்டாநம் போதாது; அது அஸக்ருத் அநுஷ்டிதமாகியே சாஸ்த்ரார்த்தமாகக் கடவது. ஏனென்னில்: ப்ரஹ்ம ப்ராப்தி ஸாதநத்தின் ஸ்வரூபத்தை ஆராய்ந்து பார்க்குமளவில், இதற்கு அஸக்ருதாவ்ருத்தி செய்வதே ஸ்வரூபமென்பது நன்கு புலப்பட்டுவிடும். உபநிஷத்துக்களில் இந்த ஸாதநத்தைப் பற்றி ஓதுகின்ற வாக்யங்களெல்லாவற்றையும் நாம் ஊன்றி நோக்குவோமாயின், வேதநம் உபாஸநம் த்யாநம் என்கிற இவை பர்யாயங்களென்று அறிய எளிதாகும். ஒவ்வோரிடத்திலும் உபக்ரமம் உபஸம்ஹாரம் என்று உண்டே. உபக்ரமமாவது ஆரம்பம்; உபஸம்ஹாரமாவது முடிவு. ஆரம்பத்திற் சொல்லப்படும் விஷயமே முடிவில் தலைக்கட்டப்படும் என்பது சாஸ்த்ர ஸித்தம். வேதநம் என்கிற அர்த்தமுள்ள தாதுவையும் உபாஸநம்

என்கிற அர்த்தமுள்ள தாதுவையும் த்யாநம் என்கிற அர்த்தமுள்ள தாதுவையும் மாற்றி மாற்றி அந்த உபக்ரமோபஸம்ஹார ஸ்தலங்களில் ப்ரயோகித்திருப்பதை நாம் உபநிஷத்துக்களில் பலவிடங்களிலும் காணாநின்றோமாதலால், ப்ரஹ்ம ப்ராப்தியாகிற பலனைக்குறித்து வேதாந்தங்களில் விதிக்கப்பட்டுள்ள ஸாதநம் த்யாந ரூபமேயென்பது ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது.

இனி, த்யாநமாவது என்னவென்று பார்க்கவேணும். "த்யை—சிந்தாயாம்" என்று தாதுபாடமாதலால் சிந்தநமே த்யாநமாகும். இடையறாமல் தொடர்ந்து செல்லுகின்ற ஸ்மரணமே சிந்தந மெனப்படும். ஆகவே, இடைவிடாது சிந்தனை செய்துகொண்டிருப்பதே ப்ரஹ்ம ப்ராப்தி ஸாதநம் என்று சொன்னதாகத் தேறிவிட்டபடியால், இதில் ஸக்ருதநுஷ்டாந மென்கிற வார்த்தைக்கு அவகாசமேயில்லையென்றுணர்க.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் இவ்வம்சம் ஸ்பஷ்டமாகவே கூறப்பட்டிருக்கின்றது.

"तद्रूप प्रत्यये चैका संततिश्चान्यनिस्स्पृहा ।
तद्ध्यानं प्रथमैः षड्भि रङ्गैर्निष्पाद्यते तथा ॥"

என்கிற ச்லோகத்தினால் மோக்ஷ ஸாதந பூதமான வேதநம் ஸ்ம்ருதி ஸந்தாந ரூபமே யென்பது காட்டப்பட்டுளதன்றோ? ஆதலால் வேதநம் அஸக்ருதாவ்ருத்த மாகியே சாஸ்த்ரார்த்தமாகக் கடவது.

இதற்குமேல் இரண்டாவது ஆத்மத்வோபாஸநாதிகரணம்.

பரப்ரஹ்மத்தை உபாஸிக்கும்போது, அந்த உபாஸ்ய வஸ்துவை, உபாஸிக்கின்ற தன்னிற் காட்டில் வேறுபட்டதாக உபாஸிக்க வேணுமா? அல்லது தனக்கு ஆத்மாவாகவே உபாஸிக்க வேணுமா? என்று சங்கை. உபாஸிப்பவனும் உபாஸிக்கப்படுகிற ப்ரஹ்மமும் தனிப்பட்ட பொருள்களாதலால், தன்னிற்காட்டில் வேறுபட்டதாகவே உபாஸிக்கவேணுமென்றுதான் சொல்லவேணும். உபாஸக வ்யக்தியும் உபாஸ்ய வஸ்துவும் தனிப்பட்ட பொருள்களென்னுமிடம்

"अधिकं तु भेदनिर्देशात्" (2—1—22)
"अधिकोपदेशात्तु" (3—4—8)

இத்யாதி ப்ரஹ்ம ஸூத்ரங்களினாலேயே ஸித்தம். ஆகவே உண்மைப்படியே உபாஸிக்க வேணுமேயல்லது வேறு வகையாக உபாஸிக்கலாகாது. அங்ஙனம் உபாஸித்தால் உண்மையான பலன் கிடைக்காதன்றோ. ஆத

லால் உபாஸகன் பரப்ரஹ்மத்தை ஆத்மாவாக உபாஸியாமல் வேற்றுப் பொருளாகவே உபாஸிக்கவேணும்—என்பது பூர்வபக்ஷம்.

இதன் மேல் ஸித்தாந்தம்.

"आत्मेति तूपगच्छन्ति ग्राहयन्ति च"

உபாஸகன் ப்ரஹ்மத்தை ஆத்மாவாகவே உபாஸிக்க வேணும். ஏனென்னில்: உபாஸகனை சேதநன் தன்னுடைய சரீரத்திற்குத் தான் எப்படி உயிராயிருக்கின்றானோ, அப்படியே தனக்கும் பரப்ரஹ்மம் உயிராயிருக்கின்றது. "त्वं वा अहमस्मि भगवो देवते अहं वा त्वमसि;" என்று பூர்வர்களான உபாஸகர்களின் அநுஸந்தாநமாகக் காண்கிறது. ஆதலால் ஶரீராத்ம பாவப்ரயுக்தமான ஐக்யத்தையிட்டு உபாஸகன் ப்ரஹ்மத்தை ஆத்மாவாகவே உபாஸிக்க வேண்டும்.

தானன்றிக்கே தனிப்பட்ட வஸ்துவான ப்ரஹ்மத்தைத் தானாக உபாஸித்தல் கூடுமோ வென்கிற சங்கையை ஶாஸ்த்ரங்கள் நன்கு போக்கடிக்கின்றன. "य आत्मनि तिष्ठन्नात्मनोऽन्तरो यमात्मा न वेद यस्यात्मा शरीरं यमात्मान मन्तरो यमयति स त आत्मान्तर्याम्यमृतः" இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்கள், உபாஸகன் பரமாத்மாவுக்கு ஶரீர பூதனென்றும் பரமாத்மா உபாஸகனுக்கு உயிரா யிருப்பவனென்றும் உணர்த்துகின்றனவென்பது ஸ்பஷ்டம். ஆத்மாவின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் யாவும் பரமாத்மாவுக்கு அதீநமானவை என்கிற காரணத்தையிட்டே ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு ஆங்காங்கு அபேதம் கூறப்பட் டிருக்கின்றது. சரீரத்தினுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் யாவும் ஜீவாத்மாவுக்கு அதீநம் என்கிற காரணத்தினாலன்றோ தேவோஹம், மநுஷ்யோஹம் இத்யாதி ரூபமான அநுஸந்தாநம் நிகழ்ந்து வருகிறது. தேவத்வ மநுஷ்யத்வங்கள் சரீரத்தி லுள்ளவையே யன்றி ஆத்மாவி லுள்ளவையல்ல. அப்படியிருந்தும் 'அஹம் தேவ:, அஹம் மநுஷ்ய:' என்று ஸாமாநாதிகரண்ய நிர்தேஶத்தோடு கூடிய வ்யவஹாரம் உலகத்தில் எங்ஙனே பொருந்துகின்றது என்று பார்க்குமளவில், ஶரீரஶரீரிபாவ நிபந்தநமாகவே பொருந்துகின்றதென்று கொள்ளத் தடையில்லை. அதுபோலவே ஜீவாத்மா பரமாத்மாவைப்பற்ற ஶரீரமாயிருக்கையால், இந்த ஶரீர ஶரீரி பாவத்தையிட்டு 'அஹம் ப்ரஹ்ம' என்று அநுஸந்திப்பதில் தடை யொன்றுமில்லை. ஆகவே உபாஸகன் உபாஸ்யமான ப்ரஹ்மத்தைத் தன்னில் வேறுபட்டதாக வன்றிக்கே தானாகவே உபாஸிக்க வேணுமென்றதில் குறை யொன்றுமில்லை யென்றுணர்க.

இதற்கு மேல் மூன்றாவது ப்ரதீகாதிகரணம்.

ப்ரதீகோபாஸநம் என்பதொன்று. அதாவது ஆத்மாவின் உறுப்பான மனம் முதலியவற்றை உபாஸிப்பது. இது சாந்தோக்யோபநிஷத்தில் "मनो ब्रह्मेत्युपासीत" இத்யாதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மநஸ்ஸை ப்ரஹ்மமாக உபாஸிக்க விதித்தபடி. ஆக இப்படிப்பட்ட ப்ரதீகோபாஸநங்களில்கூட கீழ் அதிகரணத்திற் கூறியபடியே ஆத்மத்வாநுஸந்தாநம் பண்ணவேணுமோ? என்று ஶங்கை. ப்ரதீகோபாஸநமாயிருந்தாலும் அங்கு 'ब्रह्मेत्युपासीत' என்று ஓதப்பட்டிருத்தலால், அதுவும் ப்ரஹ்மோபாஸநமாகவே தேறுகின்றபடியால், 'உபாஸகனுக்கு ப்ரஹ்மம் ஆத்மா' என்பதில் தடையில்லாமையால், கீழ்க் கூறியபடியே இங்கும் ஆத்மத்வேந உபாஸநமே யுக்தம்—என்பது பூர்வபக்ஷம்.

இதன் மேல் ஸித்தாந்தம்: (ஸூ.) 'न प्रतीके न हि सः ॥'—ப்ரதீகமாவது அவயவம். அவயவபூதமான மநஸ் முதலியவற்றில் ஆத்மத்வாநுஸந்தாநம் செய்ய வேண்டியதில்லை. உபாஸகனுக்கு ப்ரஹ்மம் ஆத்மாவேயல்லது அவயவம் ஆத்மாவன்றே. ப்ரதீகோபாஸநங்களில் அவயவத்தை உபாஸிப்பதுண்டே யன்றி ப்ரஹ்மத்தை யுபாஸிப்பது கிடையாது. ப்ரஹ்ம மல்லாததை ப்ரஹ்மமாக அநுஸந்தித்து உபாஸிப்பதே ப்ரதீகோபாஸந மெனப்படுகிறது. உபாஸ்யவஸ்து ப்ரதீகமா ப்ரஹ்மமா என்று பார்க்கவேணும். ப்ரஹ்மமா யிருந்தால் ஆத்மத்வேந உபாஸிப்பது ப்ராப்தமேயாகும். ஆனால் இங்கு உபாஸ்யவஸ்து ப்ரஹ்மமன்று; ப்ரதீகமேயாகும். அது உபாஸகனுக்கு ஆத்மா வல்லாமையால், அதில் ஆத்மத்வேந அநுஸந்தாநமே அப்ராப்தமாகையால் ஆத்மத்வேந உபாஸிக்க ப்ரஸக்தியேயில்லை யென்றறிக.

மறுபடியும் பூர்வபக்ஷியின் வாதம்:—இங்கு ப்ரஹ்மம் உபாஸ்ய வஸ்துவன்று என்னலாகுமோ? அசேதநங்களாயும் அல்பசக்தி யுக்தங்களாயுமிருக்கின்ற மநஸ் முதலிய வஸ்துக்களை உபாஸ்ய வஸ்துவாகக் கொள்வதிற்காட்டிலும், இங்கும் பரப்ரஹ்மத்தையே உபாஸ்ய வஸ்துவாகக் கொள்வது மிகவும் ந்யாய்யமாகுமன்றோ. ஆகவே இங்கும் ஆத்மத்வேந உபாஸநம் என்றே கொள்ளலாமே என்ன, அதற்கு விடையளிக்கும் ஸூத்ரம்:—'ब्रह्मदृष्टिरुत्कर्षात् ॥' என்பது.

"மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத" என்கிற வாக்யத்தில் 'உபாஸீத' என்கிற க்ரியை மநஸ்ஸில் அந்வயித்திருக்கின்றதே யன்றி ப்ரஹ்மத்தில் அந்வயித்திருக்கவில்லை. ஆனால் அந்த வாக்யத்தை "ப்ரஹ்மேதி மந உபாஸீத" என்று அந்வயமாக்கி, உபாஸநத்திற்கு ப்ரஹ்மத்தையே கர்ம-

ஸித்தமாகக் கொள்ளலாமே என்று பூர்வ பக்ஷி சொல்லக்கூடும். இது யுக்த மன்று. ஒன்றிலே வேறொன்றினுடைய த்ருஷ்டியைப் பண்ணி உபாஸநம் நடத்துமாறு இங்கு விதிக்கப்படுகின்றதென்பது உபயவாதி ஸம்மதம். ஆனால், மநஸ்ஸினிடத்தில் ப்ரஹ்மத்ருஷ்டியைப் பண்ணி உபாஸிக்குமாறு விதிக்கின்றதாகக் கொள்வது யுக்தமா? ப்ரஹ்மத்தினிடத்தில் மநோத்ருஷ்டியைப் பண்ணி உபாஸிக்குமாறு விதிக்கின்றதாகக் கொள்வது யுக்தமா? என்று பார்க்குமளவில், மநஸ்ஸினிடத்தில் ப்ரஹ்மத்ருஷ்டி செய்வது யுக்தமாகாது. ஏனென்னில்: ப்ரஹ்மம் உத்க்ருஷ்ட வஸ்து என்பதும், மநஸ் முதலியவை அபக்ருஷ்ட வஸ்து என்பதும் ப்ரஸித்தமான விஷயம். இனி, உத்க்ருஷ்ட வஸ்துவினிடத்தில் அபக்ருஷ்ட வஸ்துவினுடைய த்ருஷ்டியைப் பண்ணலாகாதென்பது சொல்லாமலே விளங்கும். ஸேவகனிடத்தில் ராஜத்ருஷ்டியைப் பண்ணலாமேயல்லது, அரசனிடத்தில் ஸேவக த்ருஷ்டியைப் பண்ணலாகாதன்றோ. அதுபோலவே மநஸ் முதலியவற்றினிடத்தில் ப்ரஹ்ம த்ருஷ்டி செய்வது பொருந்துமேயல்லது, ப்ரஹ்மத்தினிடத்தில் மநஆதித்ருஷ்டியைச் செய்வது பொருந்தாது. ஆகவே, 'மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத' இத்யாதி வாக்யத்தை உள்ளபடியே அந்வயிக்கப் பொருந்துமேயல்லது, 'ப்ரஹ்ம மந இத்யுபாஸீத' என்று மாற்றி அந்வயிக்கப் பொருந்தாது. ஆனபின்பு இங்கு உபாஸ்ய வஸ்து மநஸ்ஸேயாகிறது. ப்ரஹ்மம் த்ருஷ்டிவிசேஷண மாத்ரமாகவே நிற்கிறது. உபாஸ்யமான ப்ரதீகம் உபாஸகனுக்கு ஆத்மாவல்லாமையால், அதில் ஆத்மத்வேந அநுஸந்தாநம் அப்ராப்தம் என்று தெளிக. அசேதந வஸ்துவுக்கு உபாஸ்யத்வம் கூடுமோ என்னவும் வேண்டா; மநஸ்ஸை உபாஸிப்பதென்றால், அதற்கு அபிமாநியான தேவதையை உபாஸிப்பதென்றே பொருள். ஆதலால் சேதந வஸ்துவுக்குத்தான் உபாஸநமாகும்.

இதற்குமேல் நான்காவது **ஆதித்யாதிமத்யதிகரணம்.** சாந்தோக்யோபநிஷத்தில்—

"**य एवासौ तपति तमुद्गीथमुपासीत**" என்று ஓதப்பட்டுளது. இங்கு சொல்லப்படுகிற உபாஸநம் கர்மாங்கத்தைப் பற்றியதாகும். இங்கு உத்கீதத்தினிடத்தில் ஆதித்ய த்ருஷ்டியைப் பண்ணி உபாஸிக்க விதியா? அல்லது ஆதித்யனிடத்தில் உத்கீத த்ருஷ்டியைப் பண்ணி உபாஸிக்க விதியா? என்று விசாரம். '**ब्रह्मदृष्टिरुत्कर्षात्**' என்று கீழ்க்கூறிய படியே பார்த்தால், அபக்ருஷ்ட வஸ்துவில் உத்க்ருஷ்ட த்ருஷ்டியைப் பண்ணுவதே பொருந்துமாதலால், ஆதித்யனிடத்தில் உத்கீத த்ருஷ்டியைப் பண்ணுவதே யுக்தம். இவ்விரண்டினுள் உத்கீதம் உத்க்ருஷ்டமாகவும் ஆதித்யன் அபக்ருஷ்டனாகவும் கொள்ளக் குறையில்லை. ஏனெனில்: உத்கீதமானது ஒரு பலனுக்கு ஸாதந பூதமான கர்மத்திற்கு அங்கமாதலால், அப்படியல்லாத ஆதித்யனிற் காட்டிலும் 'உத்க்ருஷ்டமென்று சொல்லக்கூடியதே யாகும். ஆகவே, '**मनो ब्रह्मेत्युपासीत**' என்ற விடத்திற்போலவே இவ்விடத்திலும் வாக்யமுள்ளபடியே அந்வயிக்க ப்ராப்தம். **य एवासौ तपति तम्**—தபிக்கின்ற ஆதித்யனை, **उद्गीथमुपासीत**—உத்கீதமாக உபாஸிப்பது என்று கொள்ளவேண்டும். கொண்டால் ஆதித்யனிடத்தில் உத்கீத த்ருஷ்டியைச் செய்ய வேண்டுமென்றதாகத் தேறும் என்பது பூர்வபக்ஷம்.

இதன் மேல் ஸித்தாந்தம்: (ஸூ.) '**आदित्यादिमतयश्चाङ्ग उपपत्तेः** ॥ க்ரதுவுக்கு அங்கமான உத்கீதத்தினிடத்தில் ஆதித்ய த்ருஷ்டி பண்ணுவதே யுக்தம். அபக்ருஷ்ட வஸ்துவில் உத்க்ருஷ்ட த்ருஷ்டியைப் பண்ணவேணுமென்று முந்தின ஸூத்ரத்தில் சிக்ஷிதமான படிக்கு மாறுபாடில்லை. ப்ரக்ருத ஸ்தலத்தில் எது உத்க்ருஷ்டம், எது அபக்ருஷ்டம் என்பதை உற்று நோக்கவேணும். ஆதித்யனோ ஒரு தேவதை. கர்மங்கள் ஆதித்யாதி தேவதைகளுக்கு ஆராதநமாகும் முகத்தினால் பலனளிப்பவை யென்பது ப்ரஸித்தம். ஆனபின்பு, ஃபலப்ரதமான தேவதைக்கு உத்கர்ஷம் யுக்தமேயல்லது, ஃபலஸாதந ஸித்த கர்மாங்க மானதற்கு அது யுக்தமாகாது. ஆதலால் கர்மாங்கஸ்வரூபமான உத்கீதாதிகளில் ஆதித்யாதித்ருஷ்டி பண்ணுவதே பாங்கு என்பது ஸித்தாந்தமாயிற்று. **उद्गीथम्—य एवासौ तपति तमुपासीत** என்று அந்வயித்து உத்கீதே ஆதித்ய த்ருஷ்டிவிஷயக - உபாஸநம் விதிக்கப்பட்டதாகக் கொள்ளக்கடவது.

ஸ்ரீ:

ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர், M. A., B. L., அட்வொகேட், திருச்சி.]

ப்ரஹ்மேதி ஶங்கர இதீந்த்ர இதி ஸ்வராடி
த்யாத்மேதி ஸர்வமிதி ஸர்வசராசராத்மந் ।
ஹஸ்திஶ ஸர்வவசஸாமவஸாநஸீமாம்
த்வாம் ஸர்வகாரணமுஶந்த்யநபாயவாச: ॥

[பதவுரை] ஸர்வசராசராத்மந் - எல்லாச் சேதநங்களுக்கும் உயிராயிருக்கும் (அவற்றை யெல்லாம் சரீரமாகவுடைய அந்தராத்மாவான), ஹஸ்திஶ - ஆனைக்கீசனே! அநபாயவாச:— அழியாத (சாச்வதமான) வேதவாக்குகள், ப்ரஹ்மேதி— ப்ரஹ்மா என்றும், ஶங்கர இதி - சங்கரன் என்றும், இந்த்ர இதி - இந்த்ரன் என்றும், ஸ்வராடிதி—ஸ்வராஜா என்றும், ஆத்மேதி - ஆத்மாவென்றும், ஸர்வமிதி— எல்லா மென்றும், ஸர்வவசஸாம் - எல்லா சப்தங்களுக்கும், அவஸாநஸீமாம் - முடிவான கருத்துப் பொருளான, த்வாம்-உம்மை, ஸர்வகாரணம் - எல்லாவற்றுக்கும் காரணப் பொருளாக, உஶந்தி - இச்சிக்கின்றன (தாத்பர்யத்தோடு பேசுகின்றன.)

முன் ச்லோகத்தில் மீன் ஆமை ஏனம் முதலிய சரீரங்களைப் பரிக்ரஹிக்கு மும்மை அந்தந்த ப்ராணியாகவே லோகம் நினைக்கின்றபடியால், ப்ரஹ்மா சிவன் முதலிய வேஷங்களை க்ரஹித்து அவர்கள் நடுவே அவதாரம் செய்யு மும்மை அவர்களோ டொன்றுகவே இந்த உலகத்தார் நினைப்பது ஆச்சர்ய மல்ல வென்றார். லோகம் வேதம் என்று இரண்டுண்டு. வேதம் என்னும் கண்ணைக்கொண்டு ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் தத்வத்தை யறியவேண்டும். லௌகிகமான கண்ணும் புத்தியும் அறியாமல் ஒன்றுகப் பார்த்து ஒன்றுகப் பேசச் செய்கிற தென்கிறீர். லோகத்தைப் போல வேதங்களும் அப்படியே தான் பேசுகின்றன; பார்க்கின்றன. பலங்களைக் கொடுக்கும் காரணப்பொருளை (வரதப்பொருளை). வேதங்களும் ப்ரஹ்மாவென்றும், சங்கரனென்றும், இந்த்ரனென்றும், ஸ்வராட் என்றும், ஆத்மா வென்றும், ஸர்வமென்றும் பேசுகின்றனவே. ச்ருதியென்னும் கண்ணும் உலகத்தைப்போல் எல்லாவற்றையு மொன்றுகத்தானே பார்க்கிறது. இப்படி இந்த லோகமும் சாச்வதமான வேதங்களும் ஒன்

றுக (ஏககண்டமாகப்) பேசுவதற்கு விரோதமாய் ஸகல பலங்களையும் கொடுக்கும் கரிவரிதனை ஒப்பார் மிக்காரிலாத காரணப்பொருள் என்று எப்படி நிச்சயிக்கக்கூடுமென்று ஆக்ஷேபம் வரக் கூறுகிறார். 'ஸம்ஷ லோக:' என்பதைக்கொண்டு இப்படி அவதாரிகை கொள்ளவேண்டும்.

வேதாந்தங்கள் ப்ரஹ்மமே ஜகத்துக்கு உபாதாந காரணமும் நிமித்த காரணமுமாகுமென்று அறுதியிடுகின்றன. ஜகத்து முழுவதும் ஈச்வரனுக்குச் சரீரமானல் தான் ஸூக்ஷ்மாவஸ்தையிலுள்ள சேதநாசேதநமென்னும் சரீரத்தோடு கூடிய ஈச்வரன் அவனையே அந்தர்யாமியாகக் கொண்டு அவனால் நிரம்பிப் பலவாகப் பிரிந்திருக்கும் இந்த ஜகத்திற்கு நிமித்தமும் உபாதாநமு மாகக்கூடும். எவன் ஜகத்துக்கெல்லாம் காரணமோ அவன் தான் பலங்களை ஸாக்ஷாத்தாகக் கொடுக்கக் கூடுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது எல்லோருக்கும் அபிமதம். பரமகாரணப் பொருளும் ஸர்வசரீரியுமானவனே தான் வரதனுகக்கூடும். ஆகையால் 16-வது ச்லோகத்தில் 'ஸஞ்ஜயதி' என்று வரதனுடைய த்யாநத்தை அநுபவிக்க ஆரம்பிக்குமுன், அவனுக்கு ஸர்வகாரணத்வத்தை ஸ்தாபித்து, 'அவன் தான் வரதன் மற்றோர் தைவமும் வரதனுகார்' என்று 15-வது ச்லோகம் வரையில் ப்ரமாணங்களால் ஸ்தாபிக்கிறார். ஸர்வகாரணத்வம் ஸர்வ சரீரத்வத்தால் உபபாதிதமாகும். ப்ரஹ்மா சங்கரர் முதலியவர்கள் வரதனுக்குச் சரீரமென்றும், வரதன் அவர்களுக்கு உயிரான ஆத்மாவென்றும் நிரூபிக்கிறார்.

ப்ரஹ்மஸூத்ரத்தில் மூன்றுவது அத்யாயம் மோக்ஷஸாதநங்களைச் சொல்லும் ஸாதநாத்யாயம். அதன் நடுவில் இரண்டாம் பாதத்தில் ப்ரஹ்மஸ்வரூபத்தையும் ஸ்வபாவங்களையும் உபயலிங்காதிகரணத்திலும் அடுத்த அஹிகுண்டலாதிகரணத்திலும் அதற்கடுத்த பராதிகரண பலாதிகரணங்களிலும் சோதிக்கிறார். ஸாதநாத்யாயத்தின் நடுவில் ஸித்தப் பொருளான ப்ரஹ்மத்தை விசாரிக்கலாமோவென்று ஸந்தேகித்து, ஸாராவளியில் ஸித்தோபாயமாக ப்ரஹ்மமும் ஸாதநமாதலால் அதைப்பற்றி அங்கே விசாரம் ஸங்கதம் என்று வெகு அழகாகக் காட்டப்பட்டது. பலாதிகரணம் அந்தப் பாதத்தில் கடைசி அதிகரணம். அதில் ப்ரஹ்மம் தான் ஸகல பலங்களையும் கொடுக்கும் வரதன் என்று நிகமநம் செய்யப்பட்டது. வரமான பலங்களுக்கு ஸாதநமும் தாதாவுமான ப்ரஹ்மம் வரதன். அதற்கு முந்தியதான் பராதிகரணத்தில் ப்ரஹ்மத்திற்கு மேற்பட்ட பரவஸ்து இல்லையென்றும், எல்லாவற்றைக் காட்டினும் அதுவே பரமென்றும் தீர்மானிக்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேற்பட்ட பரவஸ்து எல்லாவற்றுக்கும் காரணமாயிருக்க

வேணும். அது எல்லாவற்றுக்கும் சரீரியாக (ஆத்மாவாக) இருந்தால் தான் கூடும். எல்லாம் அதற்கு ப்ரகாரமாகப் பிரியாததும் அதனுள் செருகியதுமான விசேஷணமுமாக, அதன் அம்சமாக இருப்பதாக ஏற்பட்டால்தான் எல்லாவற்றுக்கும் பலமான காரணமாகி ஸர்வஸ்மாத் பரமாகும். அதற்காக அசேதநமான ஜகத்தெல்லாம் அதன் அம்சம் சரீரம் என்று அதற்கு முந்தியதான அஹிகுண்டலாதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டது. அதற்கு முன்பே இரண்டாமத்யாயம் மூன்றாம் பாதத்தின் முடிவில், ஜீவர்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கு அம்சம் (விசேஷணம் சரீரம்) என்று நிரூபித்தாய்விட்டது. 'முன்போலக் கொள்ளவேணும்' என்று அம்சாதிகரணத் தீர்மானத்தையே அஹிகுண்டலாதிகரணத்தில் அறுதியிட்டது. ஆகையால் பராதிகரணத்திற்கு முன்பே சேதநாசேதநங்களெல்லாம் ப்ரஹ்மத்தின் அம்சமென்று நிரூபிக்கப்பட்டதாகிறது. அசேதநங்களெல்லாம் ப்ரஹ்மத்தோடு ஸமாநாதிகரணமாகப் பேசப்படுகின்றன. அப்படியே ஜீவர்களும் ஈச்வரர்களாக நினைக்கப்படும். ப்ரஹ்மேசாதிகளும் ப்ரஹ்மத்தோடு ஸமாநாதிகரணர்களாக ச்ருதிகளால் பேசப்படுகிறார்கள். எப்படி அசேதநங்களெல்லாம் ப்ரஹ்ம ஸாமாநாதிகரண்யப் பேச்சால் ப்ரஹ்மத்தோடு அபிந்நமாக (ஒன்றாக) ஆகவில்லையோ, அப்படியேதான் ஸாமாநாதிகரண்யத்தால் ஜீவரும் ப்ரஹ்மமும் ஒன்றாகார். ப்ரஹ்மேசாதிகளும் ப்ரஹ்மத்தோடொன்றாகார் என்று இங்கு ச்லோகங்களில் நிரூபண க்ரமம். அசேதநங்கள் சரீரமாயிருப்பதால் எங்கே அசுத்தி விகாரம் துக்கம் முதலியன வந்துவிடுமோவென்று வரக்கூடிய சங்கையை, அந்த சங்கை உதிப்பதற்கு முன்பே உபயலிங்காதிகரணத்தில் 'அகிலஹேயப்ரத்யநீகத்வம்' என்னும் வஸ்துஸ்வபாவம் விளக்கப்பட்டது. அடுத்த பராதிகரணத்திலும் அசேதந சரீரத்வத்தால் ஹீநத்வமில்லை ; ஏனெனில் : வஸ்து ஸ்வபாவத்தால் எல்லாவற்றிலும் உத்க்ருஷ்டமே யாகுமென்று விளக்கப்பட்டது. காரணத்வத்தைச் சொல்லிவிட்டு அதனால் வரும் விகார துக்காதி தோஷங்களை சோதகவாக்யங்களைக்கொண்டு பரிஹரிப்பது ஒரு க்ரமம். முன்பே பரிஹாரத்தைச் செய்துவிட்டு, பிறகு ஸர்வ சரீரத்வத்தைக் காட்டி மறுபடியும் சங்காசேஷமில்லாதபடி ஸர்வோத்க்ருஷ்டத்வத்தை விளக்கும் ஓர் அழகிய க்ரமத்தை இங்கே ஸூத்ரகாரர் விரும்புகிறார். இந்த ஸூக்ஷ்மம் ஸ்ரீ தேசிகனால் 'ஹீநஸ்வரூபாதிஹீநஸ்வபாவேநயதோ நீதியோஜநா நதோ:' என்று ஸாராவளியில் காட்டப்பட்டது. ப்ரஹ்ம ஸூத்ரம் த்வநிமய மென்பதைக் கண்டாநாதமான ஸாராவளி விளக்குகிறது.

'காரணம் து த்யேய:' என்பது ச்ருதி. காரணவஸ்து இன்னதென்று தீர்மானித்துக்கொண்டுதான் அதை த்யாநம் செய்ய ஆரம்பிக்க

வேண்டும். 16-வது ச்லோகத்தில் த்யாநத்தைத் தொடங்குமுன் காரணத்வத்தைப் பல ச்லோகங்களால் ஸ்தாபிக்கிறார். வரதன் என்கிற பேர் அந்வர்த்தமாக நிலைப்பதற்கே ஸர்வ காரணத்வத்தை நிரூபிக்கவேண்டும். சுவர் நிலைத்துத் தானே சித்ரம் எழுதவேண்டும். தீக்ஷிதர் தம் பெருமாளைப் பற்றி மகிழ்ந்து பாடிய ஸ்தலத்தில் 'நாராயணோ தேவ வரத:' என்கிற ச்லோகத்தில் 'வரதன்' என்னும் பதம் ச்ருதிலிங்கவாக்யாதி ப்ரமாணங்களில் முதலான பலிஷ்டமான ச்ருதி ப்ரமாணமாகி, இப்பெருமாள் தான் கோலினதை யெல்லாம் கொடுப்பர் என்று விளக்குவதாகக் காட்டினார். இது ஸமாக்யை (வெறும்பெயர் என்று நினையாதேயுங்கள்) என்று அவருத் தேசம். ஸ்ரீ தேசிகன் பஞ்சாசத்து ஸாதித்ததற்கு அவர் சதகம் ரசனை செய்தார். ஆளவந்தார் ஸ்தோத்ராரம்பத்தில் 11-வது ச்லோகத்தில் ப்ரஹ்மா, சிவன், சதமகன், (இந்த்ரன்) பரம ஸ்வராட் என்று இவர்களும் எந்த நாராயணனுடைய மகிமா ஸமுத்ரத்தில் ஓர் திவலையாவரோ என்று ஸாதிக்கப்பட்டது. நாராயணனுடைய ஈச்வரத்வம் ஸ்வாபாவிகம் அநவதிகாதிசயம் என்று அங்கே அதற்கு ஹேதுவும் ஸூசிக்கப்பட்டது. ப்ரஹ்மாதிகளுடைய ஈசித்ருத்வம் அவர்கள் நாராயணனுக்கு அதீநமாய் அவர்களுக்கு அவரால் கொடுக்கப்பட்டது. நாராயணனோடு ஒவ்வொருவரையும் ஸமாநாதிகரணமாகப் படித்ததற்கு ஒவ்வொருவரும் அவருக்கு சரீரமாவார் என்று தாத்பர்யம். அம்சாதிகரணத்திலும் அஹிகுண்டலாதிகரணத்திலும் ஸாமாநாதிகரண்யத்தை அம்சாம்சி பாவேந நிர்வஹிக்கவேண்டுமென்று ஸூத்ரகாரர் ஸ்பஷ்டமாய்க் காட்டிய வழி. ஸூத்ர நூல் காட்டிய இவ்வழியிலிருந்து ஒரு மயிரிழையேனும் நழுவக்கூடாதென்று எம்பெருமானார் ப்ரஸாதித்தருளிய நீதி மார்க்கம்.

•

ஸர்வாத்மா—ஆத்மா என்னும் சப்தம் சரீரத்திலுள்ள உயிரை முக்யமாகச் சொல்லும். ஒவ்வொரு ஆத்மா அவரவர் சரீரத்தை யுத்தேசித்துமட்டும் ஆத்மா ஆவர். பரமாத்மா மட்டும் தான் எல்லா சரீரங்களிலும் பொதுவான ஆத்மா ஆவார். ஆத்மா என்னும் சப்தமே எல்லா சரீரங்களுக்குள்ளும்பொது ஆத்மாவை அஸங்கோச ந்யாயத்தால் சொல்லும். அவரைத்தான் சாரீர ஆத்மா என்று முக்யமாக ஆநந்தவல்லீ பேசிற்று. இப்படி எல்லாப் பொருள்கட்கும் சாரீரனை ஆத்மாவாயிருப்பதால், ப்ரஹ்மவிசார ஸூத்ரங்களை சாரீரக ஸூத்ரமென்று பெரியோர் பணிப்பரென்று ஆநந்தமயாதிகரண பாஷ்யத்தில் ஸாதிக்கப்பட்டது. ஸூத்ரங்களின் திருநாமமே சரீரசரீரிபாவத்தை முன்னிட்டது. பரமாத்மா ஸர்வுத்துக்கும் ஆத்மாவான ஸர்வாத்மா, ஸர்

வாந்தர்யாமி. சராசரசப்தத்தால் சராசரப் பொருள்களொன்றொன்றையும் சொல்லுவது போலுள்ள சப்தங்களெல்லாம் அந்தந்தப் பொருள்களிலுள்ள இறுதி உட்பொருளும் ஆதாரமுமான பரமாத்மாவென்னும் உயிர்வரையிலும் சொல்லச் சக்தியுடையது. சப்தங்களுக்கு அவ்வளவு சக்தியிருந்தும், அந்தப் பூர்ண சக்தியை ஒடித்து ஒடித்து ஜடமான சரீரத்தையும் அந்தந்த சரீரத்துக்குமட்டும் உயிரான ஜீவனைமட்டும் பூர்ணவ்யுத்பத்தியில்லாதவர் கொள்ளுகிறார்கள்; பிரயோகிக்கிறார்கள். உயிருக்குயிரான பரமாத்மாவையும் முக்யமாகவே சொல்ல சக்தியுண்டு. இந்த விஷயம் ஸ்பஷ்டமாக ப்ரஹ்மஸூத்ரத்தில் தேஜோதிகரணத்தில் 'சராசரவ்யபாஶ்ரயஸ்து ஸ்யாத் தத்வ்யபதேஶோ பாக்தஸ்தத்பாவபாவித்வாத்' என்கிற கடைசி ஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்பட்டது. சேதநாசேதநப் பொருள்கள் எப்படி ப்ரஹ்மத்தையே தங்களுக்கு முடிவான உயிராயும் ப்ரதிஷ்டையாயுமுடையனவோ அப்படியே அவற்றுக்கு வாசகமாக உலகம் ப்ரயோகிக்கும் சப்தங்களும் அந்த இறுதி உயிரையே ப்ரதிஷ்டையாக (பர்யவஸாநமாக) உடையன. எப்படி வஸ்துக்களெல்லாம் உள்நோக்கினால் பரமாத்மா பர்யந்தம் செல்லுமோ, அப்படி அவற்றிற்கு வாசகமான சப்தங்களும் உள்ளே உள்ளே சென்று பரமாத்மாவினிடம் விச்ரமத்தை யடையும். நமக்கெல்லாம் எது இறுதியான நிலையோ, அதுதான் நம்மைச் சொல்லும் சப்தங்களுக்கும் முடிவான அர்த்தநிலை. அர்த்தசப்தம் வஸ்துவையும் கருத்தையும் சொல்லும். இந்த ந்யாயம் ஸூத்ரந்யாய மென்பதைக் காட்ட 'ஸர்வாத்மந்' என்று மட்டும் சொல்லாமல் ஸூத்ரத்திலுள்ள 'சராசர' சப்தத்தையும் சேர்த்துக்கொண்டு 'ஸர்வ சராசராத்மன்' என்று ஸாதித்தார். இந்த விளிச்சொல் ஹேது கர்ப்பம். 'ஸர்வமிதி' 'ஸர்வ சராசராத்மந்' என்று 'ஸர்வ' சப்தத்திற்கு அடுத்து இதை வைத்ததும் ஸ்வரஸம். ஸர்வ சராசராத்மாவாகையால் 'ஸர்வம்' என்பதோடு ஸமாநாதிகரண பேச்சு. இது தான் 'ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:' என்று கீதையில் நரனால் பாடப்பட்டது. ஸர்வ வேதாந்தங்களின் உட்பொருளை ப்ரகாசப்படுத்தும் இந்த தேஜிஷ்டமான ந்யாயத்தை ஸூத்ரகாரர் தேஜோதிகரணத்தில் காட்டினார். இதுதான் சாரீரக சாஸ்த்ரத்தின் உட்கருத்தை ப்ரகாசப்படுத்தும் தேஜஸ் (தீபம்) அத்யாத்மதீபம்.

ஹஸ்தீஶ!—கஜேந்த்ரனுக்கு ஈசனே! ஸ்ரீ பாகவதத்தில் கஜேந்த்ராழ்வானுடைய வ்ருத்தாந்தத்தை ஸூசித்து, அங்கே ஸர்வலோக ஸாக்ஷியாக மூதலிக்கப்பட்ட ஸர்வகாரணத்வத்தையும், ஸர்வாத்மத்வத்தையும் ஹேதுவாக ஸூசிக்கிறார். ஆனை காட்டிக்கொடுத்த ஸூக்ஷ்மமிது. இன்னாரென்று குறிப்பிடாமல் (நிர்விசேஷமாக) எவன் எல்லாவற்றுக்கும் காரணமோ எவன் எல்லாப் பொருளுமானவனோ எவன் 'ந ஸ்த்ரீ' (பெண்ணல்லன்)

'ந ஷண்ட:' (அல்லா வலியுமல்லன்) 'ந புமாந்' ஆணல்லன். எவன் அசேஷனோ, 'ஜய தாத்ருஶேஷ:' என்று பலவாறாகப் பொதுவாகவே கூப்பிட்டது. சிலவிடங்களில் நம்மாழ்வார் கூப்பீடுகளும் கஜேந்த்ராழ்வான் கூப்பீடுகளும் ஏகரீதி. முதல் திருவாய்மொழிக்கு நாம் எழுதியுள்ள வ்யாக்யாநத்தில் இவை யாவற்றையும் விஸ்தாரமாகக் காட்டியுள்ளோம். இப்படி யாதொரு வ்யக்தியையும் குறிக்காமல் கஜேந்த்ரன் பாரிக்கையில் (பெருமாளைப்போல்) 'ப்ரஹ்மாஹம்' என்று எப்பொழுதும் தானாக அபிமாநமில்லாமல் தங்கள் தங்கள் சரீரத்தில் மட்டும் அபிமாநமுடையரான ப்ரஹ்மாதிகள் இந்தப் பொதுவர்ணநம் நமக்கொவ்வாது நமக்கொவ்வாது என்று அருகே நெருங்காமலிருக்கையில் அத்தருணத்திலங்கே 'நிகிலாத்மகத்வாத்' (நிகிலாத்மாவாகையால் ஸர்வசரீரியாகையால்) அகிலாமரமயரான (ஸர்வதேவமயரான) ஹரி ஆவிர்ப்பவித்தார் (தோன்றினார்) என்று சுகருடைய உபப்ராஹ்மணம் வேதங்கள் விரும்பும் பொருளை ஸ்பஷ்டமாகக் காட்டிற்று என்பதை 'கஜேந்த்ரர்கீசனே' என்ற இந்த விளிச்சொல்லால் அழகாக ஸூசிக்கிறார். ஸர்வ சராசராத்மந் என்பதற்கடுத்தாற்போல் 'ஹஸ்தீஶ' என்று கூப்பிடுவதாலும், சுகர் ச்லோகம் ஸூசிதமாகிறது. ஆனை 'ஈசனே' என்று கூப்பிட்டது. ஸ்வாமி 'ஆனைக்கீசனே' என்று கூப்பிடுகிறார்.

ஸர்வவசஸாமவஸாநஸீமாம்—எல்லா சப்தங்களுக்கும் முடிவு நிலைப் பொருளான, முடிவெல்லைப் பொருளான, அவன் இவன் இது என்னும் பொதுவான ஸர்வநாம சப்தங்கள் ஸர்வாத்மகமான பொருளுக்குத்தான் அஸங்கோசமாக முக்யமாக ஒட்டும். இதையும் கஜேந்த்ராழ்வான் மூதலிப்பித்ததால் 'ஹஸ்தீச' என்பதற்கு அடுத்தாப்போல் வைக்கப்பட்டது. ப்ரஹ்மம் ஸர்வவஸ்து ஸமாநாதிகரணமாகையால் 'தத்' என்னும் ஸர்வநாமசப்தம் ப்ரஹ்மத்தையே முக்யமாகச் சொல்லும் என்று ஸ்ரீ சங்கரபாஷ்யத்தில் பணிக்கப்பட்டது. 'முடிவான முடிவு' என்று திருவுள்ளம் பற்றி 'அவஸாநஸீமாம்' என்றார்.

ஸர்வகாரணம்—இது ஹேது கர்ப்பம். எல்லா வஸ்துக்களின் வாசக சப்தங்களுக்கும் முடிவு நிலைப்பொருளாவது எல்லா வஸ்துக்களுக்கும் காரணமாகையாலே. ஸத்யம் - உண்மை. ஆனைப்பெருமானே! உண்மைதான் இப்படி ஸர்வ காரணமென்று ஸர்வலோக ஸாக்ஷிகமாக விளக்கப்பட்டது. எவர் தேவர்களுக்கும் அரசனோ அந்த தேவராஜன் தேவதேவன் ஸர்வேச்வரன் என்பதற்கு ஐயமுண்டோ என்றார். ஆழ்வான் தேவராஜன் ஸர்வாதிகமான அதிராஜன் என்றும் ஸாதித்தார்.

ப்ரஹ்ம இதி—ப்ரஹ்மா என்ற சப்தத்தைப் பேசுகையில் வேதங்கள் ‘தேவர்களுக்கு முதல்வராக ப்ரஹ்மா இருந்தார். முதலில் புவநத்துக் கெல்லாம் ஆதாரமான ஹிரண்ய கர்ப்ப ரிருந்தார்’ முதலிய சதுர்முக வாசகமான சப்தங்களைப் பேசுகையில் ‘உம்மையே தான் கருத்துப்பொருளாக இச்சிக்கின்றன; உம்மையே தான் தாத்பர்யமாகப் பேசுகின்றன’ ஆளவந்தார் ச்லோகத்தில் ‘ஸ்வராட் இதி’ என்ற விடத்தில் ‘ஸ்வராட்’ என்னும் சப்தம் ‘ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ꞉ ஸேந்த்ர꞉’ என்று தொடங்கிய வாக்யத்தி லெடுக்கப்பட்ட ப்ரகாரத்தை ஸூசிக்கிறது என்று ஸ்வாமி பாஷ்யத்தில் ஸாதித்தார். ஸப்ரஹ்மா அவர் (ப்ரஹ்ம சரீரகர்; அவரே சிவர்; அவரே இந்த்ரர்; என்று தனித்தனியே அந்தந்த தேவராக அவரைப் பேசியிருக்கிறது’ என்று அந்த ச்ருதியில் கூறப்பட்ட இந்தத் தேவர்களையெல்லாம் வாங்கி ‘ஏதே’ என்பதோடு அந்வயிக்கலாம். இங்கே ப்ரஹ்மா என்ற சப்தத்தை சொல்லுகையில் ப்ரஹ்மாவோடு ஒன்றாக (ஸமாநாதிகரணமாக) பேசப்பட்ட புருஷன் நாராயணன் என்று பொருள். காரண வாக்யங்களிலும் உபாஸந வாக்யங்களிலும் ப்ரஹ்மா சிவன் இந்த்ரன் முதலியவர்களைக் காரணமாகவும் உபாஸ்யமாகவும் பேசுகையில் ‘அந்தப் புருஷன் (நாராயணன்) ப்ரஹ்மா,’ ‘அவர் சிவர்,’ என்ற ச்ருதியைக் கொண்டு ச்ருதியின் தாத்பர்யத்தைக் கொள்ளவேணும். இது ச்ருதி வ்யாக்யாந பரிபாஷையாக ச்ருதியாலேயே பணிக்கப்பட்டதாகக் கொள்ள வேணும். (Interpretation clause.) அவரை எல்லாரோடும் ஸமாநாதிகரணமாகப்பேசும் ச்ருதி காரணப்பொருளாக ‘ப்ரஹ்மா’ என்ற சப்தத்தைச் சொல்லுகையில், அவர்தான் தாத்பர்யப்பொருள் என்று ஒரு பரிபாஷையைக் காட்டுகிறது. ‘ஸ ப்ரஹ்மா’ என்ற ஸமாநாதிகரணப் பேச்சு ஸ்வரூபைக்யத்தைப் பொருத்ததல்ல. பின்னென்னெனில் சரீர சரீரபாவத்தைப் பொருத்ததென்று ஸூசிக்கப்படுகிறது’ என்று ஸ்தோத்ர பாஷ்யம். ப்ரஹ்மா முதலியவர்கள் ஜகத்ஸ்ருஷ்டிக்கு உபயோகமான பெருமாள் விபூதிகள் என்று அங்கே ஸாதித்தார். ஆளவந்தார் ச்லோகத்தில் ப்ரஹ்மாதி சப்தங்கள் ப்ரஹ்மாதி தேவர்களைச் சொல்லுகின்றன. இங்கே ப்ரஹ்மா என்னும் சப்தத்தால் அல்லது அந்த சப்தத்திற்கு அல்லது அந்த சப்தம் என்று பொருள். ப்ரஹ்மாவை ஸூத்ரகாரர் ‘கார்யம்’ என்று நிர்த்தேசிக்கிறார். அதனால் அவர் காரணமாகாரென்பது நிச்சயம். நபும்ஸகமான ப்ரஹ்ம சப்தம் ஹிரண்யகர்ப்பரைச் சொல்லாதென்றும் ஸூத்ரகாரர் அபிப்ராயம்.

ஶங்கர இதி—இங்கே ச்ருதியில் சொல்லப்பட்ட சங்கரபர்யாயமான ‘சிவ’ ‘சம்பு’ ‘ருத்ர’ ‘ஈச’ சப்தங்களை வாங்கவேணும். ‘ஶம்பு⁴ராகாஶமத்⁴யே த்⁴யேய꞉’ என்று ச்ருதி. சிவ சம்பு சப்தங்கள் காரண வாக்யங்களிலும் உபாஸந வாக்யங்களிலுமிருப்பது பேரைச் சொல்லுவதல்ல. அந்தப் பதங்களின் பொருளால் மங்களத்வத்தையும் மங்கள கரத்வத்தையும் சொல்லுகின்றன. அந்தக் குணம் பெருமாளுக்குத்தான் நித்யமாயும் பிறர் அதீனமில்லாமல் ஸ்வாதீநமாயுமுள்ளது. சிலருக்கு அந்த குணம் இவர் அதீநம். சிவ சம்பு சப்தங்கள் மங்களகரத்வமென்னும் குணத்தைப் பொருள் கொண்டவை என்று காட்ட ‘சங்கர’ சப்தத்தை ப்ரயோகித்தார். ச்ருதியி லில்லாத இந்த சப்தத்தை ஸ்வாமி எடுத்தது ச்ருதியிலுள்ள சப்தங்களுக்கு இந்தப் பொருள்தான் தாத்பர்யம் என்று காட்டுவதற்காகவே. ஆளவந்தார் ச்லோகத்தில் ச்ருதியிலுள்ள ‘இந்த்ர’ சப்தத்திற்குப் பதிலாக ‘சதமகர்’ என்று எடுத்ததால் ‘நூறு யாகங்கள் செய்து பெருமாள் க்ருபையால் இந்த்ரபட்டத்தைப் பெற்றார் என்பது விளக்கப்படுகிறது’ என்று ஸ்வாமி காட்டியருளினார். அது போல் இங்கே ‘சிவசம்பு’ சப்தங்களுக்கு ப்பதிலாக ‘சங்கர’ சப்தம். சுத்தி மாங்கள்யம் முதலிய அர்த்தங்களிலும், சிவ சப்தம் ரூடமென்றும் ‘ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்’ என்று பெருமாள் விஷயத்திலும் இந்த சப்தம் ப்ரயோகிக்கப்பட்டுள்ளது என்றும் ஸ்தோத்ரபாஷ்யம். ஆகையால் சிவனிடத்தில் மட்டும் ரூடி என்று சொல்லவியலாது.

இந்த்³ர இதி-இந்த்ரசப்தம் ச்ருதியிலுள்ளது. சில விடங்களில் இந்த சப்தம் ‘இதி³ பரமைஶ்வர்யே’ என்ற தாதுப்பொருளை அநுஸரித்து’ எல்லாவற்றுக்கும்மேல்பட்ட பொருளையே சொல்லும். எந்த உபாஸநாதிவாக்யங்களில் மூன்று தலையுடைய த்வஷ்டாவின் வதம் முதலிய இந்த்ரனுக்கு மட்டுமுள்ள அடையாளங்களைக் காண்கிறோமோ அங்கே இந்த்ரனைச் சரீரமாகவுடைய (இந்த்ரவிசிஷ்டமான) பரமாத்மாவை க்கொள்ளவேணுமென்பது ப்ரதர்த்தந ந்யாயம். அந்த அதிகரணத்திற்கு ‘இந்த்ரப்ராணாதிகரணம்’ என்று பெயர். ‘இந்த்ர’ என்கிற சப்தத்தால் அந்த அதிகரணத்தை ஒருவாறு ஸூசிப்பதில் நோக்கு. ஐந்த்ரீந்யாயத்தையும் அந்த சப்தம் ஒருவாறு ஸூசிக்கும். இந்த்ரப்ராணாதிகரணத்தில் சாஸ்த்ரத்ருஷ்டிஸூத்ரத்தில் ‘அஹம் ப்ராண꞉’ என்று இந்த்ராதிஜீவர்கள் பேசுமிடத்தில் அந்த சப்தங்களுக்கு த்தம்மைச்சரீரமாகவுடைய ப்ரஹ்மத்தை நினைத்துப்பேசுகிறார்கள்’ என்று காட்டப்பட்டது. இது தான் சாரீரகசாஸ்த்ரதர்சநம். எம்பெருமானார் தர்சநமும், ப்ரஹ்லாதர் நம்மாழ்வார் தர்சனமுமிதுவே. தன்னைமட்டும் நினைப்பது லோகத்ருஷ்டி (பாமரத்ருஷ்டி.) அந்த ஸூத்ரத்தில் ‘வாமதே³வவத்’ என்று த்ருஷ்டாந்தம் கூறப்பட்டது! வாமதேவசப்தம் ருத்ரருக்குத்திருநாமம். ‘அஹம் மநுரப⁴வம் ஸூர்யஶ்ச’ என்ற ச்ருதியில் நான் ஒருவனே முதலிலிருந்தேன் இப்பொழுதும் நானொருவனே இருக்

கிறேன் ; என்னிலும மிக்கார் (வேறானவர்) இல்லை ' என்று பேசுமிடத்திலும் ருத்ரசரீரவிசிஷ்டமான பரமாத்மவைத்தான் ருத்ரர் 'அஹம்' என்று பேசுவதாக ஸூத்ரகாரர் திருவுள்ளம். இந்த்ரப்ராணாதிகரணத்தை இந்த்ரசப்தத்தால் ஸூசிப்பதால் ருத்ரர் என்ற பேர்களுள்ளவிடத்தில் அவரோடு விசிஷ்டமான ப்ரஹ்மத்தைக் கொள்ளவேணுமென்பதை ஸூசிக்கிறார். இந்த்ரனைப்பரமாத்மாவென்று எப்படிக்கொள்ளுகிறதில்லையோ அப்படித்தான் ப்ரஹ்மாதிகளையும் என்னும் தாத்பர்யத்தை இந்த்ர சப்தத்தை எடுத்ததால் ஸூசிக்கிறார்.

ஸ்வராடிதி—'ஸ ஸ்வராட் பவதி' என்கிற ச்ருதியில் ஓதிய முக்தாத்மாவை இந்த சப்தம் சொல்லும். முக்தனுக்கு சரீரம் போய் அசரீரனானாலும் அவனுக்கு நித்யமாக பரமாத்மா சரீரமாயுள்ளார். அவன் அசரீரனாயினும் ஸசரீரியே. ஸாத்மகன்—ப்ரஹ்மாத்மகன். ஸ்வராட் எனப்படும் முக்தனுக்கு 'ஜக்ஷத் க்ரீடன் ரமமாண:' என்றது போல் ஸங்கல்பமாத்ரத்தால் சில ஸ்ருஷ்டி சக்திகள் ஓதப்பட்டிருந்தாலும், அவனுக்கு ஜகத்ஸ்ருஷ்டிவ்யாபார சக்தியில்லையென்று தீர்மானம். 'கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னும்' முதலிய யோகிகள் பேச்சுகளில் சாஸ்த்ர த்ருஷ்டியைப்பற்றி 'யானே' என்பதற்கு, 'எனக்கு உயிரான அவன்' என்று பொருள். தன்னை ஸ்வஸ்வரூபத்தைப் பொருளாக மதியார். நினைத்தாலும் அவன் கண் ஒடுங்கி அவனே முக்கியக்கருத்தாகவும் அவனுட்தாமடங்கிப் போய்விட்டதாகவுமே நினைப்பர். அத்யந்ததாததீந்யத்திலேயே முழுகுவர். 'வாமதேவவத்' என்ற த்ருஷ்டாந்தத்தால் ஆழ்வார் அவதரித்தபிறகு 'கடல் ஞால'த் திருவாய்மொழியையும் சேர்த்துக் கொள்ளலாம். ஸூத்ரம் 'சாஸ்த்ரத்ருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத்'. ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் ச்ருதியிலுள்ள 'ப்ரஹ்ம' சப்தத்தையும் சேர்த்துக்கொண்டு 'ப்ரஹ்ம: ஸ்வராடிதி' என்று ஸாதிக்கப்பட்டது. ப்ரஹ்மாதிகளை அபேக்ஷித்துப் பரமத்வம் என்று அதற்கு ஸ்வாமிபாஷ்யம். 'தேவர்கள் முக்தருக்குப் பலிகளை ஸமர்ப்பிக்கிறார்கள்' என்று ச்ருதி. ப்ரஜாபதி பசுபதி ஸுரபதி என்று ப்ரஸித்தியையுடைய பதிகளும், அவர்களிடம் பூஜை பெறுமவர்களிலும் பரமரான முக்தரும் என்று ஸ்தோத்ரபாஷ்யத்தில் எல்லாவற்றுக்கும் சேர்த்துப்பொருள் ஸாதிக்கப்பட்டது. முக்தர் ஜகத்காரணராகாரென்று ப்ரஹ்மஸூத்ரத்தின் கடைசி அதிகரணத்தில் தீர்மானிக்கப்பட்டது அத்யாத்மசாஸ்த்ரமே ஜீவப்ரஹ்மபேதத்தோடு முடிவதால் இந்த சாஸ்த்ரத்தின் பலமான முக்தியென்னும் முடிவும் ஆத்மப்ரஹ்மபேதத்தையழிக்காதென்று ஸூத்ரகாரர் திருவுள்ளம்.

ஆத்மேதி—'தஸ்ய ஹ ந தேவாச்ச' 'ஆத்மா ஹ்யேஷாம் ஸ பவதி' என்ற யஜுஸ்ச்ருதி ஸ்தோத்ரபாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டது. ப்ரஹ்மா சங்கரர் இந்த்ரர் இவர்கள் ப்ரஹ்மமோ என்கிற சங்கையை எடுத்து முக்தர் ப்ரஹ்மமோ என்கிற சங்கையையும் ஸ்வராட் என்பதாலெடுத்துப் பிறகு, ஸம்ஸாரியான ஆத்மாவைக்கூடச் சொல்லும் ஆத்மசப்தத்தை எடுக்கிறார். அதற்கும்பிறகு அசேதநங்களையும் கூடச் சேர்த்துச் சொல்லும் 'ஸர்வம்' என்னும் சப்தத்தை எடுக்கிறார். ஆத்மாவாகிய நாம் ஜகத்காரணமல்லவென்பது எவ்வளவு நிச்சயமோ, ஸர்வம் என்பதில் அடங்கிய அசேதநப் பொருளெல்லாம் ஜகத்காரணமல்லவென்பது எவ்வளவு நிச்சயமோ, அப்படியே தான் ப்ரஹ்மாதிகள் ஜகத்காரணமல்லவென்று காட்டுவதற்காக 'ஆத்மா' வென்பதையும் 'ஸர்வம்' என்பதையும இங்கே எடுக்கிறார். ப்ரஹ்மாதி சப்தங்களோடு நாராயணபரப்ரஹ்மத்தையும் ஸமாநாதிகரணமாகப் பேசுவதால் அவர்களுக்கு ஸ்வரூபைக்யமில்லை. அவர்களுக்கு சரீரியான நாராயணனை ப்ரஹ்மாதி சப்தங்களுக்குப் பொருளாகக்கொண்டு ஓரே வேற்றுமையால் ஸமாநாதிகரணப்பேச்சை நிர்வஹிக்க வேண்டும். எல்லாம் ப்ரஹ்மம் என்ற ஸமாநாதிகரணப் பேச்சும் இப்படித்தானே சரீரசரீரிபாவத்தால் நிர்வஹிக்கப்படவேணும்.

ஸர்வமிதி—'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்று ச்ருதி ஓதுகிறது. இங்கே ஸ்வரூபைக்யம் கருத்தல்லவென்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். இது போல் ப்ரஹ்மாதிகளோடு ஓரே வேற்றுமையான பேச்சுக்கும் கருத்து. ஜீவப்ரஹ்மபேதத்தை த்ருடீகரணம் பண்ணும் இதர வ்யபதேசாதிகரணத்தில் 'அதிகம் து பேதநிர்தேசாத்' என்ற ஸூத்ரத்தால் விளக்கப்பட்ட பொருளை இங்கே எல்லாவற்றோடும் ஸமாநாதிகரணப் பேச்சுள்ள ஸர்வப்தகடித ச்ருதிகளை க்குறிக்கும் 'ஸர்வ'சப்தத்தால் ஸ்வாமி ஸூசிக்கிறார். 'ஸர்வம்' என்பதில் அடங்கிய அஶ்ம(கல்) முதலியன எப்படி ஸமாநாதிகரணப் பேச்சுள்ளதைக்கொண்டு ப்ரஹ்மஸ்வரூபத்தோடு ஐக்யமுளது என்று நினைப்பது அநுபபந்நமோ அப்படியே ஜீவர்களோடு ஸமாநாதிகரணப் பேச்சாலும் அவர்களுக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஸ்வரூபைக்யம் கொள்ளக்கூடாது. 'ஸர்வமிதி' என்று எடுத்ததற்கு இது ஒரு ஸ்வாரஸ்யம். 'ஸர்வம்' என்று சொல்வது ஸர்வத்துக்கும் அந்தராத்மாவாயிருப்பதால் என்ற ஸ்வாரஸ்யத்தை முன்பே காட்டினோம். இங்கே 'இதி இதி' என்றதால் ப்ரஹ்மாமுதல் ஸர்வம் வரையிலுள்ள சப்தங்களை ச்ருதி பேசும்பொழுது' என்று அர்த்தம்.

அநபாயவாச:—அழிவில்லாத நித்யமான மறைகள். 'வாசா விரூப நித்யயா' என்று ச்ருதி. உருவமில்லாத தேவதையே 'நித்யமான வாக்

காலே' என்று வேதவாக்கு நித்யமென்று ஓதப்பட்டது. வேதவாக்கு ப்ரஹ்மா வென்றும் சிவர் என்றும் பேசுகையில் உம்மையே கருத்துடன் விரும்பிப் பேசுகின்றன. 'ஜநவாய' என்ற விசேஷணத்தில் மிக்க ஸ்வாரஸ்யமுண்டு. சப்தரூபமான வேதங்களுக்கு ஆச்ரயம் வேண்டும். அத்ரவ்யம் த்ரவ்யத்தைத்தானுச்ரயித்திருக்கும். நித்யமான வேதங்களுக்கு நித்யமான ஆச்ரயம் வேணும். ப்ரஹ்மாதிகள் ஸாபாயர்; ப்ரளயத்திலே மிகுந்திரார். அச்யுதன்தான் நழுவாத நித்யாச்ரயம். 'ஶாஶ்வதம் ஶிவம் அச்யுதம்' என்ற ச்ருதியை இங்கே நினைக்கிறார். சாச்வத சிவரான அச்யுதர்தான் அநபாயமான ஆச்ரயமென்று திருவுள்ளம். ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் இது காட்டப்பட்டுள்ளது. ப்ரளயத்திலும் பெருமாள்தான் வேதங்களுக்கு ஸ்திதிபதம் என்பதை உடனே இதற்கடுத்ததுக்கடுத்த ச்லோகத்தில் நிரூபிக்கப் போகிறார்.

காமயந்தே—உம்மிடத்தில் தாத்பர்யமாக உம்மையே ஆசைபட்டுப் பேசுகின்றன. சொற்பொருளினும் தாத்பர்யச்ருதி என்னும் கருத்துப் பொருள் ப்ரபலம். கொடுக்கும் மஹோதாரனை வரதனைத்தானே எல்லோரும் ஆசைப்படுவார். ப்ரஹ்மாதிகள் வரன்கள் கொடுத்தாலும் நீர்தான் அவர்களுக்குள் அந்தராத்வாவாயிருந்து கொடுக்கவேணும் அறிவிலாத லோகம் (அஜ்ஞோ லோக:) உள்த்ருஷ்டியில்லாமல் ப்ரஹ்மாதிகளை வரன்களை கொடுப்பவர்களாக நினைத்தாலும் தத்வத்தையறிந்த வேதங்கள் வரதரைத்தானே வரதராகக்கொள்ளும். கொடுக்கும் ப்ரபு நீரென்று தெரிந்தால் உம்மிடந்தானே கருத்தை (விருப்பத்தை)வைக்கும். மேல் பொருள் உபயோகமில்லை. உட்கருத்து தானே ப்ரதாநம் 'ப்ரஜாபதியையும் பசுபதியையும் நீரல்லால் மற்றெத்தைவம் காப்பாற்றுகிறது' என்கிற ஸ்தோத்ரரத்நச்லோகத்தில் பதரிகாச்ரமத்தில் நரஸஹிதநாராயணனோடு போர்புரிகையில் ப்ரஹ்மா தம் தகப்பனரான பெருமாளுக்கும் தன் புத்ரரான ருத்ரருக்கும் நடுவில் வந்து பெருமாளை சரணமடையும்படி தன் பிள்ளைக்கு உபதேசித்தார். அவரும் சரணமடைந்து ஸம்ரக்ஷிக்கப்பட்டார் என்ற மஹாபாரதவ்ருத்தாந்தத்தைக் காட்டி

'ப்ரஸாதயாமாஸ பவோ தேவம் நாராயணம் ப்ரபும்
ஶரணம் ச ஜகாமாத்யம் வரேண்யம் வரதம் ஹரிம்'

என்ற பாரதச்லோகத்தையும் உதாஹரித்துளது. அந்த வரதன் நீர்தானே. மஹிஷ்டவரப்ரதாநம் பண்ணும் வரதன் நீர்தானே. ஆர்த்திகளைப்போக்கும் ப்ரணதார்திஹரன் நீர்தானே. வேதங்கள் அஸுரரால் அபஹரிக்கப்பட்ட ஆபத்தில் காப்பாற்றும் ஆர்த்திஹரர் நீர்தானே. ச்ருதிகள் பெருமாளுக்குத் தேவிமாரென்று உதப்ரேக்ஷிப்பர். 'காமயந்தா-

விஶதி ஹ்ருதயம் மே' என்றாள் ருக்மிணீதேவி. 'வெட்கத்தை விட்டு ஸ்வயமாக வலையில் என்னுடைய சித்தம் ஹே அச்யுதா! உன்னுள் ஆவேசிக்கிறது (நுழைகிறது). உள்ளே நுழைந்த சித்தத்தை ஹே அச்யுதா! நழுவவிடாதே' என்றாள். அந்த பிராட்டியின் அநுபவம் போன்றது ச்ருதிதேவிகளின் அநுபவம். 'ஜநவாய' என்று தனி ஸம்புத்தியாகப் பிரித்து ஸ்ரீ லக்ஷ்மணாசார்யர் அழகாக ஒரு யோஜனை கூறுவதுண்டு. 'அச்யுத' என்று ருக்மிணீ ஸம்போதநம். ப்ரஹ்மா என்றும் சிவர் என்றும் வாக்குகள் (நாமங்கள்) என்று பொருள் அழகாகச் சேரும். 'ப்ரஹ்மேத்யாதிவாச: 'நாமாநி ஸர்வாணி யமாவிஶந்தி' என்கிறச்ருதியில் ருக்மிணியின் ஆவிஶதி ப்பேச்சுப்போல் பொருந்தி 'விஶந்தி' என்று பேசப்பட்ட ஆசையை அழகாக உபபாதிக்கும்.

ஸ்ரீ:

ஸம்வர்க்கவித்யோபாக்யாநத்தில் சில அபூர்வரஸங்கள்.

[ஸ்ரீ உப. வ. வி. கோபாலாசார்யார், M.A., B.L., அட்வொகேட் திருச்சி]

தீபிகையின் பங்குனி மாதத்து ஸஞ்சிகையில் இது விஷயமான வ்யாஸத்தை ப்படிக்கப்பெற்றோம். அதில் அதிகாரபர்யுதாஸ விஷயத்தைத் தொடாமல், ரைக்வோபாக்யாநத்தில் எமக்கு த்தோன்றும் சில ரஸங்களை மட்டும் அதிஸங்க்ரஹமாக இலக்கமிட்டு விஜ்ஞாபிப்போம்.

1. இங்கே ஆசிரியர் ரைக்வர். அவருக்கு வண்டிரைக்வர் என்று அஸாதாரண திருநாமம். ஆகாயத்தில் ஒரு மாலையாகச்சென்ற ஹம்ஸங்கள் பேசிக்கொள்ளுகையில் இவ்வரை 'ஸயுக்வா நம் ரைக்வ இவ' 'வண்டிரைக்வரைப்போல்' என்று குறிப்பிட்டது. 'ஸயுக்வா' என்பதற்கு வண்டியோடு கூடியவர் என்று பொருள். ரைக்வர் ப்ரஹ்மவித்துதான். ஆனால் அவருக்கு ப்ரஹ்மப் பைத்யத்தோடு வண்டி ப்பைத்யமுமுண்டு. ரைக்வர் என்ற ஒரு ஸர்வஸித்தான ப்ரஹ்மவித்து இருக்கிறாரென்றும் அவர் திருவடிகளை யடைந்து ஜாநச்ருதி யென்னும் அரசனும் ப்ரஹ்மவித்தாக வேண்டுமென்றும் அவாவினால் ஹம்ஸரூபியாய் தேவர்களோ ரிஷிகளோ சில மஹான்கள் ஆகாயத்தில் ஸஞ்சரித்து ஜாநச்ருதியின் ச்ருதியில் விழும்படி நடத்திய ஹம்ஸங்களின் ஸம்பாஷணம். பெரியதோர் நாட்டில் வண்

டிரைக்வர் என்று சொன்னால் ஸுலபமாக வ்யக்தியை அடையாளம் கண்டுபிடித்து விடலாமென்று பரம விவேகிகளான ஹம்ஸங்களின் நிச்சயம்.

2. ரைக்வர் வண்டியை விட்டு ப்பிரியமாட்டார். சிலகாலம் வண்டியின்மேல் இருப்பார். சில காலம் வண்டியின் கீழ் இருப்பார். இவரைத் தேடப்போன க்ஷத்தா இவரை வண்டியின் கீழே (அதஸ்தாச்சகடஸ்ய) பார்த்தார். ஹம்ஸங்கள் சொன்ன அடையாளம் ஸரியென்று நிரூபிதமாயிற்று.

3. க்ஷத்தாவுக்கு ஜாநச்ருதி ரைக்வரைத்தேட ஆஜ்ஞை செய்கையில் தாம் ஹம்ஸத்தினிடம் கேட்டபடி 'ஸயுக்வா ரைக்வ:' என்றே அடையாளம் சொன்னார்.

4. சகடத்தின் கீழ் உட்கார்ந்துகொண்டு தினவுகளை ச்சொரிந்துகொண்டிருந்த ரைக்வரைப்பார்த்து தேடப்போன க்ஷத்தா 'பகவானே! வண்டிரைக்வர் நீர்தானோ'? என்று கேட்டார். அந்த ப்பட்டப் பெயரைச் சொன்னதால் அவர் கோபிக்கவில்லை. நான் தான் அப்பா என்று ப்ஹுதமாய் நீட்டி அங்கீகாரஞ்செய்தார். ப்ரஹ்மவித்துக்கு இப்படி ஒரு விநோதரூபமான மனப்போக்கு தோஷமல்ல.

5. வண்டிரைக்வர் என்று கேட்டிருந்ததாலும், தான் தேட அனுப்பிய மநுஷ்யன் வண்டியின் கீழேயே ரைக்வரைக்கண்டதாலும், அவருக்கு என்ன ப்ரியமான உபஹாரத்தைக்கொண்டு போகிறதென்று ஆலோசித்து அச்வதரிகள் (கோவேறு கழுதைகள்) கட்டிய ஒரு ரதத்தையும் (தங்க) ஹாரத்தையும் அறுநூறு கோக்களையும் கொண்டு போனார். ரைக்வர் இருந்த தேசம் மஹாவ்ருஷம். 'மஹாவ்ருஷேஷு' என்று பின்னால் காண்கிறோம். உயர்ந்த மாடுகள் மலிந்த தேசம். ரைக்வர் இருந்த காடுகளில் மாடுகள் யதேஷ்டமாய் அகப்படும். வேண்டிய மாடுகளை ப்பொறுக்கி வண்டியில் கட்டிக் கொள்ளலாம். வண்டி செய்ய மரத்திற்கு க்குறையில்லை. ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்கள் தச்சனை த்தேட வேண்டியதில்லை. அக்காலத்தில் (வேதமோதிய) ச்ரோத்ரியர்கள் தொழில்களையும் கற்றவர். காட்டு இலாகா சட்ட நிர்ப்பந்தமில்லை. காட்டு மாடுகளைக் கட்டி காட்டுவண்டிகளை ஓட்டி க்கொண்டு பொழுது போக்கும் ரைக்வருக்கு நகரத்தில் நிர்மாணம் செய்த அச்வதரீரதம் மிகவும் ப்ரியமாயிருக்கலாம். ஹாரம் எதற்கு? ரதத்தில் ஏறிப்போகையில் வெறும் கழுத்துடன் போவரோ? ஹாரம் அணிந்துகொள்ளட்டும். கோக்கள் தநம். நாணயங்களால் தக்ஷிணை கொடுப்பது போல் கோஸஹஸ்ரம் தக்ஷிணை யென்பர்

6. ரைக்வர் ஸ்நாதகரான விப்ரர். முதலில் க்ஷத்தா பட்டணம் முதலிய விடங்களில் தேடித்தேடி அகப்படவில்லை யென்று வந்துவிட்டார். 'ப்ராஹ்மணரை எங்கே தேடவேண்டுமோ அங்கே போய்த் தேடி அடை' என்று ஜாநச்ருதி அவரை த்திருப்பிவிட்டார். அரண்யத்திலோ நதிக்கரைகளிலோ, ஏகாந்தமாக இருப்பார் ப்ராஹ்மணர். இன்னபட்டணத்தில் இன்ன சந்தில் இன்ன இலக்கமுள்ள வீட்டில் என்று இக்காலத்தில் போல், அக்காலத்தில் ப்ராஹ்மணர் நகரவாஸிகளல்லர். 'ராஜயாநீக்ஷோணீவாஸம்' என்று ஸ்ரீதேசிகன் வெறுப்பு. அந்தப் பாக்கம் இந்தப் பாக்கம் என்று பட்டணங்களில் இடங்களுக்கு ப்பெயரிடுவார்கள். பாக்கம் என்று பட்டணங்களில் பெயரிடுவதை அநுஸரித்து ராஜதானிக்கு க்கும்பீபாக்கம் என்று திருநாமம் சாற்றினார். கவிஸிம்ஹமானபடியால் நகரமென்று நிந்திக்கையிலும் பாகம் என்ற பெயர் வழக்கத்தை விடவில்லை. இச் சாதுர்யத்தை என்னென்று புகழ்வது. 'சேப்பாக்கம்' 'நுங்கம்பாக்கம்' 'கோடம்பாக்கம்', புரசவாக்கம்' முதலிய சென்னை ராஜதானி நகரஸ்தல ப்பெயர்களை ஸ்வாமி அறிந்தவரே.

7. ரைக்வரை ப்ராஹ்மணரென்று ஜாநச்ருதியே பேசியிருக்கிறார். ஆசிரியர் விப்ரர் என்பதில் விவாதமில்லை. சிஷ்யரைப்பற்றி த்தான் ஸூத்ர சக்தி என்னும் பலத்தைக்கொண்டு ரதகாராதிகரணத்தை ஆதாரமாக்கிப் பேசி விவாதமேற்பட்டது. கல்யாணமாகாத ஸ்நாதகரென்பதும் ஸ்பஷ்டம். உடனே ராஜபுத்ரியை ப்பரிணயம் செய்வதால் நைஷ்டிகரல்லரென்பதும் ஸ்பஷ்டம். ப்ரஹ்மவித்யையின் கரைகண்டு விட்டவரென்று ஹம்ஸம் புகழ்வதால் குருகுலத்திலிருந்து வெளிப்பட்டு வித்யாவ்ரதஸ்நாதராய் கந்யாதாந ப்ரதீக்ஷரான அதிகாரி. வித்யை என்னும் அலௌகிகமான உத்தமகந்யகையை, அநஸூயரும் ஆர்திப்பசியென்னும் (சுக்கை) சோகத்தையுடையவரும் ச்ரத்தை தாநதர்மசீலருமான தகுந்தசிஷ்யருக்குத்தாநம் செய்யும் அதிகாரி. இவ்விரண்டு அதிகாரங்களும் இங்கே ஸபலங்களாகின்றன.

8. ஹாரத்திற்கு ஓர் உபயோக விசேஷமும் நினைக்கப்பட்டிருக்கலாம். விவாஹம் செய்யும் காலத்தில் கந்யைக்கு பர்த்தா கொடுத்த பூஷணமாகப் போடலாம். 'பர்த்ரா நாத வரம் நார்யா: பூஷணம் பூஷணாதபி' என்றாள் ஸீதாபிராட்டி. பர்த்தாவும் உயிர். பூஷணமும் உயிரைப்போல் ப்ரியம். பர்த்தாவின் ப்ரீதிதத்தமான பூஷணமானால் கந்யைக்கு உயிருக்குயிராகும்.

9. கந்யை ஒன்றுமட்டுமில்லாமல் மற்றெதெல்லாம் கொண்டுபோனார் சிஷ்யர்? கந்யையைக் கொண்டுபோனால் என்ன நினைப்பரோவென்று பய

மிருக்கலாம். ஸ்வந்தகந்யையைக்கொடுக்க நேரில் பார்த்துவிட்டுச் செய்ய வேண்டுமென்றும் நினைத்திருக்கலாம்.

10. 'அஹ ஹாரேத்வா தவ ஸஹ கோபிரஸ்து' என்ற ரைக்வ வாக்யத்தில் 'ஹாரேத்வா' என்று ஒரு ஸமஸ்தபதம். 'இத்வா' என்பது ஸஞ்சாரஸாதனமான ரதம். (வண்டி) அதற்குத்தான் இங்கு ப்ராதாந்யம். விலையுயர்ந்த ஹாரமும் முக்யமல்ல ; 600 கோக்களும் முக்யமல்ல! வண்டிதான் முக்யம் (ரைக்வர்புத்தியால்). ஹாரத்தோடு சேர்ந்த ரதம் நூற்றுக்கணக்கான கோக்களோடு உனக்கே இருக்கட்டும். (எனக்கு வேண்டாம்.) 'ஹாரேண யுக்தா இத்வா ... யம் ஹாரேத்வா' என்று ஸ்ரீசங்கரபாஷ்யத்தில் வண்டிக்கு ப்ராதாந்யம் விளக்கப் பட்டது. மற்றதோடு கூடிய எனக்குப் ப்ரியமான வண்டியும் வேண்டாம். எம்பெருமானாரும் 'ஸஹ கோபிர்யா ரயஃ தவைவாஸ்து' கோக்களோடு கூடிய இந்தரதம் உனக்கேயிருக்கட்டும் என்று அருளிச் செய்தார். இரண்டு பாஷ்யகாரர்களும் ரைக்வரின் சகடரஸத்தை விளக்கியருளினார்கள்.

11. ஏன் வேண்டாமென்றார்? 'ஒருவருடம் அதில் பாதி முதலிய காலநியதிகளை ஏற்படுத்தி பலவித உபா...ல் பரீக்ஷித்து க்ருபையினால் நிஸ்ப்ருஹராய் ஆசிரியர் சொல்லவேண்டும்' என்பர். 'ஸ்தோகீ திவ்ய நசைஷிஷ்டி நிவ்ருத்தேச்ச:' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் உடையவர் நியமநமாக ஸாதிக்கப்பட்டது. பணத்தையே அபேக்ஷிக்கக்கூடாதபோது அதிக பணம் வேண்டுமென்கிற அபேக்ஷையைக் காட்டலாமோ? இதற்கு எம்பெருமானாரால் ஸ்பஷ்டமாய் ஸாதிக்கப்பட்ட உபபத்தி முன்வ்யாஸத்தில் காட்டப்பட்டுள்ளது. எம்பெருமானாரால் ஸூசிதமும் உபநிஷத்பாஷ்யகாரரால் ஸ்பஷ்டமாகக்கூறப்பட்டதுமான மற்றொன்றுமுண்டு. கந்யையைத்தவிரமற்றதெல்லாம் இந்த ஸ்நாதகருக்கு வந்தது. கந்யை யில்லாவிடில் இதெல்லாம் வேண்டாம். கந்யை வந்தால் இது போதாது. இதற்கு மேலும் வேணும். கந்யைக்கு ச்சீராக வந்தால் தநம் ஒருவாறு அவளதாகுமாகையால் தாநபாத்ரம் அவளாகக் கூடும் ஆதலால் தநத்தை ப்ரதிக்ரஹிக்கும் லாகவம் அவருக்கு வராது. அவர் முக்யமாக ப்ரதிக்ரஹிப்பது கந்யை. நிரபேக்ஷரான ப்ரஹ்மவித்தும் கந்யாதாநம் பெறலாம். கநகஸம்பந்நமான கந்யையைப்பெறலாம். கநகஸம்பத்து அவளுடையது. அந்த ஸம்பத்தை உடையவளுக்கு இவர் உடையவராவர். ஸாமாந்யரான வித்யார்த்திகளையே 'ப்ரஜாதந்துவை விச்சேதிக்காதே ; க்ரஹஸ்தனாய் விவாகம் செய்துக்கொள்.' என்று விதிப்பர். ரைக்வரோ உத்தம ப்ரஹ்மவித்து. ஸந்ததி வ்ருத்தியாகவேணும்.

உத்தமதார்மிகரான ஜாநச்ருதியைப்போன்றவரின் பெண் குடிப்பெண்ணாயிருப்பது உத்தம கல்பம். திரும்பவும் வருகையில் 'தன் சக்திக்கு அநுகுணமாகவே பசுமுதலியதநத்தையும் கந்யையும்கொணர்ந்து கொடுத்து நெருங்கினார்.' என்று எம்பெருமானார் அருளிச்செயல். ரைக்வர் கந்யையன்றியில் பெரும் பொருள்களை ஸ்வீகரிக்க இஷ்டப்படவில்லை என்பது ஸூசிதம். ஸ்ரீசங்கரபாஷ்யத்தில் 'ரிஷிக்கு அபிமதமான ஜாயையாகத் தன்னுடைய பெண்ணையும் கொண்டு வந்து' என்று ஸ்பஷ்டமாகக்காட்டியிருப்பதால் அதை விவரிக்க அவச்யமில்லை. மற்றொரு ஹேது அநுக்தமாகையால் அதை விவரித்தருளினார். 'களத்ரமில்லாத க்ராம க்ருஹங்களுமில்லாத எனக்கு இவற்றாலென்ன பயன்!' என்று ஸ்ரீரங்கராமாநுஜஸ்வாமியின் உபநிஷத்பாஷ்யம். பாவப்ரகாசிகையிலுமப்படியே.

12. ஸ்ரீபாஷ்யத்தில், தநத்தையெல்லாம் ஸாதித்துவிட்டு 'கந்யாம் ச வஹாய' என்று எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாப்போல கந்யையும் தாநஞ்செய்தாரென்று ஸூசித்தருளினார். ப்ரதாந க்ரியையில் கந்யைக்கே மற்றதைக்காட்டிலும் அதிக ஸந்நிகர்ஷம் ஸூசிதம். ஸாக்ஷாத்தாகக் கந்யைக்கே தாநமென்றும் அவள் முகமாகவே மற்றதை ரைக்வர் பரிக்ரஹித்தாரென்றும் உபநிஷத்தும் ஒருவாறு பேசுகிறது. 'தஸ்யா ஹ முகமுபோத்க்ருஹ்ணன்' என்றது. தஸ்யா:—அவளுடைய முகம்—வழி (த்வாரம்). இந்த தநம் வருவதற்கு அவள் வழி (த்வாரம்). அந்த வழியை ஒப்புக் கொண்டார். வேறு வழியானல் ஒப்பாரென்று உபநிஷத்தின் கருத்து போலும். இந்த முகம் முதலில் வரவில்லை. ஆகையால் முன்பு ஒப்பவில்லை.

13. தஸ்யா ஹ முகமுபோத்க்ருஹ்ணன்—இந்த ராஜகந்யையை சொறி சொறிந்துக்கொண்டிருந்த ரைக்வர் அவள் முகத்தைப்பார்த்து அங்கே ஸம்மதியென்றும் மலர்ச்சியைப்பாராமல் அவளுக்குச் சிறிதேனும் அஸம்மதமாக ரஸத்தை மீறி ஸ்வீகரிப்பரோ? 'ரஸோ வை ஸ:' என்று ரஸத்திற்கீடுபட்டு ரஸத்திற்கு அடியரானவர் ரஸத்தை மீறுவரோ? அவள் துல்யாநுராக மலர்ச்சியோடு கூடிய முகத்தைக் கண்டு அதனை யறிந்து முகத்தை யங்கீகரித்தார். 'அநேநைவ முகேநாலாபயிஷ்யதா:'—இந்த முகத்தாலே தான் நீ என்னை அரும்பெரும் வித்யையைப் பேசச்செய்கிறாய். இவள் முகத்தாலே தான் நீ என்னை அபிமுகனாகச் செய்துக்கொண்டாய். நீ பெறுவாய் என்று பொருளுரைத்தால் பாவம் நன்றாய்விளங்காது. தான் என்றும் 'ஏவ' காரத்தால் நீ கொடுத்த மற்ற பொருள்களாலல்ல. என்று வ்யவச்சேதம் சொல்லலாம். 'அஸ்யா வீக்ஷ்ய

உவம் தஹிம் ஹிதவாராயீ நஃ ' மற்றப்பொருளோடு இப்பொருளையும் ஒரு ரஸப்பொருளாகக்கொள்ள என்ன தடை ?

14. ' அஹஹாரேர க்வா ' என்று நாகரலிபிபாஷ்யத்தில் அச்சுப் பிழையாய் பதவிபாகம். அப்படியே தீபிகை வ்யாஸத்திலும் அச்சுப் பிழை திருத்திக்கொள்ளவேணும். ' க்வா ! என்று தனிப்பதமாக வைத்து ஒருபாடமிருந்ததாயும், அதை ஸ்ரீசங்கரர் தோஷமென்று தள்ளி ' ஹாரேக்வா ' என்கிற பாடத்தையே ஸ்வீகரித்தாரென்றும் ' பாமதீ ' பேசுகிறது. ' மொஹீஷஹ ' என்று பேசப்படுகையில் ஸம்பந்தியான பொருள் எதென்று குறிப்பிடவேண்டாவோ வென்ற யுக்தியையும் காட்டுகின்றது. ஸ்ரீமத்வமதத்தில் ' ஹாரஃ (=ஹாரம்) இத்வா (=ரதம்') என்று இரண்டு தனிப் பதங்களாலும் ' க்வா ' என்று பிரிக்கவில்லை.

15. ' நான்காவது மந்த்ரத்தை ச்சொல்லி வதுவை ஸமீக்ஷணம் செய்யக்கடவன் ' என்று க்ருஹ்யஸூத்ரம். ' அகொராவ க்ஷுரவ திவெயூயி ' என்று தொடங்கும் மந்த்ரம். ' வதுவின் த்ருஷ்டியில் தன் த்ருஷ்டி விழச் செய்யவேணும் ' என்று அங்கே வ்யாக்யாநம். இது ப்ரதாநம். ' அவள் முகத்தை உபோத்க்ரஹணம் செய்துகொண்டு ' என்றும், ' இந்த முகத்தால் என்னை ;பேசச்செய்கிறாய் ' என்னும் வாக்யங்களிலும் பரஸ்பராநுராகவீக்ஷணம் ஸூசிதம். உபஹாரங்களை க்ரஹிக்க வண்டிமுகமாகு மென்று சிஷ்யர் அதைக் கொண்டுபோனார். கந்யை வந்ததும் வண்டிக்கு ப்ராதாந்யம் போய் அது கந்யைக்கு வந்தது. அவள் முகமானாள்.

16: ப்ரஹ்மத்தின் முகம் ஓர் அற்புதக்காட்சி என்று சாந்தோக்யோபகோஸலவித்யைக் காட்டுகிறது. இக்கதை நடந்தகாலம் கோடைகாலம். ஜாநச்ருதி உப்பரிகை மேலே வெளியே சயனித்திருந்தார். கோடைகாலமாகையால் ரைக்வருக்கு க்கொஞ்சம் சொறியிருந்தது. கோடைகாலம் ப்ரயாணத்திற்கு உயர்ந்த ருது. கோடைச்சொரியிருந்தாலும் ப்ரஹ்மவித்தின் முகம் உயர்ந்தஜ்யோதிஸ் என்று கந்யை அதில் ஈடுபட்டாள். அவள் தன் முகத்திலீடுபடுவதை அறிந்து கொண்டவரர் 'இவள் முகமல்லவோ முகம் ; என் முகத்திலீடுபட என்ன ஸாமக்ரீ யுளது என்று நினைந்தார். மேலே கூறிய இரண்டு வாக்யங்களாலும் இதுதெளிவாகிறது.

17. என்ன ப்ரஹ்மஜ்ஞாநம் தமக்கு முன்னிருந்தாலும் இந்த உத்தமராஜகந்யை முகத்தை ப்பார்த்துக்கொண்டு அவள் த்ருஷ்டிவிகாஸத்திலிருந்து தாமும் ஜ்ஞாநவிகாஸம் பெற்று உபதேசிப்பதாக அவர் அபிப்ராயம். ஸஹயஉ-ஜ்வரீயல்லவோ? ப்ரஹ்மவித்யோபதேசத்திலும் மிக்க தர்ம

முண்டோ ? அதில் அவள் ஸஹசரணம் வேண்டாவோ ? த்ருஷ்டியினால் ஸஹசரணம். பெருமாளை ஆதிகுருவாகப்பேசுகையில் ' கஉயோ ஹ்ரு ஹஜெயிநம் ' என்று விசேஷித்ததற்கு இதுவுமோர் தாத்பர்யம். ' யஸ்யா வீக்ஷ்ய உவம்...வியதெ்தZவிஸூம் — ' ' எவள் முகத்தை ப்பார்த்துக்கொண்டு எல்லாவற்றையும் செய்கிறாரோ ' என்னுமிடத்தில் உயிரான இந்த வ்யாபாரம் மட்டும் தவிருமோ ? ஸாரவதீ யென்று ஸ்வாமியே கொண்டாடும்படி தித்தித்த ஸந்ததியில் இரண்டாவது குருவாகப்பிராட்டியை வர்ணிக்கும் ச்லோகத்தில் முற்பாதியின் முதலில் ' ஸஹயஉ-ஜ்வரீ ' என்று பேசியதால் உபதேசதர்மத்தில் ஸஹசரிப்பதைப் பேசினார். பின்பு ஜகத்தின் ஹிதத்திலெல்லாம் பெருமாளோடு கூட ஸம்மந்த்ரணம் செய்து இருவரும் சேர்ந்து ஸங்கல்பிப்பதையும் காட்டியருளினார். மோக்ஷ ப்ரதாநரூபமான ஹிதத்திலும் இருவரும் ஸஹமந்த்ரணம் செய்து ஸாஹித்யேந ஸங்கல்பிப்பதை விளக்கினார். நிக்ரஹாநுக்ரஹ மிச்ரரான பெருமாள் மட்டும் போதாது. அநுக்ரஹமயியாயும் எக்காலத்திலும் நிக்ரஹமே அறியாதவளுமான இவ்ள் கூடச்சேர்ந்து மந்த்ராலோசனை செய்து சேர்ந்து ஸங்கல்பித்து நாம் ஹிதம்பெற இடம் கிடைப்பதைப்பற்றி பின்பாதியில் விளக்கியருளினார்.

18. ஜாநச்ருதியின் கந்யையைப் பரிணயஞ் செய்துகொண்டு அதன் பின்பு அவருக்கு ஆசிரியராய் உபதேசம் செய்வதில் மற்றோர் ஸ்வாரஸ்யமுமுண்டு. ' ஸாக்ஷாந்நாராயணதேவனே ஒரு சிறு மானிடவேடம் பூண்டு ஆசிரியராய் வந்து அருள் சொரிந்து சாஸ்த்ரபாணியாய்க் கை தூக்கி விடுகிறான் ' என்கிற சாஸ்த்ரமும் இங்கே ஸூசிதம். ஜாநச்ருதிக்கு இவர் ஜாமாதாவாகையில் இவர் அவருக்கு விஷ்ணுவைப்போல பூஜ்யராவதுடன் அவருக்கு இவர் விஷ்ணுவே யாகிறார். ' ஊஜாதி விஷ்ணவெ தூஹ்ரும் ப்ரஹ்லொகஜிகீஷயா ' ' ப்ரஹ்மலோகத்தை என் வசமாக்க விஷ்ணுவாகிய உமக்குக் கந்யையைத் தாநம் செய்கிறேன் ' என்றல்லவோ கந்யாதாநச்லோகம். ஜாமாதாவாகிய ரைக்வரை நீரே விஷ்ணு என்று பேசுங்காலத்திலேயே அவர் ஸாக்ஷாத் நாராயணனாகவே யிருந்து இவருக்கு உபதேசிக்கிறார் ' என்கிற ஸ்வாரஸ்யமும் வேதபுருஷன் நெஞ்சிலுள்ளதையறிக. ' ப்ரஹ்மலோகம் ' என்பது நிஷாதஸ்தபத்யதிகரண ந்யாயத்தால் அநுபவிக்கப்படும் ப்ரஹ்மத்தையே ஸமாநாதிகரணமாகச் சொல்லுமென்பது வேதாந்தத்தீர்மாநம். ப்ரஹ்மமே லோகம் ப்ரஹ்மலோகம் எனும் ப்ரஹ்மத்தையல்லவோ ஆசிரியர் வசமாக்கினார். ப்ரஹ்மத்தைத் தன் வசமாக்கிக்கொள்வது தான் பரமபுருஷார்த்தமென்று கடவல்லிச்ருதி பேசுவதை எம்பெருமானார் ஆநுமாநிகாதிகரணத்தில் அறுதியிட்டார்.

19. ஜாநச்ருதியின் பிள்ளை ஜாநச்ருதி. அவர் பௌத்ராயணர். புத்ரர் என்று ஜாநச்ருதியின் தகப்பனார் பெயர். புத்ரருடைய பௌத்ரர் ஜாநச்ருதி என்று வேதபுருஷன் வர்ணநம். இதில்ஒரு ரஸமுண்டு. தன் புத்ரிக்குத்தானே ஒருவாறு 'பௌத்ரராகிறார். புத்ரசப்தம் 'பௌத்ரனை யும் சொல்லும். 'புமாநநு புத்ரன் பிறப்பானாக' என்ற ஆசீர்வசநம் பெண்ணான புத்ரருண்டென்று காட்டுகிறது. அபத்யம் குழந்தை என்ப வற்றைப்போல புத்ரசப்தம் ஆண் பெண் ப்ரஜைகளுக்குப்பொது. இந்தப் புத்ரி யென்னும் புத்ரர் ரைக்வருக்கு ஜாயை. 'இயம் ஜாயா' 'இவள் உமக்கு ஜாயை' என்று சொல்லி குருவுக்கு ஸமர்ப்பணம். ஜாயாசப் தத்தை உபயோகித்ததில் ஸ்வாரஸ்யமுண்டு. 'யதஸ்யாம் ஜாயதே புந:' 'கணவன் பத்நியின் கர்ப்பத்தில் தானே புத்ரரூபமாக ப்பிறப்பதால் ஜாயை ஜாயை எனப்படுகிறாள்.' ஜாநச்ருதி புத்ரருக்கு ரைக்வர் புத்ரராகி ஜாநச் ருதிக்குப் பௌத்ரராகிறார். அவருக்கு சிஷ்யராகையில் அவருக்கு புத்ர ராகிறார். 'சரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:' ப்ரஹ்மத்தைக்கொடுக்கும் பிதா கேவ லப்ராக்ருதசரீரத்தைக் கொடுக்கும் மாதாபிதாக்களை க்காட்டிலும் உயர்ந்த பிதா. வித்யையால் ஆசிரியர் சிஷ்யனை ப்பிறக்கச்செய்து அவனை உள் ளாக்குகிறார். கர்ப்பத்திலிருந்து பிறந்த பிறகு ஆசார்யாநுக்ரஹத்தால் இரண்டாவது வித்யாஜந்மம் வந்து த்விஜனாகிறார். இப்படி தனக்கே ஒரு வாறு ப்ரபௌத்ரராவதையும் பௌத்ராயணசப்தம் தெரிவிக்கலாம்.

20. ரைக்வரிருந்த ஊரையே (க்ராமத்தையே) அவருக்குக் கொடுத் தார். 'அயம் க்ராமோ யத்ராஸ்ஸே'—நீரெழுந்தெழுந்தருளியிருக்கும் இந்த க்ராமமும் உமது. பரதேசம் போகவேண்டாம். நீர் இருந்த க்ரா மமே உமக்கு ஸ்வந்தமாகி உம் ஸ்வந்த ஊரிலேயே எழுந்தருளியிரும். ஸ்வதேசத்திலுள்ள அபிமாநத்திற்கு லோபமே வேண்டாம். 'அந்ருணீ அப்ரவாஸீ ச' என்று தர்மராஜாவிடம் அவர் புத்ரரான யுதிஷ்டிரர் ஆமோதமென்னும் ஸந்தோஷத்தை ஸததமநுபவிக்கும் புருஷனுடைய லக்ஷணத்தைப்பேசி பரிசு பெற்றார். ப்ரவாஸியாக வெளியூரில் போயிருக் கலாகாது.

21. முதலில் கொண்டு வந்த 600 பசுக்களை எங்கே கட்டுகிறது? யார் பரிபாலிக்கிறது? மேய்ச்சலுக்கு க்ராமமெங்கே? தங்க ஹாரத்தை யார் அணிகிறது? ஊர்வலம் வருவதற்கு ஏற்ற இந்த ரதத்தில் ஒருவரான ப்ரஹ்மசாரி ஏறிப்போகலாமோ? க்ருஹிணீ க்ருஹத்தைப்பரிபாலிக்க வேணும். அவளல்லவா க்ருஹம். 'ந க்ருஹம் க்ருஹமித்யாஹு: க்ருஹிணீ க்ருஹமுச்யதே.' ஹாரத் தைப்பெண்மணி யணியவேணும். தம்பதிகளாய் ரதத்தில ஊர்வலம் வர

வேணும். 600 என்பது என்ன கணக்கு? கோஸஹஸ்ரம் தக்ஷிணையென் னும் வேதக்கணக்கை யநுஸரிக்கலாகாதோ? இதெல்லாம் இரண்டாந்தரம் வருகையில் பரிஹ்ருதம். 600 ஆயிரமாயிற்று. க்ராமமும் சேர்ந்தது. ஜாமாத்ருரூபியான விஷ்ணுவே ஆசிரியருமானார். எத்தனை ஔசித்யச் சேர்த்தி? வேதரஸமே ரஸம். லௌகிக காவ்யங்களில் ரஸச்சொரிவு இப்படியுண்டோ? நம்மாசிரியர்கள் காவ்யங்களில் காணலாம்.

22. பஹ்வந்நத்தை ப்பாகம் செய்து அதிதிகளுக்கு அளித்துக் நாடெங்கும் அன்னசாலைகளான விடுதிகளை நூல் பிடித்து ஒரே அளவாக ஏற்படுத்தினார். ஒருவிதமான அளவையும் உருவத்தையும் தகுந்த சில் பியைக்கொண்டு கல்பித்து ஒரே பரிமாணமாக நாடெங்கும் கட்டடங்கள் கட்டும் ராஜதந்த்ரத்தை 'ஆவஸதாந்கார ஸர்வத:' என்று ச்ருதி அழ காக ஸூசிக்கிறது. இப்படி எல்லோர்க்கும் அன்னத்தை யளித்தவர் தான் பட்டினியால் ஆர்த்தராகி த்தன்பசி தீர்ப்பாரை நாடெங்கும் ஆள்விட்டு த்தேடிப்பிடித்து அவர் கடாக்ஷத்தால் பசி தீர்ந்து ஷட்குணப்ரஹ்மமென் னும் ஆறாத மாறாத சாச்வத ஷட்ரஸான்னத்தை யடைந்தாரென்னும் ஸ்வாரஸ்யத்தை 'அந்நாதோ பவதி' என்று முடிவில் பலத்தைப்பேசுவதால் உபக்ரமோபஸம்ஹாரங்கள் மூலமாய் ஸூசிப்பதனழகை ரஸிகரநுபவிக்க வேண்டும். கோடிக்கணக்கான பேருக்கு அன்னமளித்த தர்மம் பரம்பரை யாக ச்ரேயஸ்ஸுகளை ச்சேர்பித்து 'உண்ணும் சோறும் பருகுநீர் தின் னும் வெத்திலையுமெல்லாம் கண்ணனிறே இவர்க்கு என்றபடிக்கு இவரை உண்மையான அந்நாதராக்கி 'அஹமந்நாத:' என்று மகிழ்ந்து பாடச் செய்தது.

23. முதலில் எல்லோர்க்கும் லௌகிகமான அன்னத்தை அளித்து ஸாமான்யமநுஜ பசியை த்தீர்த்தார். பிறகு ஹம்ஸங்களால் சாஸ்த்ரீய மான பசியாகிய ஆர்த்தியை அடைந்து பட்டினி கிடந்து ஆசிரியர் கடாக்ஷத் தால் அப்பசியைத் தீர்க்கும் கண்ணனென்னும் அமுதான்னத்தை ப்பெற்று ப்பாரணை செய்து அந்நாதராகி நாட்டிலுள்ளவர்களுக்கும் ஜனகரை ப்போல தாம் பெற்ற திவ்யான்னத்தை யதேஷ்டமாயளித்து அந்நாதராக் கினாரென்று ச்ருதி ஹ்ருதயம். பசியை யுண்டாக்கின வாசிரியர்கள் ஹம் ஸங்கள். தீர்த்தவர் ரைக்வர்.

24. 'ஹோ(அ)ஹோ (அ)யி பல்லாக்ஷ பல்லாக்ஷ' என்று முன்ஹம்ஸத்தைப்பின்ஹம்ஸம் கூப் பிட்டது. 'மந்த பார்வையுடைய பக்ஷியே' என்று அதன் பொருள் தார்மிகரான ஜாநச்ருதியின் தேஜஸ்ஸு தொளுத்துமே. கண் பார்க்கவில் லையே என்று பரிஹாஸம். இவர் தர்மமெல்லாம் எத்தனையுயர்ந்தாலும் ப்ரஹ்மஜ்ஞானமாகுமோ அதற்கு இதெல்லாம் அங்கம்தானே. அவர் தர்மத்தில் இவர் செய்யும் அநந்தகோடி தர்மமும் உள்ளடங்கியது. யார்

பார்வை மந்தம்? உனக்குத்தான் உட்கண்ணில்லை என்று பரிஹாஸம் திருப்பப்படுகிறது.

25. கம், உ, ஊரெ, என்று நமக்கு ப்பாடம். 'கம் வர:' 'கம்வர' என்று இருவிதம் அத்வைதபாடம். வர: என்று வராகனுன பேதை ஜாநச்ருதி யென்று பொருள். வர என்று பரிஹாஸமாக ஹம்ஸத்தைக் கூப்பிடுகிற தாகப் பொருள். நம்முடைய பாடந்தான் ஸரியென்று உபபத்திகளோடு காட்டப்பட்டுளது.

26. ஹம்ஸத்தின் அநாதரவாக்யத்தை க்கேட்டதும் (அலக்ஷ்யப் பேச்சைக்கேட்டதும், ஜாநச்ருதிக்கு சோகமுண்டாயிற்று. என்ன சோகம்? அவமானதுக்கமல்ல. அவமானத்திலும் ச்ரேயஸ் வேறில்லை. அது ஸந்தோஷகாரணம். அவமானத்தால் தவம் வ்ருத்தியாகும். ஸம்மானத்தால் தவம் குறையும். எங்கிருந்தும் அவமானத்தை அம்ருதத்தைப்போல விரும்பவேணும் என்னும் வசனத்தை உதாஹரித்து பாவப் ரகாசிகை 'இத்தனைகாலம் இப்படி யொருவித்யை யுண்டென்பதை யறியக்கிடைக்கவில்லை. வீணே கிடந்தோமென்பதைப் பற்றி அநுதாபமும் இனியேனும் க்ஷணமாத்ரமும் தாமதியாமல் உண்மையான அன்னத்தை யுண்ணப்பெற வேண்டிய பசியென்னும் ஆர்த்தி இங்கே 'ஶுக்' எனப்படுகிறது. அநாதரம் துக்ககாரணமல்ல. அநாதரச்ரவணம் கிடந்தநாளுக்கநுதாபத்தையும் காண (அடைய) ஆசையையும் தீவ்ரமாக உண்டாக்க நிமித்தமாயிற்று.' என்று விளக்குகிறது. ஆர்தியென்னும் அதிகாரஸம்பத்தை விளக்கும் பதத்தை முன் வ்யாஸத்தில் அழகாய் கடைசியில் குறித்துளது. இகழ்ச்சியால் வந்த துக்கமென்று நினைக்கக்கூடாது. எம்பெருமானரும் உபதேசயோக்யதையை க்யாபனம் செய்யும் ஓர் சோகாவேசம்' என்றார். அது தான் ஆர்த்தி.

27. இரவில் ஹம்ஸவாக்யங்களைக் கேட்டது முதல் இராஜனுக்கு த்தூக்கமேயில்லை. அந்த வாக்யங்களையே உருபோட்டுக்கொண்டு ஆர்த்தனுயிருந்தான். பள்ளியெழுச்சி பாடும் க்ஷத்தா முதலியோர்கள் வந்து பாடினார்கள். 'ப்ரபுவே' 'அரசே' என்று துதிபாடினார்கள். கைகேயி 'ராஜந' என்று பரதனைக் கூப்பிட்டபொழுது பரதர் பட்டபாட்டை இவரும் பட்டார். படுக்கையை விட்டு க்குதிக்கையிலேயே 'நாஞேப்ரபு, வண்டிரைக்வரைப்போல பேதையேனையும் பேசலாமோ' என்றார். நாமெல்லாம் சேர்ந்து அவருக்கு த்திருப்பள்ளியெழுச்சி ப்பாடவேண்டும் 'ஓடும் பிள்ளாய். தேடிப்பிடியும். என்று ஹம்ஸவாக்யத்தையே அடையாளமாக ஒப்பித்தார்.

28. வண்டிக்காரர் என்பதற்கு, இந்த ஸம்ஸாரக்காட்டை வித்யையென்னும் சகடத்தில் நம்மை யேற்றி த்தாண்டிவைப்பபொன்று உட்கருத்

துப்போலும். 'ஶ்யதெ நாவிகெந,' 'தெஶிகெகஃ கணயாரெஃ' 'கணயார ஜவாணவெ' முதலியதை நினைக்கவேணும். ஸம்ஸாரஸாகரத்தைக் கடவென்றால் அதைக்கடக்க மாலுமியும் படகும் வேண்டும். காடென்றால் சகடமும் ஸாரதியும் வேண்டும்.

29. அத்யாத்மவிசாரமான பொருள்கள் எத்தனையோ? அதிலிறங்கவில்லை. 'யஞுதெஉ' என்னும் பாக்யத்தின் பொருளிலுமிறங்கவில்லை. இங்கே அக்ர்யப்ராய ந்யாயத்தை க்கொண்டு ஜாநச்ருதி க்ஷத்திரியரென்று ஓர் யுக்தி யென்று ச்ருதப்ரகாசிகை.

30. ஆழ்வார்கள் தமிழ் மறை ஏற்பட்டபிறகு ஸம்ஸ்க்ருத வேதத்தின் அபேக்ஷையேயில்லாமல் ஸகலதத்வங்களையும் தெளிந்து ந்யாஸமெனும் தபஸ்ஸுக்கு எல்லோரும் யோக்ராகையால் ஒருவருக்கும் ஓர் குறையில்லை. கவிதார்கிகஸம்ஹராயும் வேதாந்தாசார்யராயுமிருந்த நம் தேசிகரும் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே என்று ஸாதிக்கையால் தமிழ் மறையுள்ளளவில் ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு ப்பஞ்சமில்லை. தாரதம்யமெனும் தாபமுமில்லை.

ஸ்ரீ:

மீமாம்ஸா ஸங்க்ரஹம்

[திவான் பகதூர் ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசார்யர்.]

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நாலாவது பாதம்

256. கீழ்ப்பாராவில் செய்யப்பட்ட தீர்மானம் விக்ருதி யாகங்களிலும் அதிதேசத்தினுல் வரும் வாக்யங்களுக்கு முண்டு. அதை மறுபடியும் விசாரிப்பதற்குக் காரணம்—'ஸௌர்யம் சரும் நிர்வபேத்' என்று ஸூர்ய தேவதையின் சருயாகம் விதிக்கப்படுகிறது. ஸூர்யன் என்கிற பதம் விதிவாக்யத்தில் மாத்திரமிருக்கிறது, ப்ரக்ருதியான அக்னி தேவதையின் யாகத்தில் போல, நிகமங்களில் படிக்கவில்லையே, ஆகையால் உத்தேச்ய த்யாகத்தில் மாத்ரம் ஸூரியன் என்னும் பதத்தைச் சொல்லவேண்டும். மற்ற நிகமங்களில் எதை வேண்டுமோ அதைச் சொல்லலாமா என்பது ஸந்தேஹம்.

பதில்—(சாஸ்த்ர தீபிகைப்படி) ப்ராக்ருதியாகத்திலும் அக்னி என்கிற சொல்லுக்கு யாகத்துடன் ஸம்பந்தமில்லை. யாகத்தைக் காரணமாகவுடைய

பாவனையுடன்தான் ஸம்பந்தம். பாவனைதான் யாகத்துக்கு ப்ரயோஜகம். பாவனையுடன் அங்கங்கள் சேர்கின்றன என்று முன்னுலே சொல்லப்பட்டது. ஆகையால் அக்னி என்கிற சொல்லோடு சேர்த்து ப்ரயோகத்தைச் செய்யவேண்டும். ப்ரக்ருதியில் அக்னி என்கிற சொல்லுக்குப் பதிலாக விக்ருதியில் ஸூரியன் என்கிற சொல்லைச் சொல்லவேண்டியதாகையால், எந்த நிகமங்களில் அக்னி என்கிற சொல் சொல்லப்படுகிறதோ, அந்த நிகமங்களில் ஸூரியன் என்கிற சொல்லைச் சொல்லவேண்டும். ஆகையால் விக்ருதியாகங்களில் விதிவாக்யத்திலிருக்கும் சொல்லையே எல்லா நிகமங்களிலும் சொல்லவேண்டும். (அதி. 15. சா. 708.)

257. சில விக்ருதியாகங்களில் இந்த நியாய விஷயமான ஸந்தேஹம் அடுத்த ஐந்து அதிகரணங்களில் தீர்க்கப்படுகிறது.

(1) ஆதானத்தில் 'அக்னயே பவமானாய புரோடாசமஷ்டாகபாலம் நிர்வபேத்' என்று ஒரு வாக்யமிருக்கிறது. இங்கே இரண்டு சொற்கள் அக்னி, பவமானன் என்று இருந்தாலும் அக்னி என்பதை மாத்திரம் நிகமங்களில் சொல்லலாமா? ப்ரக்ருதியில் அக்னி என்கிற சொல் தானே அவைகளில் படிக்கப்பட்டிருக்கிறது. அதிதேசத்தால் ஒரு சொல்தானே விக்ருதியில் வரும். மேலும், ஒரே சொல்லாலே அர்த்தம் தெரியும்போது இரண்டு சொற்கள் எதற்காக என்பது ஸந்தேஹம்.

பதில்—பாவகன் என்கிற சொல்லாலே சொல்லப்பட்ட குணத்தையுடைய அக்னிதான் தேவதையாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் இரண்டு சொற்களையும் சொல்லவேண்டும். (அதி. 16.)

முதலில் அர்த்தத்தை விதித்து, பிறகு சொல்லைச் சொல்லும்படி விதித்திருந்தால், ஒரு சொல்லே போதும். சொல்லையே பாவனைக்கு அங்கமாக விதிக்கப்படுகிறது என்று முன்னுலே சொல்லப்பட்டது. இரண்டு சொற்களையும் விதிப்பதால் இரண்டையும் சொல்லவேண்டும். (சா. 709)

258. (2) கீழ்ப்பாராவில் விசாரித்த பவமானேஷ்டியில் ஆஜ்யபாகவிஷயமாய் இரண்டு வாக்யங்கள்—"வ்ருத்ரஹணா வக்னயே கார்யௌ", "பாவகஸ்வாதுஷௌ" என்று. இங்கே 'வ்ருத்ரஹணக்னி' என்றும், 'பாவகவஹ்னி' என்றும் சொல்லவேண்டியதா என்பது ஸந்தேஹம். பதில்:-சொல்லக்கூடாது. இங்கே 'அக்னயே' என்கிற சொல் யாகத்தைச் சொல்லவில்லை. மந்திரத்தைச் சொல்லுகிறது. (அதி. 17)

259. 3. அவப்ருதத்தில் ஒரு வாக்யம் "அக்னீவருணௌ ஸ்விஷ்டக்ருதௌ யஜதி" என்று. இங்கே 'ஸ்விஷ்டக்ருத்' என்கிற விசேஷணத்தைவிட்டுவிட வேண்டாமா? ஏன் என்றால், அதற்கு அர்த்தம் யாகத்தை நன்றாய்ச் செய்யப்பட்டதாய் செய்தவன் என்பது. இது இங்கே பொருந்தாது. இந்த

வேலை இனிமேல்தான் செய்யப்படும். ஆகையால் அந்தச் சொல்லுக்கு ரூடியால் பொருள் கொள்ளவேண்டும். இந்த ரூடியால் ஏற்படும் பொருள் அக்னீவருணனுக்குப் பொருந்தாது. ஆகையால் லக்ஷணையால் ஸ்விஷ்டக்ருத்தின் வேலையென்று அர்த்தம் பண்ணவேண்டும். இந்த காரணத்தால் அந்தச் சொல்லை விட்டுவிடவேண்டாமா என்பது ஸந்தேஹம்.

பதில்—ஸ்விஷ்டம் (நன்றாய்ச் செய்யப்பட்டது) என்கிற கார்யம் நடக்கிற ப்ரயோகத்தில் இனி செய்யப் போவதாயிருந்தாலும், முன் ப்ரயோகங்களில் அந்த வேலை செய்யப்பட்டபடியால், "ஸ்விஷ்டக்ருத்" என்கிற சொல்லுக்கு யோகத்தால் அர்த்தம் பண்ணலாம். ஏற்பட்ட யோகத்தை விட்டு ரூடி ஒன்றைப் புதிதாய் கல்பிப்பது நியாயமன்று. ஆகையால் 'ஸ்விஷ்டக்ருத்' என்கிற சொல்லோடுகூடி அக்னீவருணனைச் சொல்லவேண்டும். (அதி. 19)

260. (4) அக்னீஷோமீய பசுயாகத்தில் ஸ்விஷ்டக்ருத் யாக விஷயத்தில் 'அக்னிம் யஜதி' என்று ஒரு வாக்யமிருக்கிறது. இங்கே 'அக்னி' என்கிறபதத்தைத் மாத்திரம் விசேஷணமில்லாமல் சொல்லியிருப்பதாலும், அதற்கு யாகத்துடன் ஸம்பந்தமிருப்பதாலும், யாகத்தில் மாத்ரம் 'அக்னி' என்கிற பதத்தை தனியாய்ச் சொல்லவேண்டும். மற்ற நிகமங்களில் "ஸ்விஷ்டக்ருத்" என்கிற பதத்துடன் கூட. இது சரிதானே என்பது கேள்வி.

பதில்—"யஜதி" என்கிற பதம் ப்ரயோகத்தைச் சொல்லுவதால் எல்லா நிகமங்களிலும் "ஸ்விஷ்டக்ருத்" என்கிற பதத்தை விட்டுவிட வேண்டும். "அக்னி" என்கிற பதத்தை மாத்ரம் சொல்லவேண்டும். (அதி. 20.)

261. (5) கீழ்ச்சொன்ன யாகத்திலேயே "வனஸ்பதிம் ஸ்விஷ்டக்ருதம் யஜதி" என்று ஒரு வாக்யம். இதற்கு ப்ரக்ருதி ஸ்விஷ்டக்ருத் யாகம். அதில் விதிவாக்யத்தில் "அக்னிம் ஸ்விஷ்டக்ருதம் யஜதி" என்று ஸ்விஷ்டக்ருத் என்கிற சொல்லோடு கூடிய அக்னியையும், நிகமங்களில், அக்னி என்கிற சொல்லைத் தனியாயும் சொல்லியிருக்கிறபடியால், விதிக்கும் நிகமங்களுக்கும் பேதமிருக்கிறது. விதிவாக்யத்தில் சொன்ன சொல்லைத்தான் சொல்லவேண்டும் என்று கட்டாயமில்லையே. இது தானே விக்ருதி யாகத்திலே வரும் என்பது ஸந்தேஹம்.

பதில்—காண்பிக்கப்பட்ட பேதமானது சொல்லால் சொல்லப்படவில்லை; அர்த்தத்தாலே தோன்றுகிறது. இப்படி ஏற்படுவதற்கு அதிதேசமில்லை. ஆகையால் விதிவாக்யத்தில் சொன்ன வனஸ்பதி என்கிற சொல்லையே சொல்லவேண்டும். (அதி-18)

262. இதே அக்னீஷோமீய பசுயாகத்தில் த்ரவ்யத்தை விதிவாக்யத்தில் பசு என்றும், நிகமத்தில் மேதஸ் என்றும் சொல்லியிருப்பதால் விதி வாக்யத்திலிருக்கும் சொல்லையே சொல்லவேண்டும் என்கிற கட்டாயமில்லை. விக்ருதியான அநுபந்த்யா பசுயாகத்திலும் எந்தச் சொல் இஷ்டமோ, அதைச் சொல்லலாமா என்பது ஸந்தேஹம்.

பதில்—கூடாது. இது த்ரவ்யமானதால் தேவதை விஷயத்தில் போல நியமமில்லை. எந்தச் சொல்லைக்கொண்டும் த்ரவ்யத்தைச் சொல்லலாம். ஆனால் ப்ரகரணத்தில் 'உஸ்ரா' என்கிற சொல் இருப்பதால் அதைத் தான் சொல்லவேண்டும். (சா-710)

நான்காவது பாதம் முற்றிற்று.

ஐந்தாவது பாதம்.

263. வ்யூஹந்யாயம் 253 வது பாரா முதல் சொல்லப்பட்டது. அடுத்த விஷயம் ஏகதேச பாதம். விக்ருதியாகங்களில் "ஐந்த்ராக்னம் த்ரிகபாலம்" என்று மூன்று கபால புரோடாசம் முதலானவைகள் விதிக்கப்படுகின்றன. சொன்ன யாகத்தை அக்னிதேவதையின் யாகத்தைப்போல் செய்யவேண்டும். அதில் எட்டு கபாலங்களில் புரோடாசத்தைச் சிரபணம் பண்ணுகிறது. இங்கே மூன்றுதான் வேண்டும். ப்ரக்ருதியின் எட்டு கபாலங்களில் எவைகளை யெடுத்துக் கொள்ளுகிறது என்பது ஸந்தேஹம்.

பதில்—பிரக்ருதியாகத்தில் கபாலங்களை வைக்கும் வரிசை உபதேசத்தாலே முதலில் ஒரு தணலை அசையாமல்வைத்து, ஒரு மந்திரத்தாலேதணலின்மேலே நடுகபாலத்தைவைக்கிறது. இந்த வரிசை அதிதேசத்தால் வருகிறது. அதை அத்வர்யு நினைத்துக் கொள்ளுகிறான். தணலை வைப்பது முதல் வ்யாபாரம்; இது அடுத்த வியாபாரமான நடு கபாலத்தை வைப்பதையே நினைவுக்கு கொண்டு வருகிறது. அது இரண்டாவது கபாலத்தை வைப்பதை; முதலிரண்டு கபாலங்களுக்கு வித்தியாஸமிருக்கிறது. இரண்டாவதுக்கு மந்திரம் வேறு. அதுக்கு இடம் முதல் கபாலதுக்கு கீழ்புறம். இப்படி வரிசை ஏற்பட்டிருக்கையில் நினைவுக்கு வருவதை விட்டு விட்டு நினைவுக்கு வராதவேறொன்றைச் செய்வது நியாயமன்று. ஆகையால் முதல் மூன்று கபாலங்களை எடுத்துகொள்ளவேண்டும். பாக்கிக் கபாலங்களுக்கு வேலையில்லாமையால், அவைகளைத் தள்ளிவிடவேண்டும். (அதி-1)

264. விக்ருதியாகத்தில் விதிக்கப்படும் ஸங்க்யைப்ரகிருதியாகத்தில் ஏற்பட்ட ஸங்கியைக்குக் குறைந்திருந்தால் என்ன செய்வது என்று விசாரிக்கப்பட்டது. அதிக ஸங்கியையை விதித்தால் ஸங்கியையை யெப்படி நிரப்புகிறது (பூரணம்) என்று இனி விசாரிக்கப்படுகிறது.

"ஏகவிம்சேநாதிராத்ரேண ப்ரஜாகாமம் யாஜயேத்" என்று ஒரு விக்ருதியாகம். பிள்ளை குட்டி வேண்டும் என்பவனை இருபத்தொரு ஸ்தோமமுள்ள அதிராத்ரயாகத்தைச் செய்விக்கவேண்டியது என்று—இதின்பொருள். இதில் எல்லா ஸ்தோத்ரங்களுக்கும் ஸ்தோமம் 21. ப்ரகிருதியான அக்னிஷ்டோமத்தில் ஸ்தோமங்கள் 9, 15,17, 21. இங்கே முதல் மூன்று ஸ்தோமங்களை எப்படி விருத்தி பண்ணுகிறது என்பது ஸந்தேஹம்.

பூர்வ பக்ஷம்—அப்யாஸத்தாலே—அதாவது ப்ரகிருதி ஸ்தோத்ரீயாக்களை திருப்பித் திருப்பிச் சொல்லுவதால் ப்ரகிருதியிலில்லாதவைகளை கானம் பண்ணுகிறது என்று எப்படிக் கொள்ளலாம்?

ஸித்தாந்தம்—அப்யாஸமும் நேராக விதிக்கப்படவில்லை; ஸங்கியையை நிரப்புவதற்காகக் கல்பிக்கப்படுகிறது. ஸங்கியை ஒரு வஸ்துவினிடமிருக்கிறது. வெவ்வேறு வஸ்துக்களாலேதான் அதை நிரப்பவேண்டும். ஒரே வஸ்துவை அடிக்கடி பார்ப்பதால், அது பத்து வஸ்துக்களாகாது. ஆகையால் ஸ்தோமத்தின் ஸங்கியையாலே ஸ்தோத்ரீயாக்களின் பேதம் காட்டப்படுகிறது. இந்த பேதமானது ப்ரக்ருதியிலில்லாத வேறு ஸ்தோத்ரீயாக்களைக்கொண்டு வரவேண்டியது என்று காட்டுகிறது. (அதி-67)

இப்படி ஸ்தோத்ரீயாக்களைக் கொண்டு வருவதற்கு ஆகமம் என்று பெயர். இந்த நியாயம் எல்லா ஸ்தோத்ரங்களுக்கு வரவேண்டியதாயிருந்தாலும், ஒரு வசநத்தாலே பவமான ஸ்தோத்ரங்களுக்கு மாத்ரம் என்று ஏற்படுகிறது. மற்றவைகளுக்கு அப்யாஸம் தவிர வேறு வழியில்லை. (சா-721)

265. பஹிஷ்பவமான ஸ்தோத்ரத்தில் இந்த நியாயம் வருகிறதில்லை. ஏனென்றால், "ஏகம் ஸாம த்ருசே க்ரியதே" என்கிற பஹிஷ்பவமான விஷயமான வாக்யத்தாலே அது ஒரே ஸாமம் என்று ஏற்படுகிறது. ஆகையால் வேறு ஸாமங்களைக்கொண்டு வர இடமில்லை. 'பராக் பஹிஷ்பவமானேந ஸ்துவந்தி" என்று ஒரு வாக்யமிருப்பதால் ஸ்தோத்ரீயாக்களை அப்யாஸம் பண்ணவும் கூடாது. பராக் என்கிற சொல்லுக்கு நேராக அதாவது திருப்பிச் சொல்லாமல் என்பது பொருள். ஆகையால் ருக்குக்களைக் கொண்டு வந்து ஸங்கியாபூர்ணம் செய்யவேண்டும். (அதி-7)

266. "ஏகவிம்சதிம் அநுப்ரூயாத் ப்ரதிஷ்டாகாமஸ்ய" என்று நிலையாயிருப்பதை ஆசைப்படுகிறவன் விஷயத்தில் இருபத்தொன்று ஸாமிதேனீ மந்திரங்களைச் சொல்லும்படி ஒரு விதி. தர்சபூர்ணமாஸ இஷ்டிகளில் பதினைந்து ஸாமிதேனீ மந்திரங்கள் வேண்டும். பதினொன்று மந்திரங்கள் தானிருக்கின்றன. இங்கே 'த்ரி: ப்ரதமாமந்வாஹ த்ரிருத்த-

ஊழ" என்று இரண்டு வாக்யங்களால் முதல் மந்திரத்தை மூன்று தடவை
யும், கடைசி மந்திரத்தை மூன்று தடவையும் சொல்லுகிறது. இப்படி
பதினைந்து மந்திரங்களாகின்றன. இங்கே இருபத்தொன்று என்கி
ஸங்கியையை எப்படி பூரணம் பண்ணுகிறது என்பது ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்—பஹிஷ்பவமான நியாயப்படி சருக்குக்களைகொண்டு
வந்து ஸங்கியாபூரணம் செய்யவேண்டும். இது ஒரு பக்ஷம். இன்னு
ஒரு பக்ஷம் இது கூடாது. பதினைந்து என்கிற ஸங்கியையை அப்யாஸ
தாலே பூரணம் செய்யப்பட்டதே. அதுபோல் இருபத்தொன்று என்கி
ஸங்கியை கிடைக்கிறவரையில் முதல் மந்திரத்தையும் கடைசி மந்திரத்தை
யும் அப்யாஸம் செய்யவேண்டும்.

ஸித்தாந்தம்—மூன்று தடவை அப்யாஸம் பண்ணினது ஸங்க்யா பூ
ணத்துக்காக விதிக்கப்படவில்லை. அப்படியிருந்தால், முதல் மந்திரத்தை
இரண்டு தடவையும், கடைசி மந்திரத்தை நான்கு தடவையும் அப்யாஸப்
செய்து ஸங்கியா பூரணம் செய்திருக்கலாம். ஆகையால் மூன்று தடவை
தான் அப்யாஸம் செய்யவேண்டும் என்பது கருத்து. இதைப் பாதிக்க
கூடாது. முதல் மந்திரத்தையும் கடைசி மந்திரத்தையும் மூன்று தடவை
சொல்லி பாக்கி ஆறு ருக்குக்களை கொண்டுவந்து ஸங்கியா பூரணம் செய்ய
வேண்டும். (அதி—ƽ)

ஐந்தாவது பாதம் முற்றிற்று.

ஏழாவது பாதம்.

267. மூன்றாவது பாதம் முதல் இதுவரையில் விக்ருதியாகத்தில்
விதிக்கப்பட்டதாலே ப்ரகிருதியாகத்திலிருந்து அதிதேசத்தால் வருவது
பாதிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. இப்போது ப்ரகிருதியாகத்
திலிருந்து அதிதேசத்தால் வருவதையே விக்ருதியாகத்தில் விதிப்பதின்
ப்ரயோஜனம் விசாரிக்கப்படுகிறது.

க்ருஹமேதீயம் என்று சொல்லப்பட்ட யாக விஷயமாய் ஒரு வாக்
யம் "ஆஜ்யபாகௌ யஜதி" என்பது. இது அதிதேசத்தாலேயே வருமே
இதைத் தனியாய் விதிப்பானேன் என்று ஸந்தேஹம். இங்கே எட்டு வித
மாய் பதில் சொல்லக்கூடும். அவையாவன:—

1. அதிதேசத்தால் வருவதையே இங்கே மறுபடியும் சொல்லுவ
தால், இந்த வாக்யம் அநுவாதம். இப்படியானால் வாக்யத்துக்கு ப்ரயோ
ஜனமில்லாமல் போய்விடும். ஆகையால் இந்தப் பக்ஷம் கூடாது.

2. இந்த வாக்யத்தில் ஆஜ்ய பாகங்களைச் சொல்லுவதால் இதற்குத்
தர்ச பூர்ணமாஸ இஷ்டிகள் ப்ரகிருதி என்று ஏற்படுகிறது. பிறகு அதி
தேசத்தாலே ஆஜ்ய பாகங்கள் வரும். இப்படிப் பொருள்கொண்டால்

வாக்யத்துக்குப் பிரயோஜநம் ஏற்படும். இது இரண்டாவது பக்ஷம். இது
வும் கூடாது. இந்த யாகத்துக்கு த்ரவ்யம் "ஓதநம்" என்று விதிவாக்யம்
சொல்லுவதாலேயே தர்சபூர்ணமாஸ இஷ்டிகள் ப்ரக்ருதி என்று ஏற்
படும். ஆகையால் இந்த வாக்யம் வேண்டியதில்லையே. 3 இந்த வாக்யத்தில்
ஆஜ்ய பாகங்களை மறுபடியும் சொல்லுவது அர்த்தவாதமாயிருந்து அவை
களை ஸ்தோத்ரம் பண்ணுகிறது. இது மூன்றாவது பக்ஷம். இதுவும்
கூடாது. இது ஒரு ப்ரகரணத்திலிருக்கிறது; விதிவாக்யம் வேறு ப்ரகர
ணத்திலிருக்கிறது. அவைகள் எப்படி ஒரு வாக்யமாகும்? ஒரு வாக்யமா
யிருந்தால் தானே அர்த்த வாதமாகும்.

4. அதிதேசத்தாலே வரும் ஆஜ்ய பாகங்களைக் காட்டிலும் வேறான
அங்கம் விதிக்கப்படுகிறது. இது நாலாவது பக்ஷம். இதுவும் கூடாது.
இந்த வாக்யத்தைக் கேட்டவுடன் தர்ச பூர்ணமாஸ இஷ்டிகளில் உள்ள
ஆஜ்ய பாகங்களின் நினைவு வருகிறது. அவைகள் வேறு கர்மங்கள் அன்று.

5. ஆஜ்ய பாகங்களாகிய அங்கங்கள் தான் உண்டு. ப்ரயாஜம்
முதலான வேறு அங்கங்கள் இல்லை என்று இந்த வாக்யம் காட்டுகிறது.
ஆகையால் இந்த வாக்யம் பரிஸங்கியா விதி என்று. இதுவும் கூடாது.
இந்த விதியில் மூன்று குற்றங்களிருக்கின்றன. வாக்யம் ஆஜ்ய பாகங்களை
நேரே விதிக்கிறது. அதைத் தள்ளிவிடவேண்டும். இது ஒரு குற்றம்.
ப்ரயாஜம் முதலானவைகளை விட்டுவிடுவதைச் சொல்லவில்லை. அதை
யொப்புக் கொள்ளுவது இரண்டாவது குற்றம். அதிதேசத்தாலே வரும்
ப்ரயாஜம் முதலான அங்கங்கள் பாதிக்கப்படுவது மூன்றாவது குற்றம்.

6. இந்த வாக்யம் ப்ரத்யக்ஷமாயிருக்கிறது. அதிதேசத்தாலே அங்
கங்களைக் கொண்டு வருவது அநுமாநத்தாலே. ப்ரத்யக்ஷமான வாக்யம்
ப்ரபலம். ஆகையால் இந்த வாக்யத்தாலே ஆஜ்யபாகங்களும், அநுமாநத்
தாலே வேறு அங்கங்களும் வருகின்றன. இது ஆறாவது பக்ஷம். இதுவும்
கூடாது. நீர் சொன்னபடியானால், ஒவ்வொரு அங்கத்துக்கும் தனித்தனி
அதிதேசம் ஏற்படும். ப்ரயாஜம் முதலான அங்கங்களுக்கு அதிதேச
முண்டு. ஆஜ்ய பாகங்களை அதிதேசம் பண்ணும் வியாபாரம் ப்ரத்யக்ஷ
மான இந்த வாக்யத்தாலே பாதிக்கப்படும். ஆனால் இப்படியில்லை. சொற்
களும் புத்தியும் ஒரு வியாபாரத்தைச் செய்ய ஆரம்பித்துப் பிறகு கொஞ்ச
காலம் வியாபாரம் செய்யாமலிருந்து மறுபடி வியாபாரம் செய்வது என்ப
தில்லை. ஆகையால் அதிதேசம் ஒரே காலத்தில் வேலை செய்கிறது. விட்டு
விட்டுச் செய்யாது. ப்ரயாஜம் முதலான விஷயத்தில் வியாபாரம். ஆஜ்ய
பாக விஷயத்தில் வியாபாரமில்லையென்று சொல்ல முடியாது.

7. கீழே சொன்னபடி அங்கங்கள் விஷயத்தில் ஸங்கோசம் பண்ண
வேண்டாம். அதாவது அதிதேசம் இன்ன அங்கங்களைத்தான் கொண்டு

வரும்; இன்ன அங்கங்களைக்கொண்டு வராது என்று சொல்லவேண்டாம். ஆஜ்ய பாக விஷயத்தில் அதிதேசம் பண்ணும் அநுமானத்துக்கு ஸங்கோசம் பண்ணுவோம். எப்படியென்றால், ப்ரத்யக்ஷமான வாக்யம் ஆஜ்யபாகங்களை விதிக்கிறது. அநுமாநம் அவைகளின் ப்ரகாரத்தை உதவி செய்யும் விதத்தை தெரிவிக்கிறது என்று. உதாரணம்—'பௌரோடாஶம் சதுர்தா கரோதி' என்று ஒரு வாக்யம். புரோடாசத்தை நாலு பாகமாகப் பண்ணுகிறது என்று விதிக்கிறது. "ஆக்நேயம் சதுர்தா கரோதி" என்று இன்னுமொரு வாக்யம். அந்தப் புரோடாசம் அக்னி தேவதையின் புரோடாசம் என்று காட்டுகிறது. அதுபோல், இந்தப் பக்ஷமும் கூடாது. சொன்ன உதாரணத்தில் இரண்டு வாக்யங்களும் ப்ரத்யக்ஷமாயிருக்கின்றன. ஆகையால் அவைகள் ஒரேமாதிரி. அங்கே உபஸம்ஹாரம் என்பதை ஒப்புக்கொண்டோம். இங்கே விதி வாக்யம் ஒன்றுதான் ப்ரத்யக்ஷமாயிருக்கிறது. அநுமான வாக்யம் ப்ரத்யக்ஷமன்று. நாம் அதைக் கல்பிக்கிறோம். ஆகையால் அவைகள் ஒரேமாதிரி அன்று. சொன்னபடி உபஸம்ஹாரம் சரியானது அன்று. விதி வாக்யத்தாலேயே ஆஜ்யபாகங்கள் ஏற்பட்டால், அநுமான வாக்யத்தை ஏன் கல்பிக்கவேண்டும்.

ஆகையால் க்ருஹமேதீயம் அபூர்வமான கர்மம் என்று தீர்மானம் பண்ணவேண்டும். அதாவது அதிதேசத்தாலே அங்கங்களைத் தேடுகிறதில்லை. ஆனால் அங்கங்கள் வேண்டாமோ என்றால், பதில்—ப்ரத்யக்ஷமான வாக்யம் சில அங்கங்களை விதித்து அங்கங்கள் விஷயமான தேட்டத்தைப் போக்குகிறது.

2. ஒரு கேள்வி-ஏன் விதிக்கப்பட்ட அங்கங்களையும் அதிதேசத்தால் வருகிறவைகளையும் சேர்த்துக்கொள்ளக்கூடாது—என்று. இதற்குப் பதில் 253-வது பாராவில் சொல்லியிருக்கிறது. அதைப் பார்க்க.

3. இந்த விசாரத்தால் ஒரு நியாயம் ஏற்படுகிறது—எந்த இடத்தில் ப்ரகிருதியிலுள்ள அங்கமானது குணமில்லாமல் விதிக்கப்படுகிறதோ, அந்த இடத்தில் கர்மமானது அபூர்வம். அக்னீஷோமீய பசுயாகத்தில் ப்ரயாஜங்கள் பதினொன்று என்று விதிக்கப்படுகின்றன. இங்கே ஸங்க்யையாகிய குணம் விதிக்கப்படுகிறது. அப்படி க்ருஹமேதீயத்தின் விஷயத்தில் ஒரு குணமும் விதிக்கப்படவில்லை. (அதி-97 சா-761)

268. க்ருஹமேதீயத்தின் விஷயத்தில் இன்னுமொரு ஸந்தேஹம். ஆஜ்ய பாகங்களை விதித்ததனாலேயே அங்க விஷயமான தேட்டம்போய் விட்டதே. ஸ்விஷ்டக்ருத் முதலான வேறு அங்கங்கள் வேண்டியதில்லையே என்று.

பதில்—அக்நயே ஸ்விஷ்டக்ருதே ஸமவத்யதி, "இடாமுபஹ்வயதே" என்று இரண்டு அங்கங்களை ஆஜ்ய பாகங்களைப் போலவே விதித்திருப்ப

தால், அவைகளும் வேண்டியது தான். எவ்வளவு சொல்லியிருக்கிறதோ அவ்வளவையும் செய்யவேண்டும். (அதி-10)

269. கீழே சொன்ன நியாயம் உபஸத் என்கிற கர்மத்தின் விஷயத்திலும் வருகிறது. அங்கே "ஸ்ருவேண ஆகாரமாகாரயதி" என்று ப்ரக்ருதியிலுள்ள ஆகாரம் என்கிற அங்கம், குணத்தை விதிக்காமல் விதிக்கப்படுகிறது.

இங்கே ஒரு கேள்வி—இது ப்ரதிப்ரஸவமாயிருக்கக் கூடாதோ? இதை ஒரு வேளை விட்டுவிடுவார்களோ என்று வேதம் ஸந்தேஹப்பட்டு சொல்லுகிறது—நாந்தராஹுதிம் வ்யவதாய ஜுஹுயாத், யதந்தராஹுதிம் வ்யவதாய ஜுஹுயாத், அந்யந்முகம் குர்யாத் என்று. இதன் பொருள்—முன்னாலே வேறு ஹோமத்தைச் செய்யாதே; முன்னால் வேறு ஹோமத்தைச் செய்தால் யஜ்ஞத்துக்கு வேறு முகத்தை செய்ததாக ஆகிவிடும்—என்பது. ஆகையால் ஆகாரஹோமத்தை விட்டு விடக்கூடாது என்றும், அதைச் செய்யவேண்டும் என்று விதி—என்று.

பதில்—அதிதேசத்தால் ஆகாரஹோமம் வருவதாயிருக்க, அது வராது என்று எண்ணுவதற்கு என்ன காரணமிருக்கிறது? ஒரு காரணமில்லாததால் ப்ரதிப்ரஸவம் என்பது கூடாது. சொன்ன வாக்யம் அர்த்தவாதம்.

இன்னுமொரு கேள்வி—அப்ரயாஜாஸ்தா அநூயாஜா:" என்று ப்ரயாஜங்களும், அநூயாஜங்களும் இல்லையென்பது சொல்லவில்லையா— என்று. அது அநுவாதம். ஆக்யாதமில்லையே (அதி-14)

270. இப்படியே அவப்ருதம் என்னும் கர்மத்தின் விஷயத்திலும். அங்கே "அப்ஸுமந்தாவாஜ்யபாகௌ யஜதி" என்கிற வாக்யத்தால் ஆஜ்ய பாகங்கள் விதிக்கப்படுவதால், இது அபூர்வமான கர்மம்.

2. கேள்வி—"அப்ஸுமந்தௌ" என்கிற சொல்லாலே அப்ஸு என்பதுடன் கூடின இரண்டு மந்திரங்கள் விதிக்கப்படுகின்றன. இது குணம். ஆகையால் எப்படி அபூர்வமான கர்மம் என்று. பதில் லிங்கம் க்ரமம் என்கிற பிரமாணங்களாலே மந்திரங்கள் தாமே வரும். அவைகளை விதிக்க வேண்டியதில்லை. (அதி-15)

271. வாஜபேய விஷயத்தில் "காதிரோ யூபோ பவதி" என்று ஒரு வாக்யம். காதிரமரத்தினால் செய்யப்பட்டது யூபம் என்று அதின் பொருள். ப்ரகிருதி யாகத்தில் காதிரத்தையும் பில்வத்தையும் சொல்லியிருக்கிறது. எதை வேண்டுமோ அதை வைத்துக்கொள்ளலாம். விக்ருதியான வாஜபேயத்தில் சொன்ன வாக்யத்துக்கு ப்ரயோஜநம் வேண்டுமாகையால் பில்வ மரத்தைத் தள்ளி காதிரத்தையே கட்டாயம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதிக்கப்படுகிறது இது. நியமவிதி (அதி-16)

ஏழாவது பாதம் முற்றிற்று.

ஸ்ரீ:

வேத வைபவம்.

[வித்வான் ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸதாதாசார்யர், திருவாதி]

ஆஸ்திகர்களுக்கு ஓர் விக்ஞாபனம். பிராம்மணர்களுக்கு அவசியமாகவும், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிகவும் அவசியமாகவும், அத்யயனம் செய்யவேண்டிய வேதத்தின் பெருமையைப் பற்றி எனக்குத் தெரிந்த வரையில் சுருக்கமாக விக்ஞாபனம் செய்கிறேன். இதிலிருக்கும் குற்றங்களை க்ஷமிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவிஷ்ணுபுராணம் 'சதுர்பி⁴ஶ்ச சதுர்பி⁴ஶ்ச த்³வாப்⁴யாம் பஞ்சபி⁴ரேவ ச । ஹூயதே ச புநர்த்³வாப்⁴யாம் ஸ நோ விஷ்ணு: ப்ரஸீத³து ॥

நான்கு எழுத்து, நான்கு எழுத்து, இரண்டு எழுத்து, ஐந்து எழுத்து, இரண்டு எழுத்துக்களுள்ள மந்த்ரங்களால் ஹோமம் செய்யப்படும் விஷ்ணு நம்மிடத்தில் கிருபை செய்யட்டும்.

தைத்திரீய ஸம்ஹிதை முதற்காண்டம், ஆருவது பிரச்னம், பதினோராவது அநுவாகம் யோ வை ஸப்தத³ஶம் ப்ரஜாபதிம் யஜ்ஞமந்வாயத்தம் வேத³ ப்ரதி யஜ்ஞேந திஷ்ட²தி ந யஜ்ஞாத்³ ப்⁴ரம்ஶத ஆ ஶ்ராவயேதி சதுரக்ஷரமஸ்து ஶ்ரௌஷடி³தி சதுரக்ஷரம் யஜேதி த்³வ்யக்ஷரம் யே யஜாமஹ இதி பஞ்சாக்ஷரம் த்³வ்யக்ஷரோ வஷட்கார ஏஷ வை ஸப்தத³ஶ: ப்ரஜாபதிர்யஜ்ஞமந்வாயத்தோ ய ஏவம் வேத³ ப்ரதி யஜ்ஞேந திஷ்ட²தி ந யஜ்ஞாத்³ ப்⁴ரம்ஶதே ॥ ப்ரத்யக்ஷேணாநுமித்யா வா யஸ்தூபாயோ ந பு³த்⁴யதே । ஏநம் விதி³ந்தி வேதே³ந தஸ்மாத்³வேத³ஸ்ய வேத³தா ॥ ப்ரத்யக்ஷம், அனுமானம் என்கிற பிரமாணங்களால் அறிய முடியாத பலோபாயங்களை தெரிவிப்பதால் வேதத்துக்கு வேதம் என்கிற பெயர் ஏற்பட்டது. இம்மாதிரி ஈசுவரனும் ப்ரத்யக்ஷம், அனுமானம் என்கிற பிரமாணங்களால் அறியப்படுகிறதில்லை. சாஸ்திரம் ஒன்றே அவனை யறிவதற்கு சாதனம். 'ந மாம்ஸசக்ஷுரபி⁴வீக்ஷதே தம் –

ந ஸந்த்³ருஶே திஷ்ட²தி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் ।' மாம்ஸமயமான கண்ணுள்ளவன் பகவானைப் பார்ப்பதில்லை. பகவானுடைய ரூபம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அதனால் ஒருவனும் பகவானைப் பார்ப்பதில்லை. ப்ரத்யக்ஷ விஷயத்திலேயே அனுமானம் வருவதால், ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமாகாத ஈசுவரன் விஷயத்தில் அனுமானம் வருவதற்கில்லை. க்ஷித்யங்குராதி³கம் [illegible] கர்த்ருவிஶேஷபூர்வகம் கார்யத்வாத் க⁴டவத் । இம்மாதிரி அனுமானம் சொன்னாலும், தோண்டி முதலிய காரிய வஸ்துக்களுக்கு ஸ்வல்ப அறிவும், ஸ்வல்ப சக்தியுமுள்ள குயவன் முதலியவர்கள் கர்த்தாவாகக் காணப்படுவதால் அனுமானத்தால் ஸித்திக்கும் ஈசுவரன் அவ்விதமே ஸித்திப்பன். விசித்திரமான காரியங்களைக்கொண்டு மிகுந்த சக்தி, ஞானம் முதலிய குணங்களமைந்த கர்த்தாவை ஊகிக்க முடியாது. விசுவாமித்திரர் முதலியோரைப் போல் அதிக புண்யமுள்ள ஒரு ஜீவனே கர்த்தாவாக ஏற்படும். பின்னும் உலகத்தில் தோண்டி முதலிய பதார்த்தங்கள் வெவ்வேறு காலங்களில் அநேகம் பேர்களால் படைக்கப்படுவதால், உலகங்களும் வெவ்வேறு காலங்களில் வெகு பேர்களால் படைக்கப்பட்டதென்று ஏற்படும். சாஸ்திரத்தினால் தான் சக்தி ஞானம் முதலிய குணங்கள் நிறைந்த ஒரு ஈசுவரனே உலகங்களை ஒரே காலத்தில் படைத்தான் என்று ஸித்திக்கிறது. இதைப் பிரும்ம ஸூத்திரக்காரர் 'ஶாஸ்த்ரயோநித்வாத்' என்கிற ஸூத்ரத்தால் நிரூபித்திருக்கிறார். எல்லா வேதங்களாலும் நானே (பகவானே) அறியத் தக்கவன்—கீதை—'வேதை³ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்³ய:' பகவானுக்கு நான்கு வேதங்கள் முதலியன மூச்சுக்காற்று. ஸுபா³லோபநிஷத் 'தஸ்யைதஸ்ய மஹதோ பூ⁴தஸ்ய நிஶ்வஸிதமேதத்³ யத்³ருக்³வேதோ³ யஜுர்வேத³ஸ்ஸாமவேதோ³(அ)த²ர்வாங்கி³ரஸ இத்யாதி³—ஒருவன் ஜீவித்திருப்பதை மூச்சுக்காற்றைக்கொண்டே எப்படி அறிகிறோமோ அது போல் பகவானை யறிவதற்கு வேதமே சிறந்த ஸாதனமென்றும் வேதமில்லாவிடில் பகவானை யறியமுடியாதென்றும் ஏற்படுகிறது. இவ்வர்த்தத்தை விஷ்ணு ஸகஸ்ரநாமத்தில் 'மஹாஶ்வஸநோ நிஶ்வஸிதம் யஸ்ய வேதா³ஸ்ஸந்தி தா:' என்று வியாக்யானம் செய்யப்பட்ட மஹாஶ்வஸந: என்ற திருநாமமும் விளக்கிக் காட்டுகிறது. பிரஜாபதி வேதத்தினால் பிருதிவி முதலிய பாவ பதார்த்தங்களையும், முயல் கொம்பு முதலிய அபாவ பதார்த்தங்களையும் ஏற்படுத்

தினர். தைத்திரீய பிராம்மணம், இரண்டாவது அஷ்டகம், ஆறாவது பிரச்னம்.

'வேதேந நாமரூபே வ்யாகரோத் ஸதாஸதீ ப்ரஜாபதி:

பிரஜாபதி பூ: என்று சொல்லி பூமியையும், புவ: என்று சொல்லி அந்தரிக்ஷத்தையும் ஸுவ: என்று சொல்லி ஸ்வர்க்கத்தையும் சிருஷ்டித்தார். ஷை அஷ்டகம் இரண்டாவது பிரச்னம்

'ஸ பூரிதி வ்யாஹரத் ஸ பூமிமஸ்ருஜத ஸ புவ இதி வ்யாஹரத் ஸோந்தரிக்ஷமஸ்ருஜத ஸ ஸுவரிதி வ்யாஹரத் ஸ திவமஸ்ருஜத' ப்ரஜாபதி சப்த விசேஷங்களால் தேவாதிகளை ஸ்ருஷ்டித்தார்—ச்ருதி. ஸ ஏஷ ப்ரஜாபதிர்தேவாநஸ்ருஜதாஸுராந் பித்ரூந் மநுஷ்யாநிதி விஜ்ஞாயதே வஸிஷ்டாதீந் ப்ரஹ்மா நாமரூபாணி ஸ்ருஷ்ட்வா ஶாஸ்த்ரமேதத் ஸர்வா: ப்ரஜா:'

தேவதை முதலியோர்களுடைய பெயர் உருவம் தொழில் இவைகளை வேதத்தைக் கொண்டே ஏற்படுத்தினர். விஷ்ணு புராணம் 'நாமரூபஞ்ச பூதாநாம் க்ருத்யாநாஞ்ச ப்ரபஞ்சநம் । வேதசப்தேப்ய ஏவாதௌ தேவாதீநாம் சகார ஸ: ॥ பிரும்மத்தினால் நித்தியமாயும் ச்லாக்கியமாயுமிருக்கும் படியான வேதரூபமான வாக்கு வெளிப்படுத்தப்பட்டது. அதிலிருந்து சகல பதார்த்தங்களும் உண்டாயின. 'அநாதிநிதநா ஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா । ஆதௌ வேதமயீ திவ்யா யத: ஸர்வா: ப்ரவ்ருத்தய: ॥' எல்லோருக்கும் தனித்தனியாகப் பெயர், தொழில் உருவம், இவைகளை வேத சப்தங்களிலிருந்து ஏற்படுத்தினர். மனுஸ்மிருதி 'ஸர்வேஷாந்து ஸ நாமாநி கர்மாணி ச ப்ருதக் ப்ருதக் । வேதசப்தேப்ய ஏவாதௌ ப்ருதக் ஸம்ஸ்தாஶ்ச நிர்மமே ॥' வேதங்கள் எந்த பகவானுக்கு மூச்சுக் காற்றோ, எந்த பகவான் வேதங்களிலிருந்து எல்லா உலகத்தையும் படைத்தாரோ, அந்த வித்யா குருவான மஹேச்வரரை நமஸ்கரிக்கிறேன். வேத பாஷ்யகாரரான ஸாயனர், ஒவ்வொரு பிரச்ன வ்யாக்யான ஆரம்பத்தில், 'யஸ்ய நி:ஶ்வஸிதம் வேதா யோ வேதேப்யோऽகிலம் ஜகத் । நிர்மமே தமஹம் வந்தே வித்யாதீர்த்தமஹேஶ்வரம் ॥' வேதம் ஒருவராலும் செய்யப்படாதது ஆகையால் புருஷனுடைய தோஷமான வேறு வஸ்துவை வேறு வஸ்துவாக அறிதல் என்கிற பிரமத்திற்கும் பிறரை ஏமாற்றுவதான விப்ரலம்பம் என்கிற தோஷத்திற்கும் இதில் இடமில்லை. வேத: பௌருஷேய: வாக்யஸமூஹத்வாத் பாரதாதிவத் மஹா பாரதாதிகள் போல் அனேக வாக்யங்கள்உள்ளதா யிருப்பதால் வேதம் புருஷனால் செய்யப்பட்டது என்று அனுமானம் செய்வது சரியல்ல. எந்த கிரந்தம் புருஷனால் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தக் கிரந்தம் இன்ன கர்த்தாவினால் செய்யப்பட்டிருக்கிறது என்கிற நினைவு அந்த கிரந்தத்தைப்படிக்கும்போது கூட வருகிறது. மஹாபாரதம் முதலிய கிரந்தங்களை வாசிக்கும்போது ஷை கிரந்தங்களுக்கு வேத வியாஸர் முதலியோர் கர்த்தா என்று, 'வேதவ்யாஸேந மஹர்ஷிணா ப்ரணீதாயாம் ஶதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம்' இம்மாதிரி சொற்களிலிருந்து நினைவுக்கு வருகிறது. வேதத்தை நாம் அத்யயனம் செய்கிறோம். இதற்குக் கர்த்தா இன்னார் என்பதைத் தெரிவிக்கும் வாக்கியம் கூட இல்லாமையால் இதற்குக் கர்த்தா இன்னவரென்று இதுவரையில் நமக்குத் தெரியவில்லை. நையாயிகர்களான கௌதமர் முதலியோரின் கர்த்தாவின் நினைவு 'அநாதிநிதநா ஹ்யேஷா வாக்' இது முதலிய ஸ்ம்ருதிகளின் வாக்கியங்களுக்கு விருத்தமாயிருப்பதால், 'உதயேஷாணாம் வசனாத்:' என்கிற ந்யாயத்தால் ஸாங்கிய ஸ்மிருதிபோல் அனாதரிக்க வேண்டும். 'தஸ்மாதேத வாநாத் ருசோவேதா அஜாயந்த' என்று வேதங்களின் உற்பத்தியைச் சொல்லும் வாக்கியத்திற்கு ஈச்வரனிடமிருந்து வேதங்கள் வெளியாயின என்று, ஈச்வரன் உற்பத்தியைத் தெரிவிக்கும் வாக்கியத்தில்போல் தாத்பர்யம் கொள்ளவேண்டும், வேதம் ஒன்றே ஸ்வதந்திரப் பிரமாணம். மற்ற கிரந்தங்கள் அதைப் பின் பற்றுவதனாலேயே பிரமாணங்கள் ஆகின்றன. எவ்விடத்தில் ஸ்மிருதிக்கு பிரத்யக்ஷமான சுருதி கிடைக்கவில்லையோ அவ்விடத்தில் சுருதியை ஊகித்து ஷை ஸ்மிருதி பிரமாணம் ஆகிறது எவ்விடத்தில் ஆசாரத்திற்கு மூலமான ஸ்மிருதி கிடைக்கவில்லையோ அவ்விடத்தில் ஸ்மிருதியை அனுமானம் செய்து, அதன் மூலமாக சுருதியை அனுமானம் செய்து ஷை ஆசாரம் பிரமாணம் ஆகிறது.'ஆசாராத் ஸ்ம்ருதிர் ஜ்ஞாயதே ஸ்ம்ருதேஶ்ச ஶ்ருதிகல்பநம்' வேதம் அறியாதவன் மனதிற்கு பிரம்ம ஸ்வரூபம் எட்டாது. காடகம் 3-வது பிரச்னம், 'நாவேதவிந்மநுதே தம் ப்ருஹந்தம்' ப்ருமயஞ்ஞம் செய்வது தபஸ் செய்வதேதைத்

திரியாரண்யகம் -வது ப்ரச்னம் [illegible]—வேத அத்யயனம் செய்வது சொல்லிவைப்பது இவைகளே புருஷார்த்தங்களுக்கு ஸாதனம், இவைகளே தபஸ் என்று ரகஸ்யார்த்த மறிந்த மௌத்கல்ய நாகர் மதம். உபநிஷத் முதல் ப்ரச்னம், '[illegible] வேதி நாகோ [illegible]' நானே (பகவானே) வேதம் அறிந்தவன். கீதை '[illegible]' விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலும் "வேத வித்" "வேதாங்க" "சதுர் வேத வித்" என்கிற திருநாமங்கள் அமைந்திருக்கின்றன. வேதத்தைக் காட்டிலும் வேறு உத்க்ருஷ்ட சாஸ்திரம் இல்லை என்று கை தூக்கி மும்முறை சத்தியமாக சொல்லப்படுகிறது. ஸ்ரீ வியாஸர் 'ஸத்யம் ஸத்யம் [illegible] வேதாச்சாஸ்த்ரம் பரம் நாஸ்தி' தலை சிரைப்பினால் ஒருவன் விருத்தனாகமாட்டான் எவன் யுவாவா யிருந்தும் அத்யயனம் செய்தவனோ அவனையே தேவதைகள் விருத்தனாக அறிகிறார்கள். வேதரூபமான சாஸ்த்திரம் அறிந்தவன் ஸேனையின் தலைவனாயிருப்பதற்கும் ராஜாவாயிருப்பதற்கும் சிக்ஷிப்பதற்கும் எல்லா உலகங்களுக்கும் அதிபதியாயிருப்பதற்கும் உரியவன்—தினந்தோறும் தன் சக்தியை அனுஸரித்து வேதாத்யயனம் செய்வது, ஐந்து மஹாயக்ஞங்களை அனுஷ்டித்தல், பொறுமை இவைகள் பஞ்ச மஹா பாதகங்களினால் உண்டாகும் பாபங்களையும் போக்குகின்றன. காலந்தவறாது சோம்பலில்லாமல் வேதத்தையே அப்பசிக்கவேண்டும். அதைக் காட்டிலும் சிறந்ததும் ஒப்பற்றதுமான தர்மம் வேறு இல்லை.

(தொடரும்)

கண்ண னங்குக் கருணைக் கடைக்கணி
னண்ணி மன்னு றெனுந்திரு நாமமே
பண்ணு மோர பயன்றவம் பண்புறு
மென்ன றம்பப னுபங் கிலகுமால். 3

பாலி ருங்கட லீத்த பரன்றனைச்
சாலி ருஞ்சர சாபவண் சாந்ததென்
றேல பாருமி யம்பவந் தீம்புனன்
மேலு றந்தட மிக்கதொன் றண்டரோ. 4

வேத மாதி விரிந்த கலைபெலா
மோதி யங்கை யொழுகுறும் வேதிய
ரேத மின்றொரு காலா யிரவர்கண்
மாத யத்து மணந்துறை கிற்பரால். 5

அன்ன பாவனர் தம்முள ருந்தவ
மன்னு சொட்டைக் குலத்தினுள் வந்தவர்
மின்னு மீச்சர பட்டரெ னும்பெயர்
துன்னி போருந் துபவர் தோன்றினர். 6

இத்தி ருத்தவர்க் கேய்ந்த குமாரா
பொத்த நாதமு னிகளு தித்தனர்
பத்தி யார்படை மன்னவன் பத்தரு
ளத்தி மாமுக னஞ்சமெ னவரோ. 7

மதுதி யாழ்கர மாமுனி யன்னவர்
கிளா றஞ்சவை கேளிசை கேட்டலும்
மிகவு ராணி மினிர்திரு மேனிவெண்
முகிலை மானமு முதும்வெ ளுத்தனர். 8

ஆய ருக்கரு வாய்ந்தவ மயமே
மாய வன்கடைக் கண்செயு மாட்சியாற்
சேய பல்கலை யாவுஞ்செ றிந்தனர்
தூய நாமெத்த லங்கின ரென்பவே. 9

தக்க காலபி லில்லறந் தாங்குறற்
கொக்க கன்னியை கேடியு றைவையின்
மிக்க லங்குவம் பேரந் தாப்ச்சியில்
வெக்க லைக்குமி றைக்குனர் கண்டரோ. 10

இன்றை விந்தப் பாடையெ னும்பெயர்
மன்னு தந்திருக் கன்னிகை மாமணி
தன்னை வேதநெ றிப்படி தாரைவார்த்
தன்ன மாதவர்க் காங்களித் திட்டனர்.

ஆட கத்தின மர்ந்தொளிர் மாமணிப்
பாடு பெற்றவர் பண்புறு மில்லற
நாட கத்தக னிவியந் தேன்றுற
மாடி மிக்கம கிழ்ந்துறை காலையில்.

பூங்க ரும்புகு ழைந்தொரு முத்துயிர்த்
தாங்க ரவிந்தப் பாவையு மங்கருத்
தாங்கி வையந்த ழைப்புறத் தக்கவோ
ரோங்கு புத்திரன் றன்னையு யிர்த்தனள்.

இனிய யோகிபு தல்வனு மீச்சுர
முனிக ளென்றமொ ழிந்துதி ருப்பெயர்
நனிவ ளர்ந்துவ ரத்தரு நாள்களிற்
புனித வேதமு தலபு கட்டியே.

கற்ற நாவலர் கண்டுக ளிப்புறற்
குற்ற வாறுவு ஞற்றுபு யோகமுஞ்
சொற்ற வண்ணம் வளர்ந்துசொ லிப்புற
முற்று ஞானமு திரவி ழைத்தனர்.

நாடு நாடுறு நாதமு னிகளும்
பீடு யோகப்பெ ருந்துறை யிவ்வணங்
கூடி நன்கு லவலி லோர்தின
நாடி யுள்ளமொ ருநெறி நன்கரோ.

பெண்டு பிள்ளைக ளோடுபி றங்கிடுங்
கொண்டல் வண்ணனி லயங்கு றுகியவ்
வண்டர் நாயக னம்மலர்த் தாண்முடி
மண்டு மாறுவ ணங்கியெ ழுந்தரோ.

தேவ தேவதி ருவடி நம்புவோ
ரேவ ரேனுமி ருஞ்சுக நண்ணுமா
றேவ லின்றியு வந்தரு ளுன்றிருக்
கோவில் கொள்ளும்வ டமது ரைமுதல்.

ஆன திவ்விய தேசம வைதொறு
நான டைந்துவ ளருமுன் னற்பதத்
தேன மர்ந்ததி ருமலர் கைதொழு
வான யந்தருள் வாயென வாழ்த்தினர். 19

அந்த மாயன ருச்சகன் மூலமா
யெந்த மூர்த்தியி லருந்த லமெலாஞ்
சிந்தை யின்படி சென்றுதி ரும்புகென்
றிந்து வென்னக்கு ளிர்ந்திசைத் திட்டனர். 20

கடைக்க ணிப்பிறை யும்மவர் கைக்கொடு
புடைப்பு தல்வனும் பன்னியும் போதரப்
படப்பை யார்பல நாடும்ப டர்ந்துசென்
றிடைப்ப டுந்தல மெங்குந்தொ ழுதனர். 21

மதுரை சாளக்கி ராமமே வைகுந்தம்
முதுவ யோத்திது வரைமு தலிய
பதிக ளியாவும் படர்ந்தவன் பாவன
மதுபொ ருந்தும்பு னிதநீ ராடியே. 22

அந்த வந்தத லத்தொளி ரெம்பிரான்
றந்த சேவையு ரிந்துத ளிர்த்துளஞ்
சிந்து தீவினைச் செம்புனற் காளிந்தி
யுந்தி யின்கரை யோரம ணுகினர். 23

ஆங்க ரும்புரி கோவர்த்த னமென
வெங்கு மேத்துவ தின்னிடை வீற்றிடுஞ்
செங்கண் மாலெழு னைத்துறை வன்பத
திங்க ரச்செயல் கேண்மையிற் செய்தரோ. 24

பெண்டு பிள்ளைக ளோடுபெ ருமிதங்
கொண்டு வாழ்வுறுங் கோதறும் போதினில்
விண்டு வீரநா ராயண புரத்தனற்
றொண்டர் தம்மைத்து றந்துத ரிக்கலான். 25

நள்ளி ருட்கன வின்னிடை நண்ணிநீ
பொள்ளெ னப்புறப் பட்டுநம் பொன்னெயி
லுள்ள கோயிலு றைதியெ னவவர்
விள்ள வெந்துயில் கண்விழித் திட்டனர். 26

இந்தச் செய்தியெ முனைத்து றைவனுக்
கந்த யோகிய றிக்கைசெ பவவன்
சிந்தை யுண்மகிழ்ந் தின்னருள் செய்துபோய்
வந்தி டென்றுவ ழங்கிய ருளினான். 27

வேறு.

கொண்டா ரந்தக் கோதி லளியும் விடைதானும்
விண்டா ரந்த வெம்பதி வாரா ணசிதன்னைக்
கண்டார் கண்ட பின்ன ரகன்றூர் கடிதேகித்
தண்டா வின்சீர் தங்குச கந்நா தமுநண்ணி. 28

அந்தச் சகந்நா தன்னடி யிணையில் முடிசாய்த்துப்
பந்தப் பாசம் பற்றற லாகென் றிசைத்தேத்திச்
சிந்தத் தீவினைத் திரள கோபி லஞ்சார்ந்து
நந்தப் பொன்ன னாகம் வகிர்ந்த நரசிங்கன். 29

செம்பொற் பாதஞ் சிந்தையின் வீழ்ந்து தொழுதேத்தி
யும்பர்க் கேயு மொண்முடி வேங்க டமுநண்ணி
நம்பற் கேயு நாரி யுருவா மதைமுன்ன
மம்பொற் கைக ளஞ்சலி யாகத் தொழுதப்பால். 30

ஏறு மீதே யெம்பெரு மான்பொன் முடியின்றும்
வீறூர் கோபு ரந்தனை நோக்கா விழிநின்று
மாறா யானந் தக்கணீர் வார வணங்கிக்கொண்
டாறா வன்பிற் சாமி யபத்தை யணுகுற்றார். 31

உள்ளுந் தூய்மை யொன்ற வுளுற்று மதிளூடிக்
கள்ளஞ் செய்யும் வெண்ணெயெ னத்தான் கனைகாளு
முன்னுந் தொண்ட ரொன்றசெ டியுர் திருமார்பன்
கொள்ளுங் கூரா னந்த தரிசன முங்கொள்ளா. 32

அந்தச் சீனி வாசன் விடையு மருளுங்கொண்
டெந்தத் தேவ ரீட்டமு நாடு மிணையில்லாச்
சந்தச் சோளங் கபுர மென்றல மாங்கெய்தி
முந்தச் சிங்கன் றன்னை வணங்கி முதமுற்றார். 33

பின்னே முத்தி யின்னக ரேழிற் பெருகுற்ற
பொன்னேர் மாடக் கச்சி யணைந்து பொருவற்ற
மின்னேர் பெருந் தேவியெ மன்னி மிடைதந்த
தன்னே ரில்லா வத்திகி ரியின் நம்பையார்ந்த. 34

எண்ணும் வரங்க ளெண்ணி யளிக்கும் வரதன்பூ
நண்ணும் பாத நண்ணிவ ணங்கி நடந்தேபின்
கண்ணும் வேத வேதிய ரீட்டங் களின்கொள்ளும்
விண்ணும் வீழு மயிர்ந்தை நகரந் தனைமேவி. 35

செங்க மலவல் லியெ மன்னை செறிதந்த
துங்கன் றேவ நாயகன் றூய மலர்ப்பாதம்
பொங்கிக் கண்டும் போற்றியெ ழுந்தே புகழ்பெண்ணைப்
புங்கத் தீரக் கோவலூர் தன்னிற் புகுந்தன்றே. 36

ஆய னார்த மம்மலர்ப் பாதந் தொழுதேத்தித்
தாயும் பின்னை தாமுடன் போதப் படர்ந்தேகி
யேயும் பொன்னி யின்னிடை போரா ரங்கம்புக்
காயுஞ் சேடப் பாயல ரங்க னடிகாணா. 37

மற்றும் மாகத் தேவரு தென்னம் பொழில்சூழுங்
குற்றங் குன்றாந் தண்குடந் தைக்கண் மிளிர்நாகப்
பொற்றன் பாய லின்றுயில் கொள்ளும் புனிதன்றா
னுற்றங் குள்ளம் பொங்கிவ ணங்கி யுடனேகி. 38

தம்மூர் நண்ணித் தம்பெரு மானைத் தொழுதேத்த
வம்மூர் மன்னார் வேறொரு தேவ மடையுந்தன்
செம்மூர் மைந்தன் சோம கிழ்ந்த வனையென்னக்
கம்மூர் மேக வண்ணனுங் கண்டு களித்திட்டான். 39

வேறு.

கண்டிருகட் கடைநின்று மருளூற்றுங்
காகாபஃ தறிந்து நின்ற
நண்டிருவின் னறிவாளர் நவலரிய
நாதமுனி யோக நாதா
கொண்டவெழிற் பத்தியையுஞ் சிரத்தையையும்
கூருளுன் குறித்து நாமித்
திண்டிறலா ரியர்வழியே திருமன்னன்
பதமடைவே மென்று தேறி. 40

நிரடினா பவாடியி லுச்சிரயித்
திருந்தனர்க ளவரு மாங்கே
மருமாலைக் கயிங்கரிய முதலாய
விழைத்தருளன் மறையின் வண்ணர்.

திருமாலே பரமென்று தெருட்டியுறை
கையிற்றிரு நகரி னின்று
மிருமாவை யவர்கிலக்க வெழுந்தனர்க
ளத்தலத்திற் கொருநா ளென்ப.

வந்தவர்கண் மன்னாரைத் தொழுதுகொடு
வருளாப ரணன்முன் சொன்ன
செந்தமிழோ ராயிரத்துட் சிறுமா
ராவமுதே யென்று செப்புஞ்
சந்தமுறும் வாய்மொழியைச் சாற்றியவன்
குணகணத்துட் பயிலக் காணா
விந்தையொடு பெருநகையும் விம்மியவ
ரிவ்வண்ணந் துணிய லானார்.

காராருங் கண்ணபிரான் றனைபோகத்
தானுகர்ந்து களிக்கு மாற்றிற்
சீராரு மித்திருவாய் மொழியானே
பருகுவது சிறப்பா மென்றே
போராவவ் வுத்தமரைத் தாள்பணிந்து
கொண்டதனை யுரைத்து நெஞ்ச
நீராக நெகிழ்ந்தவகை நீனவவர்
மீண்டவரை நிகழ்த்த லானார்.

பாகவத சிரோமணிகா ளிப்பத்தும்
பராங்குசனா ரருளிச் செய்த
மோகமுறு மாயிரத்துட் கண்ணபிரா
னவதரிப்பை யுணர்த்தின் முன்னி
நாகசேர் திருக்குடந்தை யமுதனையே
நாடியுரைத் திட்ட தன்றே
போகமிது மற்றவையும் புகன்றருள்வீ
ரெனப்பணியப் புகல்வ ரன்னோர்.

முனிநாதா யாமுதித்த தலநகரி
யென்னுமிதை மொழிவா ராங்கே
தனியாரு மின்றவனி தலங்கடோறும்
படர்ந்துதிருக் குடந்தை சார்ந்தே

களிபாரா வமுதினைக்கண் டடிபணியுங்
காலைபந்தத் தலத்தின் மேலோர்
நளிபாழிற் கலந்ததிரு வாய்மொழியை
நவிற்றிடயாங் களிப்பின் மாந்தி.

மற்றவரைக் குறைபிரப்ப மகிழ்ந்தவரில்
விரைந்து மருளி னாரென்
றற்றவரைத் திடவர்க்கு போமெயுள
மகிழ்ந்துன்னவ் பிரசா தங்கள்
மற்றுதவி விடுத்தரிய மன்னாரின்
விடைகொண்டு குடந்தை மன்னிப்
பெற்றதிரு வமுதனையே பேயெய்த
வமுதனைத்தாள் பணிந்து போற்றி.

அங்குள்ள வடியாரை யாயிரமு
மருள்கவென நயந்து கேட்பப்
பொங்குள்ளத் துடையவர்க ளிப்பத்தும்
போற்றுதமற் றறியே மென்ன
வெங்குள்ள வேலவையென் றேங்கியவ
ரின்றெழுந்து நகரி யண்ணிக்
கொங்குள்ள வகுளமலர்த் தாரானைப்
பொலிந்துநின்ற பானைக் கூடி.

வந்தனையும்வழிபாடுஞ் செய்தந்த
வளநகரு ளுறையு மான்றோ
ரந்தமுறுந் தாள்பணிந்த வாயிரமு
மளித்தருள்கென் றறைய வன்னோர்
தந்திரனிற் பராங்குசரென் றொருதாசர்
தடங்குருகிற் றடியே மிங்குச்
செந்திருவாய் மொழியென்ப தொன்றறியே
மிருந்ததெனச் செவியுற் றுள்ளோம்.

மறைபுருவா யிபுதமி முனைமறைத்து
மண்டலத்திற் சாந்த போது
மறைபவரு மவைமொழிந்த வாழ்வாரை
மதுரகவி பதிந்து போற்றும்

180135
சென்னை 600 008.

றையகலுங் கண்ணினுண்சி றுத்தாம்பு
ழறாதுமக் கவின்கொள் பாட
லை திரே வீராரு யிரந்தரநுங்
ண்முகப்பி ளுழ்வா ராவார்.

என்றதனை யுபதேசித் திடவிவரு
மேன்றுபுளி யெழிலார் நீழ
லொன்றியரு நேமமுட னவ்வண்ண
நவின்றபடி யுறைய மாயோன்
மன்றலுறு மலர்மாதி னிவ்வமயம்
வாய்த்ததெனை மகிழ்ந்தாழ் வாரை
யின்றெழுந்து நாதமுனிக் கீந்துவர
மீள்கவென விசைத்தா னன்றே.

நம்மாழ்வார் நனிமகிழ்ந்து காரணனூர்
நவின்றபடி நடத்த நாடி
மும்மாய மலமுருக்கு மதுரகவி
யுடனெழுந்து முனிவர் ஞானஞ்
செம்மாந்த விழிப்புலனிற் றிகழ்ந்திடையுஞ்
செய்யவரம் வரிக்கு கென்ன
வம்மாமை யகத்தினரும் விம்மிதமுற்
றுழ்வாரி னடிகள் போற்றி.

ஆயேயு மருள்சுரக்கு மந்தணநீ
யறைந்ததமிழ் மறைக ளோடு
வீயேயுந் திருமார்ப னிராசியமும்
விளம்பியருள் கென்ன வேண்ட
வாயேயு முலகருந்த வனமாலிக்
குரியதிரு மந்தி ரத்தை
நீயேயும் வண்முறுகென் றருத்தமுடன்
குருகையர்கோ னிகழ்த்திப் பின்னும்.

நால்வேதங் கடைந்தெடுத்த நல்வியாச
சூத்திரத்தைப் பொருளி னல்கி
மால்வேதத் தமிழ்களையு மற்றருளிப்
பின்னுமுள மறைக ளெல்லா

எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் இங்கிலீஷ்
டாக்டர்களும் பிறரும் கொண்டாடும்

சார்ங்கதர ஸம்ஹிதை

ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஸகல ஸாராம்சங்களும் அடங்கிய மிகப்
பிராசீன் வைத்தியக் கிரந்தம்.

வைத்தியரத்னம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்யர் அவர்களால்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.
சீர்திருத்திய மூன்றும் பதிப்பு

மூன்று கண்டங்களும் 32 அத்தியாயங்களும் அடங்கியது.

வைத்திய பரிபாஷை முதலியவைகள்.

1. பூர்வகண்டத்தில்:—(1) வைத்திய பரிபாஷைகள், (2) ஒஷதி முதலியவற்றின் விவரணம், (3) நாடீ பரீக்ஷாதிகள், (4) தீபந-பாசநாதி குண விவரணம், (5) சரீரதத்வாதிகள், (6) உணவு உட்செல்லும் வகை முதலியன, (7) ரோகவிவரணம் என்னும் ஏழு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

ஔஷத முறைகள்.

2. மத்திம கண்டத்தில்:—(1) ஸ்வரஸ முறைகள், (2) க்வாத-கஷாய முறைகள், (3) பாண்ட கஷாய முறைகள், (4) ஹிமகஷாய முறைகள், (5) கல்க் முறைகள், (6) சூர்ண முறைகள், (7) குளிகை-மாத்திரை முறைகள், (8) லேஹ்ய முறைகள், (9) ஸ்நேஹ-தைல-க்ருத-முறைகள், (10) ஸந்தாந ஆஸவாரிஷ்ட-முறைகள், (11) தாது-லோஹ-பாஷாணாதி-சுத்தி பஸ்மாதி முறைகள், (12) ரஸங்கள்-ரஸ-கந்தகாதி முறைகள் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

சிகித்ஸா கிரமங்கள்.

3. உத்தரகண்டத்தில்:—(1) ஸ்நேஹபாநவிதி, (2) ஸ்வேதவிதி, (3) வமநவிதி, (4) விரேசநவிதி, (5) வஸ்திவிதி, (6) நிரூஹவஸ்திவிதி, (7) உத்தரவஸ்திவிதி, (8) நஸ்யவிதி, (9) தூமபாநவிதி, (10) கண்டூஷாதி விதி, (11) லேபநாதி விதி, (12) இரக்த மோக்ஷணவிதி, (13) நேத்திர சிகித்ஸை, ஆகப் பதின்மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

வேறு விவரம்.

எளிய வசனநடை, விஷயங்கள் ஒழுங்காகவும் தலை யங்கங்களோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விரிவான உரை. விசேஷ அநுபந்தங்கள். ஸகல விஷயங்களுக்கும் விஸ்தாரமான விஷய அகராதிகள்.

உயர்ந்த காலிகோ பைண்டு	ரூ.	5	4	0
இரண்டாந்தர பைண்டு	ரூ.	4	4	0

வைத்திய கலாநிதி ஆபீஸ்,
11, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதராஸ்.

ஓர் ஆச்சர்யமான ஸம்வாதம்

கேளுங்கள்: பாருங்கள்: வாருங்கள்: வாங்குங்கள்:

சாஸ்திரி:—விசுவாச முள்ளோர்க்கன்று சாஸ்திரமே ப்ரமாண மென்கிறார் கீதாசார்யன். "**तस्माच्छास्त्रं प्रमाणं ते**" என்று கேட்டதில்லையா?

க்ருஹிணீ:—ஆனால் என்ன?

சாஸ்திரி:—ஆசார்ய வாக்படர் கூறுவதைக் கேளம்மா. நீங்கள் சும்மா இருப்பது சரியல்ல.

"**सूर्यादिग्रहनिग्रहापहरणं दीर्घायुरारोग्यदम्**
सौभाग्योदयभाग्यवश्यविभवोत्साहप्रदं धैर्यकृ
दुश्छायाचलधूलिसङ्गतिभवालक्ष्मीहरं सर्वदा
वज्राणां परिधारणं निगदितं भूतादिनिर्नाशकम् ॥



க்ருஹிணீ:—நீர் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

சாஸ்திரி:—கதிரவன் முதலான கிரகங்களின் சாபங்களைத் தடுக்கும்; நீண்ட ஆயுளையும் சரீர சுகத்தையும் அளிக்கும்; ஸௌமங்கல்ய நிலையைத் தந்திடும்; ஸகல பாக்யங்களையும், வசியத்தையும், விபவங்களையும், உத்ஸாஹத்தையும் விளைவிக்கும்; கெட்ட நிழல்பர்வத தூசி இவைகளின் சேர்க்கையினால் உண்டாகும் பிணியை நீக்கும்; பூதம் முதலான பேய் பிசாசுகளை நிர்மூலமாக்கும். எது? வைரமணிகளை '**परिधारण**' நிரம்பத் தரிப்பதேயாம்.



க்ருஹிணீ:—அடடா! என்ன ஆச்சர்யம்! அவைகள் எங்கே கிடைக்கும்?

சாஸ்திரி:—வெகு அழகாயும் மிக்க ஸரஸமாயும் ஒரே ரேட் (விலை) உள்ளதாயும் வைரங்கள் கிடைக்குமிடம்—

ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கம்பெனி,
313, எஸ்பளனேட், மதராஸ்.

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by
Vangipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.